# கவியோகியின் கடிதங்கள்

கவியோகி மஹரிஷி
சுத்தானந்த பாரதியார்

வெளியிட்டோர்
சுத்தானந்த நூலகம், திருவான்மியூர்,
சென்னை 41. Ph: 97911 77741

Copy Right : @Shuddhananda Yoga Samaj(Regd),
Shuddhananda Nagar, Sivaganga - 630 551

# கவியோகியின் கடிதங்கள்

## 1. சுத்த பராசக்தி

*அம்மா சுத்த பராசக்தி, தாயே! எப்போதும் நான் உன்னைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீ என் உண்மை அம்மா, ஆதலால் எனக்கு எல்லாந் தருவாய் என்று நம்புகிறேன். இந்த நம்பிக்கை வந்ததும், என் கவலை ஓடிப்போகிறது. அம்மா, எனக்குப் பள்ளிக்கூட வேதனையில்லாமல், நல்ல ஞானம் உண்டாகவேண்டும். பிரம்பு வைத்து மிரட்டும் ஆசிரியர் எனக்கு வேண்டாமம்மா; நீ என் குருவில்லையா? இராமகிருஷ்ணருக்கும், ஞானசம்பந்தருக்கும், படிக்காமலே நீ எல்லா ஞானத்தையும் தந்தாயே; அதுபோல், உன் குழந்தையான எனக்கும் தரமாட்டாயா? உன் பிடிப்பில் வாழ்வதே என் படிப்பு.*

*வீட்டுத்தொல்லையும், வீட்டார் வசவும் இல்லாமல், நான் எப்போதும் உன் அருளில் கூடியிருந்து, உண்மைப் பொருளை உணரவேண்டும். "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" என்று அப்பர் பாடியிருக்கிறாரே; நான் உனது பெயர் சொல்லி உயிர்க்கிறேன். என் உயிரே, உன் பெயரே என் உள்ளத் துடிப்பு. எனக்கு எல்லாக் கல்வியும் தரமாட்டாயா? அம்மா, நான் பண்டிதனாகிச் சபை குலுங்கப் பேசி, தோடா சால்வை பெற விரும்பவேயில்லை; தமிழில் நல்ல புலமை, காலத்திற்கேற்றபடி ஆங்கில அறிவு, வேதாகமங்களை அறிந்து கொள்ளச் சமுஸ்கிரதம் இவை போதும். நீ என்னுள் கவியூற்றாகப் பொங்குகிறாய். இராமாயணம், பாரதம், பாகவதம் போல, நானும் ஒரு மகா காவியம் பாடவேண்டும்.*

*அம்மா, உயர்ந்த அருட்புலவர் எழுதிய நூல்களையெல்லாம் நான் படிக்கச் செய்; இன்றேல், யாராவது நல்ல துறவிகளைக் கொண்டு எனக்குப் பாடம் சொல்லச் செய்; கேட்டறிவேன். எதற்கு? புகழுக்கன்று. இதெல்லாம் படித்தபிறகு, எப்போதும் உன் மேல் பாடிக்கொண்டும், நீ தந்த அறிவைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தந்துகொண்டும், நல்ல அருட்பணிகளைச் செய்துகொண்டும் நான் என் வாழ்வைப் பயனாக்கி முடிவில் உன்னை அடையவேண்டும். அம்மா, எப்போதும் என்னுள் இரு. உலக வியாபாரமே எனக்கு வேண்டாம். உன் பிள்ளையாக, உன் பக்தி பரவசத்தில், நான் விளையாட அருள் செய் தாயே, ஓம் சுத்த சக்தி.*

*(சிறுவயதில் அடிகள் தமது உணர்ச்சிகளைப் பாடலாகவும் கடிதமாகவும் எழுதி அம்பிகை திருவடியில் வைப்பதுண்டு; அதனால் ஆறுதல் உண்டு; பாரதசக்தி மகாகாவியம் பாடும் ஆர்வம் இதில் விளங்குகிறது.)*

## 2. தந்தை ஜடாதரருக்கு

*அருமைத் தந்தையே வணக்கம். அம்மாளுக்கும் வணக்கம். ஓம் சுத்தசக்தி துணை செய்தது. புத்தகங்கள் வாங்கப் போதிய பணம் கிடைத்தது. பத்து நூல்கள் பைண்டு செய்து, பாட புத்தகங்களை வாங்கினேன். மாமாவைக் கேட்கவில்லை. செம்பனூர் வழியாக நடந்து வந்தேன். காலம் மட்டும் மெதுவாகச் சென்றால், நானும் நடந்தே உலகைச் சுற்றப் பிரியப்படுகிறேன். வழியில் சில கிராமங்களில் ஏழைகளின் துன்பங்களைப் பார்த்தேன். அவர்கள் துன்பப் புழுக்கள்போல் துடிப்பதைக் கண்டேன். "மாமா பணக்காரராயிருப்பதேன்? நாம் ஏழையானதேன்? உழைத்தும் சிலர் கஞ்சிக்கு வாடுவதேன்? ஏதோ ஒரு பிழையினாலேதான் உலகில் இப்படிக் கொடுமை நடக்கிறது? எல்லாரும் நேர்மையாக உழைத்துச் சாப்பிட்டுக்கொண்டு, தெய்வ பக்தியும் பரோபகாரமுமாக வாழமுடியாதா?*

இப்படிப்பட்ட எண்ணங்களை என் பராசக்தி அன்னையிடமும், சிவனிடமும் இன்று முறையிட்டபிறகே, மாமாவைப் பார்த்தேன். அவர் புத்தகங்களுக்குப் பணம் தருவதாகச் சொன்னார். 'நானே சம்பாதித்து இதோ வைத்திருக்கிறேன்; பிறர் பணம் எனக்கெதற்கு?' என்று சொல்லிவிட்டேன். "உனக்கு இவ்வளவு சாமர்த்தியமா? என் சொத்து உனக்கு வேண்டாமா?" என்று வழக்கப்படி பேசினார். 'மாமா, கொடும் உமது சொத்தை; நான் ஏழைகளுக்காக ஒரு பள்ளிக்கூடமும், தொழிற்சாலையும் வைத்துவிடுகிறேன்; தமிழும், ஆங்கிலமும், வேதாகம ஞானமும் வளர நாம் வேலைசெய்யவேண்டும்; வாருங்கள், விவேகானந்தரைப் போல் நாமும் நமது சமயத்திற்காக வாயாலும் கையாலும் தொண்டு செய்வோம். லாபம் வந்தால் தேசத்திற்குத் தருவோம்' என்றேன். "இதெல்லாம் சுத்தப் பைத்திய வேதாந்தம்; மனிதன் என்றிருந்தால், நன்றாகச் சம்பாதிக்கவேண்டும்; சாப்பிட வேண்டும்; பிள்ளைக்குட்டி பெறவேண்டும்" என்று எனக்குச் சாருவாக உபதேசம் செய்தார் மாமா. "மாமா, மாளிகைச் செல்வம் பெற்ற உமக்கு மனச்சாந்தி உண்டா? ஒருநாளில் எத்தனை நிமிஷம் நீங்கள் நிம்மதியாயிருக்கிறீர்கள்? இன்று உங்கள் பெட்டகத்தைத் திருடன் காலிசெய்து கொண்டு போனால், தலையில் அடித்துக் கொண்டு அழுவீர்களே. இந்தப் பெட்டகம் நாளை உங்களுடன் வருமா? வீடு வருமா? இந்த உடலாவது வருமா? உமது நிழல்கூடப் புதை குழியுடன் சரி. உங்களுடன் வருவது வினைதான். தீவினை செய்தால் தீய பயன்; நல்லதைச் செய்தால் நல்ல பயன் உண்டாகும். ஆதலால் மாமா, இருக்கும்போதே வீட்டுக்கும், ஊருக்கும், அதிதி பரதேசிகளுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும் நல்ல தருமம் செய்யுங்கள்" என்றேன். "இப்படி வேதாந்தம் பேசினால், நீ குடும்பத்தில் வாழ மாட்டாய்" என்று மாமா ஆசீர்வதித்தார். 'மாமா, நான் குடும்ப வாழ்க்கையே இல்லாமல் என் உள்ளத்தில் உள்ள கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் என்னவரான உலகோருக்குமே நன்மை செய்து வாழ விரும்புகிறேன். அன்னிபெசண்டு, திலகர், விவேகானந்தர், தயானந்த சரஸ்வதி, இராமதீர்த்தர், இரவீந்திரநாத தாகூர் போன்று நானும் ஏன் கடவுள் தந்த சக்தியைக் கொண்டு உலகிற்கு நன்மை செய்யக்கூடாது?' என்று நீளப்பேசினேன். மாமா கிண்டல் செய்தார்; பிறகு சாப்பிட்டோம். பின்னர் நான் புதுமண்டபத்திற்குப் போய் வேண்டிய புத்தகங்கள் வாங்கிக் கொண்டு வந்தேன். உழைத்த பணத்தாலே வாங்கினேன்.

சந்நியாசித் தாத்தா பூர்ணானந்தர், அப்போதுதான் தோட்டத்தில் வந்து இறங்கினார்; காசி யாத்திரை செய்த கதை யெல்லாம் சொன்னார். அவர்முன் நான் அடக்கமாயிருந்து தியானித்தேன். ஏழு வயதில் நான் அவரைச் சில கேள்விகள் கேட்டதுண்டு. 'தாத்தா, எனக்குப் படிப்பு வரவில்லை; அம்மாவும் அப்பாவும் சினக்கிறார்கள், வாத்தியார் பிரப்பம்பழம் கொடுக்கிறார்; எனக்கொரு வழி சொல்லுங்கள்; எல்லா அறிவும் நானே கற்றுக் கொள்ளவேண்டும்' என்றேன். "குழந்தாய், புத்தகத்தை மிஞ்சிய படிப்பு ஒன்று உண்டு; அன்பேயான அம்மா உண்டு; அறிவேயான அப்பா உண்டு. எல்லாம் இதோ உன் உள்ளத்திலேதான்" என்று தொட்டுக் காட்டினார். சுவாமி, நீங்கள் சொன்ன அம்மா அப்பாவை அறிந்து கொண்டேன். அவர்களே எனக்கும் ஞானம் தந்தார்கள். அதனால் மனதார அவர்களைப் பாராட்டுகிறேன் என்று எனது விருத்தங்களில் சிலவற்றைப் பாடினேன். தாத்தா பொங்கிப் பூரித்து, அன்று முழுதும் அத்வைத ஞானோபதேசம் செய்தார். இப்படிப்பட்ட மகான்களைத்தான் என் உள்ளம் தேடுகிறது. இவர்கள் சொல்வதை நான் அறிந்துகொள்ளத்தான் படிக்கிறேன். ஆனால், அப்பா, நான் திறந்து சொல்கிறேன். இந்தக் காலப் படிப்பு எனக்குப் பிடிக்கவில்லை; அடுத்த வருஷம் ஒன்பதாம் வகுப்பிற்குப் போவேன்; பிறகு பத்தாம் வகுப்புத் தேறி விடுவேன்; பிறகு நானே பி.ஏ., எம்.ஏ., பாடங்களெல்லாம் படித்து, வேதாகமங்களெல்லாம் ஆராய்ந்து, அறிவு பெற்று, அறிவை உலகப் பணியில் செலவிடப் போகிறேன். சந்நியாசியிடமும் இப்படியே பேசினேன். அவர் "தானே ஞானம், தானே தத்துவம்" என்றார்.

நாளை இந்த ஊரில் வேதாந்த விஷயமாக பூரி சுவாமிகள் பேசப்போகிறார். கேட்டுவிட்டு, அடுத்தநாள் புறப்படுவேன். சீக்கிரம் ஊருக்கு வந்து சேருவேன். என்னை எப்போதும் சுத்தசக்தி ஜோதி உள்ளிருந்து வழிநடத்துகிறது. வருவதெல்லாம் அதன் இச்சை. துன்பங்களிலும் நன்மையே கிடைக்கிறது.

அப்பா, என்னென்னவோ பேனா முனையில் வந்ததெல்லாம் எழுதிவிட்டேன். முடிவில் அப்பா, உங்களைப்போல் தெய்வ பக்தராகவும், சீலராகவும், தருமாத்மாவாகவும் உங்கள் பிள்ளையாகிய நான் இருக்க ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். நமஸ்காரம்.

எந்தாய் வாழ்க

## 3. தெய்வசிகாமணிப் புலவருக்கு

மதுரை. 11-5-1912.

புலவர் சிகாமணிக்கு, வணக்கம். நலம். நான் எனது தமையனாருடனும், சில வக்கீல்களுடனும் இராமேசுரத்திற்குச் சென்றிருந்தேன். நாங்கள் பாம்பன் சென்றோம்; மண்டபத்தில், மரக்காயர் பங்களாவில் தங்கியிருந்தோம்; பிறகு, இராமேசுரம் சென்றோம்; அங்கிருந்து தோணியில் உல்லாசமாகத் தனுஷ்கோடிக்குச் சென்றோம்; அங்கே பெரிய சத்திரத்தில் தங்கினோம்; மாலையில் புதிய தொங்குபாலம் பார்த்தோம்.

நான், மண்டபத்தில் ஒரு மரக்கலராயரைப் பார்த்தேன். அவர் பெரும்புலவர். அவரிடம் உமறுப்புலவர் எழுதிய "சீறாப்புராணம்" இருந்தது. அதில் சுமார் இருநூறு செய்யுட்கள் படித்தேன். அவர் பொருள் சொன்னார். மரக்கலராயர்களுக்கு நல்ல தமிழறிவு இருக்கிறது.

நாங்கள் சிலர் மண்டபத்திலிருந்து ஊருக்குப் புறப் பட்டோம். ரயிலில் தூங்கிவிட்டோம். வண்டி மானாமதுரை திருப்பாச்சேத்தி எல்லாம் தாண்டி, மதுரைக்கு வந்துவிட்டது. அப்போதே எழுந்தோம். 'இதுவும் நல்லதுதான்' என்று நான் மாமா வீட்டிற்குச் சென்றேன். பெரிய மாமா வக்கீல்; உள்ளறிந்த ஞானி. அவர் எனக்கு அரிய ஆங்கில நூல்களைத் தந்து படிக்கச் சொன்னார். புக்கர் வாஷிங்டன், காப்டன் குக், லிவிங்ஸ்டன், பெஞ்ஜமின் ஃப்ராங்க்ளின், ஃபாரடே முதலிய பெரியார் வரலாறுகளை யெல்லாம் என்னைப் படிக்கச் சொல்லி, படித்ததைப் பிசகில்லாமல் சொல்லச் செய்தார். இவ்வரலாறுகளைப் படித்ததும் இந்த மாதிரி நானும் நமது தேசத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்று என் உள்ளம் துடித்தது! பெரிய மாமா, பெரிய எண்ணங்களை யெல்லாம் என் சிறிய மூளையில் ஏற்றிவிட்டார். புக்கர் வாஷிங்டன் அடிமைக் கூலியாகப் பிறந்து, தன் முயற்சியால் கல்வி கற்றுத் தனது சமுதாயத்திற்கு அற்புதமான சேவை செய்திருக்கிறான். துருக்கியில் அவன் நாட்டிய கலாசாலை, உலகப் புகழ் பெற்றது. அதுபோல், நமது நாட்டாரும் உலகில் முன்னேற ஏதாவது செய்யவேண்டும் என்று என் மனம் துடிக்கிறது. முதலில் நான் நல்ல கல்வியறிவு பெறவேண்டும்; பிறகு கல்வித் தொண்டு செய்யவேண்டும். ஒரு நாட்டின் உயிர்நிலை கல்விதான். வெள்ளைக்காரர் உலக ஞானத்தையெல்லாம் தமது பாஷையில் அச்சுப்போட்டுச் சுலபமாகப் படித்து விடுகிறார்கள். நாமும் உலகஞானத்தைத் தமிழில் எழுதி அச்சுப்போட்டு, எல்லாரும் படிக்கும்படி செய்ய வேண்டும்.

விக்டோரியா நூலகத்திற்குச் சென்றேன். ஏராளமான புதிய புதிய நூல்களைப் பார்த்தேன். தமிழ் ஒரு மூலையில் ஒடுங்கிப் போயிருந்தது. எங்கே திரும்பினாலும் ஆங்கிலமயம். இந்த நிலை மாறவேண்டும். ஆங்கிலத்தைப் போலத் தமிழும் உலகம் மதிக்கும்படி பரவவேண்டும். நவீன சாத்திரங்களெல்லாம் தமிழில்

வரவேண்டும். ஆங்கிலப் பேரகராதியைப் பார்க்கும்போது, தமிழில் இப்படி வராதா என்று என் உள்ளம் படபடக்கிறது. பண்டித கோபால கிருட்டினரும், பிச்சுவையரும் என்னை ஊக்கினர்.

தங்கள் ஆசீர்வாதத்தால் தமிழறிவு வளர்ச்சிபெற்று வருகிறது. இங்கே சங்க நூல்களையும் பார்த்தேன். பழைய சரக்குகள் போதா, புதிய உலகை வெல்ல ஆயிரக்கணக்கான புதிய நூல்கள் வர வேண்டும். நான் ஆங்கிலப் புலமையுடன் தமிழ்ப் புலமையும் பெற்றுத் தமிழில் புதிய இலக்கியங்களையும் சாத்திரங்களையும் எழுதவும், தமிழில் உள்ள கலையறிவை ஆங்கிலத்தில் எழுதி, “எங்கள் தாய்மொழி எவ்வளவு இனிமையானது பாருங்கள்” என்று உலகிற்கு விளக்கவும் விரும்புகிறேன். தங்கள் ஆசீர்வாதம் சிறியேனை வழிநடத்தவேண்டும்.

**அன்புள்ள மாணவன். குருவே துணை.**

## 4. ஞானசித்த மகாகுரு

சுவாமி ஸத்குரு பூரணானந்தர் திருவடிகளுக்கு வணக்கம். சுத்தசக்தி அருளாலும், யோகபலத்தாலும், தங்கள் ஆசியாலும் உள்ளம் திறந்தது. ஞானசித்தர் என்ற மகாகுரு என்னை ஆட் கொண்டார். சில ஆண்டுகளுக்கு முன் என் கண்ணீரைத் துடைத்து ஆதாரசக்கரங்களை மலர்த்திய அதே மகான் திருப்பரங்குன்றம் மலைமேலே நான் தியானித்தபோது, ஓம் என்று என் தலைமேலே கைவைத்து, ஆக்ஞா சக்கரத்தில் கட்டை விரலை நாட்டினார். பளிச்சென்று மின்சார விறுவிறுப்பும், ஒளியும், இன்பமும் உதித்தன. நேற்றைய வாழ்வெல்லாம் மாயையாக மறைந்தது. நான் மாறிப் பிறந்தேன். நான் பகவத்கீதை 5, 6 அத்தியாய சுலோகங்களை நேரே அனுபவித்தேன். அதே நினைவு, அதே தன்மை, அதே உறுதி அதே நிலையாக அதனுள் ஆழ்ந்தேன். தாயுமானாரின் ஆனந்தக் களிப்பை அனுபவித்தேன். சித்தர் மகாதேஜஸ்வி, சக்திமான். அவர் திடீர் என்று தோன்றி மறைகிறார். அவர் என்னுடனே இந்தியிலேதான் பேசினார். அவர் இமாலயச் சித்தர். “முன் பிறவியில் காசி மணிகர்ணிகா கட்டத்திலும், தசாஸ்வமேத கட்டத்திலும் நீ தவம் புரிந்தாய். அப்போதும் உன் பக்கத்தில் நான் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன்” என்று ஆசீர்வதித்தார் மகான். அவரே என் வாழ்வு முழுவதையும் படச்சுருள் போலக் காட்டினார். அவரே எனக்குச் சாயிபாபா, அரவிந்தர், இரமணர் முதலியோரைப் பற்றிச் சொல்லி, நான் அவர்களுடன் இருக்கப் போவதாகத் தெரிவித்தார். அவர் எனக்குப் பதினைந்து பொன்னுரைகளை வழங்கினார். “நீ எழுதப் பிறந்தாய்; பேசாமல் எழுதிச் செல். பரீட்சைக் கூடத்தில் மாணவன், குறித்த கேள்விகளை அமைதியாக எழுதி, மணியடித்ததும் செல்லுகிறான். அதுபோல உன் வாழ்வும். உன்னுள் ஒரு பல்கலைக் கழகம் உள்ளது. அதில் மலரும் அறிவை எழுதிவை; உலகில் அவை நிலவும். மணியடித்ததும் பேனாவைக் கீழே வைத்துச்செல்” என்றார். ஆகாயம் போலப் பரந்த மனப்பான்மை கொண்ட அவர் “மகான்களை மதி; ஆனால் அவர்களுக்கு மேலேயுள்ள கடவுளையே தியானி, வணங்கு. ஆட்களைச் சுற்றிய மதக் கோட்டைக்குள் அகப்படாதே. நீ நீயாயிரு” என்றார். என் வாழ்வுக்கு வழி வகுத்த ஞானசித்தரை வணங்குகிறேன். அவர் அருளால் அறிவு வளர்கிறது. பள்ளியும் கல்லூரியும் தரமுடியாத அறிவு, திருவருளால் உள்ளே மலர்கிறது. ஷேக்ஸ்பியர், ஷெல்லி, மில்டன், கம்பர், சேக்கிழார், வால்மீகி, வியாசர் போன்ற மகாகவி களின் நூல்களைச் சுவைக்கிறேன். தாயுமானாரையும், கீதையையும் பாராயணம் பண்ணுகிறேன். வண்டுகள் புதுப்புது மலர்களைத் தேடித் தேனுண்பது போலவே, நான் உலக இலக்கியங்களில் உண்மையமுதைத் தேடி நுகர்கிறேன். எனக்கு வழிகாட்ட அவ்வப்போது தெய்வசிகாமணி யோகி போன்ற புலவர் வருகின்றனர். விஞ்ஞான நூல்களைப் படிக்க விருப்பம். என் அண்ணலின் பௌதிக ரசாயன நூல்களையும், உயிர், பயிர் நூல்களையும்

படிக்கிறேன். உள்ளிருந்து படிப்பதே உண்மைப் படிப்பு. இன்னும் ஐந்தாண்டுகள் இவ்வாறே அறிவை வளர்ப்பேன். நான் பார்த்தது, படித்தது எல்லாம் இலக்கியமாகக் கோக்கிறேன். எழுதப் பிறந்தேன், எழுதுகிறேன்.

தங்கள் நல்லாசி என்னை நடத்துக,
அடியேன்.

## 5. இலக்கியச் சோலை

அண்ணல், வணக்கம். நாடகமேடை என் அறிவை வளர்க்கிறது. ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட், மாக்பெத், கிங்லியர், ரோமியோ ஜூலியட், ஒதெல்லோ, மோலியரின் நகைச்சுவை நாடகம், (Flying Doctor, L'Avare) பறக்கும் மருத்துவன், கருமி, கோல்ட்ஸ்மித்தின் She Stoops to conquer முதலிய நாடகங்களில் நடித்தது என் பேச்சுத் திறனுடன், சிந்தனைத் திறனையும் தூண்டுகிறது. நம் ஊரிலும் மதுரையிலும் நடக்கும் உயர்ந்த நாடகங்களைப் பார்க்கிறேன். பரமேசையர், பொன்னம்பலம் ஆசாரி போன்றோர் பாட்டெழுதச் சொன்னார்கள். நாடகக் கலையை நான் மிகவும் விரும்புகிறேன். பாட்டால் நாடக மேடையில் உலாவுகிறேன். இரண்டொரு மாதங்களில் வகுப்புப் பாடங்களை முடித்துவிட்டு, நான் உலக இலக்கியங்களையே ஓதுகிறேன். நானும் ஒரு நாள் வால்மீகி, வியாசர், காளிதாசர், கம்பர், துளஸிதாசர், ஓமர், தாந்தே, மில்தன் போன்று ஒரு மகாகாவியம் செய்யமுடியும் என்று அந்தராத்மா சொல்லுகிறது. பாரதசக்தி என்ற மகாகாவியம் என்னுள் உருவாகிறது. எனது தியானத்தில் பல அரிய காட்சிகளைக் காண்கிறேன். தாந்தேயை காரே(Carre) நன்றாக மொழிபெயர்த்திருக்கிறார். அதைப் படிக்கப் படிக்க எத்தனையோ கவிக்கனவுகள் உள்ளே எழுகின்றன. மில்தனில் தாந்தேயைக் காண்கிறேன். தாந்தேயே எனது கவிக் கலையின் தந்தை என்கிறேன். ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்டும், ஷெல்லியின் புரொமீதியஸும், பிரான்ஸிஸ்தாம்ஸனின் ஹௌண்டும் எனக்கு ஆவேசமளிக்கின்றன. அரவிந்தரின் அஹானா என் உள்ளத்தை அள்ளுகிறது. நாளெல்லாம் படிக்கிறேன். பசித்தபோது படித்துக்கொண்டே உண்கிறேன். எனது சிறந்த நண்பர் நல் இலக்கியங்களே. இலக்கியங்களுக்கு அடுத்தபடி விஞ்ஞான நூல்களை விரும்புகிறேன்.

முன்னேறும் விஞ்ஞான அறிவுடன், நமது நாட்டுக்குரிய ஆத்மிக யோக அறிவும் கூடிக்குழைந்தால், உலகம் இனிதாகும். மேற்கின் விஞ்ஞானமும், கிழக்கின் ஆத்மஞானமும் கூடினால் அறிவும் அருளும் சேர்ந்தது போலாகும். யோக-விஞ்ஞானி மனிதரைக் கொல்லும் குண்டுகளைக் குவிக்கமாட்டான். யோக சாதனம் விஞ்ஞான சோதனைகளை ஆளவேண்டும். நான் இரண்டையும் கற்று, உலக சமாதானத்திற்கு வழிகாண்பேன். தங்கள் விஞ்ஞான நூல்களால் நான் மிகவும் பயன் பெற்றேன். தாங்கள் பரிசுபெற்ற ஷேக்ஸ்பியர் ரௌட்லெட்ஜ் பதிப்பே என் இலக்கிய மதிப்பைத் தூண்டியது.

என் கவிப்புலமையை ஷேக்ஸ்பியரிலும், ஷெல்லியிலும், தாந்தேயிலும் சாணைபிடித்து வருகிறேன்.

ஆசிதருக - அன்புத்தம்பி

## 6. மகான்கள் தரிசனம்

நண்ப, நாட்டைச் சுற்றினேன். கல்கத்தாவில் சித்த ரஞ்ஜன் தாஸைப் பார்த்தேன். பெருந்தகை வள்ளல், என்னை லக்னோ காங்கிரசிற்கு அழைத்துச் சென்றார். அங்கே திலகர் நட்புக் கிடைத்தது. அவர்முன் கீதை ஆறாவது அத்தியாயம் ஒப்பித்தேன். எனக்கொரு கீதை தந்தார். காந்திஜீயைப் பார்த்தேன்.

திலகர் "இதோ கீதையின் விளக்கம்" என்று காந்தியைக் காட்டினார். காந்தி சிறந்த கருமயோகி. திலகருடன் நான் சீரடி வந்து சாயிபாபாவின் ஆசியைப் பெற்றேன். சாயிபாபா அரிய மகான். அவர் எழுதுவ தில்லை படிப்பதில்லை. "சும்மா இரு; நம்பு, அன்பு செய். கடவுள் நன்மை செய்வார்" என்கிறார். "ஆண்டவன் அருளாலே நாடும் விடுதலையாகும்" என்கிறார். அவர் எனக்கு வேப்பிலை தந்தார். அது இனித்தது. ஒரு நாள் இரவு, அவரை ஒரு மதவெறியன் கொல்லக் கத்தி ஓங்கினான்; பாபா எழுந்து நின்று "ஹூம்" என்று அவன் கையைப் பிடித்தார். கை அப்படியே விறைத்துப் போனது. ஆள் அலறித் தவித்து மன்னிப்புக் கேட்டான். கருணை வள்ளல் அவனுக்குக் கனிகள் ஈந்தனுப்பினார். "மகான்களைப் பார்; மனதை உள்ளாக்கு; உட்காட்சிகளைப் பாடிப்பாடி மேன் மேலும் போ" என்பது அவர் உபதேசங்கள். அவரே எனக்குத் தலைக்கட்டுக் கட்டி விட்டார். அதனால் எப்போதும் ஓங்காரம் கேட்கிறது. உள்ளம் பேசுகிறது.

சீரடியிலிருந்து புதுச்சேரிக்கு வந்து, எனது உயிர்த்தோழர் வ.வே.சு. ஐயரையும், பாரதியாரையும், பிறகு அமைதியாக அரவிந்தரையும் பார்த்தேன். அரவிந்தரின் கம்பீரமான தியான மௌன நிலை என்னை ஊக்கியது. என் உள்ளமும் உயிரும் அவருடன் ஐக்கியமாயின. என்னுடன் வந்த கேவல்ராம் சுவாமி "நாட்டு விடுதலைக்குப் போர்தொடுப்போமே" என்றார். "ஆண்டவன் நாட்டை நடத்துகிறான். அந்தக் கவலை நமக்கேன்? நாம் அவனைச் சரண்புகுந்து, உரிய கடமையைச் செய்வோம்" என்றார். மகான் அரவிந்தர் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். அவர் திருவடியிலே நான் வெகுநாள் வசிக்கப் போவதை அப்போதே உணர்ந்தேன். நான் அங்கிருந்தபோதே பால்ரிச்சாடும் அவர் மனைவியும் வந்தனர். அந்த அம்மாளிடம் பராசக்தியைக் கண்டேன். பிறகு வடலூருக்கு வந்து வள்ளலார் ஞானசபையில் தியானித்தேன். இதன் பிறகு திருவண்ணாமலை சென்று பகவான் ரமணரைத் தரிசித்தேன். அவர் முன்னிலையில் மௌனம் கூடியது. அவர் மனத்தை அடக்கி, நான் என்ற ஆன்ம வுணர்வில் ஆழ்ந்துவிட்டார். அப்போதுதான் அவர் மலையிலிருந்து அடிவாரத்திற்கு வந்து நிலைத்தார். நான் அவர் இருந்த விரூபாட்சி குகையிலும், அதற்கு மேல் உள்ள ஸ்கந்தாசிரமத்திலும் தியானம் செய்து திரும்பும்போது, சேஷாத்திரி சித்தர் எதிர்ந்தார். "சுத்தானந்தம் மேலே—போய்க்கொண்டிரு" என்று புன்னகைத்து, இப்படியும் அப்படியும் கண்களைச் சுழற்றி என்னையே பார்த்தார். சக்ஷுதீட்சையானது. நான் ரயில் ஏறும்போது சேஷாத்திரி அதோ நின்று என்னைப் பார்த்தார்.

பிறகு மதுரை மீனாட்சி தரிசனம் செய்து, எனது அனுபவங்களை அம்பாளுக்குப் பாடிவிட்டு இங்கே வந்தேன். இனி மாமூல் வாழ்க்கைதான்—படிப்பு, நடிப்பு, அறிவுத் துடிப்பு! ஆன்ம நேய ஒருமையுடன்.

## 7. அடிமையில்லாத வேலை

அண்ணா,

ஆண்டவன் எனக்கொரு வேலை தந்திருக்கிறான். அவன் எனது நாவையும் பேனாவையும் அசைக்கிறான். அவன் இச்சைக்கு இசைந்து நடப்பதே என் வேலை. அதை மீறினால் வாழ்க்கை தோல்விதான். எனது தேர்வு, தகுதிகளைக் காட்டி, ஜில்லா நீதிபதியிடம் வேலை கேட்டேன். மில்டன் நடையில் எழுதிய மனுவைப் பார்த்து, "தம்பீ, நீ இலக்கிய உலகில் நடமாடு; இங்கே வந்து சிக்கிக் கொள்ளாதே" என்று அனுப்பினார். கோர்ட்டு வேலைகளின் குட்டிக்கரணங்களைப் பார்த்தேன். சேவகத்தின் ஆன்மக் கொலையை வெறுத்தேன்.

ஆனால் வயிறுள்ள மட்டும், பசியுள்ள மட்டும், ஒருவன் மானமாக வேலை செய்தே பிழைக்கவேண்டும். என் உயிர்த் தோழர் வ.வே.சு ஐயரும், "ஆசிரியர் வேலை பார்; மாணவரிடையே தேசபக்தியைப் பரப்பு, நான் அழைக்கும்போது என்னிடம் வந்துவிடு" என்றார். ஆசிரியர் வேலைக்குப் பயிற்சி வேண்டும் என்று, நான் தந்தை போன்று நேசித்த ஃஜம்ப்ரோவிடமே கடிதம் பெற்று, பசுமலையில் லார்பீரையும் மைக்கேலையும் கண்டு பேசினேன். எனக்குப் பசுமலை பிடித்திருக்கிறது. கிறிஸ்துப் பாதிரிமாரின் ஆக்கவேலைகள் என்னைக் கவர்ந்தன. அவர்களிடையே பயின்று ஆசிரியராக வேண்டும் என்று முனைந்தேன். பசுமலையில் எனக்கு இடம் கிடைத்துவிட்டது.

இப்போது மதுரைக்குத் திலகர் வந்தார். பிபின் சந்திரபாலர் வந்தார். காந்தி வந்தார். மூவரையும் கண்டு பயன் பெற்றேன். எங்கே சென்றாலும் மகான்கள் வழிகாட்டுகிறார்கள். திலகர் "உன்னை உன்னால் உயர்த்து; தைரியமாயிரு" என்று தட்டிக் கொடுத்தார். அவர் தந்த கீதையைத் தினம் பாராயணம் பண்ணுகிறேன். காந்தி எனது கவிதையைக் கேட்டார். ஒரு குறக் குழந்தையைக் குளிப்பாட்டிவரச் சொல்லி, என்னை வேலை வாங்கினார். தாகூரும் மதுரைக்கு வந்தார். நானும் சூரிய நாராயண சாஸ்திரியாரும் சென்று கண்டோம். நான் பாடினேன், அவர் தாயுமானார் பாட்டை ஆங்கிலமாக்கச் சொன்னார். "பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே" என்ற பாட்டைப் பாடி ஆங்கிலத்தில் விளக்கினேன்; சொக்கிப்போனார். தாயுமானார் ஆங்கிலமும் நடக்கிறது. இவ்வாறு எத்தனையோ மகான்களின் தரிசனத்துடன் பேனாவுக்கும் வேலை வருகிறது. இனிப் பசுமலைப் படிப்பு:

அன்பு

## 8. ஆசிரியப் பயிற்சி

அண்ணா வணக்கம். பசுமலை

நான் இங்கே பெருமகிழ்ச்சியுடன் இருக்கிறேன். கூட்டுக்கிளி நாட்டுக்கிளியாய், சுதந்தர வானிற் பறக்கிறது. திருப்பரங்கிரி முருகனை, சுதந்திரத்திற்குமேல் சுதந்திரம் பெற்று, முடிவில் சர்வ சுதந்திரனும், அனாதிமுத்தனும் சித்தனுமான இறைவனை இரண்டறக் கலந்துபோகவேண்டும் என்ற வரம் கேட்கிறேன். ஆனால் ஒரு மலையருவி கடலைக் கலக்குமுன் எத்தனையோ பயிர்களுக்கும் உயிர்களுக்கும் உதவிபுரிகிறதல்லவா? அப்படியே எனது ஜீவநதியும் தியாகப்படுகையில்ஓடி, உலகில் தாகந்தீர அறிவும் திருவும் பொழிந்து, அகண்டாகார சிவானந்தக் கடலிற் கலந்துவிடவேண்டும். உச்சியில் ஞானம், உள்ளத்தில் அன்பு, உடலில் பொதுநலப் பணி........இம்மூன்றையும் அணிந்து, நான் பூரணமனிதனாக வேண்டுகிறேன்.

ஒவ்வொரு நிமிஷத்தையும் நான் அளந்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்; வகுப்பிற்கு வேண்டிய பாடப்புத்தகங்களை எழுதிக்கொண்டே நன்றாக மனதிற் பதியவைத்தேன். இரவும் பகலும் உட்கார்ந்து ஒரு மாதத்தில், பிரின்ஸிபில்ஸ், ஆர்கனைஸேஷன், டிஸிப்ளின் இவற்றை எழுதினேன். பிறகு புரோபல், மோந்தஸாரி, ஆர்ம்ஸ்ட்ராங், ரென், பாக்லி முதலியோர் போதனா முறைகளையெல்லாம் எழுதிப் பாடக் குறிப்புக்களும் தயாராக்கிவிட்டேன். போதனா சக்தியில் எனக்கு முதல் இடம் தந்துள்ளார்கள். மைக்கேல் தனது மகனுக்கு பி.ஏ. வகுப்பிற்குரிய நோட்ஸையும்,ரெடரிக்நூலையும் எழுதித்தரச் சொன்னார். எனக்கும் ஆங்கில இலக்கியத்தை நன்றாக அறிய இந்தவேலை பயனானது; பி.ஏ. ஆங்கில சரித்திர பொருளாதாரப் பாடங்களையெல்லாம் முறையாகப் படித்துவிட்டேன். அதன் பயனாக நான் எந்த விஷயத்தைப் பற்றியும் தெளிவாகக் கல்லூரி மேடையில் பேசிவருகிறேன். எனது தமிழறிவு இங்கே எல்லாருக்கும் தெரிந்து போனது. சில புலவர்கள் எனது பாடல்களைக் கேட்டு மெச்சுகிறார்கள். சில மாணவருக்கு நான் நமது திருமுறை நூல்களையும், கீதை,

குறள் முதலிய புனித நூல்களையும் புகட்டி, சமயோக வழியில் நடக்கச் செய்திருக்கிறேன். இதன் பயனாக அவர்கள் நமது சமயத்தின் பெருமையை அறிந்து, நம்மைத் தூற்றுகிறவர்களுக்குச் சரியானபடி பதில் சொல்லி, வாயை அடக்குகிறார்கள். பைபிள் வகுப்பில் வினா விடைகள் விறுவிறுப்பாகவே நடக்கின்றன. திரு ஃபென் பைபிளை மெச்சும்போதெல்லாம் நான் கீதையிலும் குறளிலும் அதே கருத்தைக் காட்டிவருகிறேன். எனது நண்பர் ஒருவர் இராமதீர்த்தப் புலி. அவர் வாயைக் கிளப்பி 'ஓம் தத்ஸத்' என்று முடுக்கிவிட்டால் போதும். பைபிள் வகுப்பு வேதாந்த வகுப்பாய் விடும்!

பசுமலைத் திருவிழாவன்று நான் எழுதிய தியாகச் சிலுவையை நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது; அதிலே நானே ஏசுநாதராக நடிக்கிறேன்; பாட்டுப்போட்டு நடிக்கவும் சொல்லிக் கொடுக்கிறேன். எங்கள் பைபிள் வாத்தியார் மிஸ்டர் ஃபென்னின் மணவினையைப் பார்த்தேன். கிறிஸ்துவர் எவ்வளவு சிக்கனமாகவும் பகுத்தறிவுக்குப் பொருத்தமாகவும் கலியாணம் செய்கிறார்கள்! சர்ச்சில் மணவினை உறுதியாகிறது; பாதிரி ஆசீர்வதிக்கிறார். சுவிசேஷ கீதங்கள் முழங்குகின்றன. நண்பர் வாழ்த்துரைக்கின்றனர். மாலை மோதிரம் மாற்றிக்கொண்டு, ஒரு விருந்தானதும் சதிபதிகள் சேர்ந்து வாழ்கிறார்கள்! இப்படி நாமும் சிக்கனமாகத் திருமணம் நடத்தவேண்டும். வேதாகம தருமத்தை நன்றாகப் பயில, கிறிஸ்துமதம் எனக்கு வழிகாட்டியது. அன்பு.

## 9. சமவுணர்ச்சி

அன்புள்ள தோழரே, பசுமலை வாழ்விற்குச் சுபமங்களம் பாடியாயிற்று! கம்பர் நாடகம் நடத்தினோம். நான் கம்பராக நடித்தேன். எனது நடிப்புடன் கிறிஸ்துவர்களுக்கும் விளங்கும் படியாக நமது சமயோகக் கொள்கைகளையும் பேசிவிட்டேன். என் ஆர்வம் நிறைவேறியது. நண்பா, சென்ற ஒரு மாதமாக ஆசிரியர் மாணவர் அனைவரும் இந்தத் திருவிழாவிற்குப் பலமான ஏற்பாடுகள் செய்தோம். விழாக்குழுவில் நானும் ஒரு காரியதரிசி. நாடகம், பிரசங்கம், மேடையலங்காரம் மூன்றிலும் கருத்தூன்றினேன். நண்பர் இராமனாதன் முதலியோர் ஆசிரியருக்கும் பள்ளித்தோழருக்கும் நல்விருந்தளிக்கவும், படம் பிடிக்கவும் பொறுப்பேற்றார்கள். இந்த வாரம் நடந்த நிகழ்ச்சிகள் எனக்குப் புதியவுணர்ச்சியும் தைரியமும் தந்தன. சிலவற்றைச் சொல்லுகிறேன்.

1. நாங்கள் பாட்டுக்கச்சேரிக்கு ஏற்பாடு செய்தோம். துரை கிராமபோன் போதும் என்றார். மதுரையிலிருந்து நாங்கள் சில இசைத்தட்டுகள் கொண்டுவந்து துரையின் இசைப்பெட்டியில் வைத்துக் காட்டி, ஆங்கிலத்தில் பொருள் விளக்கினோம். நமது ஆலாபனம் அவருக்குப் பிடிக்கவேயில்லை. முடிவில் ரூல் பிரிட்டானியா என்ற இசைத்தட்டை வைத்தோம். துரை ஆனந்தக் கூத்தாடினார்! பாட்டு என்றால் அவரவர் தாய்மொழியில் இருந்தாலே இனிக்கும்! தமிழர் செவிக்குத் தமிழ்ப்பாட்டே இனிதாகும் !

2. நமது நாட்டில் ஒரு பெரிய தொல்லை: சாப்பாட்டுத் தொல்லை. நமது மானம் அரிசிப்பானையில் வேகிறது. திருவிழாவில் விருந்து வைக்கப்பணம் சேர்ந்தது. ஆனால் மனம் சேரவேண்டுமே! எல்லாரும் ஒரே கல்லூரி மாணவர்; ஒரே படிப்புப் படித்தவர். எல்லாரும் ஆசிரியர்; ஆதலால் எல்லாரும் இன்று சேர்ந்து சாப்பிடுவோம். முடிந்தால் எல்லாரும் சேர்ந்து சமைப்போம் என்று நான் வற்புறுத்தினேன். சாதிப்பித்தருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஐயா, சமபந்தியில்லாவிட்டால், நான் உங்கள் ஏற்பாட்டில் பங்குகொள்ள மாட்டேன். சாதி பேதத்தை வெறுக்கிறேன். ஆனால் மனிதனுக்கு உள்ள உரிமையை நீங்கள் எனக்கு மறுக்கமுடியாது" என்றேன். நேற்று மாலை விருந்து நடந்தது. மதுரை

பட்சணக் கடையிலிருந்து ஓமப்பொடி, காராபூந்தி, இலட்டு, அல்வா எல்லாம் கமகமவென்று வந்தன. நாங்களே பாயசம் தயாரித்தோம். விருந்து மணி அடித்தது. சாதி வேண்டுவோர், பிராமணர், ஒரு தனியறையில் அமர்ந்தனர்; மற்றவர், வேறோர் அறையில் அமர்ந்தனர்; அவருள்ளும் ஒரு முதலியார், பிள்ளையுடன் உட்கார மறுத்தார். சிலர் கிறிஸ்துவர் களுடன் சாப்பிடமுடியாது என்று தனியாக அமர்ந்தனர். திசைக்கொரு பக்கம் வக்கரித்துக் கொண்டிருந்த கூட்டம் எனக்கு விநோதமாயிருந்தது. நான் எல்லாருக்கும் பட்சணம் பரிமாறியதும் எனது பங்கை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவர்களுடன் அமர்ந்து உண்டேன். நீ ஒரு பார்ப்பானே, எங்களை மதித்தாய் என்றனர் கிறிஸ்துவர். 'ஐயா, நான் எந்தச்சாதியுமல்லன். கடவுள் தந்தை, மனித சமுதாயம் என் சகோதரர், என் சாதி மனிதச் சாதிதான். நீங்களும் என் சகோதரரே' என்றேன். லார்பீர் தமது பேச்சில், நமது சாதிவேற்றுமையைப் பிய்த்துவாங்கினார். மில்லர், "மனிதனுக்கு மனிதன் பார்த்து உண்ணக்கூடாது என்ற வழக்கம் இருக்குமட்டும் உமக்கு ஒற்றுமை வராது" என்றார். நானும் சாதி மத பேதங்களைக் கண்டித்துப் பேச நேர்ந்தது. எனக்கு ஒருபுறம் வாழ்த்து; மறுபுறம் வசவு. பரவாயில்லை; சாதிப்பேயைச் சாடியது வெற்றியே.

3. இரவில் என்னை ஒரு உபதேசியார் கண்டு பேசினார். நான் கிறிஸ்துமதத்தில் சேரவிரும்புவதாகச் சொல்லக்கேட்டு, அவர் என்னிடம் இந்து மதத்தைக் கண்டபடி தூற்றிச் சிலுவை மதத்தை உயர்த்திப் பேசினார். "இந்திய மகான்களில் ஒருவரும் ஏசுவைப் போல சிலுவை ஏறவில்லையே" என்று என் முகத்தைப் பார்த்தார். "நண்பரே, ஏசுநாதர் சிலுவையேறினால், மனித சமுதாயமே சிலுவை யேறவேண்டுமா? பாட்டன் தற்கொலை புரிந்து கொண்டால், பேரனும் அப்படியே செய்யவேண்டுமா? நீர் சிலுவை ஏறினீரா? எங்கள் மகான்கள் பெருமை பெரிது. உங்கள் சமயம் சரியை கிரியைகளுடன் சரி. அதற்குமேல் யோகம், ஞானம், துரிய, துரியாதீத அனுபவங்கள் எங்கள் வேதாகம சன்மார்க்கத்தில் உள்ளன" என்று விளக்கினேன். போதகர் எனக்கு ஒரு பைபிள் தந்து "இதையாவது எப்போதும் வைத்துக்கொண்டு படியுங்கள்" என்றார். "ஆஹா, தாங்களும் திருமந்திரம் படியுங்கள்!" என்றேன். நான் திருமந்திரத்தை எல்லாருக்கும் விளக்கினேன்.

இப்படி எத்தனையோ சம்பவங்களுக்கிடையே பசுமலைப் படிப்பு முடிந்தது. பேச்சுத்திறமைப் பரீட்சைக்கு, நான் விவேகானந்தரின் சந்நியாஸகீதங்களையே(The Song Of the Sanyasin) உரக்க ஒப்பித்தேன். அதுதான் முடிவான பரீட்சை. அப்பாட்டை ஒப்பிக்கும்போது நானும் தைரியமான துறவியாகி, சுதந்தரமாகத் திரியவேண்டும் என்ற ஆசைகொண்டேன்! ஆம், இன்றுடன் விடுதலை !

இனி மைக்கேல் என்னைத் திருமங்கலம் பள்ளிக்கூடத்திற்குச் சிபார்சு செய்தார். சென்ற ஞாயிறு தாலுகா போர்டுத் தலைவரைக் கண்டேன். அவர், "ஐயா, அந்த நாற்காலியைக் கொண்டுவாரும்; இந்தப் பழத்தை நறுக்கும்; இதை எழுதும்" என்று என்னை வேலை வாங்கி, பள்ளிப் பரிசோதகருக்கு ஒரு கடிதம் தந்தார். அந்த ஆசாமி என்னுடன் அந்தரங்கமாகப்பேசி, "இந்த வேலைக்கு 100 மனுக்கள் வந்திருக்கின்றன. உமக்கு வேலைவேண்டுமானால்..." என்று கையைச் சுண்டிக் காட்டினார். "ஐயா, கைக்கூலி கொடுத்துக் கூலிவேலை செய்ய நான் விரும்பவில்லை. வந்தனம்" என்று வந்துவிட்டேன். நான் மைக்கேலைப் பார்த்து "ஐயா, இப்படி" என்றேன். "ஆம் ஐயா, உமது சுதந்திரத்திற்கும் போர்டு பள்ளிக்கூடத்திற்கும் ஒத்து வராது; எங்கள் மிஷன் ஸ்கூலிலேயே வேலைவாங்கி வைக்கிறேன், இருமே!" என்றார். "வேறுவேலை கிடைக்காவிட்டால் பார்ப்போம். நன்றி" என்று விடைபெற்றேன். நான் இப்போது சிகாகோ எம்.ஏக்கு உரிய ஆங்கில நூல்களைப் படிக்கிறேன். சில அமெரிக்க இளைஞருடன் லார்பீர், மில்லர், ஜம்ப்ரோ முன்னிலையில் ஹாம்லெட், ஒதெல்லோ, கிங்லியர், மாக்பெத் நாடகங்களைப் படித்து நடிக்கிறேன். இந்த மாதிரிக் கல்வியே எனக்குப் பிடித்திருக்கிறது. என்னுள் ஒரு பல்கலைக் கழகம் எழுந்துள்ளது.

நண்பா, பாதிரிகள்போல் நான் ஒரு கிராமத்தில் தங்கி ஏழை எளியவர்களுக்குக் கல்வித்தொண்டு செய்யப்போகிறேன். சட்டை தலைப்பாகை வைத்து, ஆளை மிரட்டும் உத்தியோகத்தைவிட, ஏழைகளுக்கு அறிவுப்பணி செய்வதே எனக்குத் தருமார்த்தமாகத் தோன்றுகிறது. (1) என் வாழ்க்கை யாருக்கும் அடிமையாகக் கூடாது; (2) நான் பணத்திற்காக வாழாமல், அறத்திற்கே வாழவேண்டும்; (3) எனது தேவைக்குப் போதுமட்டும் சேர்த்து வைத்துக் கொண்டு பொதுநலத்திற்குக் கிளம்பவேண்டும்; (4) மாணவருக்கு நான் உண்மையான சகோதரனாயிருந்து பயனுள்ள கல்வி புகட்டவேண்டும்; (5) ஐந்துமணி நேரம் கல்வித்தொண்டு போக, மீதிநேரம் எனது அறிவை வளர்த்து யோகசாதனத்தையும் கவனிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட நல்ல வசதியுள்ள இடத்தை நான் எதிர் பார்க்கிறேன். நல்ல ஆற்றோரத்தில் மகான்கள் இருக்கும் சிற்றூர்களில் சொற்ப சம்பளமானாலும் வேலைபார்க்கப் போவேன். சாதுசங்கமும் சத்திய வாழ்வுமே எனக்குத் தேவை. உனக்கு அப்படி ஏதாவது இடம் தெரிந்தால் எழுது. நான் சிலகாலம் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் சுற்றிக் குற்றாலத்தில் நீராடி மாதக்கடைசியில் மீனாட்சி தரிசனம் செய்ய வருவேன்; அப்போது உன்னைக் காண்பேன். நண்பா, உனக்கு என் அன்பு ஆகுக. அன்பு சுத்தானந்தன்.

## 10. கலியாண வரவேற்பு

காட்டுப்புத்தூர், 1918

அண்ணா, வணக்கம்.

கட்டளை ஸ்டேஷனில் இறங்கியதுமே மங்கள வாத்தியத் துடன் அகண்ட காவேரியின் ஸாவேரியும் கேட்டது! முன்பின் அறியாத ஊர்; எங்கே தங்குவோம்? என்று சிறிது யோசனை செய்தேன். நம் ஊர் கணேசையர் உறவினர், பஞ்சநாத ஐயர் என்னைத் திடீரென்று அழைத்துச்சென்று கல்யாணப் பொங்கல் அளித்தார். பிறகு நான் காவேரியில் குளித்து ஜபதபங்களை முடித்துக்கொண்டேன். ஐயர் என்னைப் பரிசிலில் ஏற்றி அக்கரைக்கு அனுப்பினார். அக்கரை சீலைப்பிள்ளையார் புத்தூர். அதிலிருந்து காட்டுப்புத்தூர் சுமார் மூன்று மைல். பசும்பாதை. இரண்டு பக்கமும் வயலும் சோலையும் குலுங்குகின்றன; காலைப் பறவைகள் இன்பமயமாகத் துள்ளிக் குதித்துப் பாடுகின்றன! உழவர் குஷியாகப் பாடுகிறார்கள்! வாழைக் கொல்லையிலிருந்து வேறே பாட்டு வருகிறது; எனக்கும் பாட்டுக் கிளம்பியது; பாடிக் கொண்டே நடந்தேன்! ஊர் வந்தது; அங்கும் மங்கள வாத்தியம்! எதிரே ஒரு கனவான் வந்தார். பள்ளிக்கூடம் எங்கே என்று விசாரித்தேன். "புதுவாத்தியாரா? வாருமையா!" என்று அவர் என்னை அன்புடன் அழைத்துச்சென்று பள்ளிக்கூடத்தில் விட்டார். அங்கே "வாரும், வாரும்!" என்று ஸயன்ஸ் வாத்தியார் உபசரித்தார். இருவரும் காட்டுப்புத்தூர் அக்கிரகாரத்திற்குச் சென்றோம். அங்கேயும் சுப்பையர் பெண்ணுக்குக் கலியாணம், சபேசையர் வீணைக்கச்சேரி, கலியாணச் சாப்பாடு! ஏகக் கலியாணந்தான்! நான் தலைமை உபாத்தியாயரைக் கண்டு வணங்கினேன். அவர் பெரிய சங்கீத வித்துவான். என்னை எப்படியோ ஒரு கவி என்று தெரிந்துகொண்டார். பள்ளிக் கூடத்திலே எனக்கு இருக்கை அளித்தார். 'சாப்பாடு என்ன' என்று நண்பர் கேட்டனர். நான் கமண்டலத்தில் ஊறப்போட்ட கொத்துக் கடலையும் பேயன் பழத்தையும் காட்டினேன்! இவையே உணவு என்றேன். எல்லோரும் சிரித்தார்கள். "இங்கே தேங்காய், பழம் ஏராளம்; நான் வெகு எளிதாக அடுப்பூதாமலேகூட வயிற்றுப் பாட்டை முடித்துக்கொள்கிறேன்; அபூர்வமாகச் சமைத்தால் ஒரு சட்டியில் அரிசி, பாசிப்பயிறு, கிடைத்த காய்கறிகள் எல்லாம் போட்டுப் பாலும் விட்டு உப்புப்புளி மிளகாயே இல்லாமல் சாப்பிடுவது வழக்கம்; இந்தச் சமையலுக்கு மாதம் மூன்று ரூபாயே செலவு; ஏராளமான மிச்சம் என்றேன்.

## 11. சதாசிவ சமாதியில் தியானம்

எனக்கு ஏழாம் வகுப்பு ஸயன்ஸ், கணக்கு, ஆறாம் வகுப்பு ஆங்கிலம், ஐந்து ஆறு ஏழிற்கு பூகோளம், எட்டிற்குத் தமிழ் வியாஸம் முதலிய பாடங்கள் தந்திருக்கிறார்கள். இங்கே எனக்கு ஓர் அறிஞர் நட்புக் கிடைத்திருக்கின்றது. அவரே ஸயன்ஸ் புலவர், கே.எஸ். வேங்கடராம சாஸ்திரியார். நானும் ஸயன்ஸ் சொல்லித் தருவதால், இருவரும் பாடங்களை வகுத்து முடித்தோம். நான் ஐந்துமணிநேரம் வகுப்பில் சொல்லிக்கொடுக்கும் நேரம் தவிர, தினம் மூன்று மணிநேரம் ஸயன்ஸ் ஆராய்ச்சியிற் செலவிடுகிறேன். பூத பௌதிக ரசாயன தாவர உடல் நூல்களையும், பூகோளத்தையும் நல்ல தமிழில் எழுதி முடிக்க இரவும் பகலும் உழைத்து வருகிறேன். அதற்கு ஏற்ற நல்ல வசதிகளும் கிடைத்துள்ளன. அண்ணா, நமது மாணவருக்கு ஸயன்ஸ் பாடங்களையே வாசக புத்தகமாக வைத்தால் நல்லது. அப்படியே ஐந்து முதல் பத்தாம் வகுப்பு மட்டும் பயனாகும் நூல்கள் எழுதப்போகிறேன். எனது இரண்டாவது வேலை, முன்பே என் மனத்தில் உதித்துள்ள "பாரதசக்தி" மகாகாவியத்தைப் பாடிமுடித்தல். வால்மீகி வியாசாதி மகான்களைப் போல், தவயோகத்தால் வாக்கு முதிர்ந்து, இயல்பாகக் காவியம் எழுதவேண்டும்; எழுதுவேன் !

யோகசித்தி, எனக்கு மூச்சினும் முக்கியம். எனது மானசீக குருவான சதாசிவ ப்ரம்மத்தின் சமாதி இதோ நெரூரில் உள்ளது! காட்டுப்புத்தூர் எல்லைக் காவேரியைத் தாண்டினால் நெரூர். அங்கே ஓர் இலுப்பத்தோப்பில் சிறு கோயிலுள் சதாசிவ சமாதி யிருக்கிறது. ஞாயிறு தோறும் அங்கே சென்று தியானிக்கிறேன். சில துறவிகள் உறவும் எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தில் எனக்கு உபசாந்த நிஷ்டை தன்னால் உண்டாகிறது. நிஷ்டை யானதும் காவேரியின் பாட்டுடன் நானும் ஞானகீதங்கள் பாடுகிறேன். ஊரில் பஜனை பாட்டுக்கச்சேரிகளில் நானும் கலந்து கொள்வதுண்டு. ஆனால் ஒரு நிமிடங்கூட வீணாக்காமல் ஒவ்வொரு மூச்சையும் அமரகலையாக்கி வருகிறேன். உடல் இருக்கும்போதே அதைப் பெற்ற பயனை அடைந்துவிடவேண்டும்!

எங்கள் தலைமை உபாத்தியாயர் பி.ஜி.சுந்தரமையர், புல்லாங்குழல் போலச்சீழ்க்கையடித்து, எல்லா மேளகர்த்தா ஜன்ய ராகங்களையும் பாடிக்காட்டுகிறார். எனக்குச் சங்கீத ஞானமும் சிறப்பாக உண்டாகியிருக்கிறது. பல ராகங்களில் கீர்த்தனங்களும் செய்து வருகிறேன். முறையாக வர்ணங்களையும் ராக சஞ்சாரக் கிரமங்களையும் முசிறி பாகவதரிடம் பயில்கிறேன்.

ஒருதரம் மீனாம்பள்ளி ஜமீன்தார் வேங்கடாசல ரெட்டியார் நடத்திய சமபந்தி போஜனத்தில் சில உபாத்தியாயர்களும் பிரமுகர்களும் சாப்பிட்டார்கள். ஜஸ்டிஸ் சதாசிவையரும் வந்திருந்தார். சுக்கூர் சாகெபு தண்ணீர் வார்த்தபோது படம் பிடித்து விட்டார்கள். அதைக்கண்டு ஊர் வைதீகர், எரிமலையாகக் கிளம்பி சமபந்தி சாப்பிட்ட பிராமணர்களை விலக்கி விட்டார்கள். சிலர் அகத்துக்காரிக்குப் பயந்து பிராயச்சித்தம் செய்துகொண்டு பஞ்ச கவ்யம் சாப்பிட்டனர்! கோடீசையர் ஒருவரே தைரியமாக நிற்கிறார். அவர் உயர்ந்த எண்ணங்கொண்டவர்; அவர் வீட்டிற்கு வைதீகர் போவதில்லை; அவரும் அழைப்பதில்லை. நான் அவர் வீட்டில் அடிக்கடி சாப்பிடுவதும் எனது பாடல்களைப் பாடுவதும், கீதை, கம்பராமாயணம் படிப்பதுமாக இருக்கிறேன். சுந்தரேசன் என்ற கல்லூரி மாணவருடன் தாகூர் நூல்களைத் தொடர்ந்து படித்து அவர்போலக் கவி எழுதுகிறேன்.

எனக்கு இங்கே மற்றொரு புலவர் நட்புக் கிடைத்தது. பள்ளிப் புலவர் கோவிந்தசாமி பிள்ளை கம்பராமாயணப்புலி; சங்க வித்துவான். நாங்கள் தினம் பள்ளிக்கூடம் விட்டதும், கம்பனை எடுத்துக்கொண்டு கிளம்புவோம். நான்

படிப்பேன். அவர் விசேஷமான நயங்களைச் சொல்லுவார். சில சைவ நண்பர் வேண்டுகோட்படி நான் ஒரு முதலியார் வீட்டில் இரவு எட்டுமணி முதல் ஒன்பது மணி வரையில் பெரிய புராணம் படித்துவருகிறேன்; புலவர் பொருள் கூறுகிறார்.

இந்த வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இப்படியே நான் ஒவ்வொரு நிமிஷமும் புதிய ஞானமும், யோகசித்தியும் பெற்றுப் புதிய மனிதனாக இறைவன் அருள் வேண்டும். அப்பா, அம்மா, முத்தண்ணா முதலிய எல்லாருக்கும் அன்பு.

## 12. இஸ்லாம் சாதனம்

காட்டுப்புத்தூர் மசூதி,

ஜனாப் பீர்முஹம்மது ஸாகேப் அவர்களுக்கு,

அல்லாஹுதா ஆலா எல்லா நலமும் அருளுக! நான் நாமக்கல்லுக்கு வந்தபோது தாங்கள் செய்த உபசாரத்தை ஒரு நாளும் மறக்க முடியாது. தாங்கள் ஓதிய குரான் சூராக்கள் என் உள்ளத்தில் இஸ்லாம் பக்தியை உண்டுபண்ணின. இங்கே கிலாஃபத் இயக்கம் பலமாக நடக்கிறது. நான் அப்துல் காதர் வீட்டில் புத்தகங்களை வைத்துக்கொண்டு, மசூதியிலேயே நிமாசு செய்து வருகிறேன். இரவில் சீறாப்புராணம் நடக்கிறது. வெள்ளிக் கிழமை தோறும் முஸ்தபா முஹம்மது ஸல்லத்தின் தியாக வாழ்க்கையையும், திருக்குரான் சொல்லும் பக்தி மார்க்கத்தையும் பற்றி குத்பா ஓதியதும் பேசி வருகிறேன். ரம்ஃஜான் நோன்பு எனக்குப் பெரும் ஆறுதலளித்தது. பட்டினியிருந்து தியானித்து, இரவில் நான் பேரீச்சம்பழமும் பாலும் உண்டு வந்ததால், உடலும் நலமெய்தியிருக்கிறது. இஸ்லாம் சகோதரர்கள் மிக்க அன்பாகவும் மரியாதையாகவும் பொதுக் காரியத்தில் மிக்க உற்சாகமாகவும் இருக்கிறார்கள்.

கிலாபத்து நாளில் இங்கே பெரிய கொண்டாட்டம் நடந்தது. ஊரெல்லாம் கூடியது. என்னுடன் உஸ்மானும் ஹாஸனும் இருந்துதவினார்கள். சென்னை கிலாஃபத் சங்கத்தலைவரான யாகுப் ஹாஸனுக்கு இங்கே நடப்பதெல்லாம் எழுதினேன்; மிகவும் சந்தோஷமான பதிலுடன், ஏராளமான துண்டுப் பிரசுரங்களும் அனுப்பினார். இந்த வெற்றிக்கும் பொது நலத்திற்கும் பின்னே சில பொறாமைக்காரர்களும் சூழ்ச்சியை நடத்துகிறார்கள். கோளும் பொறாமையும் இல்லாமல் உலகம் ஏது? நடக்கட்டும். நான் இவர்கள் மிரட்டலுக்கு அஞ்சப்போவதில்லை, மனச்சாட்சிக்கு இசைந்து உண்மை வழியில் நடந்தால், யாருக்குப் பயப்படவேண்டும்? உலகில் ஒருவனுக்கு அமுதம், மற்றவனுக்கு நஞ்சாக இருக்கிறது; பித்தக்காரனுக்கு மாம்பழம் கசக்கிறது.

நிற்க, ஒவ்வொருநாளும் இந்துமுஸல்மான் ஒற்றுமைக்கு வழி துலங்குகிறது. வழி அரசியலில் இல்லை; ஆத்மீக சாதனத்திலே தான் உள்ளது. ஒருவன் கோயிலில் தொழுதாலும், மசூதியில் தொழுதாலும் இறைவனை உள்ளத்தில் வைத்து தியானித்தால், இந்து உள்ளம் இஸ்லாம் உள்ளம் என்றில்லாமல், எல்லாம் பொருந்தி நிற்கும். ஆகாசம் எங்கும் ஒன்றுதான். அதில் படரும் மேகமும் பனியும் இடத்திற்கேற்றபடி பலவாறாகும். நாம் ஆகாசத்தையே நினைத்து மேகச்சித்திரத்தின் உருமாற்றத்தில் மயங்காதிருந்தால், ஏகரச உணர்ச்சி உண்டாகும். இந்து முஸ்லிம் இருவருக்கும் பஞ்சபூத சரீரந்தான்; இருவருள்ளும் ஒரே ஆத்மாதான். இருவருக்கும் கடவுள் ஒருவரே. அவர் எங்கும் தானான தன்மயர். சாதிமத பேதமற்றவர்; ஸர்வாத்ம ஸமரஸரான அவரை உள்ளத்தில் எண்ணினால் உலகத்திலும் அவர்மயமே காணும். பிறகு சாதிமதநாடுநிற வேறுபாடுகள் இருக்க இடமில்லை. சூரியசந்திரர் எப்படி எல்லாருக்கும் பொதுவோ, அப்படியே அல்லாவின் அருளும் எல்லாருக்கும் பொதுவாகும். இந்த சிந்தனை வளர்ந்ததுமுதல், எனக்கு இந்து வேறே முஸ்லீம் வேறே என்று தோன்றவேயில்லை.

*அப்துல் காதர் வீட்டிலும் மசூதியிலும் நான் தாராளமாகப் பழகுகிறேன். இஸ்லாமியர் நட்பை உதவிய இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அல்லாஹூ அக்பர்!*

## 13. சாரணப் பயிற்சி

நாமக்கல்.

*அன்புள்ள நண்பரே!*

*நான் எனது சாரணர் சிலருடன் கொல்லிமலைக்குச் செல்கிறேன். இன்று இங்கே ஓர் இஸ்லாம் நண்பர் எங்களை உபசரித்தார்.*

*வேலூர் பயிற்சி மிக்க மகிழ்ச்சியளித்தது. 1917-ல் பெஸண்டும் பியர்ஸனும் தொடங்கிய சாரண இயக்கத்திலேயே நான் உற்சாகங்கொண்டேன். பசுமலையில் பேடன்பவல் முறைப்படி பயிற்சி பெற்றேன். ஆனாலும், வேலூரில் மிஸ்டர் மெண்டிஸ் தந்த பயிற்சிதான் நிறைவாயிருந்தது. அந்தப் பத்து நாட்களையும் நான் மறக்கமுடியாது. பல ஜில்லாக்களிலிருந்தும் அங்கே கூடிய அரிய நண்பர்களையும் மறக்கமுடியாது. இந்தச் சாரண வட்டமே உலக வட்டமாகப் பரவிவிட்டால், மானிட வாழ்வு எவ்வளவு இன்பம் அளிக்கும்! "சாரணீயம்" என்பது நம் நாட்டிற்குப் புதிதன்று. தமிழர் போர்களிலும், பாரதப்போரிலும் சாரணர் இருந்தனர். ஆனால் எல்லாம் 'இருந்தன' கதைதான்! இன்று உருப்படியாக இருப்பதை நாம் பயன்படுத்தவேண்டும். நமது மாணவர் அனைவரும் சாரணராக வேண்டும்.*

*நான் காட்டுப்புத்தூரிலும், அதைச் சார்ந்த இரண்டு கிராமங்களிலும் சாரணப்படை சேர்த்து நடத்துகிறேன். மாணவர் மிகவும் உற்சாகமாகப் பயிற்சி பெறுகிறார்கள். முடிச்சுகள், ஊதலோசை, கொடிக்குறி, வழிக்குறி, வழிநடை, கோற்பயிற்சி, முதற் சிகிச்சை, பாடி வாழ்க்கை (Camp Life) சாரண விளையாட்டுகள்—எல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இவற்றுடன் நான் நிற்கவில்லை.*

*சாரணர் சட்டை போட்டு விறைப்பாக நடந்தால் மட்டும் போதாது. இடுப்பு வளைந்து சமுதாயப்பணி செய்யவேண்டும். நமது மொழி, நமது நாடு, நமது சமயவுணர்ச்சியில்லாத இயக்கம் அதிகப் பயனளிக்காது. ஆதலால், என் சாரணப்படையில் சில புதுமைகளைப் புகுத்தியிருக்கிறேன். தாங்களும் அவ்வாறு செய்வதானால் விரிவாக விபரம் எழுதலாம்; அல்லது தாங்கள் இங்கே வந்து நேரே அறிந்து செல்லலாம். (1) சாரணருக்கு கீதை திருக்குறளைப் பாடஞ்சொல்லுதல் (2) சாரணப் பயிற்சிக்குரிய கட்டளைச் சொற்களை நில், இரு, வலம், இடம், செல், ஓடு, வா, போ, வளை, பற்று, தாக்கு, வட்டம், அரைவட்டம், தயார், ஒழுங்கு... என்று தமிழிலேயே எளிதாகச் சொல்லிவருகிறேன். இதனால் ஆங்கிலம் அறியாதவர்களும் இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்கிறார்கள். கொடிக்குறி, தந்தியெல்லாம் இப்போது ஆங்கிலத்திற்கே; அத்துடன் தமிழுக்கும் அவ்வாறே கோடும் புள்ளியும் குறித்து என் சாரணர்களுக்குத் தமிழ்க் குறிப்பேச்சும் கற்பித்துள்ளேன். (3) பாடித் தீயின்போது சாரணர் நமது நாட்டு வரலாறு, உலகப் பெரியார் வரலாறு, தமிழர் வரலாற்று நிகழ்ச்சிகள்-இவற்றையே கதையாகச் சொல்லவும், ஆடல் பாடலாக விளக்கவும் செய்திருக்கிறேன். சாரணருக்கு இதனால் நாட்டுணர்ச்சியும், கலையுணர்ச்சியும், சமயவுணர்ச்சியும் பெருகும். (4) என் சாரணர் சிறப்பான நாட்களிலேதான் தமான் சட்டை போடுவர். மற்ற நாட்களில் சாதாரணமான வேட்டி குடுத்துணி, துண்டுடன் தொண்டு செய்வார்கள். காலை மாலை உடம்பு சுத்தம் செய்துகொண்டு அருட்பாடல்களைப் பாடுதலும் சந்தி ஜபம் செய்தலும் சாரணர் கடமை; (5) சாரணர் சமுதாயத்தொண்டு மிகுதியாகச் செய்யவேண்டும்; இதற்காகவே அயலூரில் நான் திருக்குலத் தொண்டு நடத்துகிறேன். தீண்டாமையென்னும் அழுக்கு ஒழியவேண்டும். சுமார் 250*

திருக்குலத்தார் என்னைச் சுற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இனிய பாடல்களாலும் பேச்சாலும் ஜாதிமத சமத்துவமும், தூயவாழ்வும், மனிததர்மமும் உணர்த்தியுள்ளேன். அதன் பயனாக அவர்கள் சுத்தமாக இருக்கிறார்கள்; குளித்து, உவர்மண்ணால் வேட்டி வெளுத்து, திருநீறு பூசி, பஞ்சாட்சரி ஜபித்து, பஜனை செய்கிறார்கள். கள்ளுச் சனி ஒழிந்தது. முன்னே 'கள்' என்றால் 'மொள்' என்று சொன்னவர், இப்போது 'சள்' என்று விழுகிறார்கள்! இப்போது திருக்குலச் சிறுவருக்குப் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறேன். மண் சுவர் எடுத்துக் கூரை வேய்ந்து, சேரியன்பரே பள்ளிக்கூடம் அமைத்தனர். நாட்டாண்மைக்காரர் சேர்ந்து ஒரு உபாத்தியாயரை வைத்து நந்தன் பள்ளிக்கூடத்தை நன்றாக நடத்த முனைந்திருக்கிறார்கள். புக்கர் வாஷிங்டன் கதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கெல்லாம் எதிர்ப்பும் பலமாக இருக்கிறது. சில பணக்காரரும், பண்ணைக்காரரும் பாமர மக்களைப் பரம்பரை அடிமைகளாகவே நடத்துகின்றனர். சீர்திருத்தம், ஊர்திருத்தம் என்றால், "யாரடா நீ, எங்கள் அடிமைகளைக் கட்டவிழ்ப்பவன்?" என்று பாய்கிறார்கள். என்னை அரசியல் புரட்சிக்காரன் என்று சர்க்காருக்குப் பொய்ப்புகார் எழுதிவிட்டிருக்கிறார்கள். எத்தனையோ வசவு, இழிவு, இடர்! நான் கலெக்டரிடம் நேரே பேசின பிறகு அவர்கள் சூழ்ச்சி பலிக்கவில்லை.

மனச்சாட்சி மகிழ சத்தியங் கடைப்பிடித்து நன்மையே செய்யும் தீரர், அறியாதார் சலசலப்பை அஞ்சார். இறைவன் என்னை அத்தகைய பரோபகார தீரனாக்கட்டும். அன்பு.

## 14. கிராமப் பள்ளிகூடம்

சீலைப்பிள்ளையார் புத்தூர்

அன்புள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகளுக்கு,

அநேக நமஸ்காரம்.

இங்கே நாம் தொடங்கிய தேசீயப் பள்ளிக்கூடம் பெரிய வீட்டுத் திண்ணையில் ஒழுங்காக நடக்கிறது. குழந்தைகள் இராட்டையில் நன்றாக நூற்கிறார்கள். எழுத்துக்கூட்டிப் படிக்கிறார்கள். எண்சுவடி ஒப்பிக்கிறார்கள். ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் அவர்களுக்குத் தெரியும். நாயன்மார் கதைகளைச் சொல்லி வருகிறேன். குழந்தைப் பாடல்கள் முழங்குகின்றன.

நிற்க, ஸ்ரீ ராமஜயந்தி சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் சிறப்பாக நடக்கவேண்டும். பக்திப்பரவசப் பாடல் களைப்பாடி நர்த்தனம் செய்ய என் கால்கள் துள்ளுகின்றன. பஜனைக்குப் பிடில், மிருதங்கம் தேவை. பஜனைக்குத் துணையாக நத்தம் பாகவதரை அழைக்கவேண்டும். கைங்கர்யத்தில் ஈடுபட்ட நண்பர்கள் சாப்பிடவும், கடைசி இரண்டு நாட்களில் எல்லாருக்கும் (குடியானவர்களுக்கும்) சமாராதனை செய்யவும் முன்போலவே தினம் உஞ்சவிருத்தியெடுக்க நான் தயார். சமாராதனை தங்கள் வீட்டிலேதான் நடக்கவேண்டும். தீக்ஷிதர், பிச்சுவையர் முதலியோரும் ஸ்ரீ ராமஜெயம் என்று கச்சைகட்டி முன்வந்திருக்கிறார்கள்.

இந்த வருஷம் ஸ்ரீ ராமகிருஷ்ண லீலைகளுடன், நமது சமயோகப் பாடல்களும் பஜனையுடன் சேர்ந்து முழங்கும். தேசம், ஆதாரம், தெய்வ பக்தி ஆதேயம், கடவுளன்பு, மக்கட்பணி, தாய்மொழி ஆகிய மூன்றும் முன்னேறத் தொண்டுசெய்ய வேண்டும். தங்கள் அன்பான பதிலை எதிர்நோக்கும் பொதுநல ஊழியன்.

## 15. தமிழ்ச் சங்கம்

சோழூர்

அன்புப் பிள்ளைகளுக்கு,

தொண்டர்நாதன் நலம் அருளுக! நமது தமிழர் சங்கம் மேன் மேலும் வளர்க! சீலைப்பிள்ளையார் புத்தூர் வேளாளரின் தமிழுணர்ச்சி வாழ்க! தேசிகர், பெரிய புராணம் முத்துப்புலவர், கோவிந்தசாமிப் புலவர் அனைவருக்கும் சங்க நடப்பில் ஊக்கம் மிகுதி. வேளாளர் கொழுமுனையிலே தான் சமுதாயம் செழுமை யடைகிறது; அவர்கள் வண்மையினாலேதான் தமிழும் செழிக்க வேண்டும். நமது நாட்டின் பெரும்பாலார் வேளாளர்; சோழ பாண்டியர் வேளாளர். கம்பரும், வள்ளுவரும் புகழேந்தியும், அப்பரும் வேளாளர். வேளாண்மை தாளாண்மை; உழைத் தீட்டல், அறவழி உதவல், இரண்டும் அன்புமயமான தமிழர் நாகரிகத்தின் இதயத் துடிப்புகளாகும். வேளாண்மை செய்யும் நீங்கள் நமது தமிழ்த்தாய்க்கு ஒவ்வொரு கலம் நெல் தருவ தென்றால், அவளுக்கு இனிப்பஞ்சமேது? தக்க புலவர்களை வரவழைத்துப் போற்றவேண்டும்; தேவார—திருவாசக—அருட்பா இசையரங்கு நடக்கவேண்டும்; கூட்டத்தன்று கன்னையாவின் மங்கள வாத்தியம் இனிமையாக முழங்கவேண்டும்; பயனுள்ள சில துண்டுப் பிரசுரங்களைக் கரூர் நண்பர் அச்சகத்தில் அச்சடித்துக் கூட்டத்தில் படித்து வழங்கவேண்டும். நடராஜப் பெருமான் வழிபாடு நடக்கவேண்டும். அடியார் பெருமையை இசைப் பாட்டுடன் கதை செய்யவேண்டும். இவற்றிற்காகவே நாம் ஒரு முதல் சேர்த்து அதன் வட்டியிலிருந்து செலவு செய்யவேண்டும். தமிழ், வேதாகம விளக்கம் இரண்டிற்கும் நாம் தொண்டு செய்வோம். தமிழர் நாகரிகம், இன்று நமது நிலை. தமிழர் செல்வம், நாமும் மனிதர், நாமார்க்குங் குடியல்லோம். சங்கத் தமிழர், நமது சமயம், சிவம் என்றால் என்ன? பொதுநெறிச் சைவம் உலகசமயம். தேவாரத்திருமறை, திருவாசகத்தேன், சமயப்பெரியார், தமிழரின் அருளுணர்ச்சி, சரியை, கிரியை யோகஞான சாதனங்கள், தாயுமானவர் உபநிஷத்துக்கள், வள்ளுவர் உள்ளம், திருக்குற ளின்பம், அருட்பா விளக்கம் முதலியவற்றைக் குறித்து வரிசையாகப் பேச நான் குறிப்புகள் எழுதிவைத்திருக்கிறேன். இங்கே கதர்ப்பணிக்காக வந்தேன். சோழூர்ப்பிள்ளை அன்புடன் உபசரித்தார். கூட்டம் நடந்தது. அன்பு, அறிவு, அருட்பணி, இந்த மூன்று அகரங்களும் சேர்ந்தால் நாம் வெற்றிச் சிகரத்தில் ஏறுவோம். பேச்சுடன், படிப்புடன் நில்லாமல், கற்றவழி நின்று அனுபவங் காணவேண்டும். பைபிளைக் கொண்டு பாதிரிமார் ஊருக்கூர் பிரசாரம் செய்வது போல், நாமும் மக்களைக் கூட்டி நமது சமய ஞானத்தைப் பிரசாரஞ் செய்யவேண்டும். திருவிழாக்களில் சிவகோஷம் செய்வோம். சிவபெருமான் நமது வினைத் திட்பத்திற்கேற்ற மனத்திட்பம் அருளுக. ஓம் சிவம்.

## 16. தேச சேவையில் ஆத்மீகம்

கரூர் 1919.

கலைத்தோழரே,

அமராவதி மணலில் நடந்த திலகர் கூட்டத்தில் நான் பாடிய பாட்டையும், எனது பேச்சையும் வியந்து எழுதியதற்காக நன்றி. ஆனால் தங்கள் கை கொஞ்சம் பயந்து எழுதியிருக்கிறது. நான் சர்க்கார் பள்ளிக்கூட ஆசிரியனாயிருந்து கொண்டு இப்படி அரசியல் பேசுவதும், கதர் கிலாஃபத் இயக்கங்களிற் தீவிரப் படுவதும் வேலைக்கு ஆபத்து என்கிறீர்கள். நமது நாட்டிற்கே, நமது தாய்க்கே ஆபத்து வந்தபோது நமக்கென்ன வேண்டி யிருக்கிறது? நான் ஆசிரியர் வேலை பார்ப்பது எனது நண்பர் வ.வே.சு. ஐயருக்கு பணம் அனுப்பி அவரது புரட்சி, கலைப் பணிகளுக்கு உதவி செய்யவே. அவரே எனது தலைவர்—தலைவர் அன்னவர்க்கே சரண் யாங்களே. அவர் உத்தரவு வந்தால் இன்றே வேலையை விட்டுவிடுவேன்.

நான் காட்டுப்புத்தூருக்குப் பணம் குவிக்கவோ, அடிமைத் தொழில் செய்யவோ வரவில்லை. ஒவ்வொருநாளும் என் வாழ்வில் சுதந்தர ஒளி பரந்து வருகிறது. என் ஆன்மா, வாழ்வைச் சிதைக்கும் கட்டுப்பாடுகளை வெறுக்கிறது; தேசம் என்னை அழைக்கிறது. நாற்பது கோடி பாரத மக்களின் கண்ணீரையும், புண்ணீரையுங் கண்டும், ஒரு சகோதரன் எப்படி உணர்ச்சியற்ற கட்டை மாதிரி யிருக்க முடியும்?

நான் பத்து வயது முதலே நாட்டுணர்ச்சியை வளர்த்து வந்தேன். சிதம்பரம் பிள்ளைகாலத்தில் வந்தேமாதரக் கிளர்ச்சியில் உற்சாகங் கொண்டேன். ஸ்ரீ அரவிந்தரின் வந்தே மாதரத்தையும் கர்ம யோகத்தையும் கீதை போல, ஒரு மாமாவிடம் அந்தக்காலம் கேட்டுவந்தேன். பிறகு பெஸண்டம்மையாரின் ஹோம்ரூல் இயக்கத்தில் தீவிரமாகத் தொண்டு செய்தேன். திலகரை நான் பாரத தீரனாகப் போற்றிவந்தேன். திலகரும், லாலாஜீயும், அரவிந்தரும், தாகூரும், மஹாத்மாவும், சிதம்பரம் பிள்ளையும், கவி பாரதியாரும், வீரர் வ.வே.சு. ஐயரும் நமது தாயின் மணிக்கொடியைத் தாங்கும் அஷ்டவசுக்களாவார்கள். இவர்கள் நெஞ்சிற் கனலும் சுதந்தரத்தீ என் உள்ளத்தில் ஓமத்தீயாகக் கனல்கிறது. தனது தேசம் சுதந்தரமாகத் தலை நிமிர்ந்து உலகில் விளங்கவேண்டும் என்று எண்ணாத இந்தியன் இருக்க முடியாது; இருந்தால் அவன் அன்னியனே.

யோகம், கலை, கல்வி, தொழில், வாணிகம், வீரம், சமுதாய வாழ்க்கை அனைத்திலும் நாட்டுணர்ச்சி ததும்பவேண்டும். உலகில் அறம் வளர்த்த நாடு நமது பாரத நாடே. இந்நாட்டின் கைதான், கொலை இரத்தந்தோயாத கருணைக்கை. இந்நாட்டின் உள்ளமே, உலகிற்கெல்லாம் அன்பு சூழும் ஆன்மநேய உணர்ச்சி பெற்றது.

அப்பரும் புத்தரும் வள்ளலாரும் இந்நாட்டிலேதாம் பிறந்தனர்.

சென்ற ஐநூறாண்டுகளாக நமது தாய் அரியணை இழந்து, கைகால் கட்டுண்டு வாடுகிறாள். அதன் காரணம், நாம் நமது அறத்தை மறந்து ஆற்றலை வளர்க்காமல், அறிவைப் பெருக்காமல் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்ட மடமையேயாகும். நமது வேற்றுமைதான் அன்னியர் ஆக்கத்திற்கு ஆணிவேர். நாம் என்று ஒன்றுபட்டு, நமது முழுமனதையும் பாரதமாதாவின் சேவைக்கே அர்பணிக்கிறோமோ, அன்றே விடுதலை.

எனது தேசாபிமானம், அச்சிலும் மேடையிலும் சிலம்பம் அடிப்பதன்று. அதுவும் ஒருமட்டுக்கு அவசியமானவரையில் வேண்டும். நிலையான பயனுள்ள பணியே என் முயற்சி. நம்மைத் துண்டாக்கும் சாதி மத சாத்திர கோத்திர வாதங்களை ஒழித்து இந்தியரெல்லாம் ஒரேகுலமாக வாழும் ஒற்றுமையை ஊக்கும் சமயோகமே எனது தேசசேவை. நான் அப்படிப்பட்ட சமயோக சாதனம் செய்துகொண்டு, அடக்கமான உதாரணத்தால் என்னைச் சேர்ந்தவரும் ஆன்மநேயம் பயிலச்செய்வேன். நான் பத்துப் பேருக்குக் கருத்துடன் கல்வி கற்பித்தால், பத்து ஏழைகளுக்கு உழைக்கத் தொழிலளித்தால், கவலையும் பிணியுமாக வருந்தும் ஏழை ஜனங்களுக்கு இயற்கைச் சுகாதாரமும் சுத்தான்ம ஞானமும் அளித்தால், அதுவே எனக்குப் பிரியமான தேசாபிமானம். இத்தகைய தேசத்தொண்டிற்கே என்னைத் தயார் செய்துகொண் டிருக்கிறேன். ஆனால் மேடையிலும் அச்சிலும் பொதுக் கிளர்ச்சியிலும் தெருக்கூட்டத்திலும் தொண்டு செய்யும் அன்பர் அவ்வாறே செய்க. நம் ஆற்றல் நிலையான பணிநலமாக வேண்டும். வீண் ஆரவாரமின்றி, தியாகபுத்தியுடன், சுயநலமின்றி, பொதுநல உணர்ச்சியுடன் அடக்கமாக மனச்சாந்தியுடன், தெய்வ நம்பிக்கையுடன், தேசபக்தியுடன், உன்னதசித்த வைராக்கியத்துடன் கடமையை யோகமாகச் செய்க. "யோக: கர்மஸு கௌஸலம்" என்ற கீதா வாக்கியத்தைக் காண்க. அதையே

வள்ளுவரும் மனத் திட்பங்கொண்ட வினைத்திட்பம் என்றார். ஒருவர் செய்யும் தொண்டை மற்றவர் இகழக்கூடாது. ஒரு யந்திரத்தில் ஒவ்வொர் உறுப்பும் மற்ற உறுப்புகளுடன் முரண்படாது தனக்குரிய காரியத்தைச் செய்வது போலவே, நாட்டிலும் அவரவர் திறமைக்கும் புலமைக்கும் தகுந்த பணியைத் தியாகவேள்வியாகச் செய்ய வேண்டும்; செய்தால் வெற்றி உறுதி. தேசீய யந்திரத்தில் பெரிய பெரிய விசைவிற்களும் உண்டு. சிறிய சக்கரங்களும் உண்டு. என் இடத்தில் என் உள்ளத்திற் சுழலும் சக்தியை எப்போதும் பொது நலத்திற்காக அர்ப்பணித்து வருவேன். அதன்பால்வரும் இசை வசைகளைப் பாராட்டமாட்டேன். என்னைக் கண்காணித்துவரும் ஒற்றர்களும் ஓர் இரவில் என்னைக்குறித்து, "இவர் பேச்சில் யோகம், சமரசம், சன்மார்க்கம், கீதை, குறள், இவையே வருகின்றன; பாட்டிலும் ஆத்மா கடவுள் என்பதுடன் கலந்தே தேச உணர்ச்சி வருகிறது; இவரிடம் ஒரு குற்றமும் காண முடியவில்லையே" என்று பேசிக்கொண்டிருந்ததை நானும் மறைந்திருந்து கேட்டேன். ரமணரின் சகஜ நிலையும், அரவிந்தரின் யோக சைதன்யமும், காந்தியின் கர்மபக்தியும், சாயிபாபாவின் தெய்வவுறுதியும், அப்பரின் அஞ்சாத் திட்பமும் நமக்கு வேண்டும்.

தாங்கள் தங்களுக்குரிய கலைப்பணியைச் செய்யுங்கள். இறைவன் என்னுள்ளத்தில் ஊக்கும் திருத்தொண்டை நான் அப்பர், சைதன்யர் முதலிய மகான்களின் உதாரணத்தைச் சிரமேற்கொண்டு செய்வேன். எல்லார் பணியும் சேர்ந்து அகண்ட பாரத சுதந்தர யாகசித்தியை அருளுக. வந்தே மாதரம், எந்தாய் வாழ்க !

சேலம் கல்லூரித்தலைவர் யக்ஞேச சர்மாவுடன் நான் சாந்திநிகேதனம் சென்று தாகூரைப் பார்த்தேன். தாகூரின் மண்குடில் சாமிளியில் ஒரு வாரம் தங்கினேன். அவரும் ஆத்மீகங் கலந்த தேசசேவையே நலம் என்கிறார். "என்னுள்ளம் மாந்தர் உள்ளத்துடன் கூடிக்குழையக் குமுறுகிறது" என்கிறார் மகாகவி. ஒன்றாகுக, நன்றாகுக.

## 17. நீ துறவி

திருக்காளத்தி.

ஸ்ரீலஸ்ரீ பழநி சுவாமிகளுக்கு நமஸ்காரம். விடுமுறை நாட்களில் நீண்ட பிரயாணம் செய்தேன். பல மகான்களைக் கண்டேன். திருச்சியிலிருந்து திருப்பதிவரை கால்வண்டி நடந்தது. அனுபவச் சுமைகள் ஏராளம்! தங்களிடம் கைவல்யசித்தி இரகசியம் கேட்டதுமுதல் என் உள்ளம் ஞானமார்க்கத்தில் திரும்பியிருக்கிறது. ஞானம், பக்தி, கர்மம் இம்மூன்றும் ஞாபகம் இருக்கவேண்டும். பூரணசித்தியின் உடல் கர்மம், மனம் பக்தி, மூளை ஞானம். கர்ம பக்தி மார்க்கங்களை அதிகமாக நான் அநுசரித்துக் கொண்டிருந்தேன். சதாசிவப்ரம்மேந்திராள் சமாதி-தியானம், ஞான தாகத்தைத் தூண்டிவிட்டது. அத்தாகந்தீர தங்கள் உபதேசங்கள் உதவின. இரண்டு மாதங்கள் பிரயாணம் செய்து நான்கண்ட துறவிகளின் உறவினால் ஞான வைராக்யம் அதிகமானது. கோயிலடியிலிருந்து என்னுடன் மகாதேவ சந்நியாசி வந்தார்; வேதாகமங்களைக் கரைத்துக் குடித்த அந்த மகான், வேதக் கோட்பாடுகளுடன் தசோபநிஷத்துக்களையும், கர்மகாண்டத்தின் உட்பொருளையும் நன்றாக விளக்கினார். திருவையாற்றில் ஒரு பழுத்த ஞானி, என் பூர்வபுண்ணியத்தால் கண்டதும் "அப்பா, வா" என்று அழைத்து எனது உள்ளத்தைத் தொடும்படி சுத்தான்ம ஞானத்தை உபதேசித்து, நிர்விகல்ப சமாதியிலும் இருந்துகாட்டி, புருவமத்தியில் விபூதி வைத்து, "கவனம் இங்கேயிருக்கட்டும்" என்று காட்டினார். சென்னை கன்னிகா பரமேஸ்வரி கோயிலில் நான் ஒரு பரதேசிக் கூட்டத்துடன் கலந்திருந்தேன். அங்கே ஒரு மகான் பதஞ்ஜலி யோகசூத்திரத்தை நன்றாக

விளக்கினார். அவர் வயதை விழுங்கிப் பதினாறு வயதுக் குமரன்போல் இருந்தார்! எப்போதும் தியானந்தான். என் பாக்கியவசத்தால் இருவரும் கோயிலுக்குள்ளேயே வசித்தோம். இரவில் விழித்திருக்கும் தியான இரகசியத்தை அவர் எனக்குச் சொன்னார். தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும்நிலையை அவரிடம் அறிந்துகொண்டேன். திருத்தணியில் ஒரு சுப்பிரமணிய பக்தர் நான் முருகனைப் பாடிக் கொண்டிருக்கையில் அருகே வந்தார். இருவரும் நண்பரானோம். இரவில் அவர் வேலை நட்டு சாம்பிராணி போட்டு வணங்கியதும், சுற்றியிருந்தவர்களுக்கு என்னென்னமோ குறிகள் சொன்னார். என்னைப் பார்த்து ஆவேசமாக "நீ துறவி; ஏன் இன்னும் அங்கேயே ஒட்டிக்கொண்டிருக்கிறாய்? நினைத்தாலும் அந்தப் பக்கத்தில் நீ இருக்கமுடியாது. உன்வேலையைச் செய்யப் புறப்படு" என்று பின்வரும் சில நிகழ்ச்சிகளைச் சொன்னார். அப்படியே நடக்குமென்றும் என் மனச்சாட்சி சொல்லுகிறது. சூக்குமதேகம் காரண சரீரத்தில் ஏகாக்ரப்படும்போது, மூளையிலுள்ள அறிவு நரம்புகள் தீவிரமாக வேலைசெய்து, பிறர் மனதையும் அறிந்து தெரிந்து கொள்ளுகின்றன. இதுவே அந்த ஆவேசக்காரர் மர்மம் என்று தெரிகிறது. திருப்பதியில் ஏராளமான பரதேசிகளைக் கண்டேன். ஓர் ஊற்றருகே உண்மைத் துறவி ஒருவர் தென்பட்டார். அவருடனே நான் இந்துஸ்தானியில் பேசிக் கொண்டும் துளசிராமாயணத்தைக் கேட்டுக்கொண்டும் அங்கிருந்தேன். திருப்பதியிலிருந்து திருக்காளத்தி வந்தேன். அங்கேதான் கண்ணப்பர் மலையில் தியானித்து மனோஜயம் வாய்த்தது. திருத்தலங்களுள் காளத்தி எனக்கு மிகப்பிடித்திருக்கிறது. தவத்திற்கேற்ற தலம். கண்ணப்பர் மலையைக் கண்டதுமே சிவபக்தி என்னை ஆட்கொண்டது. இவ்வாறு நான் செய்த பிரயாணத்தில், எத்தனையோ அனுபவங்கள் எய்தின. ஒன்றை மட்டும் சொல்லவேண்டியிருக்கிறது.

நல்ல துறவிகள் அங்குமிங்கும் அபூர்வமாக அடக்கமாக இருக்கிறார்கள்; அவர்கள் தம்மைக் கடவுள் என்றும், அவதாரம் என்றும் விளம்பரம் செய்து கொள்ளவில்லை. சிலர் கூட்டத்துடன் கலந்து உருத்தெரியாமல் வசிக்கின்றனர். சிலர் பரம ஏகாந்த மௌனத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். போலித்துறவிகள் ஏராளமாக இருக்கிறார்கள். திருத்தலங்கள் திருட்டுத்தலங்களாய் வருவது இவர்களாலேதான். 'நமக்கேன்' என்றும் இருக்கமுடியவில்லை. உண்மை ஞானியான தாங்கள் ஒரு வழிகாட்டவேண்டும் என்று இதை எழுதுகிறேன். போலித் துறவிகள் 'நான் பிரம்மம்' மயக்கத்தால் சாதாரண மனிதர்களைத் தமக்கு அடிமைகள் என்று கருதி, மிரட்டிப் பணம் பறிக்கிறார்கள்; பணத்தைக் கஞ்சாப் புகையாக விடுகிறார்கள். ஊன், கள், சாராயம் உண்டும் ஆவேசம் நடிக்கிறார்கள். பிள்ளை வரம் தருவதாகப் பெண்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்; இதற்குமேல், "நானே தெய்வம், நானே உன் உய்வும்" என்று ஆங்கரிக்கும்போதுதான் சிரிப்பு வருகிறது. ஒரு சாமியாரைக் கண்டேன். அவர் "உடம்பில் உத்தமனைப் பார்! சாகா உடல் பெற்றோம்; காயசித்தி பெற்றோம்; குண்டு பட்டாலும் உடல் சாகாது" என்றெல்லாம் பேசினார். ஆள் ஹல்வா மாதிரி யிருந்ததால் எல்லோரும் நம்பினார்கள். நான் "ஐயா நீர் உமக்கு மேல் உள்ள கடவுளை ஒப்புவீரா? அல்லது நீரே கடவுளா? உம்மைவிடப் பெரிய கடவுளையே ஒருவன் நம்பினால் கதி பெறலாமா? அல்லது யோகமும் சக்தியும் உமக்கே மிராசா?" என்று வினாவி, பரம்பொருளின் இலக்கணத்தை ஒரு பாடலாகப் பாடினேன். அருகிருந்த சீடரைக் கடைக்கண் பார்த்தார். சீடர் என்னைச் சினந்து "ஐயா, இங்கே சாமியே தெய்வம்; வேறெதையும் பாடக்கூடாது. சந்நிதானத்தைப் போல நித்தியதேகம் பெற்றவர்கள் யாருமில்லை. இது அவதாரம்" என்றனர். "ஐயா, நித்திய தேகத்திற்கு தாடி சிகை நரைக்குமா, திரை விழுமா?" என்று கேட்டேன். "சை அதிகப்பிரசங்கி; உன் கண்ணுக்கு அப்படி; எங்கள் விழியில் அது தங்கமயம்" என்றனர். நான் அடக்கமாக இருந்து, பக்கத்தில் ஒருவரை விசாரித்தேன். ஹல்வா ஆசாமி உள்ளே இரண்டு சக்திகளை வைத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் சுவாமிகளுக்குக் கைங்கரியம்

செய்து வருகிறார்கள். அடியார் நித்தியதேகம் கிடைக்கும், வரங்கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பணம் பண்டம் தருகிறார்கள். சாமி, ஹல்வா, லட்டு, பூரி பாயசத்துடன் தீட்டுகிறார். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஓதாதுணர்ந்த சித்தர் என்று சீடர் தமுக்கடிக்கிறார்கள்! ஒருநாள் இவர் தலையணைக்குள் பதுக்கி வைத்த பொற்காசுகளை ஒருவன் திருடிச் சென்றான்; உள்ளே பஞ்சுக்கிடையே ஓட்டாஞ்சல்லிகளை செருகி வைத்து விட்டான். சித்தர் ஒருநாள் தலையணையைச் சோதித்து 'சிவசிவா' என்றார். ஏக்கத்தால் சிவபாதம் அடைந்தார்.

இந்தமாதிரித் துறவிகள் பேசாமல் கலியாணம் செய்து கொண்டு பாடுபட்டுப் பிழைக்கவேண்டும். சிலர் கல்லையும் கட்டையையும் நட்டுப் பாமரமக்களிடம் "இக்கட்டையே கடவுள்; போடு காணிக்கை; நினைத்தது கைகூடும்" என்று உண்டியல் வசூலிக்கிறார்கள். திருத்தலமெங்கும் இதே பிச்சை நாடகந்தான்! இந்தப் பரதேசிகளையும், பிச்சைப் பட்டாளத்தையும் சரியான கல்வி தந்து, தொழிலுந்தந்து, பொதுநலத் தொண்டராக்கினால், நாடு பிழைக்கும். அல்லது சேனையில் சேர்த்துவிடவேண்டும்.

காட்டுப்புத்தூரில் நாராயணகுரு என்ற ரெட்டிச்சாமி இருந்தார். அவர் உபதேசங்களை நேரே கேட்டு அமிர்தம்மா என்னும் ஞானி சொல்ல நான் பாட்டாக எழுதினேன். அத்தனையும் அனுபவ ஞானமணிகள். அவற்றுள் "ஞானி உள்ளே, அஞ்ஞானி வெளியே" என்றொரு வசனம் இருந்தது. அதன் பொருளை நன்றாகக் கண்டேன். உண்மை உள்ளே அடங்கி யிருக்கிறது. போலித்தனம் ஆடம்பரம் செய்கிறது.

சுவாமிகளே, நான் என்றும் உண்மையான சுத்தானந்த ஞானியாக இருக்கத் தங்கள் உபதேசமும் உதவியும் வேண்டும். காவேரிக்கரைக் குடிலில் தங்களுடன் ஆனந்தமாகத் தியானிக்க மீண்டும் வருகிறேன். ஓம் தத்ஸத்.

(அயலூர் காவேரிக்கரையில் குடில் அமைத்துத் தவம் புரிந்த பழநிச்சாமிக்கு எழுதிய கடிதம். அவர் உண்மைத் துறவி.)

## 18. வீரவிளக்கே !

காட்டுப்புத்தூர்

வீரவிளக்கு ஸ்ரீ வ.வே.சு.ஐயர்

வீரவிளக்கே! நமஸ்காரம். தங்கள் நட்பை எனக்குத் தந்த பராசக்தியை வணங்குகிறேன். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தேன்; எனது ஆசிரிய நண்பர் ஒருவர் "இதோ ஐயர் மொழிபெயர்ப்பு" என்று தந்தார், படித்தேன். இதுதான் சரியான மொழிபெயர்ப்பு என்று என் முயற்சியை நிறுத்திக் கொண்டு, தங்களை நினைத்தேன். தங்களை அறியாதவர் இல்லை; 'இந்தியர்' பத்திரிகையில் தாங்கள் எழுதிய லண்டன் கடிதங்களும் 'கரிபால்டியும்' எனது தேசாவேசத்திற்கு விறுவிறுப்பு அளித்தன; எனினும் எனது நண்பரான கோடீஸ்வர ஐயர், பி.ஜீ. சுந்தரமையர், வேங்கடராம சாஸ்திரியார், டாக்டர் ராஜன் முதலியோர் தங்கள் அருமை பெருமைகளைப் பற்றிச் சொன்ன போது, இராமர் பெருமையைக் கேட்ட மாருதிபோலானேன்! இவர்கள் அனைவரும் தங்களுடன் பழகியவர்கள். அறிவும் திருவும் மிக்க கனவான்கள்; "உங்களைக் கண்டால் ஐயர் விடமாட்டார்" என்று சாஸ்திரியார் கூறுகிறார். அவரைக் கண்டால் நானும் விட மாட்டேன் என்று பதிற்சொல்லி வருகிறேன். தங்களைக் கண்டு என் அந்தரங்கங்களைத் தாங்கள் அறியும் நன்னாள் விரைவில் வரட்டும். நமக்குள் முன்பே அரசியல் தொடர்புண்டு. இப்போது அறிவியல் தொடர்பு தொடங்குகிறது. தங்கள் தொண்டிற்கே இங்கே இருக்கிறேன். காணிக்கை வந்து சேரும்.

'கம்பநிலைய' வெளியீடுகளை, சர்மாவும் கோடீஸ்வரையரும் தந்தார்கள். எல்லாம் அற்புதம்! கம்ப ராமாயணம் தங்களால் புத்துயிர் பெற்றது. உலக மகா காவியங்களில் அதற்கே முதலிடம் அளித்து வந்தேன். கம்பனின் ரசனைத்திறமை வேறெங்கும் காணமுடியாத கலைச்சிறப்பு என்கிறீர்கள். தங்கள் நாட்டன்பும், கம்பப் பாட்டன்பும் அவ்வாறே காணமுடியாத தனிச்சிறப்பாம். புதுவையில் காந்தி வந்து நம்மைச் சந்தித்தது முதல், நம் உள்ளம் காந்தீயத்திலும் கலைவளர்ச்சியிலும் திரும்பியது. தங்கள் ஆணைப்படியே மாணவரிடையே காந்தீயத்தைப் பரப்பி வருகிறேன். அடுத்தமாதம் காந்திஜயந்தி; சத்தியாக்கிரகம் என்ற நாடகம் போடுகிறோம். கம்பனின் பாட்டைப் பதம் பிரித்திருப்பது செய்யுளை எளிதாக்கிப் பூட்டை உடைத்துவிட்டது; இனி எல்லாத் தமிழரும் கம்பக் கோயிலுட் சென்று கலாதேவியைக் காணலாம். சில பழம் பண்டிதர்கள் இன்னும் கறபுறா மோஸ்தரில் மோகங் கொண்டலைகிறார்கள். அவர்கள் காலம் மலையேறிவிட்டது. தமிழ் மறுமலர்ச்சியடைந்து விட்டது. நமது கவி பாரதியார் பாடல்களும், தங்கள் வசனமும் தமிழுக்குப் புதிய அழகையும் எழிலையும் உயிர்ப்பொலிவையும் தந்திருக்கின்றன. பாரதியாரின் கண்ணன் பாட்டும், குயிற் பாட்டும், பாஞ்சாலி சபதமும் ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிகளைப் போன்றன. என்ன எளிய தெளிவு; எவ்வளவு வசீகரமான நடை; எவ்வளவு ரஸமான விஷயம். பாரதியாருக்கு எனது உருக்கமான அன்பைச் சொல்லவேண்டும். விரைவில் அங்கே காண வருவேன்.

என்னைப் பற்றித் தங்கள் நண்பர் எழுதிய கடிதத்தில், நான் பாரதசக்தி மகாகாவியம் செய்துவருவதைக் குறித்திருக்கிறார். என் வாழ்வு முழுவதையும் அக்காவியமாக உருச்செய்திருக்கிறேன். ஆழ்ந்த நிஷ்டையிலிருந்து எழுந்த வாக்கைக் கொண்டு அதன் சொல்லும் பொருளும் அமைந்துள்ளன என்பதைத் தங்களைப் போன்ற ரசிகரே உணர்கிறார்கள். ஒவ்வொரு கவியும், தன்னையே உருக்கிவார்த்துக் காவியமாக்குகிறான்; என் ஆவியின் ஆர்வ மெல்லாம் இக்காவியமாக உருக்கி வார்த்திருக்கிறேன். அதன் ஆரம்பப் பகுதிகளைத் தங்களுக்கு இத்துடன் பதிவுத் தபாலில் அனுப்புகிறேன். என் சார்பாக ஒரு நண்பரும் தங்களைக் காண்பார். அவர் மூலம் காணிக்கையும், ஒரு நாடகமும் சில பாடல்களும் வரும். எல்லாம் மனம்போலப் பார்த்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். மாசற்ற உள்ளங்கொண்ட தங்கள் ஆசியால், எனக்கு நன்மையுண்டாகும். நண்பர்மூலம், நம் நிலையப் பணிக்கு என்னாலான காணிக்கை வரும்; தமிழ்த்தாயின் பெயரால் ஏற்றுக்கொள்ளவேண்டும். என் காவியத்தை, வரகவி சி. சுப்பிரமணிய பாரதியாரிடமும் காட்டவேண்டும். அவர் ஆசியையும் ஆவலாக எதிர்பார்க்கிறேன். நேரே வருகிறேன். மற்றவை அடுத்த வெள்ளிக்கிழமை. வந்தே மாதரம். அன்பன்.

## 19. குருகுல ஆர்வம்

காட்டுப்புத்தூர்

**வீரத்திருவாளர் வ.வே.சு. ஐயர் அவர்களுக்கு நமஸ்காரம்.**

தங்கள் அன்புரைகள் எனக்கு ஊக்கமும் தைரியமும் உற்சாகமும் அளித்தன. நண்பர் தங்கள் காட்சியை ராமன் காட்சி போல் வருணித்தார்; பாரதசக்தி தங்களுக்கும் கவிபாரதியாருக்கும் மகிழ்ச்சியளித்தது எனக்குத் தைரியமளித்தது. தங்கள் ஆசி பெற்ற பிறகு பேனாவிற்குப் புதியவேகம் வந்துவிட்டது. இனிக் காவியம் முடிந்ததுபோலத்தான். இவ்வொரு காவியத்தை நான் நல்ல முறையில் நகாசுசெய்து தமிழன்னைக்குச் சூட்டினாலும் போதும்.

நிற்க, எனக்கு உத்தியோகக் கட்டுப்பாடு பிடிக்கவில்லை. எனது ஜீவனத்திற்குப் போதிய வட்டி வரக்கூடிய தொகை சேர்த்து பாங்கில்

போட்டுவிட்டேன். இனி இந்த அடிமைத்தொழிலை விட்டொழித்து, சுதந்தரமாக யோகமும் பொதுநல சேவையுமாக எனது வாழ்வைக் கழிக்கத் தீர்மானித்துவிட்டேன். அதற்கேற்றபடி இங்கே வரும் இடர்களும் சோதித்து என்னை முன்னே தள்ளு கின்றன. அன்னியக்கல்வி முறை நம்மை ஆளாக்காது. பழைய பிரமசரிய குருகுலக்கல்வி முறையுடன் தற்காலத்தில் வேண்டிய விஞ்ஞானமும் சேர்ந்த புதிய கல்வி முறையை அமைக்கவேண்டும். அதைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து ஒரு நூலும் எழுதி வைத்திருக்கிறேன். தமிழருக்கென்று ஒரு குருகுல நிலையம் வேண்டும். நாலந்தாவும், சாந்திநிகேதனும், சபர்மதியும், ஆக்ஸ்போர்டும் சேர்ந்த அகண்ட அத்யாத்ம வித்யாலயமாக அது விளங்கவேண்டும். தங்கள் உத்தேசமும் இப்படியிருப்பதாகவே நண்பர் சொன்னார்.

தங்களைச் சென்னை வந்து காண பரதன்போலக் காத்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் அன்பன்.

## 20. வீர விளக்கே !

காட்டுப்புத்தூர்

வீர ஸ்ரீ வ.வே.சு. ஐயர் அவர்களுக்கு வணக்கம்.

தீரச்சிங்கமே! தேசபக்தனுக்கு நல்வரவு! சென்னைக்கு வந்து தாங்கள் தேசபக்தனில் பேனா நாட்டிய நாள் நன்னாள். தேசபக்தன் தலையங்கம், அரசியல் இலக்கியமாக இருக்கிறது; மஜினியின் "யங் இதாலி" போலத் தங்கள் பத்திரிகை பொலிக !

எனது நாடகநூலை(வசந்த சுந்தரி) இன்று அனுப்பியுள்ளேன்; அதிலுள்ள குறைகளைக் காட்டி நாடகம் இன்னும் எப்படித் திருந்த வேண்டும் என்பதை உணர்த்தியருளுக. கவிதை, நாடகம் இவற்றில் எனக்கு உற்சாகமிருக்கிறது; ஆனால் கலை என்பது அனுபவத்தீயில் புடம் வைத்து வைத்தே மாற்றேறி விளங்க வேண்டும். கலைக்கு நீரே கலங்கரை விளக்கு!

ஏப்ரல் ஒய்வில் தங்களை மீண்டும் காண நினைக்கிறேன். இக்கூண்டைவிட்டுச் சுதந்தரமாகத் திரிய எனது ஜீவப்பறவையும் சிறகடித்துத் துள்ளுகிறது. நான் பகிரங்கமாகவே மஹாத்மாவின் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறேன். லோகமானியர் இறந்தநாளன்று ஒரு பொதுக்கூட்டத்தில் கண்ணீர் விட்டு அனாயாசமாகப் பாடினேன். அதுமுதல் எனக்குத் தேசவெறி பிடித்திருக்கிறது. தெய்வவெறியுடன் கலந்து, இப்போது கட்டுகளை உடைக்கிறது. இங்கே கிலாபத் இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன்; கதர் வளர்ச்சியில் என்னாலானதைச் செய்கிறேன்; கரூரில் அடிக்கடி அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். அங்கே நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை எனது அரிய நண்பரானார். சமீபத்தில் திருச்சி காங்கிரஸ் சபையின் கட்டளைப்படி நானும் ரா.கிருஷ்ணமூர்த்தியும் கிராமங்களில் காந்தீயப் பிரசாரம் செய்தோம். விபரம் பத்திரிகையில் கண்டிருப்பீர்கள். இப்படியெல்லாம் பண்ணக்கூடாது என்று என்னைச் சிலர் மிரட்டுகிறார்கள். அவர்களுக்கு விரைவில் ஒரே வரியில் பதில் சொல்லிக் கிளம்பப் போகிறேன். பிறகு, தவமும் தேசசேவையுந்தான் என் வாழ்வு. தங்கள் ஆசீர்வாத பலத்தாலும், பரமாத்ம சக்தியாலும் எனது வாழ்க்கை பொதுநல யோகமாக வேண்டும்.

தாங்கள் அரசியல் சுழலில் நீந்திக்கொண்டிருக்கிறீர்கள். காலங் கிடைத்தபோது எனக்கு ஆறுதலாக ஒருவரி அனுப்பியருளுக.

வீர விளக்கே! விக்ரமச்சிங்கமே! வ.வே. சுப்பிரமணிய தீரனே! தீப்பொறி சிந்தும் சிங்கம்போல, பாரததேவியின் பந்தனை தீர்க்க, வீறுகொண்டெழுந்த

வித்தகா போற்றி; அரியைக் குகையில் அதிரப் பொருதினை; மராடிய மணிக்கு மகுடமானாய்; சாவர்க்கரின் ஜயமுரசானாய். செந்தமிழ் சிவாஜி நீ செய்த செயல்கள் இதிகாசத்திற் கினியவையாகும்! கனிதமிழீன்ற கரிபால்டி நீயே! எமபடர்விழியை ஏய்த்துத் தனியாய்ப் புதுவை புகுந்தவுன் புகழை யென்சொல்வேன்! புதுவையிலிருந்து நீ புரிந்த வீரம், சுதந்தர வேள்விச் சுடரை வளர்த்தது; வள்ளுவர் குறளை, வரகவி கம்பனை, உலகம் அறியக் கலைவளர்ச் செல்வா! என்னுளம் புகுந்த இனிய நண்பா! உன்னுடன் உள்ளம் ஒன்றி நின்று, பொதுநல வேள்வி புரியும் வரத்தை இறைவன் அருளுக. நிறைகலைவாண! கூட்டை யுடைத்துக் குயிலுனைக்காணப் படபடவென்று துடிசிறை யடித்தது. வருகிறேன் மணியே வருகிறேன்! வீரவிளக்கே! வெற்றி யுனக்கே !

அன்பன்.

## 21. நன்றிக் கடிதம்

காட்டுப்புத்தூர்

தலைமை ஆசிரியர்.

அன்புமிக்க நண்பருக்கு மிக்க நன்றி. என் மனச்சாட்சி சொல்லுகிறபடியே நான் நடக்கவேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தில் என் ராஜீனாமாவை ஏற்றருள்க என்று ஒரு மாதத் தவணை கொடுத்துவிட்டேன். அது தோரணைக்காக அனுப்பியது; இக்கடிதம் விதரணைக்காக வருகிறது. தங்களை நான் தந்தை போலக் கருதி அபிமானித்தேன். தாங்களும் என்னிடம் மிகவும் பிரியமாயிருந்து, எனது போதனாமுறைகளைக் கண்டு மகிழ்ந்தீர்கள். நம்மிருவருக்கும் எவ்வித மனத்தாங்கலும் இல்லை. ஆனால் இருவருக்கும் மேலேயுள்ள கடவுள் எனக்குப் புதியவழி காட்டியிருக்கிறார். அதன் தூதனாக மனச்சாட்சி என்னை விடுதலை பெறத்தூண்டுகிறது. நான் செல்லுமுன் தங்களிடம் தனதாகச் சில செய்திகளைச் சொல்ல நினைத்ததுண்டு; நேரம் இல்லையாதலால் அவற்றை எழுதியனுப்பலானேன்.

1. மகாத்மாவை, தேசாபிமானம் உள்ள மாணவருடனும், இவ்வூர் இந்து முஸ்லீம் நண்பர்களுடனும் நான் கட்டளை ஸ்டேஷனிலும் பிறகு திருச்சியிலும் தரிசித்தது முதல், அவரது சத்திய வாழ்வில் எனக்குப் பெருமதிப்பு உண்டாயிற்று. தியாகமும், அயராப் பொதுநலமும், தருமலட்சியமும் கொண்ட அவர், நமது நாட்டிற்குப் புதியவழி காட்டியிருக்கிறார். ஆயுதமில்லாது பலமிழந்த அடிமை நாட்டிற்கு, அவர் சொல்லும் சத்தியாக்கிரகமே உய்யும் வழி என்று எனக்குத் தோன்றுகிறது. அவ்வழியை ஒரு கருமயோக சாதனமாகவே நான் பின்பற்றத் துணிகிறேன்.

2. அத்தகைய மகானின் கட்டளைப்படியே நான் கதர் ஆடை உண்டாக்கல், கட்குடி ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு உழைத்தல், தேசியக் கல்வியைப் பரப்பல், தீண்டாமை விலக்கல் ஆகிய ஐங்கடமை பூண்டேன். என்னிடம் அன்புடைய மாணவருக்கும் இக்கடமைகளையே உணர்த்தினேன். சர்க்கார் பள்ளிக்கூடத்திலிருந்து இப்படி நான் செய்யத் துணிந்தது உங்களுக் கெல்லாம் வருத்தமாயிருந்ததை யுணர்ந்தேன். எனினும், என்ன வந்தாலும் இந்த ஐங்கடமையைத் தேசத்திற்காகவே காக்க வேண்டி யிருக்கிறது. வேலையிலிருந்துகொண்டு தாராளமாக நான் என் மனச்சாட்சியைத் திருப்தி செய்யமுடியவில்லையாதலால், என் பொறுப்பிலேயே விடுதலை பெற்று தேசவூழியம் செய்யத் துணிந்துள்ளேன். நான் வ.வே.சு. ஐயருடன் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டுள்ளேன். ஆனால் அவர் இன்று காந்தி பக்தர், கலாமுனிவர், பாரதரிஷியாயிருக்கிறார். அவர் கட்டளைப்படிதான் நான் இங்கே இருந்தேன்.

3. தற்காலக் கல்விமுறையில் குறையிருப்பதை ஆசிரியர் சங்கத்தில் நாமெல்லாரும் பன்முறை பேசினோம். எஸ்.ஸ்ரீநிவாசை யங்கார் தலைமையில் நடந்த நமது ஜில்லா ஆசிரியர் சங்கத்திலும் நான் விரிவாகக்

*கல்விச்சீர்திருத்தத்தைப் பற்றி பேசினேன். அவர் ஆமோதித்தார். இக்கல்விமுறையில் யாருக்கும் திருப்தியில்லை. இதைக் கஞ்சிப் படிப்பு, கஞ்சிக்கு மாரடிப்பு என்று அழுத்தமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. இதில் தியாகபுத்தி கிடையாது. பணத்திற்கு ஐந்துமணி நேரம், புத்தகத்தில் உள்ளதைக் கிளிப் பிள்ளைக்குப் பாடஞ்சொல்லுவதுபோலச் சொல்லுகிறோம். மாணவரும் நாலுகாசு சம்பாதித்துக் குடும்பம் பிழைக்கவே இக் கல்வியைக் கற்கிறார்கள்; பெற்றோரும் அதையே நாடுகிறார்கள்; படித்தவர்களும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். பள்ளிக் கூடத்தில் புகுந்துபார்த்தாலோ, உபாத்தியாயருள் ஒற்றுமை யில்லை. ஆசிரியர்கள் காலத்திற்கேற்ற புதிய புதிய அறிவை வளர்க்காமல், பழைய மாமூலிலேயே பிடிவாதம் செய்து, பிரம்பும் பாடப்புத்தகமுமாகப் பிழைப்பைத் தள்ளுகிறார்கள். தேசத்திற்கும் மாணவருக்கும் சம்பந்தமேயில்லாதிருக்கிறது.*

*4. ஆசிரியர் சங்கம் பெயருக்குக் கூட்டம்போட்டு வாய்ச் சிலம்பம் அடித்துச் செல்வதைத் தவிர வேறு புண்ணியமில்லை. பாடபுத்தகங்கள் வைப்பதிற்கூட லஞ்சவஞ்சம் தாண்டவ மாடுகிறது.*

*5. சுதந்தரமாக மாணவரை வெளியே அழைத்துச் சென்று காலத்திற்கேற்ற கல்வியளிக்க நான் முனைந்தேன்; அவர்களுக்கு நூற்றல், நெசவு முதலிய சில தொழில்களில் பயிற்சியுண்டாக்க முயன்றேன். 'நமது தேசம் நம் உரிமை; அதற்காக நாம் இவ்வழியில் தொண்டு செய்யவேண்டும். நாமெல்லாரும் இந்தியர்; ஒரே குலத்தவர். சாதிமத வேறுபாடுகள் மனிதரின் மனமயக்கம். எல்லாரும் ஒற்றுமையாக இருந்தால் நமக்கு அசாத்தியமான பலம் உண்டாகும். பிறகு எளிதாகச் சுதந்தரம் பெறலாம். அதற்காகத் திலகர், காந்தி, லாலாஜி போன்ற மகான்கள் இப்படித் தியாகம் செய்கிறார்கள்' என்று விளக்கினேன். தேச உணர்ச்சி மிக்க பத்திரிகைகளைப் படிக்கச்செய்தேன். இவையெல்லாம் எனக்குப் பல பிரதிவாதிகளையே உண்டு பண்ணின; எல்லாம் காலத்தின் வினையைத் தவிர வேறில்லை.*

*6. பழைய அத்யாத்ம ஞானமும், இக்காலம் பெருமை கொண்ட விஞ்ஞானக் கலைகளும் சேர்ந்த பிரமசரியக் குருகுலக் கல்விதான் நமது நாட்டிற்குக் கதிமோட்சம் என்று எனக்குத் தோன்றுகிறது. அக்கல்விமுறையில் ஆசிரியரும் யோகசாதனங்கள் செய்து, மாணவரும் சாதகர்களாக பிரமசரியம் காத்து ஞானத்தவம் செய்யவேண்டும். முதலில் தமிழ் ஆரியம், பிறகு ஆங்கிலம் இந்தி ஆகிய மொழிகளைக் கற்று, வெறும் பாஷாஞானம் மட்டுமின்றி அரிய கலைகளைத் தேர்ந்து, கல்வியுந் தொழிலும் ஒழுக்கமும் தார்மீகவுணர்வும் வீரதீர பராக்ரமுங்கூடிய நிபுணர்களை உண்டாக்கக் கூடிய குருகுலக் கல்வியே கல்வியென ஆராய்ச்சியால் அறிகிறேன். அடுத்த கிராமத்தில் அப்படி ஒருகலாநிலையம் நாட்ட முயன்றது உண்டு; காலவினை அதைத் தடுத்தது.*

*ஆதலால் அத்தகைய குருகுலம் தமிழ் நாட்டில் அமைந்து எனக்கும் அழைப்புவருமட்டும் நான் யோக சாதனங்களைச் செய்து கொண்டும், சிறந்த கவிதைகளையும் இலக்கியங்களையும் சிருஷ்டித்துக்கொண்டும் அடக்கமாகத் தவம்புரிய விரும்புகிறேன்.*

*சிலர் என்னைப் பத்திரிகை நடத்தச் சொல்லுகிறார்கள். நல்ல வழிபிறந்தால், பேனாவை அத்துறையில் நாட்ட என்றும் தயாராக இருப்பேன். எல்லாம் இனி என்னை உள்ளிருந்து நடத்தும் அந்தர் குருவான இறைவன் செய்கை. முதலில் விடுதலை பெறவே அவன் தூண்டுகிறான்; அவன் விட்ட வழியில் கீதையைக் கையிலேந்திச் செல்கிறேன்; வேறுவழி தோன்றவில்லை. சர்வாந்தர்யாமியான அவன் என்னை இனி நடத்தட்டும். மாணவரும் ஆசிரியரும் எனக்குச் செய்த மரியாதைகளையும் பேசிய புகழுரைகளையும் என் உயிர்த்தலைவனான பரமாத்மனுக்கே அர்ப்பணிக்கிறேன்.*

நண்பரே, தங்களால் நான் எவ்வளவோ பயன் பெற்றேன். தங்களால் எனது சங்கீதஞானம் வளம் பெற்றது. புதுப்புதுக் கீர்த்தனங்கள் புனைந்து தங்கள்முன் பாடி வந்தேன். காட்டுப் புத்தூர் எனக்குப் புதிய வாழ்வளித்தது. மேலே நான் சொல்லிய குறைகளை யெல்லாம் பொதுக்கருத்திற் கொள்ள வேண்டும். காட்டுப்புத்தூருக்கும் ஜமீன் பள்ளிக்கூடத்திற்கும் நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன். இந்தப் பள்ளிக் கூடத்தில் நான் ஆசிரியனாக மட்டுமன்று ஒவ்வொருநாளும் புதிய புதிய கலைஞானத்தை வளர்த்த மாணவனாகவும் இருந்தேன். இந்த நிலையத்திலிருக்கும் ஆராய்ச்சிச்சாலை எனது ஜீவரசாயன சாலையாக இருந்தது. எல்லாருக்கும் மனமார்ந்த நன்றி செலுத்தி, எல்லா வுயிர்களையும் திருமேனியாகக் கொண்ட இறைவன் விட்ட வழியே செல்லுகிறேன். வழியும் அவனே, விழியும் அவனே! ஓம், ஓம், ஓம்!

## 22. நாட்டுக்கு நல்ல கல்வி?

திருச்சி 1920.

வீர விளக்கே! விடுதலைக் கனலே!

விஞ்ஞானச் சாலையில் டபார் வெடி அதிர்ந்த திடீர் நிகழ்ச்சி என் வாழ்விற்குப் புதிய திருப்பம் அளித்தது. டாக்டர் ராஜன் வீட்டில் காந்தியைக் கண்டேன். அவர் என் அல்பாகா கோட்டையும் மஸ்லின் டர்பனையும் ஏற இறங்கப் பார்த்து "இன்னும் சிறையிலிருப்பாயா, வா வெளியே" என்று சிரித்தார்! டாக்டர் சாஸ்திரி என் அன்னிய ஆடைகளை எரித்து, அந்தச் சாம்பலை என் நெற்றியில் பூசினார். காந்தி ஒரு முரட்டுக் கதர்த் துண்டை எனக்குப் போர்த்தினார். அப்படியே பள்ளிக்கூடம் சென்றேன். "Freedom calls, no more Walls" (சுதந்தரம் அழைக்கிறது. சுவர்-வாழ்வில்லை) என்று சுருக்கமாக எழுதி வைத்துவிட்டு வெளியேறினேன். மாணவர் பெருங்கூட்டம் கூட்டி வழியனுப்பினர். அதேசமயம் தேவகோட்டை தேசீயப் பள்ளிக் கூடத்தில் விஞ்ஞானமும் சாரணக்கலையும் பயிற்ற எனது தோழர் G. சுந்தரம் ஐயர் அழைத்தார். காந்தி "கிராமசேவை செய்" எனப் பணித்தார். "நான் இரண்டையும் செய்வேன். திருப்பதி மலை மேலே சுவாமி சுயப்பிரகாசருடனும், ஞானானந்தருடனும் தியானித்த பிறகு, இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

என் வாழ்வில் புதிய திருப்பம் திகழ்ந்தது. இனி அடிமைச் சேவகம் இல்லை. நூற்றுக்குநூறு கவியும், கலையும், ஆக்கப் பணியுமாகவேயிருப்பேன். நான் திருச்சி தேசியக்கல்லூரித் தலைவர் சாரநாதரையும், புலவர் P.T. ஸ்ரீநிவாசஐயங்காரையும், சவுரிராயரையும் பார்த்தேன். லாலிஹால் கூட்டத்தில் கல்லூரி ஆசிரியர்கள் நல்ல முறையில் கல்விமுறை பற்றி உரையாடினர். P.T. ஸ்ரீநிவாசஐயங்கார் சிறந்த கல்வியறிஞரைக் கூட்டி நமது குருகுல முறையை ஆதரித்தார். டாக்டர் ராஜன் மாளிகைக்குச் சென்றேன். அவர் தங்கள் கடிதத்தைக் காட்டினார். அதில் குருகுல ஆர்வம் கண்டேன். தங்கள் தேசபக்தன் வழக்கு எப்படியாகுமோ? அதன் பிறகு கலந்துகொள்வோம். இதற்கிடையே எனது கருத்துக்களைப் பணிவுடன் நிவேதிக்கிறேன்,

கல்வியே நாட்டின் கண்; பள்ளியிலே பண்பாடு உருவாகிறது. இதுகாறும் இந்திய ஆசிரியர்கள், ஐரோப்பியக் கல்வி யாளரையே பின்பற்றினர். சோக்ரதன், அரிஸ்டாடில், பிளேடோ, தெகார்த்து, பெஸ்தலோசி, ருஸ்ஸோ, ஃபுரோபெல், எர்பர்ட் முதலியோரைப் பின்பற்றினர். கிரேக்க, ரோம, பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலக் கல்விமுறை நமக்கு உலகறிவைத் தருவது உண்மை. ஆங்கிலப்பயிற்சி விஞ்ஞான உணர்ச்சியைத் தூண்டியது உண்மை. ஆனால் எல்லாம் வயிற்றைச் சுற்றியே வளர்ந்தன. சிந்தனைத் திறமை குன்றியது. தாகூர், சிரத்தானந்தர், காந்தி போன்றோர், நாட்டுக்கேற்ற கல்விமுறையை நாட்ட முயன்றனர். இவர்கள்

நிலையங்களை நான் நேரே கண்டேன். ருஸ்ஸோவின் எமிலியைப் படித்தேன். மொட்டு மலர்வதுபோல அறிவு மலர்கிறது என்றார் ருஸ்ஸோ. காந்தே(Kante) வாழ்வை உயர்த்துவதே வளம்பெற்ற கல்வி என்கிறார். நமது கீதை "அத்யாத்ம ஞானமே ஞானம்; மற்றதெல்லாம் அஞ்ஞானம்" என்கிறது. பெஸ்தலோசியின் ஆர்வத்துடன் எழுதுகிறேன். சைதன்யக் கொழுந்துகளான நமது குழந்தைகளுக்கு மிக நல்ல கல்வியைத் தரவேண்டும். போர்முரசு கொட்டிய நெப்போலியன் கெத்தேயைப் பார்த்துப் புதுமை பெற்றான். இறுதி நாட்களில் நாட்டுக் குழந்தைகளுக்கு 14வயது மட்டும் நல்ல கல்வியை இனாமாகத் தந்தான். பாக்லி(Bagley) என்ற அறிஞன் சமுதாயத்திட்பமே (Social efficiency) கல்வியின் பயன் என்றான். பிரெஞ்சுக் குழந்தை "வீரர் ஆவேசத்தோடு எழுவோம்" என்று மார்சேய் கீதம் பாடிப் பறைகொட்டித் தாவுகிறது. நாகரிகம் வளர்ந்த பாரிஸில் பிரெஞ்சு நிலையம் (Institute of France) ஐந்து கழகங்களாகிச் சிறந்த புலவர்குழுவால் இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, கலை, தத்துவம் ஆகிய ஐந்தையும் வளர்க்கிறது. ஒவ்வொரு கழகத்திலும் 40 அறிஞர் புலமை நடத்துகின்றனர். பலதுறைக் கல்லூரிகளால் நாட்டில் விஞ்ஞானம், விவசாயம், மருத்துவம், கலை, மொழி, தொழில், எழில், இராணுவம், போர்க்கலை, பொதுக்கல்வி, உயர்கல்வி, நுண்கலை, சுகாதாரம், கப்பல், சுரங்கம், விமானம் ஆகிய எல்லாத் துறைகளிலும் கல்வி முன்னேறிவருகிறது. ஜப்பானில் ஜினோநருசு என்பவர் எழுந்து, பெண்-கழகம் நாட்டி மேற்கும் கிழக்கும் இணைந்த கல்வியைத் தந்தார். நாட்டிற் பாதி பெண்டிர், பெண்ணே வாழ்வுத்துணை, மனைக்கரசி, நன்மகவைத்தரும் தாய் என்று கண்ட நருசு வீடும் நாடும் விளங்கும், சயன்சும் சமயமும் பொலியும் கல்வியைத் தந்தார். நிப்பன் பண்பாட்டை நிலவச் செய்தார். இக்கழகம் மிகப்பெரிது. இதை மாணவிகளும் ஆசிரியருமே நிர்வகிக்கின்றனர். பெரிய பெண்கள், சிறிய பெண்களைப் பயிற்றுகின்றனர். இப்பெண்டிர் அறிவு, தொழில், எழில், கலை, ஒழுக்கம், தொண்டுரன், நாட்டூழியம் அனைத்திலும் சிறந்து விளங்குகின்றனர். இவர்களுடைய திருமண முறைகூடச் சீரும் சிக்கனமுமானது. இவர்கள் ஷிண்டோ—சமயத்தையும் சென்சமயத்தையும் பயில்வர். காலத்திற்கேற்ற விஞ்ஞானமும், இலக்கியமும் பயில்வர். இவர்கள் உடலும், மனமும், செயலும், அறிவும் திட்பநுட்பமானவை. இந்த ஆக்கங்களையெல்லாம் கொண்ட புதுமுறைக்கல்வியைக் குருகுலத்தில் தரவேண்டும். அடிமைத் தொண்டில் ஆழும் கஞ்சிக் கல்வியன்று. அறிவாண்மையுடன் வாழும் கல்வி நமக்கு வேண்டும். அறிவு, தெளிவு, தேர்ச்சி, திறமை, திண்மை, உண்மை, ஆண்மை, அழகு, கலை, தொழில், ஒழுக்கம், விழுப்பம், ஒப்புரவு, யோகசித்தி, தெய்வத்தன்மை ஆகிய பதினைந்து நலங்களைக் கொண்ட புதுக்கல்வி நமக்கு வேண்டும். உடற்பயிற்சி, தொழிலாற்றல், நாட்டுணர்ச்சி, உலகுணர்ச்சி, உள்ளுணர்ச்சிகளைக் கல்விமுறை ஊக்கவேண்டும். அதர்மபலத்தை ஒழிக்க தர்மபலம் வேண்டும். ஒளியே இருளை ஒழிக்கும்.

1. யோகம், தியானம், ஆசனம், பிராணாயாமம், கீதை, யோகசித்திப் பயிற்சி—இவை உள்ளாற்றலை ஊக்கும். இந்த மானிடம் 24 தத்துவத் தொகுப்பு; வான், காற்று, தீ, நீர், மண் இவை ஐம்பூதங்கள்; ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் இவை தன்மாத்திரைகள். உடல், நாக்கு, மூக்கு, காது, கண் இவ்வைந்தும் அறிவுப்பொறிகள். வாய், கை, கால், குதம், குறி இவை வினைப் பொறிகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவை நுண்ணுறுப்புகள், சூக்குமசரீரம். இந்த 24 தத்துவங்களும் யோகத்தால் பயிற்சிபெற்றால், இந்த இயற்கையுடலுக்குள் உள்ள ஜீவாத்துமா புலனாகும். யமநியம ஆசன பிராணாயாமம் ஆகிய புறப்பயிற்சியால் தூல, சூக்குமதேகம் பொலிவுறும். அதற்குமேல் இருவிகார மனதை அடக்கி, சித்தச்சுழலை நிறுத்தி, அகங்காரத்தை வென்று, புத்தி தெளிந்து நல்வழிநடக்கத் தியானமே சாதனம். இராமன், கண்ணன், விஜயன், அனுமான், பீஷ்மன் போன்ற தீரரை ஆக்கியது தியானயோகமே. ஒரு சமுதாயத்தின் தலை-அறிவு, தோள்-

ஆண்மை, கைகால்-தொழில், உடல்-தொண்டு, ஆத்மசக்தி -மூச்சு, ஆத்ம பலமே பலம். அதை உட்பயிற்சியால் வளர்த்தால், புலமை பொலியும்; பிறகு அறிவு, தொழில், கலைப்பயிற்சி மிக எளிதாகும்.

2. வாழ்க்கைப் போரில் கல்விமான் ஜயவீரனாக விளங்க வேண்டும். உழைப்பாலே பிழைத்தல் வேண்டும். உழைப்பை யோகமாக்க வேண்டும். மேனாடுகளில் சிறு குழந்தைகளுக்குத் தோட்டக் கல்வியுண்டு. நான்கைந்து வயதுக் குழந்தைகள் பூந்தோட்டம், காய்கறித்தோட்டம் போடுகின்றன. விருந்தினரை உபசரிக்கின்றன, பாடுகின்றன, ஆடுகின்றன, அணிசெய்கின்றன.

தாயே சேயின் முதல் ஆசிரியர். தாய்மாருக்கு நல்ல பயிற்சி தந்து குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்கச்செய்க. உலகப் பெரியார் வாழ்க்கையில் சிறந்த நிகழ்ச்சிகளை ஆடல், பாடல், நாடகமாக விளக்கிக் குழந்தையின் எண்ணத்தை உயர்த்துக. மெகானோ செட்டு தந்த புகைவண்டி, கப்பல், விமானம், மோட்டார் முதலியன அமைக்கச்செய்து பழக்கலாம். எளிய நடையில் கதைகள் சொல்லித் திருப்பிச் சொல்லச் செய்க. இயற்கை யழகில் குழந்தையுள்ளம் பழகவேண்டும்.

ஐந்து வயதுமுதல் அறிவுப் பயிற்சி தொடங்கும். பண்புள்ள பாடல், நாடகம், ஓவியம், வீட்டுக்கணக்கு, கடைச்சாமான் வாங்கல், உடற் பயிற்சி, பயிர்வேலை, மலரணி, சூளை வைத்தல், நூற்றல், நெய்தல் முதலிய எத்தனையோ சிறுதொழில்களால் குழந்தைகள் நன்முறையில் வளரும்.

ஐந்து முதல் பத்துவரையில் எண் எழுத்து, இனிய பாட்டு, ஓவியம், வரலாற்றுக் கும்மி, வீரர் வரலாறு, அருட்கவிகள், அறநெறிக் கவிகள், கணக்கு, பூகோளம், தாவரம், பூதவேதியம், உடலுயிர் நுட்பம், சிறு மருத்துவம், உலகறிவு, சாரணம், ஒப்புரவு இவற்றைப் பயிற்றலாம்.

பதினொரு வயது முதல் பதினெட்டு வயது வரையில் வீட்டாட்சி, நாட்டாட்சி, தொழிலாட்சி, எழிலாட்சி, உடல் நுட்பம், வாழ்வுக்கலை, உலக வரலாறு, இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் எல்லாம் முறையாகப் பயிற்றி மாணவனை ஆளாக்குக. பயனுள்ள தொழிலறிவு படித்தோங்கலாம்.

பதினெட்டுக்குள் மாணவன் யாதேனும் ஒரு துறையிற் புலமை பெற்று, அப்புலமையால் தானும் தன்னவரும் இன்புற, இயல்புற வாழவேண்டும். இவ்வயதில் இராசயோகப் பயிற்சி முதன்மையானது. 18-20 வரையில் இராணுவப் பயிற்சிப் பெறலாம். ராணுவப் பயிற்சி எல்லாருக்கும் முதன்மையாகும்.

இருபது முதல் இருபத்திரண்டு வரையில் அனுபவக் கல்வி பெறலாம். மருத்துவம் தேர்ந்தவன் ஒரு மருத்துவரிடம் பயின்று திறமை பெறலாம். மாணவன் விஞ்ஞான ஆராய்ச்சியால் புதுமை செய்யலாம்.

இவ்வாறு இருபத்திரண்டுவரையில் அறிவை வளர்த்து அருட் பணியாக்கலாம்.

இத்தகைய யோகவிஞ்ஞானக் கல்விப் பயிற்சி தங்கள் தலைமையிலேயே குருகுலத்தில் நிறைவேற்றத்தகும். மற்றவை நேரே.

## 23. கண்ணுக்கு மருத்துவம்

**அன்பு மணியே!**

கண்ணாலேதான் உலகைக் காண்கிறோம். நூல்களைக் கற்கிறோம்; கண்ணை உயிர்போலக் காக்கவேண்டும்.

*கண்ணுக்கு மருந்து இரண்டே. 1. தண்ணீர் 2. கதிரொளி. ஒரு கிண்ணியில் குளிர்ந்த தண்ணீர் வைத்து, அதில் கடற்பஞ்சு அல்லது நல்ல சல்லாத் துணியை நனைத்து வைக்கவும். அதனால் கண்களை நன்றாகத் துடைத்துக்கொள்ளவும். உடனே மாலைக் கதிரை நோக்கு(சுமார் 4.30 அல்லது 5 மணி). கதிரொளி கண்ணுக்குள்ளே போகும்படி இமை பாதி மூடி இப்படியும் அப்படியும் தலையைத் திருப்பவும். ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் என்ற மந்திரத்தைச் சொல்லலாம். மூன்று நிமிஷம் இவ்வாறு கதிர்ப்பயிற்சி செய்ததும், மீண்டும் கண்களை ஈரத் துணியாற் கழுவித் தண்ணீர் சிறிது உட்புகச்செய்க. அத்துடன் பிடரியிலும் ஈரம்படும்படி துணியை வைத்துத்தேய்க்கவும். அதன் பிறகு எலுமிச்சம்பழச் சாற்றில் அகத்தியிலை-கரிசலாங் கண்ணியைப் பிழிந்து, சிறிது தேனும் சேர்த்து, ஒரு சிறு சீசாவில் வைத்துக்கொண்டு கண்ணுக்குள் மெல்லத் தடவிக் கொள்ளவும். அப்படியே கண்ணை மூடிக்கொண்டு ஜயாசனம் பாதசிரசாசனம் இரண்டும் செய்க; பிறகு பிராணாயாம யோக முத்திரை செய்க. மீண்டும் ஈரத்துணியாலே கண்ணை நன்றாகத் துடைக்கவும். இரவில் உப்பு நீரில் ஈரத்துணி நனைத்து, கண்ணில் வைத்துக் கட்டிக் கொண்டு படுக்கவும். காலையில் கதிராடி தண்ணீரால் கண்ணைக் கழுவி, முன்சொன்ன ஆசனங்களைச் செய்து குளிர நீராடுக. நந்தியாவட்டப் பூவைக் கசக்கிக் கண்ணில் சாறு புகும்படி தேய்ப்பதும் நலமாகும். ஒரு தொட்டி செய்து நீர் நிரப்பி, அதில் முதுகு முழுதும், கழுத்துமட்டும் நீருக்குள் ஆழ்த்தி, அடிவயிற்றை நன்றாகத் தேய்த்து இருபது நிமிஷம் முதுகைக் குளிப்பாட்டினால் மூலச்சூடு தணியும், கண்ணுக்கு நல்லது. கண்ணில் விளக்கெண்ணைய் தேய்ப்பதும் நல்லது. புதன், சனி நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், தேங்கா யெண்ணெய் இந்நான்கையும் சேர்த்து மஞ்சள், மிளகு, சித்தகத்தி அல்லது கரிசலாங்கண்ணி போட்டுக் காய்ச்சி நன்றாகத் தலையிலும் உடலிலும் தேய்த்து ஊறியபிறகு அரப்புத் தேய்த்து முழுகுவது உடம்புக்கு நல்லது. உணவில் பழச்சாறு, பொன்னாங்காணி, மணத்தக்காளி, தூதுளை, தும்பை இலை இவை சேர்க்கவேண்டும். ஏகாதசியன்று துளசி நீர் மட்டும் அடிக்கடி அருந்திப்பட்டினி யிருக்கவேண்டும்.*

*இதுதான் நான் நலங்கண்ட மருத்துவமாகும். செய்க, உய்க! இறைவன் அருள் பெய்க !*

## 24. மெக்கா மாட்சி

**பம்பாய்**

*ஞானசித்த குருநாதருக்கு வணக்கம். நீண்டபிரயாணம் முடிந்தது. நான் மசூதியிலிருந்து திருக்குரான் பயின்றேன். அப்துல்லா மௌல்வி என்னை மெக்காவிற்கு அழைத்தார். நான் அப்துல் கறீம் என்ற பெயருடன் இஸ்லாமியவுடையுடன் புறப்பட்டேன். பம்பாயில் கப்பலேறி அரபியா சென்றோம். ஒட்டகத்தின் மீதேறி மெக்கா வந்தோம். என்பேச்சு மூச்செல்லாம் பிஸ்மில்லாமயமானது. மெக்காவுக்குள் பிற மதத்தினர் புகமுடியாது. நான் அந்தரங்க சுத்தியுடன் முஸ்தஃபா ரசூலல்லாவின் பக்தியில் ஈடுபட்டிருந்தேன். எனது குருநாதர் சீரடி சாயிபாபா "அல்லா மாலிக்" என்ற மந்திரத்தை எனக்கு முன்பே உபதேசித்தார். ஆதலால் நான் ஈமான் கொண்ட இஸ்லாம் உணர்வுடன், மெக்காவிற் புகுந்தேன். அப்துல்லா மௌல்வி எல்லாம் சுற்றிக்காட்டி, காபாமுன் நிறுத்தினார். அடடா, என்ன அமைதி, என்ன அன்புறுதி, என்ற ஒழுங்கு! நூற்றுக்கணக்கான ஃபகீர்களும், யாத்திரிகரும் "பிஸ்மில்லாஹி இற்றஃமான் இற்றஹீம்" என்ற முழக்கத்துடன் தொழுதகாட்சி கண்டு என் உள்ளம் சிலிர்த்தது. நான் காபாவையே பார்த்துத் தியானித்தேன். பிறகு அரபாத்து மைதானத்தில், ரஸூல் அல்லாஹ் அன்பருக்குக் குர்பானி கொடுத்த இடத்தை வணங்கினேன். மைனா சென்றேன். எங்களுடன் அரிய இஸ்லாமியத் துறவிகள் சேர்ந்தனர். அவர்கள் ஜலாலுடீன், ஹஃபிஸ், அத்தார்—முதலிய முனிவர் பாடல்களைப் பாடினர். கஜல் இசைத்தனர். மதினத்தில் முகம்மது நபி வாழ்ந்த தெய்வீக வாழ்வு*

என் முன் நின்றது. அங்கே 5000 முஸ்லிம்கள் நடத்திய தொழுகையை மறக்கமுடியாது. முகம்மது ஹிஜிரியின் போது ஒளிந்த குகையும் அதன்பின் அவர் பெற்ற வெற்றியும் என்னை ஆவேசப்படுத்தின.

இஸ்லாமின் இதயத்துடிப்பை உணர்ந்தேன். இஸ்லாமியரின் தீவிர பக்திக்கு அல்லாஹு அக்பர் போட்டேன். கிறிஸ்து சமய ஆராய்ச்சி முன்பே உண்டு. மீண்டும் பாலஸ்தீனுக்குச் சென்றோம். அங்கு ஐந்து கண்டங்களும் கலந்து சிலுவை வணக்கம் செய்தன. பாரத சக்தி மஹாகாவியத்தில் கிறிஸ்து ஜோதிப் படலமும், நபி நாயகப் படலமும் எழுத இந்த அரிய பயணம் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. தங்கள் ஆணைப்படியே இந்த நீண்ட பயணத்தைச் செய்து முடித்தேன்.

அப்துல்லா மௌல்வியின் அன்புறவால் நான் பெற்றபயன் அளப்பரிது.

கிறிஸ்து இஸ்லாமிய சமய ஒழுங்கு போல இந்து தருமத்தையும் அணிவகுத்து நடத்த முடியுமா என்ற கேள்வி என்னுள் குமுறிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஓய்வில் நான் வேத-இந்து மதத் தொண்டு செய்யவிரும்புகிறேன். குருதேவா, இந்தக் கடிதம் தங்களுக்கு ஹூப்ளி சித்தாரூடர் ஆசிரமத்தில் கிடைக்கும் என்று நினைக்கிறேன். எல்லாம் வாழ்க !

## 25. இந்து தருமப் பிரசாரம்

### ஸ்ரீமத் சுயம்பிரகாச சுவாமிகளுக்கு நமஸ்காரம்-ஓம் தத்ஸத்

தங்கள் கிருஷ்ண-சௌந்தர்யமும், ஜடையும், தத்தாத்ரேயக் கோலமும் என் கண்முன் நிற்கின்றன. ஐயம்பாளயத்திலும், முக்கொம்பிலும் பாரதசக்தியைக் கேட்டுத் தாங்கள் கூறிய ஆசி மொழிகள் என் உள்ளத்துடிப்புடன் பேசிக்கொண்டிருக்கும். முருகன் சந்நிதியில் இந்து தருமத்தைப்பற்றித் தங்கள் முன்னிலையில் நான் பேசக்கிடைத்தது பெரும்பேறு. நான் தீர்க்க தரிசிகளைச் சுற்றி வளரும் சமயங்களை ஆராய்ந்து மெக்கா-பாலஸ்தீன் வரையில் சென்று வந்தேன். இந்து மதம், காட்டில் தவிக்கும் வாட்டக் குழந்தையாயிருக்கிறது. என் உள்ளத்தில் வேதப் பிரார்த்தனை எழுந்தது.

"ஜனத்தலைவா! இறைவா! உன்னைத்தவிர இந்த உயிர்க் குலங்களை ஆளத்தக்கவர்கள் இல்லை. நீயே எல்லாம் வல்ல இறைவன். நாங்கள் உன்னை எதை விரும்பி வழுத்துகிறோமோ, அது எங்கள் வசம் ஆகுக. உலகில் நல்லனவற்றிற்கெல்லாம் நாங்கள் நாயகராகுக!" (ருக்வேதம்) இந்து மதத்தில் ஆராய்ச்சி புகுந்தது.

நான் இந்துவா? ஏன்? இந்து தருமம் எது? என்ன சொல்லுகிறது? இந்து தருமம் எதில் உள்ளது? பிற மதத்திற்கு பைபிள், குரான் உண்டு. இந்து மதத்தின் பைபிள் எது? அதில் எத்தனை வரி எனக்குத் தெரியும்? நான் இந்து தர்மத்தை மதித்து நடக்கிறேனா? அல்லது பரதர்மத்தில் மயங்கி சுதர்மத்தை விட்டு விட்டேனா? நான் உண்மை இந்துவாக நடப்பது எப்படி?

இந்தக் கேள்விகளுக்கு எத்தனைபேர் திருப்தியாக பதில் சொல்லமுடியும்? என்னருமை இந்து சமுதாயமே, நீ உருக் குலைந்து போனாய். பழமையின் ஆத்மஜோதி எங்கே? புதுமையின் கலைவளமை எங்கே? பழமையின் தீமையும், புதுமையின் தீமையும் மண்டிப்போய், நீ துன்பக்காட்டில் வழி தெரியாமல் அலைகிறாய். ஐயோ! இந்து சமுதாயமே, கோடானு கோடி இந்துக்கள் பிற மதம் புகுந்து உனக்கே பகைவரானார்கள்.. உன்னிடமிருந்து பிரிந்து குல்லாப்போட்ட பிறமதத்தினர், உன்னை முதுகில் குத்துகின்றனர். புகைவண்டியிலிருந்து தூக்கி எறிகின்றனர். உன் பெண்களை பலாத்காரம் செய்கின்றனர். வாளையும் தீயையும் கொண்டு உன் மனையை இரத்தச் சுடுகாடாக்குகின்றனர். வெறியும் வெறுப்பும்,

பூசலும், பகையும் நாட்டை நரகமாக்கின. சங்கரரும், ராமானுஜரும், மத்வரும், சைதன்யரும், வல்லபரும், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், தாயுமானார், வள்ளலார் போன்ற முனிவர்களும் தோன்றிய ஹிந்து சமுதாயம் இன்று ஒரு மாயச் சுழலில் சிக்கிப் பரதர்மத்திடம் வசவு கேட்கிறது என்றால், நமது மோசமான நிலையை என்னென்பது? நமது வேதாகமங்களை அன்னியர் கேலி செய்கிறார்கள் என்றால், நம்மவரும் அவற்றைத் தொடுவதில்லை, நினைப்பதில்லை. நமது ரிஷி வாக்குகளில் ஒரு வரிகூடத் தெரியாதவர்கள், நமது சுதர்மத்திற்கே பெரிய நரகக்குழி பறிக்கின்றனர்.

பிறமதத்தினர் இந்து தர்மத்தின்மேல் கூறும் பழிகளில் மிகப் பெரிய பழிகளாவன: "இந்து மதம் பல கடவுள்களைக் கல்லிலும் கட்டையிலும் செய்து கும்பிடுகிறது; அது பூசாரியும், புரோகிதரும் கட்டிவிட்ட பொய்மதம். இந்துமதம் சாதிக் கந்தல். இந்துக்கள் இரண்டாயிரம் சாதிகளாகப் பிளவுபட்ட மூடக் கொள்கையினர். இந்து மதம் பெண்களை இழிவுசெய்கிறது. உலகைவிட்டுக் காடு மலைகளில் ஏகாங்கியாகத் திரியும் அநாகரிகத்திற்கே பல்லவி பாடுகிறது. ஆதலால் இந்துமதம் சுயநலப்புரட்டரின் சரக்கு. எங்கள் மதமே உண்மை. எல்லாரும் வாருங்கள்."

இந்த மாதிரியே கூச்சலிட்டுப் பணமும் தந்தால், பாமர ஜனங்கள் மதம் மாறக் கேட்க வேண்டுமா? பதினாயிரக் கணக்கான மக்கள் சுதர்மத்தை அறியாமையால் துறந்து, பரதர்மத்திற் புகுந்து, நமக்கே பிரதிவாதியாகிறார்கள்.

இந்து மதத்தின் உயிர்நிலையை நாம் அறியாமல், புற வேடங்களை நாம் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். நீ தொடாதே, நான் உயர்ந்த ஜாதி, என்னைத் தீண்டாதே; நான் நாமம், நீ நீறு, எனக்கும் உனக்கும் ஒத்துவராது என்று சிறுபிள்ளைத் தனமாக நாம் சண்டையிட்டு, நாட்டையும் வீட்டையும் பறிகொடுக்கிறோம். இனி இந்த நிலை கூடாது. சுதந்தர இந்தியாவில் ஒவ்வொரு இந்துவும் தன் சமயத்தை அறியவேண்டும். துறவிகள் இந்து மதத்தின் பொதுத்தன்மையை எல்லாருக்கும் சொல்லவேண்டும்.

1. இந்து தருமம் எல்லாருக்கும் பொதுவான ஒரே பரம் பொருளையே நம்பி வணங்குகிறது.

2. பரம்பொருளின் குணங்கள் பல. அவன் அனந்தகுண சின்மயன். அன்பு, கருணை, அருள், உண்மை, அழகு, வீரம், அறிவு, அமைதி முதலிய நற்குணங்களையே நமது முனிவர் உருவாக ஆக்கினர். உதாரணமாக, எங்கும் நிறைந்த இறைவன் விஷ்ணு. இதயத்தில் உள்ள தெய்வம் நாராயணன். மங்களம் தரும் யோகமூர்த்தி சிவம். தெய்வத்தின் சக்தி பார்வதி... ஓங்கார வடிவம் கணபதி. தெய்வக் கனலே முருகன்... உருக்களெல்லாம் தெய்வ குணங்களின் உருவகங்களே. நடராஜா, அரங்கநாதன் இரண்டும் தெய்வத்தின் உலகாடல் வடிவம். இரண்டும் துரியநிலையில் ஆழ்ந்த ஆனந்த மயமே. உருவைக் கண்டதுமே அதன் உள்ளுண்மை நமது நினைவிற்கு வருகிறது. மனம் அந்த நற்குணத்தை நினைத்து நினைத்துத் தனதாக்கிக்கொள்ளுகிறது. இதுதான் உருவின் பயன்.

3. வேதகாலத்தில் சாதிமத பேதம் கிடையாது. கீதையிலும் சாதி என்ற பதமில்லை. குணகர்ம விபாகமே உண்டு. பிறப்பால் ஒன்று சிறப்பால் பல. ஒரு மனிதனுக்கு அந்தண் உள்ளமும், வீரத் தோள்களும், தொழில் நரம்புகளும், தொண்டுக் கால்களும் வேண்டும். இந்த நான்கையே நான்கு வர்ணங்களாக அமைத்தனர் அந்தக்காலம். அவை இவ்வளவு விபரீதமாகி, இந்தியாவே வேற்றுமைக் கந்தலாகுமென்றால், முனிவர்கள் வர்ணப் பேச்சே பேசியிருக்கமாட்டார்கள். உண்மையான இந்து தருமம் ஆண் பெண் சரிநிகர் எனக் கருதுகிறது. இருவருக்கும் பிரமசரியக் கல்வி, இல்லற ஒழுக்கம்,

வானப்ரஸ்த நியமம், துறவு நெறிகளை வகுத்திருக்கிறது. பெண்மை சக்தி, ஆண்மை வீறு.

4. மானிடர் அடையவேண்டிய புருஷார்த்தங்களை யெல்லாம் அடைந்து, மனிதன் தெய்வத்தன்மை பெற வழி காட்டுவது இந்து தருமமே. அது அறத்தை வேராகவும், பொருளைக் கிளையாகவும், இன்பத்தை மலர்களாகவும், முத்தியைக் கனியாகவும் கொண்டது.

5. கொல்லாதே, திருடாதே, கற்பழிக்காதே, சூதாடாதே, ஊன்மது வுண்ணாதே, பொய்யாதே, பொறாமைப்படாதே, இகழாதே, தன்னைப் புகழாதே, எப்போதும் இறைவனை நினை; எவ்வுயிர்க்கும் அன்பாயிரு; உன்னைப்போல பிறரை மதி" என்று இந்து தருமம் உபதேசிக்கிறது. மற்றெல்லா மதங்களும் திருப்பித் திருப்பி இவற்றையே உபதேசிக்கின்றன. ஆனால், உபதேசம் பலிக்கவில்லை, மதவெறியர் குடிவெறியரைவிட மோசமாகப் பஞ்சமா பாதகத்திற்கு மேல் பதினாயிரம் மகா பாதகங்களைச் செய்கிறார்கள். அது தீர்க்கதரிசிகளின் குற்றமில்லை; மனிதனைப் பிடித்த மிருகத்தன்மையின் குற்றமே.

6. சரியையால் சித்த சுத்தியும், கிரியையால் மனத்தெளிவும், யோகத்தால் உள்ளொளியும், ஞானத்தால் உள்ளொருமையும் பெற இந்துதர்மம் படிப்படியாக வழி காட்டுகிறது.

7. நால் வேதங்கள், தசோபநிஷத்துக்கள், கீதை, பிரம சூத்திரம் பதஞ்சலி யோக தரிசனம், சங்கரரின் விவேக சூடாமணி, வேமன சதகம், திருவாசகம், திருமந்திரம், தேவாரம், யோகசித்தி, திவ்யப் பிரபந்தம், தேசிகப் பிரபந்தம் முதலிய பல அருள்நூல்களை மகானுபாவர்கள் நமக்குத் தந்தார்கள். இந்துக்கள் இந்நூல்களைக் கற்று நிற்கவேண்டும். தமிழில் உள்ள அருள் வாக்குகளை அருட் செல்வமாகவும், ஆரியத்தில் உள்ளவற்றை வேதசாதனமாகவும் வெளியிட்டிருக்கிறேன். நமது தருமத்தைப் பாதுகாத்து அனுஷ்டிக்க விரதம் பூணுங்கள். தருமம் ரக்ஷதி ரக்ஷித: தருமம் தலைகாக்கும். அறத்தால் வருவதே இன்பம். கூட்டுப்பிரார்த்தனை நடத்தி அருள் முழக்கம் செய்வோம்.

ஓம் சுத்த சக்தி ஓம்.

## 26. தன்மையும் நன்மையும்

புலவரே, நல்ல பண்புகளைத் தருவது சமய ஒழுக்கம். அது பழம்பெரும் பண்பாடாகும். சிந்துப் பரப்பில் உள்ள முகிஞ்சதரையில் அகழ்ந்தெடுத்த தொல்பொருள்களிலும் தொன்மையது சமயம். அங்கே காணும் எழுத்துக்கள் தமிழ்ச் சார்புடையன. தொல்காப்பியம், திருக்குறள் போலவே அகரத்திற்கு முதன்மை தரும்.

மெய்யின்வழி அது உயிர்தோன்றுநிலையே
மெய்யோடு இயையினும் உயிர்நிலை திரியா!
மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்

எழுத்துக்கு முதல் அகரம். உலகுக்கு முதல் அரன். உயிரெழுத்து மெய்யெழுத்துடன் கூடியே மொழி ஆக்கம்பெறும். அப்படிக் கூடும்போது உயிரின் மாத்திரை திரியாதொலிக்கும். அவ்வாறே ஆன்மா உடலுடன் கூடி வினையுலகில் விளையாடினாலும், அது அதுவாகவே நிற்கும். உயிரும் மெய்யும் கூடி விளையாடல் புரிவதுபோலவே இறையருள் உயிருடலில் இறங்கி, வாழ்வு நாடகம் நடக்கிறது. "அகர முதலின் எழுத்தாக நின்றாய்" என்று சுந்தரர் குறிக்கிறார். அகரவுயிர்போல் அறிவாக நிற்கும் இறைவன் உள்ளபோதே சித்தாந்தமும் இருந்தது. சிவனைப்போலவே சித்தாந்தமும் பழம்பெறு நன்னெறி. அது ஆளைச்சுற்றி வளர்ந்தது அன்று! ஆண்டவனைச் சுற்றியே வளர்ந்தது. நமது சமயத்தின் இலக்கியம் பல்பு, இறைவன் அருள் மின்சாரம், நமது அன்பே கம்பி, அறிவே சக்தி, அருளே சுடர்— இந்த மின்விளக்கு உயிர் வழிபாட்டிற்கு நம்மை ஊக்குக !

## 27. செல்வத் தமிழகம்

வள்ளல் அழகர் வாழ்க! தங்களை நேரே கண்டு பேசியது நினைவிருக்கும். கல்விக்காகச் செல்வத்தை அளந்துவிட்ட வள்ளலாகிய தங்களுக்கு மற்றொரு பணிகாத்திருக்கிறது. தன வணிகர் பணம் புதிய தமிழுலகை ஆக்கவேண்டும். கடல்கடந்து உழைத்ததெல்லாம் காலச்சூறாவளியுடன் மறைந்தது. பர்மாவில் கர்மா நடக்காது; இலங்கை கைதராது. மலாயா முன் நமது மனம் மலையாநிற்கிறது. இனித்தமிழகத்திலேயே ராக்பெல்லரையும், ஃபோர்டையும் உண்டாக்கவேண்டும். தமிழும் சைவமும், விஞ்ஞானத்தொழிலும், பயிரும் வளர நம்மவர் இங்கேயே முதல் போட்டுச் செல்வத் தமிழகத்தை ஆக்கவேண்டும். ஜப்பான், சுசர்லாந்து, ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்று நமது நாடும் வளம்பெறவேண்டும். நமது சரக்குகள் நமது கப்பல்களில் துறைமுகமெல்லாம் சென்று பொன்கொழிக்கவேண்டும். தேசம் வணிகர் திராசுமுனையில் உள்ளது. உலகம் மதிக்கும்படி நாம் உழைப்பால் உயரவேண்டும். பொருள் ஒரு சக்தி; அதைப் பூட்டி வைக்கக்கூடாது. வெள்ளியும் தங்கமும் தொழிற்பெருக்கமாகத் துள்ளி விளையாடவேண்டும். அச்சுக் காகிதம் முதல் ஆகாயக் கப்பல்வரையில், அகப்பை முதல் அணுவுலை வரையில் எல்லாத் தொழில்களும் இங்கே நடக்கவேண்டும்.

நாலுகோடித் தமிழர் நன்றாக உழைத்துப் பிழைக்க வழிசெய்ய வேண்டும். இ.ப.ம. நாடுகளிலிருந்து திரும்பி வருபவருக்குப் பிழைப்புண்டாக்கவேண்டும். வரட்டு வயிற்றில் வள்ளுவமும் ஏறாது, வாசிட்டமும் ஏறாது. நாட்டின் வறுமை நீங்கத் தொழில் வகுக்கவேண்டும். அனல் மின்சாரமும் புனல் மின்சாரமும் சேர்ந்து தமிழகத்தைத் தொழிலகமாக்கவேண்டும். கலைக்கோவிலாக்க வேண்டும்; பயிற்சிபெற்ற தொழிலாளரே தமிழகத்தின் செல்வக் கரங்கள். அவர்கள் உழைப்பின் வேர்வையெல்லாம் ஒளிரும் பசுமைப்பொன். விஞ்ஞான வீறுபெற்ற தொழிலாளிகளே விளைவைப் பெருக்கும் வீரராவர். பத்துரூபா இரும்பை ஐநூறு ரூபா இயந்திரமாக்கி, அதில் பதினாயிரம் ரூபா பழுக்கச்செய்யும் விஞ்ஞானத் தொழில் வீரர் நமக்குவேண்டும். அத்தகைய தொழில் வீரரைப் பயிற்றும் கல்லூரிகளை நாட்டுவதே நாட்டுக்கு நற்பணி யாகும். உழைப்பும் பிழைப்பும் செல்வச் செழிப்பாகவேண்டும். பூட்டிய செல்வத்தைக் காலப்பூதம் கொண்டுபோகும். வட்டிக்குப் போட்டதுகூட வராதுபோகும். ஏனெனில் வருங்காலம் சமவுரிமைக் காலம்; பசித்த ஏழைகள் பணக்காரன் மாளிகையைக் குறிவைப்பார்கள். பணம் பலர் பாடுபட்டுண்ணும் தொழிலானாலே பாங்காகும். தொழிலோங்க எழிலோங்கும்.

## 28. மூன்று மந்திரங்கள்

அன்பு,

விவேகானந்தப் பாறையிலிருந்து எழுதுகிறேன். இங்கே அவர் சிந்தனையில் எழுந்த மனத்திட்பமே ஒருபுறம் வேதாந்த கர்ஜனையானது; இன்னொருபுறம் வினைத்திட்பமான பொதுநலப் பணிகளாயின. "உணருங்கள், உணருங்கள் கோடானுகோடி ஆன்மாக்கள் வறுமையால், மடமையால் வாடுவதை உணருங்கள். அவர்கள் நமது இரத்தக்கலப்புள்ள ஆன்மாக்கள். அவர்கள் பசியாற உண்ண, கல்விகற்று உயரத்தொண்டு செய்யுங்கள். அதுவே உண்மையான உலகசேவை; அதுவே கடவுள் வழியாடு" என்று வீறிட்டார் விவேகானந்தர். அவர் சமயத்துடன் சமுதாயப் பணியை இணைத்தார்; நமது சமயம் காடுமலையில் உறங்கும் உலக வெறுப்பன்று.

எல்லாச் சமயமும் மூன்று பொருள்களை ஒப்பும்—பதி, பசு, பாசம். இறை,

உயிர், தளை, கடவுள், ஆன்மா, உலகம், பரம், ஜீவன், ஜகம். நமக்கு முன்னே தெரிவது உடலும் உலகும். உடல் கொண்டு உலகில் வாழ்கிறோம். கண்ணால் பலகோடி உடலுயிர்கள் உலாவுவதைக் காண்கிறோம். உடலில் உயிர் இருப்பது தெரிகிறது. ஏனெனில் உள்ளம் துடிக்கிறது. மூச்சு உயிர்க்கிறது. உயிருக்கு உயிராக ஒன்றிருக்கிறது.

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

என்றார் அப்பர். எங்கும் எவ்வுயிர்க்கும் உயிராயிருக்கும் ஒரு சுத்த சக்தி சிவமே கடவுள். அதை வழிபட மூன்று மந்திரங்கள் உண்டு.

(1) 'சுத்தசக்தி ஓம் சிவம்' என்று இறைவனை எப்போதும் ஜபித்தல் வேண்டும். 100 தடவை ஜபித்ததும் 'சுத்த சக்தி சிவாய நம:' என்று வணங்கவேண்டும். இதனால் புலனடங்கும், மனம் தெளியும், கவலை தீரும்.

(2) 'சுத்தசக்தி சிவோஹம்' என்ற மந்திரத்தை மனதார உள்ளத் துடிப்புடன் ஓதி தியானித்தல் வேண்டும். தியானமே யோகம். யோகம் என்றால் மனம் ஆன்மாவுடன் உகுதல்; சீவன் சிவனுடன் உகுதல், பொருந்துதல், தியானத்தின் முடிவில் 'ஓம் சிவோஹம்' என்று வணங்குக.

(3) சுத்த சக்தி சிவமயம் என்று உலகைக் காண்க. எங்கே நோக்கினும் அங்கே சிவசக்தி மயம். இந்தக் காட்சியே அப்பர் ஐயாற்றிற் பெற்றது.

இக்காட்சியால் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கி, அருட்பணி செய்யும் ஆற்றலும் ஆர்வமும் உண்டாகும். உலகசேவைக்கு இசைந்த திருமந்திரம் இதுவே. (1) சிவனைப் பணிதல் பக்தியோகம். (2) உள்ளே உணர்தல் ஞானயோகம். (3) சிவமயமான ஆன்மாக்களுக்குத் தொண்டு பரவுதலே கர்மயோகம். ஞாபகம் இருக்கட்டும். ஞா ஞானம்— ப பத்தி — க கர்மயோகம். இம்மூன்றும் ஒன்றானாலே வாழ்வு நிறைவுறும். விவேகானந்தர் பரமஹம்ஸரிடம் பக்தி செய்தார். அமெரிக்காவில் ஞானம் பேசினார், பாரதநாட்டில் கர்மயக்ஞம், வினைவேள்வி நடத்தினார். அன்பு, அறிவு, அருட்பணி இம்மூன்றே மானிடம் தெய்வ ஒளிபெற்றுய்யும் சாதனமாகும்.

ஓம் சிவம், சிவோஹம் சிவமயம், ஓம் சுத்தசக்தி ஓம் சிவம்

## 29. கட்டும் கவலையும் கரையும் வழி

அன்பனே!

பணக்கார மாளிகையில் படாடோபத்துடன் பயம் குடியிருக்கிறது. மாடிக்குப்போகப் பயம்; கொல்லைப்புறம் போகப் பயம். பெட்டகத்துடன் கட்டும் கவலையும் கனக்கின்றன. வெள்ளிக்குப்பின் கள்ளன் வந்துகொண்டேயிருக்கிறான். நல்ல தூக்கம் இல்லை; எலிச்சத்தம் கேட்டாலும் கிலி பிடிக்கிறது! பயம் விடவில்லை என்கிறாய்.

கருமிப்பணமே கட்டும் கவலையுமாகும். அவ்வளவு பெரிய மாளிகையில் இருப்பது ஐந்தேபேர். ஐந்துபேர் இரண்டு அறைகளில் இருந்துகொள்ளலாமே. அகலமான திண்ணையில் நான்கைந்து பீரோக்களை வைத்து அதில் நல்ல நூல்களை அடுக்குவோம். செய்தித்தாள்களையும், நல்ல மலர்களையும் அங்கே வைப்போம். எப்போதும் கலகலவென்று நண்பர் வந்து படிப்பார்கள்.

உங்கள் கூடம் பெரிது. அதில் நடராஜா உருவத்தை வைப்போம். காலை மாலை நடராஜ உபாசனை சொல்லி மலர் தூவுவோம். ஞாயிறுதோறும் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வோம். காலைதோறும் தேவார திருவாசகங்களைப் பாடுவோம். கூடம் கோவிலாகும். மாடியில் நீங்கள் இருக்கலாம். கீழே அறிவருட்பணி நடக்கட்டுமே. கொல்லைத் தோட்டம் பெரிது. அதில் பத்துத் தறிகள் போட்டு நெசவு நடக்கட்டும். தோட்டத்தில் காய்கறி,

*கனிமலர், கீரை, மூலிகைகள் விளைவிக்கலாமே. இவை எல்லாருக்கும் பயனாகும்.*

*இயன்றால் அங்கேயுள்ள ஒட்டுவீட்டில் சித்தவைத்தியசாலை நடத்தலாமே.*

*இவ்வாறு மாளிகையை மக்கள் நலத்துக்குப் பயன் படுத்துக. இதேமாதிரியே பணத்தையும் ஒரு தொழிலாக்கிப் பலர் உழைத்துப் பிழைக்கச் செய்க. அதில் வரும் லாபத்தைப் போட்டுப் போட்டுத் தொழிலை வளர்க்கவும். பலர் நம்மால் பயனடையப் பார்ப்பதே பயமொழிந்து, கவலையற்று வாழும் வழியாகும். எழுந்து செயலில் இறங்குக.*

**அன்பு**

## 30. பத்துப் பயிற்சிகள்

*அன்பழகன் வாழ்க,*

*எண்ணங்கள் மனவானில் பறந்து திரிகின்றன. வாழ்வு மலை யருவிபோல் ஓடுகிறது. அந்தக்கரண டர்பைனில் அந்த அருவியைச் சுழற்றி அருள் மின்சாரமாக்கி, உலகில் ஒளிபரப்ப வேண்டும். அறிவாற்றலை அமைதியாக வளர்த்து, ஆக்கப் பணியில் ஊக்குவோம். திருப்பரங்குன்றமலைமேல் சரவணப்பொய்கையில் நீராடித் தியானித்து இதை எழுதுகிறேன். பண்பான வாழ்வுக்குப் பத்துப் பயிற்சிகள் வேண்டும்.*

*(1) உண்டுறங்கி ஊடிக்கூடி, பெண்டுமக்கள் சுற்றம் என்று பந்தபாசத்துடன் வாழ்ந்தவரைச் சுற்றிலும் கண்டேன். அவர்கள் இன்பதுன்பச் சுழலிற்சிக்கி, எமன்வாயிற் பட்டனர். இந்த மாமூலுக்கு மேலே என் உள்ளம் தாவியது. நான் யார்? ஏன் பிறந்தேன்? எங்கே வந்தேன்? என்ன செய்ய? என்ன செய்கிறேன் என்ற கேள்விகளுக்கு விடைதேடினேன். உள்ளே—நான் ஆன்மா; பரமாத்மனுடன் கலந்து இன்புறவேண்டும்—இந்த இன்பக் கலப்பிற்கு அருளே வழி. அன்பால் அருள், அருளால் அறிவு, அறிவால் சக்தி. சுத்தசக்தியால் இன்பம் வந்தது. சுத்தானந்த சித்தி பெற்றேன்.*

*(2) புலமை புலர்ந்தது, திறமை திகழ்ந்தது. நான் என்ன செய்யக்கூடும்? பாடக்கூடும், எழுதக்கூடும், பரம்பொருளைக் கூடிக்குழையக் கூடும். இம்மூன்றிலும் என் வாழ்வை உய்த்தேன். அன்பா, அறி, புரி, அளவுடன் வாழ், புலமைக்கேற்ற கலைவளர், கலையால் உலகை அழகாக்கு. ஒரு துறையில் சக்தியை ஊக்கு, மாண்பாக்கு, ஒன்றில் ஊன்று; அலையாதே, அமைதியாக உள்ளடங்கி உன் புலமை பொலிக !*

*(3) பசியுள்ள மட்டும் பணியுண்டு. உழை, பிழை, உன் தேவைகளை நிரப்பு; உலகத்தேவையறிந்து பொதுநலஞ்செய். உண்ண, உடுக்க, இருக்க, படிக்க, உழைக்க, பிழைக்க வகைசெய்க. வந்ததைப் பகுத்துண். துய்ப்பனதுய்த்தபின் சிறிது சேர்த்துவை, ஊருக்குதவ.*

*(4) எழிலும் தொழிலும் இணைக. புலமையாலே புதுமை காண். எழில்வளக் கல்வியும், தொழில்வளக் கல்வியும் கற்று வாழ்வுப் பொழிலை வளப்படுத்து. தேனீக்கள்போல அறிவைத் தேடு; வாழ்வை அறிவுத்தேன் கூடாக்கு.*

*(5) முயற்சியாலே முன்னேறு; பாரடே, மாதாம் கூரி, எடிசன் போன்ற அறிஞர் வரலாற்றைப் படி. சும்மா கப்பலேறிய ஒரு உழைப்பாளி, கப்பல் தலைவனுக்கு ஊழியம் செய்து, லண்டன் சென்று பணிந்து நடந்து, படித்து, தொழிலாக்கம் பெற்றுப் பணக்காரனானான். பாட்டாளியாயிரு-உலகக்கூட்டாளியாயிரு.*

*(6) எளிமையே இன்பம்; பணிவே பெருமை. போதுமான உடையணி; பசியளவே தூயஉணவு கொள்; படாடோபப் பகட்டு வேண்டாம். பெண்கள் சேலை ரவிக்கை மஞ்சள் குங்குமத்துடன் இருந்தால் அழகு இலகும். ஆண்கள்*

வேட்டிகுடுத்துணி துண்டுடன் தொண்டு பரவுக. பணத்தைப் பகட்டாதே; பணத்தைப் பலர் உழைத்துப் பிழைக்கும் தொழிலாக்கு.

(7) திருநாள், பெருநாள், கருநாட் செலவைச் சுருக்கு. தொகையைத் தொழிலாக்கு; பலர் உழைத்துப் பிழைக்க வழிசெய்.

(8) தோட்டப்பயிர் செய். தென்னை, வாழை, மா, பலா, கொய்யா, கருவேப்பிலை, முருங்கை, பாகல், புடல், பீர்க்கை, பூசனி, வெண்டை, தக்காளி, கிழங்குகள் விளைவி. பசுவளர். பாலுந்தேனும் பருகு. அரசும் வேம்பும் சேர்ந்த இடத்தில் தியானி.

(9) ஆளைச்சுற்றும் மதத்தைவிட, ஆன்ம சுகந்தரும் சமயோகமே இனிதாகும். தூய்மை, வாய்மை, நேர்மை, சீர்மை, அன்பு, அருளுணர்வு இந்த ஆறுமே அறநெறிச்சாரம். இவற்றைப் பயில். கொலைபுலை, கோபதாபம், குடிகூத்து, திருட்டு இவை பாபம்—இவற்றை விலக்கி, நலத்தை இலக்கு. இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க—என்று கூவு.

(10) யாழ் குழல், முழவுப் பயிற்சிபோல, வாழ்வுப்பயிற்சி வளம்பெறுக. யாழ் இசைக்காது; இசைப்போன் வேண்டும். அதே போல வாழ்வில் வாழ்வோன், உயிரில் உயிப்போன் யார், யார்? தேர், தேர், தேர்.

அவனே நான், அவனே நீ, அவனே அவன் அவள் அது எல்லாம். எல்லாம் வாழ்க !

## 31. இன்பதுன்பக் காட்டில்

புலவரே, உலகில் இன்பதுன்பச் சுழல் எப்போதும் வீசிக் கொண்டுதானிருக்கும். நல்லதும்பொல்லதும் நமது மனப் பான்மையே. சாப்பிடுகிற கை, கழுவும் கை இரண்டையும் சேர்த்தே சாமி கும்பிடுகிறோம். அதுபோல, இருவினை உலகில் நல்லது வந்தாலும் பொல்லது வந்தாலும் உலகம் தூற்றினாலும், போற்றினாலும் இரண்டையும் சமமாகப் பொறுத்து, வந்த காரியத்தை முடித்துச் செல்வோம்.

உலகம் அசுரமயமாயிருக்கிறது. அசுரவாடை எங்கும் வீசுகிறது. இப்போது ஆரவாரங்களுடன் நடக்கும் எந்த இயக்கத்திலும் மனம் வைக்கக்கூடாது. எவரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது. நம்மைக் குறைசொல்வோரைக் கூடக் குறை சொல்லக்கூடாது. அந்தக் குறை நம்மிடம் இருந்தால் திருத்திக் கொள்வோம்; உலகில் ஆணவப் பொறாமை அல்லற்படுத்தித் தூற்றும். மனமாசில்லாது மாண்புற வாழ்ந்திரு. போட்டி பொறாமை பொல்லாங்கு, பொய்புரட்டுகளைக் கண்டு கலங்காதே. உன்னுள் நீயாயிரு. யாருக்கும் சவால் விடாதே. அடக்கமாயிரு. அடங்கினால் அமரன். நிதானம் பிரதானம். ஒன்றைப் பத்துசெய்து, ஓயாக் கலகஞ்செய்யும் உலகியல்பில் சிக்கிப் பொன்னான காலத்தை வீணாக்காதே. மனிதர் தன்மையைத் தொலை நோக்கால் அறிந்து, அதிகம் நெருங்காமலும், அகந்தையால் ஒதுக்காமலும், சமவுறவு கொண்டு, கேட்டதற்கு மட்டும் அமைதியாகப் பதில் சொல்லி, "ஆஹா அப்படியா மெத்தச் சரி" என்று தப்பித்துக்கொள். தூற்றல் பொறாமையின் ஊற்று. அமைதியே ஆற்றல்.

உலகம் இன்பதுன்பக் காடு; நான்கு நாள் பெருக்காவிட்டால் வீடு குப்பை மேவிப் போகிறது. அதுபோலவே மனத்தைக் கண்டபடி விட்டால் ஆசையாணவக் குப்பையாய் விடுகிறது. வீடென்றால் குப்பையிருக்கும். செம்பென்றால் களிம்பு, உடலென்றால் மலம்........கூடவே இருப்பதுபோல, உலகென்றால் சூது, பொறாமைகளும் கூடித்தானிருக்கும். மனிதன் என்றால் நன்மையுடன் தீமையும் சேர்ந்தேயிருக்கும். நன்மை தீமை இரண்டும் இரண்டு கரைகள்; அவற்றோடுதான் வாழ்வாறு செல்லுகிறது. அஃது எல்லையற்ற கடலைக் கலந்தால் பிறகு கரையற்ற வாழ்வு பெறும். எல்லையற்ற ஒன்றில் நமது உயிர் கலக்கு மட்டும் மலை,

*கணவாய், காடு, மேடு, பள்ளம், பாறைகளில் மோதித்தான் செல்ல வேண்டும். வாழ்வைச் சிறைக் கைதியாக்காமல் சுதந்தரமாக ஓடும் ஆறுபோல வைத்துக்கொள்ள வேண்டும். பாறை மோதினாலும் ஆற்று நீருக்குக் கெடுதலில்லை. அதில் 'ஓம்' ஒலி எப்போதும் கேட்கும்.*

*உலகுடன் மிகவும் கவனமாகப் பழகவேண்டும். பாம்பாட்டி பல்லைப் பிடுங்கிய பிறகே பாம்பை விளையாட்டுகிறான். அதே போல், ஆசை, ஆணவம் என்ற விஷப்பல் இருக்குமட்டும் உலகைக் கட்டித் தழுவிப் பழகமுடியாது. விஷப்பல்லைப் பிடுங்கி விட்டாலே நெருங்கிப் பழகமுடியும்.*

*உலகில் துறவியென்றால் ஊர்ச்சோறுண்டு திரிகிறவன் என்று பழிக்கிறது. நிறைவான ஆன்மக்கலப்புடன் உலகைக் கோயிலாக மதித்து அருட்பணிகளைச் செய்யும் துறவிகளையே நாம் போற்ற வேண்டும். அவர்களே திருத்தொண்டராவார். தார்போட்ட வாழை மாதிரிதான் மாந்தர் ஆயுளும் ஒன்றைப் பெற்று ஒன்று அற்றுப் போகும். கனிவிழுந்து கொட்டை முளைக்கிறது. பூவுதிர்ந்து மரந்துளிர்க்கிறது. சட்டியுடைந்து மண்ணாகி மீண்டும் சட்டியாகிறது. இப்படித்தான் உலகில் வினையுடல் வாழ்வாகும். ஐந்தொழிலும் உலக நாடகத்தின் ஐந்து அங்கங்களாகும்.*

*ஐம்பூதங்களும் ஆகாயத்தில் ஒடுங்கும். உலகம், உயிர்க்குலம் எல்லாம் ஐம்பூதவிளையாட்டே. இந்த ஐம்பூத விகாரங்களில் எழும் முக்குணப் புயலில் மனம் சுழலக்கூடாது. எப்போதும் பண்டைப் பொருளாய் என்றுமிருக்கும், எதிலும் பற்றற்ற சாட்சியான ஆகாயம் போல விடுதலை பெற்றிருப்பவனே அறிவாளி. உலகமாயையும் உடலாசையும் மேகம் போன்றன. சூரியனால் எழுந்த மேகம், சூரியனையே மறைக்கிறது. ஆனால் சூரியனை விழுங்கமுடியாது. சூரியன் எப்போதும் தானே தானாகத் தாக்கற்றியங்குவான். அதுபோல உலக விவகாரங்கள் உன்னைச் சூழ்ந்தாலும், கலங்காமல் சூரியன்போல், ஆகாசம் போல், நிறைவாக இரு. குண தொந்த விகாரமில்லாமல் உயிரிற் கலந்த இறைவனையே கூவு! சாவைக் கடந்து தாவு! ஓம் சிவம்.*

## 32. திருமண வாழ்க்கை

*அண்ணா,*

*மீண்டுமா இந்தப் பேச்சு? பத்தாவது தடவை மாயம் என்னைச் சோதிக்கிறது. தங்கவிலங்குகளைத் தப்பி ஓடினேன். உங்கள் ஆசை மீண்டும் துரத்தி வருகிறது. இப்போது தெளிவாக, முழுவுறுதியுடன் சொல்லுகிறேன். என் யோகானுபவங்களை எழுதி உலகிற்கு அளித்துச்செல்வதே இப்பிறப்பின் குறிப்பு. அதற்கேற்ற யோகிகள் சங்கத்தில் இருந்து இக்குறிக்கோளை நிறை வேற்ற வேண்டும். குடும்பவாழ்வு நடத்த எனக்கு நேரமில்லையே; பெண்ணைப் பராசக்தியாகப் பார்க்கும் நான் மனைவியாக எப்படிக் கருதுவேன்? கடவுளிடமே உய்த்த காதலைக் கலியாணப் பந்தலுக்கு எப்படித் திருப்புவேன்? முதலில் பத்து லட்ச ரூபாய் மாயம் வந்தது; ஓடிப்போனேன். பிறகு சீமைக்கு அனுப்புகிறேன் என்றொரு மாயம் ஆசைகாட்டிவந்தது; ஓசைப்படாமல் தப்பிச் சென்றேன். பிறகு பலாத்காரமாக என்னை மாடியறையில் அடைத்துப் பெண்ணை என்முன் நிறுத்தினார். "பரதேவீ" என்று காலில் விழுந்தேன். ஜாதகத்தில் மாறுதல் செய்தேன். இன்னும் எத்தனையோ சோதனைகளை ஆத்மசாதனையாலே வென்று, என் வாழ்வின் பணியிற் புகுந்துள்ளேன். மேளதாளம் விருந்து ஆடல் பாடல் காட்டிப் பந்தப்படுத்தும் எதுவும் என்னை ஈர்க்க முடியாத மௌனத்தில் ஆழ்ந்திருக்கிறேன். எத்தனை மேகம் குவிந்தாலும் ஆத்ம சூரியன் மறையாது. அழகின்மினுக்கு என்னை அடிமையாக்கமுடியாது. அருள் அழகை இயற்கையின்*

எழில் முகத்திற் காண்கிறேன். மகான் ஞானசித்தர் எனக்குள் யோக சக்தியைத் தூண்டினார். தியானத்தால் அந்த சக்தி கனலேறிப் பொலிகிறது. அதில் தங்கத் தூசிகளைத் தூவினால் அணையாது. பிரம்மசரியம், மௌனம், கனி, கடலையுணவு, மனவொருமை, ஆத்ம சாந்தியுடன் வாழும் என்னை இனி யாரும் வேறுவழியில் திருப்பமுடியாது. பிரமசரியத்தாலேதான் அப்பரும், காந்தியும் அரிய காரியங்களைச் செய்தனர். என் சந்ததி பாரதசக்தி முதலிய ஆயிரம் நூல்களே. இவை அழியாச் சந்ததி; உலகம் ஒரு குலமாய் ஆன்மநேயத்தில் வாழ சமயோக சாதனத்தை இறைவன் எனக்கு அளித்துள்ளான். அதனால் பயன்பெறும் யோகதீரர் அனைவரும் என் சந்ததிகளே. இல்லறத்தை வெறுக்கவில்லை; அதற்கு உரியவர் மணம்புரிந்து அன்பும் அறமும் போற்றி வாழ்க! நான் தனிமோனத் தவத்தில் இறைக்கலப்புடன் வாழவே இப்பிறப்பெடுத்தேன். வந்த கடமை நிறைவேறி வேறெந்தக் கவலையும், சங்கற்ப விகற்பமும் இல்லாது உடலைவிட்டு உடையானுடன் கலந்துபோகவேண்டும். இனி எனக்குப் பிறவியில்லை. என் முழு அன்பையும் இறைவனுக்கே அளித்துவிட்டேன். அவன் குறித்த வழியிற் செல்வேன். அவனருளே என் துணைவி. அருளாதார வாழ்விற் கேற்ற பொருளாதாரத்தையும் ஆண்டவன் அளித்தான். என் உழைப்பினால் ஈட்டிய பொருள் போதும். இனி எவரிடமும் கையேந்தாமல் இருந்தபடி இருந்து, எனக்கு இயல்பான கடமையை யோகத்தாலே நிறைவேற்றிச் செல்கிறேன்.

இந்த விவகாரத்திற்கு இத்துடன் முற்றுப் புள்ளிப் போடுகிறேன். ஓம் சுத்த சக்தி ஓம்.

## 33. பெண்ணுரிமையும் பெருமையும்

அன்புள்ள முத்துலட்சுமி அம்மாள் வாழ்க !

கோகலே மண்டபத்தில் தங்கள் பேச்சும் ருக்மணி அருண்டேல் பேச்சும் விறுவிறுப்பாயிருந்தன. நானும் தலைமை யுரையைப் பெண் உள்ளத்துடனே நிகழ்த்தினேன். நான் பெண்ணானால் எம்.ஏ. வரையில் படிப்பேன். மதாம் கூரிபோல விஞ்ஞானப் புலமை பெறுவேன். எனக்குப் பிடித்த விஞ்ஞான வீரனைக் காதல் மணம்புரிவேன். இருபது வயதில், இருவரும் விஞ்ஞான ஆராய்ச்சி செய்வோம். என் அருகேயுள்ள ஒரு சகோதரி பெண்களுக்கும் மீசை முளைக்க விஞ்ஞானக் காண்பு நடத்துங்கள் என்கிறார். பால் மாற்றம் அப்பால், இயல்பான பெண்மைக்கு நன்மை தேடுவோம். என் உடலை ஆசனம், பிராணாயாமம், இயற்கையுணவுகளால் அழகுடன் மழமழப்புடன் காப்பேன். நாங்கள் ஓர் விஞ்ஞானச்சாலை நாட்டுவோம். அதில் சிறந்த சத்துணவைக் காண்போம்; நோயற்ற வாழ்வை விளக்குவோம். ஜீவசக்திகளைக் காக்க வகைதேடுவோம். அந்தக் கால முனிவர்போல யோகசக்தியால் உயர்ந்த தெய்வீக வீரக் குழந்தைகளைப் பெறுவோம். இரண்டு குழந்தைகள் பிறந்ததும் பிரமசரியம் பூண்போம். ஆண்குழந்தை வேண்டுமானால் இன்னது, பெண்குழந்தை வேண்டுமானால் இன்னது என்று சாதன முறைகளை வகுத்து நிறைமுறையாக இன்பவாழ்வு நடத்துவோம். இருவரும் சிறந்த காவியங்களைப் பயில்வோம். நான் பாடுவேன்; அவர் யாழ்மீட்டுவார், மகள் பிடில் வாசிப்பாள்; மகன் மத்தளம் வாசிப்பான். மாலைதோறும் வீட்டில் நல்லிசை முழங்கும். எமது மக்களை நன்றாகப்படிக்கவைத்து இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பி விஞ்ஞானக் கலைமணிகளாக்குவோம்.

25 வயதுக்குள் எனது கணவர் தவறிப்போனால் நான் மறுமணம் புரிவேன். நாற்பது வயதானால் துறவு கொண்டு பொது நலம்புரிவேன். என் கணவன் விபசாரியானால் நான் "திருநீலகண்ட" விரதம் பிடிப்பேன். அவனைத் தொடமாட்டேன். இந்திரியத்தை அடக்க யோகம் புரிவேன். ஒரு கணவன் ஒரு

*மனைவி என்று வாழ்வதே இன்பமாகும். இந்திரிய சக்திகளை அடக்கியாளுவதே மனிதத்தன்மையாகும். என்னை யாராவது கற்பழிக்க வன்மை காட்டினால், அவனது நரம்பைப் பிடித்து நெட்டித் தள்ளி அலறி ஓடச்செய்வேன். அதற்காக ஜப்பானிய 'ஜியுஜித்சு' பயில்வேன். நான் அல்லியுமாவேன்; அமுதவல்லியு மாவேன். என் கணவனும் உடலுறுதி பெறச்செய்வேன். நான் தனித்திருந்தால் உயர்ந்த புலமையை வளர்த்து உலகநன்மை புரிவேன். என் எண்ணங்களை உயர்த்துவேன், குழந்தைகளைப் புலவராக்கி, அவர்கள் கையில் வீட்டைத்தந்து, நான் உலகக்கோயிலில் உயிர்த் தொகை வளம்பெற அறிவாலும் கலையாலும் பணிபுரிவேன். கன்னியர் குருகுலம் வைத்து, பெண்மை பெருமைபெறத் தொண்டு செய்வேன். விதவை என்ற சொல்லே இல்லாமல் தனிப்பெண்கள் தவச்செல்விகளாகக் காண்பேன். எனது பெண்ணுக்கும் வயது வந்தே அவள் விரும்பும் வாலிபனை இணைப்பேன். அவள் கணவனையிழந்தால் மறுமணம் புரிவேன். பெண்ணுலகுக்கு நல்லகாலம் வந்துவிட்டது. பெண்மை தலைநிமிர்ந்து நடக்கிறது. காந்தியும் கஸ்தூரியுமாக தம்பதிகள் வாழவேண்டும். நாங்கள் அடுத்தவாரம் ஸ்ரீபெரும்புதூர் பெருமாள் கோயிலில் கூட்டம் போடுவோம். அதற்கு ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல், ருக்மிணி லக்ஷ்மீபதி முதலிய பல தலைவர்கள் வருவார்கள். தாங்களும் வர வேண்டும். பெண்மை பெருமை பெறுக! அன்பு.*

## 34. சாயிராம ஜயம்

*சாயி சிம்மம் வாழ்க !*

*திருவண்ணாமலை மேல் நாம் தவம்புரிந்த நாளை மறக்க முடியாது. தங்கள் உள்ளம் பக்திவெள்ளம். அதற்கேற்றபடி சாயிராம் வாய்த்ததுபற்றி மிக்க மகிழ்ச்சி. நான் 1917 லக்னோ காங்கிரஸிற்குப் பிறகு திலகருடனும், கபார்தேயுடனும் சீரடிக்கு வந்து சாயிநாதரை அதே வேப்பமரத்தடியில் தரிசித்தேன். அவர் "உகே முகே சுப்ரஹோ; அல்லா அச்சா கரேகா" வாயைத் திறக்காதே, பேசாதிரு, ஆண்டவன் எல்லா நன்மையும் செய்வான்" என்றார். துவாரகாமாயியில் அவர் அன்பின் ஆதரவில் இருந்த மூன்று மாதங்களையும் மறக்கமுடியாது. சாயிராம் சிலையின்மேல் அமர்ந்த குருவி தங்கள் தலையிலும் அமர்ந்து இருவர் நினைவையும் ஒன்றாக்கியது. தங்களால் நாடெங்கும் சாயிபக்தி பெருகிவருகிறது. நான் மௌனத்திலிருந்து கண்டு களிகூத்தாடுகிறேன்.*

*பட்டாபிஷேகத்தின்போது சீதை அனுமாருக்கு ஓர் அரிய முத்துமாலையளித்தாள். அனுமார் அதை ஒவ்வொன்றாகக் கொரித்தார். சீதை வியந்து ஏன் இந்த விலையுயர்ந்த முத்துக்களை அப்படிக் கடித்துத்துப்புகிறீர்? என்று கேட்டாள், "அம்மா, இதற்குள் ராமன் இருக்கிறானா என்று பார்க்கிறேன்" என்றார் அனுமார். அதுபோலவே தங்கள் உள்ளம் சாயிராமை ஒவ்வொன்றிலும் தேடியது. "மிதிலை எரிந்து பட்டால் என்ன; கவலையில்லை" என்று ஜனகர் போலே வீடுவாசல், நாடு, நகரம், பட்டம், பதவி என்ற அபிமானமேயில்லாமல், தாங்கள் பாபாசேவையில் ஈடுபட்டீர்கள். தங்கள் சாயிசரித்திரம் அற்புதமாயிருக்கிறது. அதைக் கதாகாலட்சேபத்திற்கு ஏற்றவாறு கீர்த்தனங்களாக அமைத்துள்ளேன். அவரை நினைத்தாலே ஆனந்தம் பொங்குகிறது. இராமநாமம் இசைத்ததும் சம்பாதிக்குச் சிறகு முளைத்து, உந்தி எழுந்து அது அசோகவனத்தில் சீதையிருப்பதைக் காட்டியது. அதுபோல் இல்லறத்தில் சிறகொடிந்து துயருற்ற தங்களுக்கு, ரமணர் அமைதி தந்தார். சாயிராம் புதிய சக்தியளித்து இதோ என் ஆத்ம ஸ்வரூபம் என்று காட்டுகிறார். உலகம் ஓர் அவதார புருஷனைக் கூவியழைக்கிறது. உலகநிலை அபாயமான கலகநிலையானது. சாதாரண தெருக் கலகம் என்றால் கான்ஸ்டேபிள் வருகிறான். அடிதடி குத்துவெட்டு என்றால் போலீஸ் இன்ஸ்பெக்டர் துப்பாக்கியுடன் வருகிறார். பெருங்கலகம் என்றால் கலெக்டர் இராணுவத்துடன் வருகிறார். பஞ்சமாபாதகத்திற்கும் மிஞ்சிய*

பழிபாபம் நடக்கும் இக்காலத்தில், ஆண்டவன் சாயிராமாக வந்து பக்தியைத் தூண்டினார். அதே மாதிரி பகவான் ரமணரும், அரவிந்தரும், காந்தியும், ஞான, பக்தி, கர்மயோக சக்தியைத் தூண்டினர். ஆளுக்கேற்ற சொக்காய், அறிவுக்கேற்ற அலுவல் போல, தங்கள் அறிவாற்றலுக்கும் அன்பிற்கும் ஏற்ற குருநாதர் கிடைத்தார். தாய்நாட்டுத் தொண்டு பரவிய தங்களை, தாயுள்ளம் படைத்த சாயி அழைத்தார். தாயிடம் ஓடுங் குழந்தை போலத் தாங்களும் சாயிராமிடம் ஓடி அடைக்கலம் புகுந்தீர்கள். பழுத்த பழம் தானே மரத்தைவிட்டு நீங்குவதுபோல, இவ்வளவுதான் துக்க சமுசாரம் என்றறிந்து துறந்தீர்கள்; அதை மறந்தீர்கள் இதைச் சார்ந்தீர்கள்; சாயிராம் அருள் சுரந்தார். கிராமஃபோனில் ஊசிக்கேற்ற ஓசை கேட்கிறது. தங்கள் பரந்த உள்ளத்திற்கேற்றபடி இன்று எங்கும் சாயிராம் நாமம் முழங்குகிறது. எல்லாம் அவனிச்சை. இத்துடன் நான்கு கீர்த்தனங்களும், இரண்டு ஆங்கிலக் கட்டுரைகளும் வருகின்றன. நான் இன்னும் பல்லாண்டு மௌனத்தில் ஆழ்ந்திருப்பேன். என்னை அறிந்தேன், என் அப்பனை அறிந்தேன். அவன் எதற்காக இந்த உள்ளத்தில் சுத்தாத்மாவாக உயிர்க்கிறானோ அந்தக் காரியம் மௌனத்தில் நடக்கிறது. பாரதசக்தி மகாகாவியத்தில் பாபா பெருமையும் மிளிர்கிறது. என் வாழ்வில் இரண்டு சாதனைகள் இன்பமளிக்கின்றன: (1) இறைவனுக்குப் பாமாலை, (2) பரம யோகிகளின் சங்கமும் அவர்கள் வரலாற்றை எழுதுவதும். இரண்டு இன்பங்களையும் தந்த இறைவனை வணங்குகிறேன். ஓம்.

## 35. திலகமே !

(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்)

பாரத திலகமே, விடுதலைச் சிங்கமே,

வணக்கம். வந்தே மாதரம். சிதம்பரம் பிள்ளையைக் கண்டு பேசி இந்தக்கடிதம் எழுதுகிறேன். லக்னோ காங்கிரஸிலும், சாயிபாபா சந்நிதியிலும் தங்களைக் கண்டபிறகு மதுரையிலும் கண்டு தங்கள் ஆசிபெற்றேன். தாங்கள் அளித்த கீதையைப் பாராயணம் பண்ணுகிறேன். அச்சத்தை ஓட்டி, அடிமைத்தளை போக்கி, நாட்டுக்கு வீரவிழிப்பைத்தந்த தீரரே... லண்டனிலும் தங்கள் குரல் பாரத தருமத்தை முழக்குக. கீதையைக் கொண்டு சென்று கீர்த்தியைக் கொண்டுவருக. செயலே கடமை; பயனைப் பாராட்டாதே (கர்மண்யேவ அதிகாரஸ்தே: மாபலேஷு கதாசன) "எழுந்திரு, போராடு" என்ற கீதை மொழி என்னுள் சுழல்கிறது. "அறி, புரி, அமைதியாயிரு. செய்வதைத் தெய்வநிவேதனமாகச் செய். கர்மம் மலர்-பக்தி காய்-ஞானம் கனி. மலரில்லாது காயும் கனியும் இல்லை. மலரிலேதான் அத்தர்வரும்-கனியிலன்று. கர்மமே ஞானமாகக் கனிகிறது. சமர்த்தகுரு ராமதாஸரின் மூன்று வரிகள் என்னுள்ளத்தைத் தொட்டன.

1. முக்ய ஹரிகதா நிருபண்-(இன்னலைப் போக்கும் இறைவனைப் பணிதல்) (2) தூஸ்ரேதே ராஜகாரண்-இரண்டாவது நாட்டன்பும் அதை முன்னேற்றும் மனத்திட்பமும் (3) திஸ்ரேதே ஸாவதாபன் ஸர்விஷயே-மூன்றாவது எந்தக் காரியத்தையும் நிதானமாகச் சிந்தித்துச் செய்து வெற்றி பெறுதல். ஏகாந்தம் முதல்; லோகாந்தம் பிறகு; இரண்டிற்கும் இணைப்பு வேதாந்தம். அன்புத்தொண்டறிவின்பமே விடுதலைக்கு வழியாகும். பாரதம் தனது ஆத்மசக்தியை இழந்தால் சுதந்தரம் வந்தும் பயனில்லை. சுவாமி விவேகானந்தருக்குத் தாங்கள் கீதையின் கருத்தைச் சொன்னீர்கள். அது சிகாகோவிற் பயனானது. ஆத்ம வுன்னதியே அகிலவுன்னதியாகும். நான் ஆத்மா எனக்குப் பந்த மில்லை என்றறிந்ததும் அடிமைத்தளை அற்றுவிழும். இப்போது ஆத்மஒளி மங்கியுள்ளது. அதைத் தூண்டவேண்டும். கீதையை பைபிளாக, கிருஷ்ணனை நபியாகக் கொண்ட இயக்கம் கிளர்ந்து எழுக. முனைமுதல் மலைவரையில் நல்ல துறவிகள் கீதையைத் தெருத்தெருவாகப் பாடவேண்டும்.

*ஆங்காங்கு ஒரு சுலோகத்திற்கு விளக்கம் கூறி—இதுவே நமது சமயம் என்று உணர்த்தவேண்டும். நமது சமயம் என்ற உணர்ச்சி வந்ததும் நமது தேசம் என்ற உணர்ச்சி இயல்பாக வரும். "உத்தரேத் ஆத்மனாத்மானம்" தன்னைத் தன்னால் உயர்த்துக என்ற தீர உணர்ச்சி பிறக்கும். இந்த முயற்சியை இங்கே தொடங்கியுள்ளேன். ஆசிதருக! வந்தே மாதரம்.*

*(திலகர் "யோக தீரனே, உனக்கு ஆண்டவன் அருளால் செயல் வெற்றி திகழும்" என்று எழுதினார்.)*

## 36. பாடல் தொகுதி

*அண்ணாமலை வள்ளல் அரசர் வாழ்க! தங்கள் திட்பநுட்பக் கடிதம் வந்தது; விசுவநாதர் நேரே கொணர்ந்தார். சிதம்பரனார் ரூ. 6000 அளித்தார். அதை அப்படியே அன்பு நிலையத்திற்குத் தந்து எனது பாடல் தொகுதியை அச்சிடச் சென்னேன். அவை தமிழிசை இயக்கத்திற்கு அமிழ்துகு சிறப்பாகும். தங்கள் வண்மையினால் வரப்போகும் நூல்கள்:*

*(1) கீர்த்தனாஞ்சலி—சிதம்பர கீதம், தேவகானம், சாதன கீதம், சன்மார்க்க கீதம், பன்மொழிக்கீதத் தொகுப்பு, மேளார்ணவம் இன்பத்திருப்புகழ், இராக மாலிகை.*

*(2) நடனாஞ்சலி— இனிய நாட்டியப் பாடல்கள்*

*(3) முன்னேற்றப் பாட்டு—தமிழரும், இந்தியரும், உலகினரும் படிப்படியாக கல்வி, தொழில், கலை, செல்வம், அருளறிவுகளில் முன்னேற ஊக்கும் பாடல்கள்.*

*(4) சிங்கநாதம்— புதிய நாட்டுப் பாடல்கள்*

*(5) சரித்திரக்கும்மி— நமது நாட்டு வரலாறு முழுதும்*

*(6) குழந்தையின்பம்— சிறுகுழந்தைகளுக்கேற்ற பாடல்கள்*

*(7) உலகப்பாட்டு— உலகுமுழுதும் ஓரினமாக வாழ ஊக்கும் இனிய பாடல்கள்*

*(8) மந்திரமாலை— கணபதி, நடராஜா, பெருமாள், சக்தி, அக்கினி, நவக்கிரக வழிபடும் தமிழ் மந்திரங்கள்*

*(9) காந்தி காலட்சேபம்— மகாத்மா காந்தி மகிமையை இசைப்பது*

*(10) ஆத்மநாதம்— பாராயணத்திற்கேற்ற அருள் பாடல்கள்*

*(11) கவியரங்கம்— உருக்கமான இயற்கையின்பப் பாடல்.*

*இவற்றை வெளியிடவே தங்கள் நன்கொடை பயனாகும். எல்லாம் வெளியிட 10,000 ஆகும்.*

*என் கவி வாணிக்கு அரியதுணை செய்த தங்கள் வரலாற்றை விரிவாக எழுதியனுப்பியுள்ளேன். நல்ல ஆர்ட் காயிதத்தில், நிரம்பப் படங்களுடன் வெளியிடுக. இதுவே நான் செலுத்தும் நன்றி.*

*ஸ்ரீநிவாச சாஸ்திரியார் எனது பாடல்களைப் போற்றி எழுதி-யுள்ளார். அவர்களிடம் எனக்குப் பெருமதிப்புண்டு. அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். "கலைவளர்த்த மலைக்கு" அவர்கள் முன்னுரை சிறந்து விளங்கும்.*

*தொழிலால் பணம் குவித்துப் பணத்தைப் பல்கலைக் கழகமாக்கித் தமிழருக்கு அற்புதப் பணிபுரிந்த தங்கள் பெயர் என்றும் விளங்குக! ஓம் சிவம்.*

## 37. கலைத்தொண்டு

டாக்டர் அழகப்பா அவர்களுக்கு,
அன்பு

தாங்கள் அரவிந்தாசிரமத்தில் என்னைப் பார்த்துச் சென்றது பெரும் பயனளித்தது. தங்கள் வண்மை எனது பேனாமுனைக்குக் கூர்மையும் சீர்மையும் அளித்தது. எனது கவிவாணிக்கு ஆக்கம் அளித்தவர் தனவணிகரே. அவர்களே அன்பு நிலையம் நாட்டி எனது நூல்களை அழகாகவும் மலிவாகவும் வெளியிட்டு வந்தனர். பாரதசக்தி மகாகாவியம் தங்களுக்கு அனுப்பியுள்ளேன். இதுவே எனது ஆயுட்காவியம்; இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அரவிந்தர் ஆசியும் பெற்றுள்ளேன். எனது நூல்கள் பலதுறை அனுபவச்சோலைக் கனிகள். தமிழரும், இந்தியரும், உலகோரும், குழந்தைகளும், தொழிலாளரும், நமது சமயமும் முன்னேற ஊக்கும் பாடல்களையே நான் சேர்த்து வெளியிட்டுள்ளேன். நமது இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, யோகக்கலை, தெய்வக் கலைகளுக் கெல்லாம் முறைப்படி நூல்கள் ஆக்கியுள்ளேன். சுமார் 50 நல்ல நாடகங்கள், 50 தொடர்கதைகள், பல சிறுகதைகள், உலகவீரர், முனிவர், கவிகள் வரலாறுகள்........இவை மூட்டை மூட்டையாக உள்ளன. கட்டுரைகள் கட்டுக்கட்டாயுள்ளன. மோலியர், ரஸீன், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, வால்ட்விட்மான், ஃபிரான்ஸிஸ் தாம்ஸன், ஓமர், தாந்தே, காளிதாஸன், கம்பன், வில்லியம் பிளேக், எமர்சன், சங்கரர் முதலியோர் வரலாறுகளும், கருத்துரைகளும் இங்கே உள்ளன. ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ் ஆகிய மும்மொழிகளில் பலநூல்கள் உள்ளன. நடனப் பெருமான் அருளால் வெளிவர வேண்டும்.

தங்களிடம் நேரே சொல்லியபடி நமது திருநெறிச் சமயத்திற்கு ஒரு தொண்டு தொடங்கவேண்டும். தங்கள் கல்விப்பணி வியக்கத் தக்கதே. ஆனால் ஆத்மீகத்தின் அடிப்படையில்லாத கல்வி இனிப்பற்ற கனிபோலாகும்.

ஐந்து ஏகரா நிலத்தில் ஒரு யோகசமாஜம் காணவேண்டும். அதன் நடுவே நடராஜா உயர விளங்கி எல்லாரும் கீழிருந்து பார்க்கும்படி கோவில் அமையவேண்டும். ஆஜ்மீர் சலவைக் கல்லில் விக்கிரகம் அருள் ஒழுக அமையவேண்டும்.

தேவாரம், திருவாசகம், அருட்பாடல்களால் அதற்கு வழிபாடுகள் நடத்தவேண்டும். இந்தக் கோவிலைச்சுற்றி அணியணியாக ஆத்மீக நிலையங்கள் வளரவேண்டும். தூய பிரமசாரிகளையும், துறவிகளையும் சமயோகப் பாதிரிகளாகப் பயிற்றவேண்டும். அவர்களைக் கொண்டே ஊர்தோறும் சமயப் பிரசாரம் நடத்த வேண்டும். கத்தோலிக்கர்போல நாமும் திருச்சபை அமைத்து, திருத்தொண்டரைப் பயிற்றி, நாடெங்கும் சமயோக சித்தியை விதைத்துச் சோலையாக்கவேண்டும். ஒலிப்பு ஊர்தியில் (MIKE VAN) நல்ல தொண்டர் அமர்ந்து இனிய கீதங்களைப் பாடிக் கொண்டு தெருமுனைதோறும் நமது சமயத்தை விளக்கித் துண்டுப் பிரசுரங்களும் யோகநூல்களும் வழங்கவேண்டும். அந்தக்காலம் அப்பர் செய்ததுபோலப் பாட்டாலும் பணியாலும் நாட்டைப் புது வாழ்விற்கு நடத்தவேண்டும். இதன்பால் தங்கள் திருவுளம் கனிக. ஓம் சிவம். அன்பு.

## 38. அன்புக் கடிதங்கள்

(இவை பெரும்பாலும் சு.நடராஜன், மோகனம், ஏ.சு.ஆ.செட்டியார், சாமிநாதன் முதலிய அன்புநிலையச் செம்மல்களுக்கு எழுதிய கடிதத் தொகுதி)

## 39. உலகியல்பை அறிந்து அடங்கு

*அன்புத் தங்கமே,*

*எனது தனிமௌன நிலையைச் சிலர் கேலி செய்வதாக எழுதுகிறாய். யோகநிலை உள்ளுணர் உத்தமருக்கே தெரியும். தட்சிணாமூர்த்தியின் நிலையை, அவரது சின்முத்திரையின் சிறந்த பொருளை, ஸநகாதி யோகிகளும், பகவான் சங்கரரும் அறிவார். மகாதுரீய சமாதி நிலையை யார் அறியமுடியும்? மனம் வெளியே திரிந்து பணம், பதவி, காமக் களியாட்டம், போர், புகழ் என்றலைவோர், உன்னத யோக மௌனத்தை அறிவது முடியாது. அதுவானால் அது ஆவர், அதுவே சொல்லும்.*

*சேர்ந்து குலைக்கும் வெறிநாய்களுக்கு 144-ஐ போட முடியாது; அவற்றிற்குப் பயந்து ஓடாமல், நாம் நமது நிலையில் வைராக்கியத் தடிபிடித்திருந்தால், அவை ஓடிப்போகும். நாம் ஓடினால் அவை துரத்தும், கடிக்கும். நாம் செய்வது 100% சுயநல மற்ற நிலையான தொண்டு. நீங்கள் குறித்த விநோத வசை வாணரையும் எனது நாடக பாத்திரராக்கி விட்டேன். நாம் உலகைத் தொலைநோக்கியாலும் நம்மை நுண்பெருக்கியாலும் (Microscope)காண வேண்டும். அதிகம் நெருங்காமலும், தனிச்செருக்கில்லாமலும் தீக்காய்வான் போல உலகுடன் பழகவேண்டும். உள்ளே தனியமைதி வேண்டும். மூச்சை வீணாக்காமல், கேட்டதற்கு மட்டும் மொழியாலோ எழுத்தாலோ சுருக்கமாக விடை கூறி யமையவேண்டும். உள்மௌனம் குலையும்படி ஆத்திரப்படக் கூடாது. ஆற்றுவார் ஆற்றட்டும்; தூற்றுவார் தூற்றட்டும்; போற்றுவார் எப்போதும் போற்றுவார்.*

*கலைச்செல்வர்காள், எனது நூல்கள் வருங்கால அதிமனிதருக்கானவை. சமயோக ஒருமையை அடிப்படையாகக் கொண்டது எனது கலைமாளிகை. இந்த மாளிகைக்குள் சைத்தான் புகாமல் மௌனத்தைக் காவல் வைத்திருக்கிறேன். உலகில் நலம் புரியவரும் எவரும் அறியாதவர் கொடுமைக்குத் தப்பியதில்லை. ஏசுநாதருக்கு சிலுவையும் சங்கரருக்கும் தயானந்தருக்கும் நஞ்சும், அப்பருக்கு நீற்றறையும் காத்திருந்தன.*

*கண்மணிகாள், கலங்காதீர். காலத்தைக் கலையாக்குவோம். கலையை யோகமாக்குவோம். யோகத்தைக் கடவுளுணர்வாக்கி மகிழ்வோம். உலகம் அறியவில்லை என்று மயங்காதீர். உலகம் யாரை அறிந்தது ?*

*நம் அன்பையெல்லாம் ஆண்டவனிடமே வைத்து அவன் அருள் காட்டும் வழியிலே அடங்கி நடப்போம். இந்த உலகப்புகழ் நிலையா? அரசுகள் அடிசாய்கின்றன; மகுடம் மண்ணாகிறது. உலக வாழ்வே நச்சுப் புகையில் திணறிக்கொண்டிருக்கிறது. நாகரிகப் புகை உலகை நரகமாக்கியது. "ஆண்டவனே இந்த உடலில் ஆன்மாவாக உயிர்க்கிறாய்; எதற்கு? உண்டுறங்கவா? ஊடிக் கூடவா? பணம் சேர்க்கவா? சந்ததி வளரவா? இல்லை. நீ என்னுள் அறிவாயிருக்கிறாய்; என் உள்ளத்தில் அன்பாய்த் துடிக்கிறாய். அன்பால் அருளைப் பெற்று, அருளில் ஊறும் அறிவை உலகிற்கு அமைதியாயிருந்து, எழுதியளித்து எனது கணக்கை முடிக்க வேண்டும். இனிப்பிறவியில்லாமல், இப்பிறவிப் பணியை நிறைவாகச் செய்து, உன்னுடன் கலந்துபோக வேண்டும். மானிட வாழ்வு சமயோகமாக வேண்டும். அதில் அருளும் பொருளும், அன்பும் அறமும்,*

மனத்திட்பமும் வினைத்திட்பமும், மதிநுட்பமும் ஒட்பமும் சேர்ந்திருக்கவேண்டும். மேற்கின் விஞ்ஞானமும் கிழக்கின் ஆத்மஞானமும் சமயோகத்தில் இணைந்திருக்கும். நமது நமது என்ற சுயநல உப்புச் சுவரின்றி, எல்லாம் உனது என்ற அன்பு வெளியில் மனிதசமுதாயம் ஒரே குலமாகக் கூடவேண்டும். வறட்டுத் துறவாலும், டாம் டாம் அவதாரங்களாலும், சுய விளம்பரத்தம்பட்டங்களாலும் அரிய பயன் ஆகாது. சில ஆசிரமங்களில் அந்தந்த குருமாரே கடவுளாக வணங்கப்படுகிறார்.

ஆளைச்சுற்றிக் கோயில், சாமி, மடம், மதம் எல்லாம் உண்டாகின்றன. எல்லாம் வல்ல கடவுள் புறக்கணிக்கப் படுகிறார். இந்தப் பாபம் இனிவேண்டாம். மனிதன் கடவுளைத் தலைக் கொண்டே, அடைக்கலம் புகுந்து வாழவேண்டும். அனைவரும் கைவிட்டாலும், ஆண்டவன் அன்பரைக் கைவிடான், நம்புங்கள், நம்புங்கள்.

கூட்டாதவீடு குப்பை குவிகிறது; குவியாத மனமும் புலன் வழியே திரிந்து உலகக் குப்பைகளை உள்ளே வாரியடிக்கிறது. மனதை ஜப தப தியான சாதனங்களால் தினந்தினம் சுத்தமாக்க வேண்டும். வாழ்வாறு நன்மை தீமைக் கரைகளுடே செல்லுகிறது. உலகின் அழுக்கும் அதிற்கலக்கிறது. வாழ்வாறு பொறுமையாக ஓடிக் கடலைக் கலந்தால், அது கரையற்ற, எல்லையற்ற சைதன்ய மயமாகிறது. கரையற்ற அருட்கடலில் உயிர்ப்படகு செல்லுமட்டும், நாம் மேடு பள்ளம், மலை, கணவாய்களில் ஏறி இறங்கிச் செல்ல வேண்டியிருக்கும். வாழ்வை ஆற்றோட்டமாக்குமின்! பயிருக்கும் உயிருக்கும் உதவி ஆறு கடல்சேர்வதுபோல, உலகுக்கு உதவியாய் வாழ்ந்து உயர் பொருளை அடைந்து இன்புறவேண்டும். உலகுடன் கவனமாகப் பழகவேண்டும். பல்லைப் பிடுங்கின பிறகு, பாம்பை விளையாட்ட முடியும். இன்றேல் ஆபத்து. ஆணவம் ஒழிந்தாலே, அன்பு நிறைந்தாலே, நாம் அமைதியின்பத் தொண்டராக உலகின் முன் வரத்தகும்.

கடவுள் அழைப்பு வரும்; அப்போது கடமைக்குப் புறப்படுவோம். இப்போது அறிவை அடக்கமாக எழுதி எழுதிச் சேர்த்து குஞ்சிதபாதத்தில் வைத்துக் கும்பிடுவோம்.

**ஓம்—ஓம்—ஓம்.**

## 40. அரவிந்தாசிரமம்

அன்பு மணியே,

அமைதி, அமைதி! ஆயிரம் நூல்கள் அமைதியாக எழுதி முடிந்தன. இவற்றை நகாசு செய்து வாய்ப்புள்ளபோது வெளியிட வேண்டும். அன்பு நிலையம் அரிய நூல்களையெல்லாம் வெளியிட் டுதவியது திருவருட் செயலாகும். நமது இசைப்பாடல்கள் எங்கும் பரவி வருகின்றன. எம்.எஸ். சுப்புலட்சுமி, வசந்தகோகிலம், பட்டம்மாள், கோமதிசங்கரர், தேசிகர், இராமனுஜ ஐயங்கார், செம்பை வைத்தியநாதர் முதலிய இசைக்குயில்கள் நமது பாடல்களைப் பாடுகிறார்கள். 5000 கீர்த்தனங்களில் 1050, கீர்த்தனாஞ்சலியாகத் தொகுத்து வெளியிடத் தயாராயுள்ளன. நமது கலைவளர் கற்பகம்(அண்ணாமலையார்) இருநூறு பாடல்களைத் தொகுத்து அச்சிட்டு இசைப் புலவர்களுக்கு அனுப்பி, எங்கும் பரப்பினார்கள். நன்றி. எட்டு வயதில் மதுரைக்கோயில் மூலையில் எழுந்த 'எப்படிப் பாடினரோ' இப்போது நாடெங்கும் வானொலியிலும் முழங்குகிறது. நமது வேதாகமச் சமயம் உருக் குலைந்து மறைந்துகொண்டிருக்கிறது. அதன் அரிய பெரிய உண்மைகளைத்தான் கீர்த்தனாஞ்சலியாகப் பாடி நடராஜப் பெருமான் திருவடியில் வைத்து வணங்கினேன்.

தக்க இசைவாணர் இக்கீர்த்தனங்களைப் பயின்று பாட வேண்டும். நமக்கென்று யோகசமாஜமும், யோகியர் குழுவும், கலைவாணரும், அச்சகமும், அரங்கும் வேண்டும். நமது நாடகங்களுக்கு நடராஜ விலாஸம் அமைக்கவேண்டும். தக்க நடிகரைப் பயிற்றி அவர்களை மேடையேற்ற வேண்டும். கலையறிவும், கடவுளறிவும், தொழிலறிவும், தூய தன்னறிவும் கூடிக் குழையவேண்டும். யோகநூல்களையும் எழுதியுள்ளேன். வெறும் வயிற்றில் வேதாந்தம் ஏறாது. அகமும் புறமும் இணைந்தாலே வாழ்வு நிறைவாகும். ஆதலால் இலக்கியத்துடன் தொழில்-விஞ்ஞானத்தையும் ஊக்கும் நூல்களை ஆய்ந்து எழுதியுள்ளேன். ஓவியம் இருளிற் கிடக்கிறது. அறிவொளியிலக்க வேண்டும். காட்டான் பூட்டானும் கற்றுத் தெளியும்படி எளிய நடையில் யோக-விஞ்ஞான நூல்கள் வெளிவரவேண்டும். உள்ளே யோகத்தில் கடவுளைக் கலந்து, புறத்தே கலையெழில் குலுங்க மனிதர் இனியராக வாழவேண்டும். வறுமை, மடமை, அடிமைக் கணவாயினின்று மாந்தர் தப்பிப் பிழைக்கவேண்டும். தீபாராதனையுடன் கலாராதனையும் செய்யவேண்டும். ஜப்பான், சுசர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து, ரஷ்யா, ஜெர்மனி போன்றே நாமும் விஞ்ஞான முன்னேற்றம் அடைந்து அத்துடன் நமக்குரிய நன்னெறியைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். இன்னும் எத்தனையோ "டும்டும்" அடிக்கலாம். சுற்றம் டம் டம்! நன்றாகத் திட்டமிட்டு ஒவ்வொன்றாகத் திருவருளால் நிறைவேற்றவேண்டும். டும், டும், டும்! நிறைவேற்றுவோம்.

ஓம் ஓம் ஓம்!

## 41. யோக சமாஜம்

ஆன்மநேயர் வாழ்க !

வடலூர் சுத்தசன்மார்க்கத் தலைவன் என்ற தகுதியாற் சில கருத்துகளை எழுதுகிறேன். நான் அருட்சோதி வள்ளலாரிடம் அளவற்ற அன்பு கொண்டவன். எனது தமிழாசிரியர், தெய்வ சிகாமணியோகியும், எனது ஞானாசிரியர் ஞானசித்தரும், எனக்கு இராஜயோகம் அளித்த பூரணசித்தரும் வள்ளலாரைப் பார்த்துப் பழகியவர்கள். அவர்கள் சொல்லித்தான் நான் அருட்சோதி வள்ளற் பெருமான் வரலாற்றை எழுதி, அது இன்று உலகில் உலாவுகிறது. ஆங்கிலத்தில் முதன் முதல் அருட்பெருமான் வரலாற்றை எழுதி, அரவிந்தரிடமும் காட்டினேன். அரவிந்தர் ஆன்மநேய ஒருமையை மிகவும் போற்றினார். வள்ளற் பெருமானின் அருட்சக்தி இன்று உலகில் எங்கும் பரவிவருகிறது. மனித சமுதாயம் சாதிசமய பேதமில்லாமல் ஒரே அருட்குலமாக இணைந்து வாழவேண்டும் என்ற ஆர்வம் எங்கும் பரவிவருகிறது.

ஒரே கடவுள் ஒரே உலகம்
ஒரே ஆன்மநேயர் நாம்
ஒரே வானக் குடைநிழலில்
ஒரே குலமாய் வாழுவோம்

என்பதே என் வாழ்வின் பல்லவி.

இதை நிறைவேற்றவே நான் அரவிந்த ஆசிரமத்தின் உயர் நிலையைவிட்டு வெளிவந்தேன். உலகையும் சுற்றிவந்தேன். மனித சமுதாயத்தின் விஞ்ஞான முற்போக்கையும் ஆத்மீக பிற்போக்கையும் கண்டுவந்தேன். வடலூரில், தயாள்பாக், காங்கிரி, வாரணாசி பல்கலைக்கழகம், சாந்தி நிகேதனம் போன்ற மாபெரும் ஆன்மீகக் கலைநிலையம் ஏற்படுத்தும் ஆர்வமுடன் வெளிவந்தேன். எனது உலகறிவையும், உள்ளறிவையும், யோகசக்தியையும் ஊக்கி ஒரு பெரிய ஆக்கவேலையை நிறைவேற்றவே மௌனத்தின் ஆழத்திலிருந்து வெளிவந்தேன். சுற்றிப் பார்த்தேன். ஏமாற்றமே கண்டேன். என் உள்ளத்தை அறிவாரில்லை. என் சமயோகத்தைப் பயில்வாரில்லை. நான் உலகிடம் எதையும்

எதிர்பார்க்கவில்லை. என் கனியுணவை நானே வாங்கிக்கொள்ளுகிறேன்; நான் எதிர்பார்ப்பதெல்லாம், எனது தவயோகத்திற்குத் தக்க அமைதியான சூழல், எனது ஆத்மானுபவங்கள் பேனாமுனையில் உரிமையுடன் நடமாடி உலகிற்குப் புதிய இலக்கியச் செல்வத்தைத் தரத்தகுந்த சூழல்—இவையே. இரண்டும் இல்லாத இடத்தில் கடுகடுப்பான சிடுசிடுப்பில் நான் எப்படி இருக்கக்கூடும்? அரவிந்தர் திருவடியின் அமைதியெங்கே, இந்த அகம்பாவச் சூழலெங்கே?

அதனாலேதான் நான் தனியாக ஒரு நிலம் வாங்கி நிம்மதியாகத் தவம்புரிகிறேன். 1920 முதல் நான் இருந்த இடம் யோகசமாஜம் என்றே அழைக்கப்பட்டது. யோகசமாஜம் என்பது பகவான் ரமணரும், அரவிந்தரும் ஆசிகூறிய பெயராகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன நான்கு சாதனங்களாகும். இவை கர்ம, பக்தி, ராஜ, ஞான யோகங்களாகும். வள்ளலார் ஞான சபையை நாட்டிக் கண்ணாடி விளக்கேற்றினார். உள்நாடிப் பார்த்து உணர்ந்தால் இறைவன் கண்ணாடியில் ஒளிபோல நம்முடன் கலந்திருப்பது தெளிவாகும். இதுதான் திருமந்திரயோகம். அதுவே வள்ளலார் உள்ளம். அவர் கருவறையில் கண்ணாடி வைத்து மேலிருந்து மின்னொளிப் பிழம்பு அதிற் பளிச்சிட் டொளிரவே வகை செய்தார். இந்த ஒளியை அடைவதற்கு ஏழு திரைகள் விலகவேண்டும் என்ற சூட்சுமத்தை உணர்த்தினார். இதை எனது தியானத்தில் உணர்ந்தேன். வள்ளலின் உள்ளம் என்னுள் துடித்தது. ஆதலால் யோகசமாஜத்தில் ஓங்காரக் கண்ணாடிமுன் ஒளிமணி விளக்கந்தூண்டி தியான வழிபாடு செய்யும் சாதனத்தை ஊக்கினேன். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், சின்மயம், சன்மயம் ஆகிய ஏழு கோசங்களுக்கு அப்பால் மகாதுரீய சமாதியால் சுத்தமயம், சாந்தமயம், பிரணவமயம், சக்திமயம், ஜோதிர்மயம் என்ற ஐந்து மகாதுரீய மண்டலங்களை நீண்ட சமயோக சமாதியிற் கண்டு யோகசமாஜத்தில் அமைத்தேன். யோக சமாஜம் அமைதியும் மௌனமும் காக்கும் அருள் நிலையம். இதில் காலை மாலை சுத்தசக்தி மந்திர நாதமும், தியானமும் நடக்கும். இங்கே சாதி சமய, சாத்திரகோத்திர, நாடு நிற, பால்-வேறுபாடுகள் இல்லை. எல்லாரும் அருளான்ம நேயத்தில் வாழ்கிறார்கள். இங்கே மாடியில் எனது தியானக்குகை உள்ளது. அதில் இறைக் கலப்புடன் இருந்து சுத்தசக்தியை வளர்க்கிறேன். என்னுடன் தியானம் செய்பவர் அந்தச் சக்தியைப் பெறுகிறார்கள். ஆனால் அதற்குச் சித்த சுத்தியும், இதய மலர்ச்சியும், சுத்தசக்தி பரமாத்மனிடம் ஒருமையன்பும் வேண்டும். அவ்வா றில்லாதவர்கள், என்னையும் அறியமாட்டார்கள், அரவிந்தரையும் அறியமாட்டார்கள், வள்ளலாரையும் அறியமாட்டார்கள். இங்கே ஆசனம், அந்தர் பிராணாயாமம், ஸஹஸ்ரார தியானம், அனாகத நாதோபாசனை, சக்தி சஞ்சாரம் முதலிய பல நுட்பமான சாதனங்கள் உண்டு. அவரவர் பக்குவத்திற்கேற்றபடி சாதனங்கள் அமையும். சிலர் சுயநலமற்ற தொண்டுமட்டும் செய்வர்; சிலர் ஆசனம், பிராணாயாமம், பந்தம், முத்திரை, நேதி, தௌதி ஆகிய ஹடக்கிரியைகளைப் பயில்வர். சிலர் மனங்குவிந்து தியானிப்பர்; சிலர் சுத்தசக்தி சாதனம் செய்வர், சிலர் மௌனமாக உள்ளடங்கி யிருப்பர். பக்குவத்திற்கேற்ற சாதனம் நடக்கிறது. ஆனால் மனக் குரங்கின் சேட்டையால் மேலேற முடியாமல் சாதகர் கீழ்ப் படியிலேயே உள்ளனர். படியேறும் யோகிகளுக்கு பூரணமான யமநியம சாதனங்கள் வேண்டும். படியேறிய யோகாரூடருக்கு சமயோக சாந்த நிலைகூடும். அலையும் மனதை உள்ளடக்கி, இதயக் குகையில் ஆழ்த்தி, உதித்த இடத்தில் ஒடுங்கியிருப்பதே உயர்ந்த சாதனம். ஆத்மசோதனையும், ஆத்ம சாதனையும், ஆத்ம சுத்தியும், ஆத்ம சக்தியும், ஆத்ம சித்தியும், ஆத்ம முக்தியும் படிப்படியாகத் திருவருளால் கனியும். குருகுலம் இன்னும் கட்டிட அளவிற்கூட முடியவில்லை. ஆதலால் என் வாழ்வின் பணியை யோகசமாஜ அமைதியில் நிறைவேற்றி வருகிறேன். இதன்பால் எனக்கு அளவற்ற இடர்களையும், அபாண்டமான இன்னல்களையும் நேற்றுச் செய்தவர்களைப் பொறுத்தேன். இன்று

*அவர்களைக் காணோம். அந்தக் காலம் வள்ளலாருக்கு வந்த இடர்களைவிட நூறுமடங்கு அதிகமாக எனக்கு வந்தன. அத்தனையும் இலக்கியமாயின. இனிச் சாதியுகம் ஒழியும், சோதியருள் பொழியும், சமயப் பிரிவினை மறையும், சமயோக ஒருமை நிறையும்.*

*நான் என் மூச்சை ஒரு நொடிகூட வீணாக்கவில்லை. சள சளப் பேச்சு தற்கொலையாகும். நான் பிறந்ததுமுதல் பெரும்பாலும் மௌன தியானத்திலேயே ஆழ்ந்து, விட்ட குறையைத் தொட்டு முடித்துச்செல்லவே முயல்கிறேன். இறைவனைப் பாடுதல், என் யோகானுபவங்களை வைத்து உலகானுபவங்களைக் கதை கதையாக எழுதி மாந்தருக்கு வாழும் வகையை உணர்த்தல், தூய யோக புங்கவர் சங்கத்தில் இருத்தல், தெளிந்த ஞானிகளுடன் பழகல் இவையே என் வாழ்வாகும்.*

*எனக்கு வழிகாட்டிய நண்பர் என்று சொல்லத்தக்கவர்கள் பத்தேபேர்: பூரணசித்தர், சாயிபாபா, சித்தாரூடர், ரமணர், அரவிந்தர், ஞானசித்தர், வீரவிளக்கு வ.வே.சு.ஐயர், மேகர் பாபா, காந்தி. இவர்கள் என்னை அறிவார்கள். இன்றுலகில் எனக்கு நண்பர் யாரும் இல்லை. ஆதலால் சுத்தசக்தி பரமாத்மனையே இதயத்தில் கலந்து, அவன் காட்டிய வழியிற் செல்லுகிறேன். உள்ள மட்டும் நோய் நொடியில்லாமல், பிறருக்குத் தொல்லையில்லாமல் வாழ்வேன். உழைத்தே பிழைப்பேன்; பிறர் கையை எதற்கும் எதிர்பாரேன். ஆண்டவன் தூண்டினாலே வேண்டியதைப் பேசுவேன். மற்றபடி மௌனமாகவே சாதனம் செய்வேன். நான் ஐந்து முதல் எட்டு வரையில் ஹடராஜயோக சாதனம் செய்தேன். எட்டு முதல் பனிரெண்டு வரையில் தீவிரமான பக்திசாதனம் செய்தேன். பனிரண்டு முதல் பதினாறு வரையில் கீதாசாதனமே செய்தேன். பதினாறுமுதல் இருபத்துநான்கு வரையில் உலக சேவையையே கருமயோகமாகச் செய்தேன். 24 முதல் 26 வரையில் என் அனுபவங்களைப் பாடிக்குவித்தேன்; நாட்டைச் சுற்றினேன். 26 முதல் ஐம்பத்தொன்று வரையில் ரமண அரவிந்தர் திருவடியில் மகாதுரிய மௌன சமாதியில் ஆழ்ந்து பல சித்திகளைப் பெற்றேன். அவற்றை மனிதசமுதாயத்திற்குப் பயனாகும்படியே பாரதசக்தி மகாகாவியமாகப் பாடி அச்சிட்டளித்தேன். எனது நூல்களெல்லாம் யோகக் கனிகளே. இன்றுலகம் என்னை அறியும். எனக்கேற்ற சூழலும் தொண்டு இருந்தாலே நான் வடலூரில் இருந்து அரிய பெரிய காரியங்களைச் செய்யமுடியும். நான் தீவிரமான கடவுட்குறிப்பினன். கடவுள் அருளைச்சுற்றியே வாழவேட்பவன். மனிதரைச் சுற்றிப் புதிய மதங்களை ஆக்குவது உலகை இன்னும் பிரிப்பதாகும். வள்ளலார் இதற்கே இரண்டு மந்திரங்களைத் தந்தார். அருட்பெருஞ்சோதியை அடைக்கலம் புகுந்து, தனிப்பெருங் கருணையால் மக்களுக்கு ஜீவகாருண்யப் பணி புரிதலே அவர் உள்ளம். அது நிறைவேறும். அவனருளாலே அவன் வழி செல்வோம். இந்தக் கடிதம் ஜெனிவாவிலிருந்து எழுதுகிறேன். மாஸ்கோ சென்று மீண்டும் எழுதுவேன். அருள், அன்பு, இன்பம் ஆகுக!*

## 42. அருளும் பொருளும்

*அன்பனே!*

*துணிந்து முன்செல்; அருளை நம்பு; பொருள் வரும். முயற்சி திருவினையாக்கும். முன்னே இங்கிலாந்திலிருந்து கப்பலேறிச் சென்ற பில்கிரிம் ஃபாதர்சை நினை. அவர்கள் பணமா மூட்டை கட்டிக்கொண்டு போனார்கள்? மனத்திட்பமும், வினைத்திட்பமும் பைபிள் ஆர்வமும், பரமபிதாவிடம் அன்புறுதியும் கொண்டு யாரும் அறியாத அமெரிக்கக் காட்டில் குடியேறினர். ஒரு பெரிய குடியரசே எழுந்துவிட்டது. இன்று அமெரிக்கா செல்வம் பொழிந்து செழிக்கிறது.*

*உழைப்பை நம்புவோம்; தாளாண்மையால் வேளாண்மை நாட்டுவோம். உழைக்காமல் எவரிடமும் ஓசி கேளோம். பிறர் நமக்காகப் பாடுபட்டால், அதற்கேற்ற கைம்மாறு செய்வோம். பெருந்தன்மையாகப் பிழைப்போம். வருந்தி வருந்தி உழைப்போம். திருவருளை அழைப்போம். அறிவு, அருள், அன்பு, ஆற்றலாற் செழிப்போம். உலகே கோயில். உயிர்க்குழுவே கடவுள்; உழைப்பே வழிபாடு, எல்லாரும் இன்புறலே பேரின்பம். சூரியன் போலப் புத்துலகை ஆக்குவோம். அமைதியாக நிலைப்பான அருட்பணி புரிவோம். இன்று அறியாவிட்டாலும் நாளையுலகு அறியும், புரியும், எண்ணம் விரியும், வெற்றி விளங்கும்.*

திருவருள் துணை

## 43. ஆண்டவன் கட்டளை

*(பிரெஞ்சிலிருந்து தமிழாக்கம்)*

*அன்னையே !*

*தங்கள் அன்பில் வளர்ந்த அறிவுக்குஞ்சு சிச்சிலி கொட்டுகிறது; மௌனக்கூண்டில் யோகக் கனியுண்டு வளர்ந்த ஆன்மப்பறவைக்கு சிறகு முளைத்து வானளாவிப் பறந்து, உலகெங்கும் ஓங்காரமிட்டுப் பறக்கத் துடிக்கிறது. காட்டுக்கிளி கூட்டுச் சிறையை உடைத்துக் கொண்டு விடுதலை, விடுதலை என்று கூவிச்செல்லுகிறது. எனது வாழ்க்கை நீண்ட யாத்திரை; அது புனிதமான தவயோக சித்தர்களின் சூழலில் இருந்து தவம்புரிந்து கொண்டே முன்செல்லுகிறது. ஐந்து வயதில் தொடங்கிய யாத்திரை நூறுவயதுமட்டும் நடக்கும். அன்னையே என்னை ஆட்கொண்ட சுத்த சிவசக்தியின் கட்டளை "முன்செல்" என்பது. சிறுவயதில் அவள் திருப்பாதத்தை அணைந்து கொண்டு "அம்மா அடைக்கலம்; உன் சேயை வழிநடத்து, தாயே" என்று கதறினேன். முன் விட்ட குறையால் சுத்த சிவசக்தி என்னுள் விழித்தெழுந்தது. பூர்ணசித்தர் எனக்குக் கீதையும் ராஜயோகமும் பயிற்றினார். "ஞானசித்தர்" என்ற அற்புத மகான், இமாலயத்தில் உள்ள அகஸ்திய குண்டத்தில் இருந்து வந்து, என் வாழ்க்கைக்கு வழிவகுத்தார். இன்ன முனிவரிடம் இத்தனைகாலம் இருந்து செல் என்பது அவர் கட்டளை. அவரே மகாகுண்டலிக் கனலைத்தூண்டி என்னைச் சுத்தானந்தமாக்கியவர். அதன் பிறகு சீரடி சாயிபாபா எனக்கு மௌனதீட்சை தந்தார்; உள்ளே ஓங்காரமாய் நின்ற சக்தியை எழுப்பினார். அதன்பிறகே என் கவிதைக்கனி இனிப்பேறிப் பழுத்தது. நான் காடுமேடெல்லாம் திரிந்தேன். இமாலயத்திலும், கங்கை, நருமதை, கோதாவரி, காவேரிக் கரைகளிலும் சுற்றினேன். ஒருமுறை ஹூப்ளிவனத்தில் சித்தாரூட சுவாமிகளைச் சிவப்பழமாகக் கண்டேன். அவர் "ஓம் சிவம்" என்று என் காதில் ஓதினார். ஜீவனில் சிவமணம் வீசியது.*

*அதன் பிறகு பாரதியார், வீரவிளக்கு வ.வே.சு.ஐயர், திலகர், காந்தி முதலியோர் நட்பு கிடைத்தது. அவர்களுடன் பாரத தருமத்தை விளக்கும் பணிநலமே புரிந்தேன். ஐயரும் நானும் கன்னியாகுமரி விவேகானந்தப் பாறையில் அமர்ந்து சிந்தித்தோம். ஆத்மிக இந்தியாவின் காட்சி எங்கள் மனதில் பளிச்சிட்டது. அதையே திருக்காட்சியாகப் பாடினேன். ஐயரும் நானும் உலகக் கவிகளை யெல்லாம் ஆராய்ந்தோம். எனது பாரதசக்தி மகாகாவியத்திற்கு அவர் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். ஐயர் அருவியில் மறைந்தபிறகு என் கலைவாழ்வு கண்ணீரில் தோய்ந்தது. முன்பே கிறிஸ்து, இஸ்லாம், பௌத்த சமண சமயங்களை ஆய்ந்து, பிறகு வேததருமத்திற் புகுந்தேன். இப்போது, எல்லாரும் இணைந்து வாழக்கூடிய சமயோகத்தை இறைவன் என்னுள் தூண்டினான். பகவான் ரமண மகரிஷிகள் உதித்த இடத்தில் ஒடுங்கியிருக்கும் நுட்பத்தைக் காட்டினார். விருபாட்சி குகையில் ஒரே நிலையில் ஊன்றி சகஜ சமாதியில் இருந்து பிறகு அரவிந்த சக்தியை அடைக்கலம் புகுந்தேன்.*

*தாயே நான் என்றும் தங்கள் சேயே. மௌனமாகத் தங்களிடம் நான் பெற்ற பயன் மிகப்பெரிது. என்னைப் பிரெஞ்சுக் கவியாக்கினீர். தாந்தே, ஓமர், விர்ழில், ரஸீன், மோலியர், கொர்நெல், விக்தர் ஹ்யூகோ, லமார்தின் போன்ற மகா கவிகளை ஆராயும் வாய்ப்பைத் தந்தீர். 5000 பிரெஞ்சுப் பாடல்களைப் பாடித் தங்கள் பூர்ண ஆசிபெற்றேன். முதன்மையாக என் ஆயுட் காவியமான பாரதசக்தி, தங்கள் திருவடியில் நிறைவாகி அச்சாகி வெளிவந்தது; இது என் வாழ்வின் வெற்றியாகும். ஆயிரம் நூல்களைத் தங்கள் திருவடியில் எழுதினேன். நன்றி, தாயே, நன்றி. என்றும் அரவிந்த சக்தியின் அன்புச் சேயே நான். சென்ற தரிசனத்தின்போது அரவிந்தர் உடலில் மாறுதலைக் கண்டேன். அவர் கீழே விழுந்து கால் முறிந்தது முதல் என் மனமே முறிந்து போனது. அவர் இல்லாத ஆசிரமத்தில் வாழவே என் ஆத்மா திகைத்தது. மேலும் நான் ஓர் ஆத்மீகப் பிரயாணி; என் வழித் துணைவன் ஆண்டவனே, உள்ளத்தானே உலகில் என்னை நடத்துகிறான். தங்கள் திருவடியில் நிறைவேறிய பாரதசக்தியை உலகிற்குச் சொல்ல அவன் ஆணை பிறந்துவிட்டது. அதுவும் தங்கள் பணியே. ஆதலால் என் உள்ளத்தில் அரவிந்த சக்தியை ஏந்தி, உலகில் அடிவைக்கிறேன். தாங்கள் எப்போது அழைத்தாலும் திரும்பி வருவேன். ஆனால் எப்போதும்போல என் செலவுகளை நானே பார்த்துக் கொள்வேன். தங்களுக்குப் பாரமாக இரேன். எனக்கு இறைவன் தரும் செல்வத்தைத் தங்களுக்கே அன்புக் காணிக்கையாக அளிப்பேன். உலகில் நான் பணத்தைத் தேடவில்லை. பட்டம் பதவியைத் தேடவில்லை. குருபீடத்தில் அமரவிரும்பவில்லை. நான் என்றும் சமயோகத்திற்கு எங்கெங்கு அமைதியான சூழல் உள்ளதோ அங்கங்கு அமர்ந்து முன்செல்வேன்.*

*இந்த உலகமே சத்திரம்; நாமெல்லாம் பயணிகள், இங்கே எத்தனை நாள் இருக்குமுடியும்? இங்கே சற்று இருந்து இளைப்பாறியதும் நடையைக் கட்டவேண்டியதுதானே. ஆளைச்சுற்றி மதக் கோட்டை கட்டி உலகம் பிரிவினைப் பகைப்புலம் ஆனது. இந்த ஆளாண்மைச் சமயங்களை விட்டு, மனிதன் ஆண்டவனிடம் ஈடுபட்டுச் சமயோகத்தைப் பயின்று வாழவேண்டும். சாதி மதப் பிரிவினையிலிருந்து மாந்தர் சமயோக ஒருமைக்கு உயர்ந்து, ஒரே அருட்குலமாக, ஒரே அந்தராத்ம உணர்வுடன், ஒரே நல்லுலகில் வாழவேண்டும். உலகெங்கும் சமயோகப் பேரிகைகொட்டிச் செல்லுகிறேன். அன்னையே, இதோ ஜப்பான் என்னை உடனே அழைக்கிறது.*

**என்னுள் நீ! உன்னுள் நான் !**

## 44. சமயோக எழுச்சி

*(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்)*

*பூரணயோக ஜோதிக்கு வணக்கம்.*

*பாரதசக்தி நிறைவேறியது. அதற்கென அச்சகம் வந்ததும், நூல் வெளிவந்ததும் தங்கள் கருணையே. என்செயல் எதுவும் இல்லை. எனது, யான் என்பதும் இல்லை. எல்லாம் அவனே, அவன் செயலே. 1915ம் ஆண்டு சுவாமி கேவல்ராமுடன் தங்களைக் கண்டதும் காதல் கொண்டேன். "நீ என்னிடம் வருவாய்" என்றீர். வந்தேன்; இருந்தேன்; சமயோகம் புரிந்தேன்; அறியவேண்டியதை அறிந்தேன். வழிதிறந்தது; இனிச்செல்கிறேன். தங்கள் நூல்கள் பலவற்றை நான் தமிழாக்கினேன்; ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் ஏராளமான கவிமலர்களை ஆக்கித் தங்கள் அருளுக்கு அருச்சனை செய்தேன். எனது கவிதைகளை ஆசீர்வதித்து ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் படப் பொலிவுடன் அனுப்பினீர்கள். பாரதசக்தி ஆங்கில மொழிபெயர்ப்பும் பார்த்து மகிழ்ந்தீர்கள். உலகமெல்லாம் ஒரு குலமாக ஆன்ம ஒருமையில் வாழும்வகையைத் தாங்கள் இங்கே செயலில் விளக்கினீர்கள். பாரத சக்தி சாதன காண்டத்திற்குத் தங்கள் அருளே வெற்றியளித்தது. இதை என்றும் மறவேன், நன்றி, இறைவா நன்றி. தங்கள் திவ்யஜீவனம், யோகத்தொகுப்பு, கீதைக் கட்டுரை,*

சமுதாய வளர்ச்சி, வேதரகசியம் எல்லாம் தமிழாக்கிப் பயன்பெற்றேன். தங்கள் பூரணயோகம் என் இரத்தத்தில் ஊறிப் போனது. ஞானசித்தர் தூண்டிய யோகக்கனல் தங்கள் திருவடியில் செய்த மௌனத்தவத்தால் கொழுந்தேறிப் பொலிகிறது. இந்தக் கனலைக் கொண்டு மனித சமுதாயத்திற்கு சுத்த—முக்த—சமத்துவ சத்திய வாழ்வை உணர்த்த வேண்டுகிறேன். நான் பெற்ற தூயஇன்பத்தை என்னவரான மனித சமுதாயமும் பெற விரும்புகிறேன். எனது சமயோக சாதனப்படிகளைத் தங்களுக்கு நிவேதிக்கிறேன்.

(1) உடல் உறுதிபெற்று நோயற்று உழைக்கவேண்டும். காலில் முள் தைத்தால் தியானம் ஓடவில்லை. உடலுக்கும் மனத்திற்கும் ஆன்மாவுக்கும் தொடர்புள்ளது. ஆதலால் ஆசனம், அந்தர் பிராணாயாமம், ஆகாரநியமம், அந்தர் சுத்தி—இவற்றால் உடலைத் தூயவுறுதியுடன் வைத்துக்கொள்வது முதற்படி. பல முனிவர் கொடியநோயால் வருந்தி இறப்பதைக் கண்டோம். யோகிக்கு தேகிமட்டுமன்று, தேகமும் உறுதியாயிருக்கவேண்டும்.

(2) பிராணாயாமத்தால் பிராணமய கோசத்தை உறுதியாக்க வேண்டும். அதற்கு மகாகுண்டலிப் பிராணாயாமம் பயில வேண்டும். இந்த முறையை எனக்கு அளித்தவர் ஞானசித்தர். இதனால் கேவலிகும்பகம் சித்தித்தது. என் மூச்சு சுழுமுனை வழியே இயங்குகிறது. அமைதியின்பம் நிலைப்பாயிருக்கிறது.

(3) மனோமய கோசத்தை அலையாதபடி உள்ளத்தில் அடக்கி சிந்தனாசக்தியாக்க வேண்டும். மனத்திட்பத்தால் நினைத்தது நிறைவேறும். மனோநாசத்துடன், சங்கற்பவிகற்பங்கள் ஒழியும். இறைவன் இச்சை நிறைவேறும், மஹாகுண்டலி சக்தியை மாசற்ற மனதில் ஊக்கினால் திண்ணிய எண்ணம் வெற்றி பெறும்.

(4) விஞ்ஞானமயத்தில் சுத்தசக்தியை நிரப்பினால் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம். நமது நாடு விடுதலை அடைந்தும் கெடுதலை நீக்கவில்லை. உரிமைபெற்றும் அதற்குரிய பெருமை பெறவில்லை. ஒருமை வரவில்லை; நாடு பிரிவினைக் காடானது; பிரிவினை இரத்தம் இன்னும் வடிந்துகொண்டிருக்கிறது. உலகின் பெரிய சாபம் சாதி, மதப் பிரிவினை........ இரண்டும் ஒழிந்து சமயோக உணர்வில் ஆன்மநேய ஒருமையில் மனித சமுதாயம் வாழவேண்டும். ஆட்களைச்சுற்றி எழுப்பிய பிரிவினைச் சமயக் கோட்டைகளைத் தகர்த்து சுத்தான்மப் பொதுவில் எல்லாரும் சுதந்தரமாக, சமரஸமாக, சாந்தமாக உழைத்துப் பிழைத்து ஒரு குலமாக வாழவேண்டும். நாம் மேற்கையும் கிழக்கையும் சேர்த்து வைத்து இந்து முஸ்லிம் இணைப்பைச் செய்து எல்லோரையும் ஒன்றாக்க முயன்றோம். இருந்தும் நான் பிரெஞ்சு, நீ ஆங்கிலம், அவன் வங்காளி, அவன் குசராத்தி, இவன் தமிழன் என்ற வேறுபாடுகள் மனப்புற்றினின்று விஷப்பாம்புகள் போலக் கிளம்புகின்றன. நமது மனதிலிருந்து முதலில் சாதிமத நாடுநிற மொழி வேறுபாடுகளை ஒழித்தல் வேண்டும். தங்கள் மலர்மொழி நன்று; ஆயிரம் மலர்களுக்கு ஆயிரம் கருத்துக்களை ஊக்கி மௌனமாக மலரால் அறிவுணர்த்தும் புலமை சீரியது. இந்த நாட்டிற்கு ஒற்றுமை வேண்டுமானால் உள்ளொன்றிய தியான சாதனத்தைப் பொதுவாக்க வேண்டும். பொன்னிளங் காலையிலும், செவ்வான மாலையிலும் நாடுமுழுதும் அமைதியாகப் பத்துமணித்துளிகள் அமர்ந்து தியானிக்கவேண்டும்.

ஓம் ஜய ஓம், ஓம் ஜோதி ஓம்
ஓம் சக்தி ஓம், சுத்த சக்தி ஓம்.

இந்தப் பொது மந்திரத்தைப் பத்து நிமிஷம் கூட்டமாகப் பாடியபிறகு கண்ணைமூடி தியானித்தல் வேண்டும். தியானம் ஆனதும் ஸப்தஸ்வர ஓங்காரம் பாடி

ஓம் சக்தி ஓம் ஓம் சாந்தி ஓம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி சுத்த சக்தி ஓம்

என்ற மந்திரம் பாடிமுடிக்க வேண்டும். இது எல்லாரும் பொதுவாகச் செய்யும் சாதனமாகும். உலகம் அசுத்தமாயா சக்திகளால் காமக்குரோத லோபங்களால்,

அல்லற்படுகிறது. சுத்த பரமாத்ம சக்தி உபாசனையால் நாடு புனிதமுற வேண்டும். அதற்கு "ஓம் சுத்த சக்தி ஜய சத்ய ஜோதி ஓம் சச்சிதானந்த பரம க்ருபாநிதி" என்ற மந்திர ஜபம் ஒவ்வொரு மூச்சுடனும் நடக்கவேண்டும். இதுவே அந்தர் பிராணாயாமம் ஆக வேண்டும். நான் மாஸ்கோ, எருசலம், ரோம், பாரிஸ், தோகியோ, சிகாகோ, கலிஃபோர்னியா முதலிய இடங்களில் நடக்கும் கூட்டப் பிரார்த்தனையை அறிவேன். அதுபோல நமது நாட்டில் நடக்கவேண்டும். ஓம் ஜய ஓம் சுத்த சக்தி ஓம் என்பது நமது மந்திர நாதமாக வேண்டும்.

*(5)* ஆனந்தமய கோசத்தில் கவலையற்ற, கட்டற்ற தியான சுகத்தில் ஆழ்ந்து மோனசுகத்தை அனுபவிக்க வேண்டும். அது படிப்படியாக சித்சுகமாகும். சின்மய சக்தி ஆதார சக்கரங்களில் சுழலும்; பிறகு சன்மயம், சத்திய மண்டல சக்தி விழித்தெழும். உடல், உயிர், மனம், உள்ளம், இன்பம், அறிவு, உண்மை ஆகிய ஏழு படிகளையும் தாண்டி நான் இங்கே தங்கள் திருவடியில் இயற்றிய தீவிர மோன சமாதியில் சுத்தமய கோசம், சாந்தமய கோசம், பிரணவமய கோசம், பரவெளி, பரஞ்ஜோதி ஆகிய மண்டலங்களை நான் எட்டியுள்ளேன். இந்த அனுபவங்களை அதுவானால் அதுவே சொல்லும். நினைப்பும், எழுத்தும், சொல்லும் கடந்த சுத்த சைதன்ய சக்தி ஜோதியனுபவத்தை எப்படி விளக்குவேன்? அதுவே எழுந்து விளங்கும் அனுபவம் எனக்குக் கிடைத்திருகிறது. இந்த அனுபவசக்தியால் நான் உலகிற்கு ஏதாவது நன்மை செய்யமுடியுமா என்று பார்க்கப்போகிறேன். ஆண்டவன் அருளிய சுத்த சக்தி ஜோதியை ஆருயிர் நலத்திற்கே ஊக்கப் போகிறேன். இலங்கை, மலாயா, தாய்லாந்து, ஹாங்காங், ஜப்பான், இதாலி, சுசர்லாந்து, புரூசல்ஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜர்மனி, ரஷ்யா, அமெரிக்கா நாடுகள் என்னை அழைக்கின்றன. பல ஐரோப்பிய நண்பர் என்னை அழைக்கின்றனர். ரோமா ரோலான் என்னை பிரான்சுக்கும் சுசர்லாந்துக்கும் அறிமுகப் படுத்தினார். சுவாமி சத்தியானந்தர் என்னை மலாயாவுக்கு அறிமுகப் படுத்தினார். டாக்டர் சூசுகி ஜப்பானுக்கு என்னை அறிமுகப் படுத்தினார். ஹாரிடிக்மேன் அமெரிக்காவுக்கு அறிமுகப் படுத்தினார். மேலும் சதா மௌனியான மேஹர்பாபா என்னைப் பல அன்பருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். ஆதலால் நான் சில காலம் உலகைச் சுற்றி எலக்ட்ரான் அலைகள் போலச் சிந்தனை அலைகளை வீசித் தாங்கள் அழைத்ததும் வருவேன். எனது சமயோகம் வேதரிஷிகளின் அனுபவத்தைக் கொண்டது. அகப் புறத்தூய்மை, ஆன்மநேய ஒருமை, இரண்டும் அதன் உயிர்த் துடிப்புகள். தூயவுணவு, உழைத்த பிழைப்பு, அறிவு, தொழிலாக்கம், அருளாக்கம், மூச்சை வீணாக்காமல் உள்ளடக்கிப் பயனுள்ள பணிநலத்தில் ஊக்குதல், யோகானுபவங்களை எழுதி வெளியிடல் முதலிய காரியங்களில் இனி நான் ஈடுபட்டிருப்பேன். அருட்சோதி இராமலிங்கப் பெருமான் வாழ்ந்த வடலூர் வட திசையில் யோகசமாஜம் நாட்டி உலகப் பணிபுரிவேன். பிறகு யோகசமாஜம் சென்னைக்கு வரும். பிறகு ஆண்டவன் ஆணை வழிச்செல்லும்.

மக்களிடம் பணவசூல் செய்து, பெரிய மாளிகை கட்டி அதைப் பாதுகாக்கத் தொண்டர்களை ஊக்கி, தமது பெயரையே தமுக்கடித்து ஆண்டவனை மறக்கும் பணி எனக்கு வந்ததன்று. கடவுளுறுதி கொண்ட கருணைத்தொண்டே எனது கருத்திற்கேற்ற பணி - அதை நிறைவேற்றவே செல்லுகிறேன். தங்களுக்கு எத்தனையோ தொண்டர் அணியணியாக உள்ளனர். எனக்குத் துணை சுத்த பரமாத்ம சக்தியே. அதையே நம்பிச் செல்லுகிறேன். எனக்கு வரும் இடர்களையும் இன்னல்களையும் நன்மைகளையும் நாடகங்களாகக் கோத்து நவரஸவுலகம் பிற்காலம் அரங்கேற்றச் செய்வேன். நான் இங்கே கண்டது கேட்டதெல்லாம் என் வாழ்வையே மாற்றிவிட்டன. இன்னொருவர் இயல்புடன் மோதிக் காலத்தை வீணாக்க மாட்டேன். தக்கதைத் தகுமுறை தக்காருக்கு ஈந்து, தக்காரைக் கொண்டு சமயோகப் பணிசெய்து செல்வேன். சுத்த சக்தி அருளால் வெல்வேன்.

அன்பு வணக்கம்.

## 45. எனக்குத் தெரிந்தது

*நண்பர் வாழ்க !*

*ஆண்டவன் அருளால் கட்டிடம் அழகாக முடிந்தது. திருக் கோவிலூர் ஞானானந்தரை நான் நான்குமுறை கண்டு பழகி யிருக்கிறேன். அந்தப் பெரியார் முன்னிலையில் திறப்பு விழா நடைபெற்றது பற்றி மிக்க மகிழ்ச்சி. அமைப்பு மிக நன்று. எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். சந்நிதானத்தில் நடராஜப் பெருமானை நாட்டி இப்புறம் மாணிக்க வாசகர், அப்புறம் வள்ளலார் விளங்கினால் பொருத்தமாயிருக்கும் என்பது எளியேன் விண்ணப்பம். மேலும் அருட்பாவுடன் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் முதலிய அருள் நூல்களையும் தொகுத்து எல்லோரும் விரும்பி ஏற்கும் முறையில் நம் அருட்செல்வத்தை அளிப்பது நலம். ஓங்காரக் கண்ணாடிமுன், ஒளியிலக்கி எந்த உருவும் இல்லாமல் ஜோதி தியானம் செய்தலே வள்ளலார் கொள்கை. அதன்படியே ஞானசபை அமைந்துள்ளது. இப்போதிருக்கும் வள்ளலார் படம் பிற்காலம் வரையப்பெற்றது. ஒளிவடிவையே அவர் வணங்கச் சொன்னார். அதை நாமும் போற்றினால் நலம்.*

*குருகுல மாணவரை இரண்டு பிரிவாகப் பிரிக்கவேண்டும். வெளியிலிருந்துவரும் பெரும்பான்மையான மாணவருக்கு மாமூல் பாடமுறை வகுக்கலாம். குருகுலத்திலேயே உண்டுறையும் மாணவருக்கு யோகப் பயிற்சியும் சன்மார்க்கப் பயிற்சியும், அருட்பாடல் வகுப்பும் நடத்தி அவர்களைச் சன்மார்க்கப் பாதிரிகளாகப் பயிற்றவேண்டும். கிறிஸ்து கலா சாலைகளில் 'செமினரி' வைத்து மதத்தொண்டரைப் பயிற்றுகிறார்கள், அவர்கள் மூலம் சமயம் பரவுகிறது. அத்தகைய சமயத்தொண்டரைப் பயிற்ற யோக சமாஜநிலத்தை அளிக்க இருந்தேன். என் பேச்சை மதிப்பாரில்லை. ஆதலால் எல்லாம் விடுத்து மீண்டும் மௌனப் பணிக்கே செல்லுகிறேன். இங்கே மருத்துவசாலை நாட்டி, குருகுல மாணவரை அதன் தொண்டராகப் பயிற்ற நினைத்தேன். திருப்புத்தூர் கிறிஸ்து குல ஆசிரமத்தில் அவ்வாறே மருத்துவசாலை அமைத்துத் தொண்டர் பணிநலம் பரப்புகிறார்கள். அத்துடன் நிலையத்திற்கு வளந்தரும் தோட்டப் பயிர், மரவேலைகள், நெசவு, நூற்றல், பானைவனைதல், மிந்திரி எண்ணெய் வடித்தல், மிந்திரி பிஸ்கட், மிந்திரி மரஇலைகளால் பற்பொடி செய்தல் முதலிய தொழில்களை இப்புறம் நாட்டியபிறகு யோக சமாஜநிலத்தையும் குருகுலத்திற்கே தந்துசெல்லக் கருதினேன். எனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளேன். திருவருள் இச்சை வேறானது. ஆதலால் இனி எந்த வெளி வேலையிலும் ஈடுபடாமல் எனது பிறவிப்பணியை எழுதுகோலால் நிறைவேற்றிச் செல்லுகிறேன். என்னிடம் வருபவர்களை அன்பாக உபசரித்து என்னாலான உதவியைச் செய்து அனுப்புகிறேன். என்னை அலட்சியம் செய்பவர்களையும் உள்ள இடத்தில் இருந்தே அன்பு பாராட்டுகிறேன். என் வாழ்வில் யாரையும் நான் வெறுத்ததில்லை. பிறரை உற்றுப் பார்க்க எனக்கு நேரமில்லை. ஆனால் எனது நாடக இலக்கியங்களில் நான் பார்த்த உக்கிர வினோதங்களைக் காட்டிவிடுகிறேன்.*

*ஆயிரம் பேரை இங்கே வைத்து உணவுக்காகச் சந்தா வசூலித்தலைவது என் வேலையல்ல. பிறரை அண்டிப் பிழைப்பது இழிவு. என்னையாளுடைய சுத்த சக்தி பரமாத்மனைத் தவிர வேறு யாரையும் நான் என் மூலஸ்தானத்தில் வைப்பதில்லை. உலகில் வந்த அருட்பெரியாரை மதிக்கிறேன். எந்த இறைவன் அருட்கதிரால் அவர்கள் விளங்குகிறார்களோ அந்த இறைவனையே தியானத்தால் வணங்குகிறேன்.*

உள்நாடிப்பார்த்து உணர்ந்திடவல்லார்க்குக்
கண்ணாடிபோலக் கலந்திருந்தானே

*என்பது திருமூலர் வாக்கு. இதையே யோகசமாஜம் உருவாக்கி தியானிக்கிறது. யாரும் வந்து பார்க்கலாம். இதுதான் வள்ளலார் உள்ளமும். என்னை எங்கெங்கோ அழைக்கிறார்கள். ஆங்காங்கு சென்று நான் கண்ட உள் உண்மைகளை*

விளக்குகிறேன். தக்க முமுக்ஷுக்கள் கிடைத்தால் சாதனமுறையைப் பயிற்றி வருகிறேன். வாய்ப்புள்ள இடத்தில் பத்து நாட்கள் தங்கி முழுயோகப் பயிற்சியும் தருகிறேன். மற்றபடி என் மௌனத் தவத்தில் ஆழ்ந்து உள்ளறிவை உலகிற்கு எழுதி அச்சிட்டு வழங்குகிறேன். இதற்குமேல் என் ஆர்வம் செல்லவில்லை. காலநிலை அப்படி. தேள்கடியைவிடக் கோள் கடி கடுமையான நெறிகட்டி ஏறுகிறது. பிரிவினைக் குண்டரின் அறிவிலிச் சேட்டையாலேதான் நான் பல இடங்களை விட்டுச் சுதந்தரமாக என்னிடத்தில் நிற்கிறேன். நெறிபிடித் தொழுக வேண்டிய இடத்திலும் வெறிபிடித்தொழுகுகிறார்கள். நான் யாரிடமும் யாசித்ததில்லை. நான் மலேயாவில் சந்தா வசூலித்ததாக முழுப்பொய் கட்டித் தொல்லை செய்தார்கள். எனது சமாஜப்பாதையை முள்ளால் அடைத்தார்கள். எழுத்தும் தவமுமாக இருக்கும் என்மேல் கண்ட கற்பனைப் பொய்களைக் கட்டிவிட்டார்கள். எல்லாம் நாடகமாக்கிச் செல்லுகிறேன். நாடகத்திற்கு ஒதெல்லோ, ஐயாகோ, டெஸ்டமேனியா, ஹாம்லெட் எல்லாரும் வேண்டுவதே. மாயவுலகம் என்னைச் சுற்றிச் சுருள் விரித்தாடுகிறது. நான் மூல விளக்குப்போல சாட்சியாக உள்ளேன். உலகின் துன்பத் தொல்லை, திருட்டு புரட்டு, போற்றல்-தூற்றல், இன்னல்-இன்பம், புகழ்-இகழ், லஞ்சம்-வஞ்சம், பஞ்சம்-ஜம்பம் எல்லாம் இலக்கிய நாடகங்களாக்கிச் செல்கிறேன். உலகெல்லாம் சுற்றினாலும், உள்ளத்திலேதான் நிலைத்துள்ளேன். ஏன்? எப்படி? என்பதெல்லாம் பாரதசக்தியிற் பார்த்துக் கொள்ளுக; அன்பு

## 46. குருகுலத்திற்கு வேண்டியன

நண்பரே,

குருகுலம் என்ற பெயருக்கு எடுத்துக்காட்டாக காங்கிரியில் உள்ள சிரத்தானந்தர் குருகுலம் ஒன்றே உருப்படியாக உள்ளது. அங்கே நான் சில நாட்கள் இருந்து சொற்பொழிவாற்றினேன். அவர்கள் வாரந்தோறும் வேள்விசெய்து கூட்டப் பிரார்த்தனையும் வேதச் சொற்பொழிவும் நடத்துகிறார்கள். அவர்கள் வேதவழியே நடப்பதால் அவர்களிடையே ஒற்றுமை நிலவுகிறது. வள்ளலாரும் தங்கமேயனையார் கூடிய சன்மார்க்க சங்கம் கண்டார். ஞானசபை கண்டார். அவர் அரிய ஆன்மநேய வேதத்தைத் தந்தார். அதன்படி தொண்டரைப் பயிற்றுதல் நமது முதல் வேலை. சன்மார்க்க யோகப் பயிற்சியுடன் காலத்திற்கேற்ற கல்வியும் பெற்ற நல்ல தகுதியாளரை முதலில் ஆசிரியராக்க வேண்டும். அடுத்தபடி தக்காரைக்கொண்டு பன்மொழிகளை ஆராய்ந்து தாய்மொழியில் புதிய நன்னூல்களை ஆக்கி மாணவர் படிக்கச் செய்யவேண்டும். சரித்திரம், பூகோளம், விவசாயம், தாவரம், பூதபௌதிகம், கணிதம், தொழில் நுட்பம், இசை முதலிய துறைகளில் நல்ல புலவர்களைக் கொண்டு படிப்படியாகப் புகட்டத்தக்க பாடநூல்களை எழுதச் சொல்லிப் பயிற்றிப் பயிற்றி மாணவரை மதிவாணராக்க வேண்டும். உயர்ந்த கொள்கைகளையும் சாதன முறைகளையும் சிறு சிறு பிரசுரங்களாக வெளியிட்டு, அறிவைப் பரப்பவேண்டும். ஓர் அச்சகம் நாட்டி நன்னூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடவேண்டும். ஓர் அரிய மாத மலர் நடத்தி கல்வி, தொழில், ஒழுக்கம், யோகம் இவற்றைப் பற்றி தக்காரைக்கொண்டு எழுதச் சொல்லிப் படப்பொலிவுடன் வெளியிட வேண்டும். குருகுலம் என்ற இதழ் நடமாடும் குருகுலமாயிருத்தல் வேண்டும். குருகுலத்தில் மருத்துவநிலையம் நாட்டி மாணவரும் நோயாளரைக் கவனிக்கச் செய்யவேண்டும். சுயநலமற்ற தொண்டு வழியில் அவர்களைப் பயிற்ற வேண்டும். புக்கர் வாஷிங்டன் கண்ட துசுக்கிக் கழகத்தில் பல தொழில்கள் உள்ளன. அதே மாதிரி தாகூரின் ஸ்ரீநிகேதனிலும் பல தொழில்கள் உள்ளன. அத்தகைய தொழில்களை நாட்ட எனது நிலமே போதும். அவற்றில் உழைக்கும் மாணவர் உண்ண உடுக்க வசதி பெறுவர். ஏழை மாணவர் உழைத்துப் பிழைக்க வழியாகும்.

உலகப் பெரியார் வரலாறுகள், சிறந்த விஞ்ஞானக் காண்புகள் இவற்றைப் படமாக்கி மாணவருக்கு இரவு நேரம் காட்டினால் புதிய எழுச்சி பிறக்கும். பல பெரியார் செயல்களை மாணவர் அறிந்து புலமையை வளர்க்க வேண்டும். உழைப்பினாலே பிழைப்பு நடக்கவேண்டும். மூளைக்குப் படிப்பு உடலுக்கு உழைப்பு வேண்டும். இத்தகைய நல்ல கல்வி முறையை வகுத்து தங்கமேயனைய மாணவரைப் பயிற்றி வடலூர் குருகுலம் பொலிக! பொலிக ! சித்தமே சிவமாய்ச் சேவையே தவமாகப் பொலிக, பொலிக!

இன்பமே சூழ்க !
எல்லாரும் வாழ்க !

## 47. சாதனம்

அன்பா,

சாதனம் என்றால் பயிற்சி; உலகப் பயிற்சி, உள்ளப் பயிற்சி என்று இரண்டு பயிற்சிகள் உண்டு. பசி தாகங்களைப் போக்கி, மனிதன் உண்டு, உடுத்து, இருந்து, பெற்றுப் பெருகி வாழத்தக்க அறிவும் தொழிலும் பெறுதலே உலகப் பயிற்சி. இதனால் மட்டும் வாழ்வு நிறைவு பெறாது. மனம் அமைதி பெறவேண்டும்; இதற்கேற்ற உடற்பயிற்சியே யோகமாகும். மனிதனுள் மனிதனாயிருப்பது ஜீவாத்மா. ஜீவாத்மத் தொகுதி உலகாத்மா. இரண்டையும் தாங்கி நடத்துவது பரமாத்மா. பரமாத்ம தத்துவம் மிகநுட்பமானது. ஆசை யாணவ மாசின்றி, மனம் உள்ளே திரும்பி, ஓயாது தியானித்தாலே உள்ளிருக்கும் உள்ளத்தான் உணர்வாவான். ஒரு தட்டச்சில் எல்லா எழுத்துக்களும் ஒரே மையத்தில் அடிப்பதுபோல, நமது நினைப்பெல்லாம் உள்ளே திரும்பி, உள்ளத்தானைப் பற்றி நிற்க வேண்டும். ஒரு இசைக்கருவியில், எல்லாச் சுரங்களும் பாட்டில் கூடுவது போல, மனமொழி மெய் வினைகளெல்லாம் உள்ளத்தானுக்கே ஊணாக வேண்டும். அச்சுப் பாரங்களை அப்படியே தனித்தனியாக வைத்தால் காற்றில் பறந்து கலைந்து போகும். அவற்றைத் தைத்து அட்டை ஒட்டிக் கட்டிவைத்தால், உறுதியான நூலாயிருக்கும். அதுபோலவே சிதறும் எண்ணங்களை மீட்டு மனங்குவிந்து உள்ளே லயிக்க வேண்டும். பழரசங்களெல்லாம் பஞ்சாமிருதத்தில் சேர்ந்து இனிப்பதுபோல நம் அந்தக் கரணங்களெல்லாம் அந்தராத்மனில்கூடி மகிழ வேண்டும். தேனுக்குள் இனிப்பைப் போல ஊனுக்குள் இறைவன் தோய்ந்துள்ளான். ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும், பிரஞானம் பிரம்மம் (உள்விழிப்பே இறைவன்) அஹம் பிரமாஸ்மி (உள்ளத்தில் நான் என்று உணர்வதே பிரமம்) தத்வமஸி (நீயும் பிரமமே) அயமாத்மா பிரம்மம் (இந்த ஆத்மாவே பிரமம்) என்ற மகாவாக்கியங்களைக் குறிக்கின்றன. வேதாந்தம் நான் அது என்கிறது; சித்தாந்தம் நீ அது என்கிறது. வேதாந்தம் நான்கு சாதனங்களைச் சொல்லுகிறது; (1) உள்ளது அல்லது இன்னது என்ற ஆராய்ச்சி (2) இங்கும் அங்கும் அவாவின்மை விஷய வைராக்கியம் (3) சமம், தமம், உபரதி, தீட்சை, சிரத்தை, சமாதானம் ஆகிய மனப்பயிற்சி, (4) முமுட்சுத்வம், கட்டுவிட்டு ஆன்மவுரிமையுடன் வாழும் ஆர்வம். இந்தச் சாதனங்களால் மனங்குவிந்து உள்ளம் மலர்ந்து கடவுள் உணர்வாகும். சித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்களைக் கொண்டது. சரியை தாசமார்க்கம், தொண்டு வழி, கர்மயோகம். இதை அப்பரும் பெரியாழ்வாரும் பயின்றனர். 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்' என்ற அப்பர் தேவாரம் சரியையை விளக்கும். கிரியை சற்புத்திர மார்க்கம், பக்தியோகம்; இசைஞான சம்பந்தரும், திருமங்கை ஆழ்வாரும் பயின்று காட்டினர்; சிந்தனையும் வந்தனையும் சிவனுக்கே ஆக்குதல் கிரியை ஆகும். யோகம் சகமார்க்கம், ராஜயோகம். சுந்தரரும் ஆண்டாளும் பயின்று காட்டியது. 'மெய்மையாம் உழவைச் செய்து' என்ற அப்பர் தேவாரம் யோகத்தைச் சொல்லும். ஞானம் சன்மார்க்கம்; ஞான யோகம்; மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும் பயின்று காட்டிய வழி. நானார்; என் உள்ளமார், என்று உள்ளாராய்ச்சியால் ஞானம் ஒளிரும்.

*ஓம் சிவம் என்று இறைவனைப் பணிக. சிவோஹம் என்று தியானிக்கவும்; சிவமயம் என்று எங்கும் அவனைக் காண்க. சீவன் சிவமயமாகி இன்புறும். மனம் உதித்தவிடத்தில் ஒடுங்கி யிருக்கப் பழகு. மற்றதெல்லாம் படிப்படியாக வரும். ஓம் சுத்த சக்தி ஓம் என்று ஒவ்வொரு மூச்சுடனும் ஜபித்து வா. அருள் மலரும் ஓம் !*

## 48. பாலு வாழ்க !

*மாஸ்கோவிலிருந்து சுமார் 100 மைலில் யஸ்நாயா போலியானா உள்ளது; அதில் டால்ஸ்டாய் பண்ணையுள்ளது. அங்கே தோஸ்த்தாயின் மாளிகை; அதில் அவர் பிறந்த மெத்தை, படித்த நூல்கள், எழுதிய கடிதங்கள், இலக்கியங்கள், அவரது உண்கலன்கள், உடைகள், காந்தியுடன் அவர் தொடர்புகொண்ட வரலாறு, காந்தி, லெனின், டால்ஸ்டாய் கடிதங்கள்........ எல்லாம் பார்த்தபிறகு அவரது சமாதியில் தியானித்தேன். இரண்டு நீண்ட பிர்ச்சு மரங்களிடையே அவரை அடக்கம் செய்யவே அவர் விரும்பினார். அவ்வாறே அன்பர் செய்தனர். அந்த இரண்டு நீண்ட பிர்ச்சு மரநிழலில் இக்கடிதம் எழுதுகிறேன். அதை அப்படியே படம் பிடித்தார்கள். அந்தப் படமும் ஒரு நாள் ஆத்ம சோதனையில் வெளிவரும்.*

*பாலு, என்னைச் சுற்றிலும் பச்சைப் பசேல்என்று பூமகள் பசுநகை புரிகிறாள். சிறுசிறு ஜவந்திப் பூக்கள் போலப் பசுவளத்தில் கொத்துக் கொத்தாய் மஞ்சள் பூக்கள் குலுங்குகின்றன. இவற்றின் புன்னகைச் சொக்கிலிருந்து எத்தனை எத்தனை கருத்துக் கருவூலங்கள் வெளிவருகின்றன! நமது சென்னை வடலூர் யோக சமாஜத்தையும் அவ்வாறே வனப்படுத்தவேண்டும். டால்ஸ்டாய் தொண்டு கிழவராகியும் உழைத்தே பிழைத்தார். ஆனால் அவர் மனைவி அவருக்கு விரோதமாயிருந்தாள். குடும்பச் சச்சரவு கொடும் பாம்பு போலப் படமெடுத்தது.*

*ஒரு நள்ளிரவு. அதோ குதிரை லாயம். அதில் தனது குதிரையை ரேக்கிளா வண்டியிற் பூட்டி டால்ஸ்டாய் "விடுதலை, விடுதலை" என்று பறந்து, ஒரு வண்டி நிலையத் தனிமையில் மல்லாந்தார். அங்கே அவர் சிந்தனைகள் படம் படமாக ஓடின. டால்ஸ்டாயின் இறுதிச் சிந்தனைகளை உனக்குச் சொல்லுகிறேன். இந்தவுலகம் நிலையில்லை; இதன் பற்றுறவு துயரமேயாம்; இந்த உலகை அடைந்த யான் இனி இந்த மாயப் பிறவி வராமல் ஆண்டான் மலரடியைச் சேரவேண்டும். இதுதான் மனிதனுக்குச் சரியான முக்தி மார்க்கம். மனிதன் என்னது யான் என்று வாழ்கிறான். தன்னது தான் என்ற முனைப்புடன் பொருள் சேர்க்கிறான். விதி அவன் பிடரியிலிருந்து சிரிக்கிறது. என்னது யான் என்பதெல்லாம் தன்னது தான் என்று சேர்ப்பதெல்லாம் வெயிலில் மஞ்சள் என மறையும். எல்லாம் அவனுடைமை; எல்லாம் அவன் ஆணை; எல்லாம் அவன் பொருள் என்று எண்ணி இறைவனுக்கே அனைத்தையும் வேள்வியாக்கி அவன் மலரடி பற்றி வாழ வேண்டும். இது நமது கீதைக் கட்டுப்பாடு, சோவியத் பாட்டாளிக்குத் தெய்வ சக்தி என்பது மனிதவுழைப்பே. இந்தக் காலம் கடவுள் காப்பார் என கைகட்டிக் கொண்டிருக்கக் கூடாது.*

*உலகில் இரண்டு சக்திகள் உள்ளன: (1) ஆத்மவுணர்வால் வரும் அருட்சக்தி; அது யோகத்தாலே எய்தும். (2) பொருட்சக்தி; இதை நாம் உழைப்பால் எய்தவேண்டும். இந்தச் சக்தியே நம் உடலுக்கும் உயிருக்கும் ஆதாரமாகும். இந்தச் சக்தியை இன்னும் நிறைமுறையாக ஆணும் பெண்ணும் அறிந்து தெளிந்து பயன்பெற வில்லை. இதற்கே விஞ்ஞான அறிவாராய்ச்சி வேண்டும். ஆகையால் நமது யோகசமாஜத்தில் தியானம், மௌனம், சமாதி சாதனங்களுடன் மனத்தை உள்ளடக்கி சக்தி மயமாக்க முயல்கிறோம். மண்ணைப் பொன்னாக்கித் திருமகள் நிலைய மாக்கும் பணியில் முனைதல் வேண்டும்.*

*டால்ஸ்டாய் பண்ணையில் உழைப்பாளிகள் பலர் உள்ளனர். ஆண் பெண் சரிநிகர் சமானராக வாழ்கிறார்கள். இவர்கள் காதலித்து மனவுறவாலே மணக்கலப் பெய்துகிறார்கள். ஒருநாள், உழைப்பாளரெல்லாம் அவர்களுக்கு மாலை சூட்டி வாழ்த்தி "ஹரஷோ" என்ற ஓலத்துடன் பலபுகழ் கூறி ஒரு விருந்திட்டு பகுத்தறிவு முறையில் திருமணம் நடக்கிறது. சடங்குகள் முடிந்ததும் அழகான மலர்ப் பொதும்பரில் இந்தப் புதுயுக மணாளர் கூடி ஆடல் பாடல் அழகுக் கலை விளக்கம் செய்கிறார்கள். நம் நாடு கற்பொழுக்கத்தில் மேம்பாடுடையது. நமது மங்கையர் மாசற்றவர். வீறுடைய நம் ஆண்கள் வழி தவறிச் செல்லமாட்டார்கள். இந்த ஒழுக்க விழுப்பத்துடன் சோவியத் விஞ்ஞான-உழைப்பையும் மேற் கொண்டு, உண்ண உடுக்க இருக்க உழைக்க வேண்டியதைப் பெற இங்கே நல்ல விஞ்ஞான வேலைப்பயிற்சி தரப்படுகிறது. இரண்டாண்டுகளில் ஒருவன் ஆளாகித் தோள்புடைத்து நிற்கிறான். அவன் காதலித்த அரிவை தாயாகி இரத்தினம் போன்ற இளங் குழந்தையைக் கொஞ்சுகிறாள்.*

*இவர்கள் அழகான சோலை-வீடு, மரவீடு அமைக்கின்றார்கள். அதில் சோவியத் ஆட்சியாளர் ரேடியோ, டெலிவிஷன் எல்லாம் பொருத்துகின்றனர். சிறு சிறு குடில்களிலும் நல்ல டெலிவிஷன் உலகைக் கண்முன் விளக்கி இந்த விரிவான உலகில் நீ யார்? உன் கடமை என்ன? அதைச் செய்கிறாயா, அல்லது காலத்தை வீண் அரட்டையில் கழிக்கிறாயா? என்று கேட்கிறது. அப்போது நம் உள்ளே நான் யார்? நான் உள்ளான்மா! ஏன் பிறந்தேன்? என் வாழ்வின் பணியைப் பேனாமுனையில் நிறை வேற்றிடவே. நிறைவேற்றுகிறாயா? ஏதோ செய்கிறேன். என்னை அறிந்த அணுக்கத் துணைவருடன் நல்ல திருப்பணிகளைச் செய்கிறேன். இந்த மாதிரி உள்ளே ஆராய்ச்சி நடக்கிறது.* **அன்பு**

## 49. அனுபவ நூல்கள்

*(1) நமது குறைகளை நாம் ஆராய்ந்து திருத்திக்கொள்வோம். நம்முள் ஒற்றுமையில்லை. எல்லாரும் ஓர் குலம் என்ற உணர்ச்சி இலக்கியத்திலே உள்ளது. இலட்சியத்தில் வரவேண்டும். எனது உலகப்பாட்டில் இதைத் தெளிவாகப் பாடியுள்ளேன். அந்தப் பாடல்களை இங்கே பாடி மகிழ்கிறோம். அப்பாடல்கள் அரங்கந் தோறும் திரைதோறும் ஒலித்தால் புதுக்கருத்து பூத்துப் பொலியும்.*

*(2) சாதிமதங்கள் சாய்ந்து மறைந்தன. யோகக் கலை தலை தூக்கி நிற்கிறது. யோகம் ஆத்மா நான் என்ற உணர்வில் ஊன்றி நிற்கிறது. யோகமே வாழ்வாகவேண்டும். அதை யோகசித்தி* Gospel of Perfect Life *தெளிவாக விளக்கும். என் வாழ்வின் சாசனம் இந்த நூல்.* Yoga For All, Secrets of Samayoga *இரண்டிலும் யோக சாதனங்களைத் தெளிவாக விளக்கி உலகிற்குத் தந்துள்ளேன். வாழ்வின் அனுட்டானம், வேதப் பிரார்த்தனைகள்—எல்லாம்* Veda Sadanam *என்ற அரிய தொகுப்பில் விரிவாக விளக்கியுள்ளேன். வேத வேள்விகளை அதிற் காணலாம். 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்ற ஆசிமொழி பெரியபுராணத்தில் உறங்குகிறது.*

*(3) அன்பா, முன்னோர் குவித்துவைத்த முத்தமிழ்ச் செல்வத்தை நாம் மூலையில் ஒதுக்கிவிட்டோம். இன்று விழித் தெழுந்து மார்தட்டி வருகிறோம். திருக்குறள் ஒப்புயர்வற்ற உலகநூல், முப்பாலில் நாற்பால் கண்ட முனிவர் நூல்.*

*நமது* Couplets of St. Valluvar *உலகப்புகழ் பெற்றது. தாமரைச் செல்வர் வாழ்க! அடுத்தது* The Grand Epic of Saivism *(அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறு) வெளிவந்து நற்புகழ் பெற்றது. இதுவும் என் வாழ்வின் வெற்றிப் பணிகளில் ஒன்றாகும். இத்துடன் திருக்குறளை நிரல்பட வைத்து முறை வகுத்து,*

திருக்குறளின்பம் வெளியிட்டோம். அடுத்தபடி சிலம்புச் செல்வத்தை ஆராய்ந்து கண்ணகியின் விண்ணமைந்த காவியத்தை ஆங்கில நாடகமாக்கி உலகமேடையில் தமிழ்க்கலை விளக்கம் செய்யவேண்டும். அடுத்தபடியாக நமது திருநெறிச் சைவத்தின் மிகச்சிறந்த யோக நூலான, திருமந்திரத்தை எடுத்துக்கொண்டுள்ளேன். திருமந்திரமே தமிழுக்கு வாகைசூட்டும் அமிழ்தவூற்று. அது தமிழில்—திருமந்திர விளக்கம், திருமந்திரத் திறவுகோல் ஆகிய இருபெருநூல்களாக வெளிவரும். ஆங்கிலத்தில் அழகிய அணி நடைகுலுங்க "MAXIMS OF MULA YOGI" வெளிவரும். நான் டில்லி மெடிகல் கவுன்ஸில், ஸயன்டிஃபிக் அட்வைசரி கமிட்டி இரண்டிலும் உள்ளேன். யோகநிலையங்களை இந்த ஆண்டு பரிசீலனை செய்வோம். இது மாபெரும் செயல். ஆனால் பயின்ற யோக தீரரைக் காணமுடியவில்லை. நல்ல முறையில் நாட்டி நடக்கும் ஆசனம், உயிர்ப்படக்கம், தியானம், உணவு முறைகளை மக்கள் கற்றறிந்து மகிழ்வுற நடக்கவேண்டும். இதன்பால் பல யோக நூல்கள் தமிழில் வரவேண்டும். உலகமொழிகளில் படப் பொலிவுடன் அவை வெளிவரவேண்டும். ஆசனம் மட்டும் யோக மாகாது. அடுத்தது PAGES FROM SAGES என்ற அழகிய நூலும் கோத்துள்ளோம். அது வெளிவரவேண்டும். அடுத்தபடி நான் கருதும் அரிய இலக்கியம் நல்ல ஆங்கிலத்தில் "Tamilian Culture and Civilization, தமிழர் பண்பாடு இரண்டும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவரவேண்டும். அடுத்தது நம் அருட்செல்வங்களை அழகாகத் தொகுத்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிடுதல், அனைத்திற்கும்மேல் BHARATA SHAKTI—THE MODERN EPIC. இப்படிப் பல அரிய எழுத்துப் பணிகளை ஆண்டவன் எனக்கு அளித்து, என்னைத்தூண்டி வேலை வாங்குகிறான்.

கடிதம் நீண்டுபோனது. இந்தக் காரியம் வெற்றிபெற இறைவனைப் பணிவோம்.

ஓம்! ஓம்! ஓம் சுத்தசக்தி ஓம்!

## 50. மகாகவி பாரதியார்

**அண்ணால்,**

தங்களை நினைக்க நினைக்க கவியருவி பொங்குகிறது. எத்தனையோ வீரக்கனவுகள் மனத்திரையில் விளையாடுகின்றன. புதுவையில் விஜயதசமியன்று செய்த வீரசக்தி முழக்கம் சென்னையில் காந்தியைக் கண்ட எக்களிப்பில், பார்த்தசாரதி மண்டபத்திலிருந்து பாடிய "வாழ்க நீ எம்மான்" எல்லாம் என் காதில் சுழன்றொலிக்கின்றன. தங்கள் வாக்கு அருள் வாக்கு; அது நிறைவேறும்.

ஊதுமினோ சங்கம்! ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள் ! ஓங்குமினோ ஓங்குமினோ
வேதனைகள் இனியில்லை விடுதலையோ திண்ணமே.

என்ற சங்கநாதம் ஐயருக்கும் எனக்கும் விடுதலை தந்துவிட்டது. ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம் என்ற நம்பிக்கையைத் தந்தது! அனைத்திற்கும் சிகரம்வைத்ததுபோல் அமைந்தது "பாரத சமுதாயப் பாட்டு!" சோவியத் ரஷ்யாவில் லெனின் பொதுவுடைமை நாட்டினார். இங்கே இந்தியாவில், ஒப்பில்லாத சமுதாயம் முழுமைக்கும் பொதுவுடைமை நாட்டி, எல்லாரும் ஓர் குலம், ஓரினம்; எல்லாரும் இந்திய மக்கள், எல்லாரும் சரிநிகர் சமானம் என்ற சமயோக முரசு கொட்டி, முடிவில் எல்லாரும் அமரநிலையடையும் அருளுடைமையைப் பாடிய தங்கள் தீர்க்கதரிசனம் உலகுள்ள மட்டும் ஒளிரும்.

தங்களுடன் கடயத்தில் இரண்டு நாட்கள் தங்கியபோது தாங்கள் காட்டிய அன்பைப் பாடச் சொல்லுண்டோ? "தலைநிமிர் தமிழா" "மனித சமுதாயம் ஒன்றே" என்ற எனது பாடல்களைத் தங்கள் கம்பீரமான குரலில் கேட்டது என்

கவிதை வாழ்விற்கே வெற்றி முடிசூடியது போலானது. திருச்செந்தூரில் தாங்கள் "முருகா முருகா முருகா" என்று கடல் அலைகளும் வியக்கப் பாடிய பாட்டு, உலகமெல்லாம் முழங்கப்போகிறது. "அடியார் பலர் இங்குளரே அவரை விடுவித்திடுவாய்" என்ற வேண்டு கோளை முருகன் அருளப்போகிறான். இப்போது சிறையில் வாடும் தேசபக்தர்கள், சுதந்தர பாரதத்தை ஆளும் நாள் வந்துகொண்டிருக்கிறது. காந்தியின் சத்தியாக்கிரகம் வெற்றி காணப் போகிறது. சுதந்தரக் காலைக்கு சுந்தரக் குயிலாக வாய்த்த கவியண்ணா, கவிதை தங்களுக்கு அமரத்தன்மை அளித்துவிட்டது.

ஐயர் தங்கள் வரலாற்றையும் கவிநயத்தையும் நூலாக எழுதச் சொல்லுகிறார். அவர் எனக்குப் பல குறிப்புகளைக் கொடுத்தார். நானும் தங்கள் வாயிலாக பல குறிப்புகளை எடுத்து வைத்திருக்கிறேன். விசுவநாதரும் சாம்பசிவமும் பல குறிப்புகளைத் தந்தனர். என் மனமார நல்ல நடையில் ஒரு நூல் எழுதுவேன். தங்கள் ஆசி வேண்டும்.

எல்லாரும் ஓர் குலமே என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினான்—சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி; வீரத்
திருவில் வெடித்தெழுந்த தீ.

ஓம் சக்தி ஓம்

## 51. சுப்பிரமணிய சிவா

சிவக்கனலே!

தங்கள் ஆவேசப்பேச்சு அலிக்கும் ஆண்மையளிக்கும். தாங்கள் அரசியல் விவேகானந்தர். தாங்கள் பேசும்போது, குரல் மட்டுமா? தங்கள் தாடி, தடி, கைகால் எல்லாம் தங்கள் ஜீவனில் துள்ளும் சிவக்கனலாகப் பேசுகின்றன. மூன்று மணிகள் (ஐயர், பாரதி, சிவா) பாரதமாதாவின் திரிசூலங்கள்—சூலத்தின் பிடி சிதம்பரம்பிள்ளை. எழுத்துக்கு ஐயர், பாட்டுக்குப் பாரதி, பேச்சுக்குச் சிவா, செயலுக்குச் சிதம்பரம். இந்த நால்வர் நட்பும் எனக்குக் கிடைத்தது பாரதசக்தியின் அருளே.

நிற்க, எனது நாடக முயற்சிக்குத் தங்கள் ஆசி கிடைத்தது பற்றி மகிழ்ச்சி. ஜயவீரன் தங்களுக்குப் பிடித்ததா? தீபாவளியின் போது மதுரையில் அரங்கேறும் என்று ஸ்ரீவரதன் எழுதுகிறார். பாரதி பாடலால் தமிழகத்தை எழுப்பிய பாரத சமாஜத்தொண்டர் முனைந்தால், மதுரையை நாடகமேடையில் வென்றுவிடலாம். என்னுயிரான வீரவிளக்கு எனது நாடகங்களை நகாசு செய்கிறார். எங்கள் பேச்சு மூச்செல்லாம் இலக்கியமே. 1911 புதுவை காளி பூஜையில் அவர் நட்புக் கிடைத்தது. அது படிப்படியாக உயர்ந்து வருகிறது. இந்தப் பிறவியன்று; இனி எந்தப்பிறவியிலும் அவரைப் பிரியமுடியாது. எனது பாரதசக்தி மகாகாவியப் பகுதிகளைத் தாங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஐயர் இரவுதோறும் வரிவரியாகக் கேட்டு கம்பன்-காளிதாசன்-தாந்தே-விர்ழில்-ஓமர்-ஷேக்ஸ்பியர்-ரஸீன் போன்ற புலவர் வாக்கில் அதைச் சாணை பிடிக்கிறார். வியாசர் வால்மீகி போல மகாகாவியத் தொண்டே என் வாழ்வு. ஐயர் வீரப்புலவர். உலகப் புலவர்களெல்லாம் அவர் உள்ளத்தில் சங்கம் வகிக்கின்றனர்; அவர் என் ஆன்மாவுடன் கலந்துபோனார்.

வீரச்சிவமே, எங்கள் குருகுலத்தை ஆசீர்வதியும். வடநாட்டில் சபர்மதி, காங்கிரி, தயாளபாக், சாந்தினிகேதனம் உள்ளன; தமிழகத்திற்கு ஒரே குருகுலம் பாரத்வாஜ ஆசிரமமே. அதைச் சுற்றியும் புயல் வீசுகிறது. என் உடல் பொருள்

ஆவியெல்லாம் ஐயருக்கே அர்ப்பணித்திருக்கிறேன். பாலபாரதி என் பார்வையில் நடக்கிறது.

அண்மையில் பிரமசாரிகளை நீண்ட யாத்திரையாக அழைத்துச் சென்றேன். நடை பள்ளிக்கூடம் நடந்தது. மாலை தோறும் ஆவேசப் பாடல்களுடன் ஊர்வலம். அதில் பணம் வசூலானது. மக்களும் அன்புடன் கூடினர். இரவில் நாடகம்; நல்ல கூட்டம். குற்றாலம், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, குமரிமுனை, கொட்டாரக்கரை, கொளச்சல், திருவனந்தபுரம், கோட்டையம், வைக்கியம் முதலிய இடங்களில் நாடகம் நடத்தினோம். அப்பர், மாணிக்க வாசகர், வள்ளலார், காந்தி, பிரதாபசிங், குருகோவிந்தர், சிவாஜி, ராமதாஸ், வீரத்தேவன், சந்தனத்தேவன், மருது சகோதரர், வேலுத்தம்பி, கட்டபொம்மு வரலாற்றுக் காட்சிகளை விறுவிறுப்பான பாட்டுடன் நடித்தோம். ஆங்காங்கு கலைவாணர் பக்க வாத்தியம் இணைத்தனர். நாங்கள் கேளாமலே பணம் குவிந்தது. ஐயருக்கு 5000 காணிக்கை நிவேதித்தோம். கிராமங்களில் பாட்டும் நாடகமும் புதிய எழுச்சியளித்தன.

வீரத்துறவியே, நான் 50 நாடகங்கள் எழுதி வைத்துள்ளேன். எல்லாம் ஐயர் பார்த்தவை. ஒரு நாடகத்தை அச்சிடுவோம் அரங்கேற்றுவோம்; அரங்கேற்றி விற்போம்; பிறகு மற்றொன்று. வருமானத்தில் பாதி நாடகச் செலவுக்கும் நடிகருக்கும், ஒரு பங்கு வெளியீட்டிற்கு; ஒரு பங்கு பாங்கில் போட்டுச் சேர்த்து நாமே "பாரத சக்தி விலாசம்" என்ற நாடக மன்றம் அமைத்து ஆக்கவேலை செய்வோம். பாரத சக்திக் கனலை எழுப்பினால் சுதந்தரம் தன்னால் வரும்.

எனது சிறுவயதில் கோவில்களில் நாடகம் நடந்தது; பள்ளிகளில் நாடகம் நடந்தது; நானும் நடித்தேன், சிவசாமி என்ற நாடகப் புலவர் எங்களை ஊக்கினார். அவர் நடராஜ பக்தர்; நடராஜ உபாசனையுடன் அரிச்சந்திர நாடகம் நடத்துவார்; அவர் சந்திரமதியாக நடிக்கும்போது சபை கண்ணீர் விடும்; மறுநாள் கோர்ட்டில் பொய்ச் சாட்சி சொல்ல மக்கள் பயப்படுவார்கள்; பரமேசையர் திரௌபதியாக நடித்த பாஞ்சாலி சபத நாடகத்தைப் பார்த்துப் பாரதியார் உணர்ச்சிக் கனலுடன் பாஞ்சாலிசபதம் அருளினார். "ஆத்மசக்தி" என்றொரு நாடகம் உள்ளது; "பகவத் கீதை" என்றொரு நாடகம் எழுதியுள்ளேன். இவற்றையெல்லாம் அரங்கேற்றி, மேடையிலிருந்து விடுதலைக்கனல் பரவச்செய்வோம். நான் அடுத்தமாதம் தங்களைக் கண்டு பேசுவேன். ஐந்து நாடகங்கள் படித்துக் காட்டுவேன். பாப்பரப்பட்டி பாரதமாதா கோவிலுக்கு அவை பணம் சுரக்கும். வந்தே மாதரம்! எந்தாய் வாழ்க !

## 52. நாடக மாணிக்கமே !

கும்பகோணத்திலும், சென்னையிலும் தங்கள் அரிய நாடகங்களைப் பார்த்துப் பரவசமானேன். ஐயப்பனும், தசாவதாரமும் கண்கொள்ளாக் காட்சிகள்! எனது பாடல்களை இனிது பாடினீர்கள். நன்றி. நாடகம் ஆடும் வேதம்; கலைகளிற் சிறந்தது நாடகக் கலை. அதில் வசனம், இசை, கூத்து, நவரஸ நடிப்பு, காவியம், ஓவியம், சிற்பம்........முதலிய அழகுக்கலைக ளெல்லாம் இணைந்துள்ளன. எல்லா நாடுகளிலும் நாடகப் புலவருக்கு முதல் இடம் உள்ளது. நமது நாட்டில் காளிதாசன், இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர், பிரான்ஸில் ரஸீன், மோலியர், கொர்நெல், ஜெர்மனியில் கெத்தே, ரஷ்யாவில் புஷ்கின் புகழ்பெற்று விளங்குகின்றனர். சீனம், ஜப்பான், சோவியத் ரஷ்யா முதலிய நாடுகளில் அரங்கம் ஆட்சி வகிக்கிறது. சீர்திருத்தமும், ஊர் திருத்தமும் சிறந்த நடிகரால் இயலுகின்றன. இளமையில் நடிப்புக் கலை என் உள்ளத்துடிப்பாயிருந்தது.

ஷேக்ஸ்பியரும் மோலியரும் என் உள்ளத்தை அள்ளினர். நாடகத்தால் மக்கள் வாழ்வை நயமாக்கலாம் என்ற நம்பிக்கையால் நான் மிகவும் சிந்தித்து 50 நாடகங்கள் எழுதினேன். சுப்ரமணிய சிவா, பாரதி, வ.வே.சு. ஐயர் போன்றோர் எனது நாடகங்களைப் போற்றி ஊக்கினர்.

நான் உலக நாடுகளைப் பார்த்துள்ளேன். ஒவ்வொருநாடும் நாடகக்கலையை உயிர்போலப் போற்றுகிறது. அங்கே யந்திர நிழலாட்டமான திரைப்படங்களைவிட, உயிரோட்டமான அரங்கிற்கே சிறப்பதிகம். நமது நாட்டில் வெள்ளித்திரையில் ஆடும் நிழலாட்டத்திற்கே மக்கள் கூடுகின்றனர். உயிருள்ள அரங்கம் ஆக்கம் பெறவேண்டும். நம்மிடையே மாணிக்கம், சண்முகம், பகவதி கணேசன், எம்.ஜி.ஆர் போன்ற அரிய நடிகர்கள் உள்ளனர்.

ஐரோப்பாவில் இசைநாடகமான ஆபராக்கள் ஆக்கம் பெற்றுள்ளன. நமது நாட்டிலும் ஆபராக்கள் நிரம்ப நடக்க வேண்டும். இந்தத் துறையில் நான் உழைத்துள்ளேன். பத்து ஆபராக்கள் என்னிடம் உள்ளன. தமிழகத்தில் நடிகர் சங்கம் நாட்டி, தக்க ஆடல், பாடல், அழகரைக் கொண்டு அரிய ஆபராக்களையும், நாடகங்களையும் வரவேற்று நடிக்கவேண்டும். காலத்திற்கேற்றபடி ஆபராக்களையும் நாடகங்களையும் வரவேற்று நடிக்கவேண்டும். காலத்திற்கேற்றபடி அரங்கம் ஆடி நாட்டின் உயிர்நாடி யாக வேண்டும். தாங்கள் ஒருமுறை யோகசமாஜத்திற்கு வந்து எனது நாடகங்களையும், ஆபராக்களையும் பார்வையிட்டு, அரிய பாடல்களையும் கேட்டு, அவற்றை அரங்கேற்றி வந்தால், சிறந்த கலைப்பணி பரவியதாகும். முல்லைமணம், போர்முனை, மீராபாய், பத்மினி, பிரதாப சிங்கன், ராணிமங்கம்மாள், வீராங்கனை வேலுநாச்சியார், ஊமை-வீரன் சந்தனத்தேவன், பாசுபதாஸ்திரம், சுபத்திரா கல்யாணம், காலத்தேர், ஜயமணி, வசந்த சுந்தரி, ஆத்மா சக்தி, சத்தியாக்கிரகம், மாணிக்கஜோதி, ஜோதிராமலிங்கம், அப்பர் அற்புதம் போன்ற பல நாடகங்கள் உள்ளன. அவற்றை அரங்கேற்றி எனது கலையார்வத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன். தங்களுக்கு அறிவாற்றல் ஆக்கத்திறமை எல்லாம் உள்ளன. நல்ல நடிகரும் தங்களிடம் உள்ளனர். ஒரு புதிய முயற்சி மேற்கொண்டு கால நிலையின் அலங்கோலத்தை மாற்றி நாட்டை நல்ல கலா நிலையமாக்க முன்வருக. அருளும் பொருளும் அரங்கநாதன் அருளுவான்.

**நாடகக்கலை நாட்டை ஆளுக.**

## 53. மஹாத்மா காந்திக்கு
**(ஆங்கிலத்திலிருந்து)**

வணக்கம் ஓம்ராம் !

தங்களிடம் ஒத்துழையாமை தீட்சை பெற்றவருள் நான் ஒருவன். கல்விப்பணிகளில் ஈடுபட்டு இப்போது என் உயிர்த் தோழர் வ.வே.சு. ஐயருடன் சேரன்மாதேவியில் குருகுலம் நடத்துகிறேன். வ.வே.சு.ஐயர் தங்களை லண்டனில் பார்த்து மஹாத்மா என்று வணங்கினார். அப்போது சவார்க்கரின் வீரராய் இருந்தார். 1917-ல் புதுச்சேரியில் தங்களைக் கண்டதும் சத்தியாக் கிரக வீரராகி, ஓராண்டு சிறை காத்தார். வெளியே வந்ததும் இங்கே 33 ஏக்கரில் பெரிய குருகுலம் நாட்டினார். அவர் பாரிஸ்டர் பட்டத்தை நீத்த முதல் ஒத்துழையாதார்; தியாகதீரர், பெரும் புலவர், வள்ளுவர் திருக்குறளையும், கம்பராமாயணத்தையும் ஆங்கிலவுலகிற்கீந்த அறிஞர். அவர் பேச்சு மூச்செல்லாம் பாரத தருமம், பாரத சுதந்தரம், பாரத முன்னேற்றம்.

அத்தகைய மகானுடன் நான் குருகுலத்தை நடத்துகிறேன். இங்கே அச்சகம் உள்ளது; பாலபாரதி என்ற மாதமலர் நடக்கிறது. நூற்றல், நெசவு, பாய் முடைதல், தோட்டம், விவசாயம் ஆகிய தொழில்கள் நடக்கின்றன. காலை மாலை

பிரார்த்தனை வழிபாடு, கீதை வகுப்புகள் நடக்கின்றன. பெரிய நூலகம் உள்ளது. பிரமசாரிகள் உண்ண, உடுக்க, இருக்க, படிக்க நல்ல வசதிகள் உண்டு. ஆசிரியர்களுக்குத் தனித்தனி வீடுண்டு. எனக்குக் கிணற்றோரத்தில் தவக்குடில் உள்ளது. அதில் கவிதாதேவி என்னுடன் வசிக்கிறாள். இங்கே இயற்கை மருத்துவம் நடக்கிறது; யாரும் மருந்துண்பதில்லை. பிரமசாரிகள் காலை ஐந்து முதல், இரவு பத்துமணிவரையில் அறிவும் தொழிலும் ஆற்றலும் வளர்க்கின்றனர். தமிழ், சமுஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம், கணிதம், பூகோளம், வானாராய்ச்சி, நாட்டு வரலாறு, உருக்கமான பாடல்கள், சங்கீதம், காவியம், ஓவியம், சாரணம், விஞ்ஞானம் எல்லாம் பயிற்றுகிறோம். நான் சாரணம், விஞ்ஞானம், ஆங்கிலம் பயிற்றுவதுடன் பாலபாரதியை நடத்துகிறேன். ஆண்டுக்கு இருமுறை கால்நடையாகப் பலதலங்களுக்குச் சென்று வழியே நடைபள்ளிக்கூடமும் நடத்துகிறோம். இவ்வாறு குமரிமுனை முதல் வைக்கியம் வரையில் சென்றோம். ஆங்காங்கு பஜனை, கீதை வகுப்பு, இரவில் நாடகம் நடத்தினோம். மக்கள் வரவேற்று எங்களைப் போற்றி குருகுலத்திற்கும் பணமுடிப்பளித்தனர். எல்லாரும் ஆசனம், பிராணாயாமம், ஜபம், தியானம் செய்கின்றனர். என் சொத்து சுகமெல்லாம் ஐயருக்கே அர்ப்பணித்துவிட்டேன். அவருடன் நான் கனியுணவே கொள்கிறேன்.

இவ்வாறு குருகுலம் மிகச் சிறப்பாக நடக்கிறது. இங்கே எல்லாரும் உழைப்பாளிகள். மாணவர் உடல்மன நலத்துடன் அறிவாற்றல் பெருகி வளர்கின்றனர்.

இவ்வளவு அமைதியாக நடக்கும் குருகுலத்தில் ஒரு சமையலறைப் புகைச்சல் கிளம்பி உள்ளது. எல்லாரும் மரத்தடியில் சமமாக அமர்ந்தே உண்கிறோம். சமைப்பது சில பெண்கள்; அவர்களுக்கு எடுபிடி வேலை செய்வது சில பிரமசாரிகள். நாங்கள் சாதிமதபேதம் பார்ப்பதில்லை. இங்கே வீரர்சங்கம் உள்ளது; நான் அதன் செயலாளன்; வாராவாரம் சங்கம் கூடும்; வாரம் ஒரு வீரன் கதையை நான் சொல்லுவேன்; ஐயர் பாரதநாட்டு வரலாற்றைத் தொடர்ந்து சொல்லுவார். இந்த நாடு ஒற்றுமையாவதற்கு எல்லாரும் வீரத்தொண்டராகவேண்டும். கர்ம வீரராக வேண்டும். அவரவருக்கு இயன்ற தொண்டுகளை கீதை யுணர்விற் செய்யவேண்டும். வேறு வகுப்புவேறுபாடுகள் வர்க்க வேறுபாடுகள் கூடா என்று உறுதி கொண்டுள்ளோம். உணர்ச்சி மிக்க நாடகங்கள் நடத்துகிறோம். மகான்கள், நாட்டுவீரர் திருநாட்களை நடத்துகிறோம். நாளை காந்தித் திருநாள் நடக்கிறது. நான் இசைப் பாடலுடன் காந்தி காலட்சேபம் செய்கிறேன். எல்லாம் நேரே தங்களிடம் பேசவே அடுத்த மாதம் சென்னை அம்ஜத் பாகில் தங்களை ஐயரும் நானும் காண்போம். நாங்கள் வரும் நேரம் மாலை நான்குமணி. தரிசனம் தந்து எங்கள் குருகுலத்திற்கு ஆசிகூற வேண்டுகிறோம். பாரத ரக்ஷகரான மகாத்மாவுக்கு நமஸ்காரம். ஓம் ஜய ஓம்! ராம் ஜய ராம்!

## 54. வீரவிளக்கு வாழ்க !

வீரவிளக்கே!

என்னாருயிரே, திருவனந்தபுரத்திலிருந்து நாளை திரும்புகிறோம். இங்கே மிக மிக உற்சாகமான வரவேற்பு நடந்தது. திவான் ராகவையா முதல், கவி தேசிக விநாயகம் பிள்ளை வரையில் எங்களை அன்புடன் வரவேற்றார்கள். ஊட்டுப்புரையில் முதல் நாள் உண்டோம். மறுநாள் பல அன்பர் உபசரித்தனர். மாலைப் பாட்டும் ஊர்வலமும் பொது மக்களைக் கவர்ந்தன. ஆங்காங்கு குருகுல நடைமுறைகளையும் தங்கள் அருமை பெருமைகளையும் பற்றிப் பேசினேன். அப்பர் நாடகம் நடத்தினோம். தங்களுக்கு அன்புக் காணிக்கை கொண்டு

வருகிறேன், ரூ2500. நடை பள்ளிக் கூடம் சிறந்த வெற்றி பெற்றது. ஆங்காங்கு உயர் பள்ளிக் கூடங்களில் விஞ்ஞான வகுப்பும் நடந்தது. பிரமசாரிகள் தங்களை வணங்க "ஸஹனாவவது" பாடி வருகிறார்கள்.

நிற்க. நான் கன்யாகுமரி விவேகானந்தப் பாறையில் தியானித்தபோது எத்தனையோ காட்சிகள் எழுந்தன. அவற்றை எல்லாம் தாந்தே நடையில் "திருக்காட்சி" என்ற கவிதையாக எழுதியுள்ளேன். அதைப் படித்துக் காட்டி பாலபாரதிக்கு அர்ப்பணிக்கிறேன். நாம் கொளுந்து மலைமேலும், தாமிரவருணி ஆற்று மணலிலும் எனது தவக்குடிலிலும் சிந்தித்து வந்த காரிய விதானம் நிறைவேற வேண்டும். தங்களைப் போன்ற மகாபுருஷனை, தர்மாத்மாவைக் காண்பதரிது. தங்கள் அன்பே என் செல்வம். தங்கள் உறவே என்கல்வி. பாரதசக்தி மகாகாவியம் கம்பக் கலையரசரான தங்கள் ஆசியால் வெளிவரவேண்டும். என் பாடல்களை சுதேசமித்திரனுக்குச் சிபார்சு செய்ததற்காக நன்றி. குற்றாலத்தில் மௌன உபவாசத்துடன் ஒரு நாள் தியானித்தேன். அருவியின் ஓங்காரத்துடன் அனாகத ஓங்காரமும் கலந்து கவிதை பொழிந்தது. புதிய கருத்து பொலிந்தது. காட்சிப் படலங்கள் சித்தத் திரையில் விளையாடின. குருகுலத்தில் வீரதீரர்களைப் பயிற்ற வேண்டும். அவர்களைக் கொண்டு பல பயனுள்ள தொழில்களும், கலாசாலைகளும், மருத்துவ சாலைகளும், நமது சமய வளர்ச்சிக்கான ஆத்மிகத் தொண்டும் நடக்கவேண்டும். பால பாரதியை வாரமலராக்கி மிகச்சிறப்பாகப் படப் பொலிவுடன் நடத்த வேண்டும். ஆங்கிலத்திலும் "நவபாரத்" என்ற மலர் மலர வேண்டும். அச்சகத்தில் ஒரு நல்ல ஸிலிண்டரும், இரண்டு டிரெடிலும், வெட்டுக் கருவியும், தையற் கருவியும் வாங்கி வைத்து மலர்களுடன் அரிய நூல்களும் வெளியிடவேண்டும். நமது நூல், மலர், கைத்தொழிற் சாமான் எல்லாம் விற்க மதுரை, தஞ்சை, திருச்சி, சென்னை நகரங்களில் "குருகுலா ஸ்டோர்ஸ்" திறக்க வேண்டும். இனி உண்டியல் குலுக்காமல், யாரிடமும் கையேந்தாமல், நம் உழைப்பினால் பொருள்வளம் பெறவேண்டும். கல்விமுறையும் நிறையும் உயரவேண்டும். குருகுலத்தில் கலைக் குழு ஒன்று உடனே வேண்டும். என் பாடல்கள் குவிந்து கிடக்கின்றன. நாடகங்கள் பல உள்ளன. கீர்த்தனாஞ்ஜலி, நடனாஞ்ஜலி, சிங்கநாதம், முன்னேற்றப் பாட்டு, உலகப் பாட்டு—எல்லாம் புது உலகை ஆக்கவல்ல சக்தி பெற்றவை. அவற்றை நல்ல குரல்கள் பக்கவாத்தியங்களுடன் பாடவேண்டும். பிடில், மிருதங்கம், வீணை, குழல், புல்புல்தாரா, சிதார் எல்லாம் இணைந்து பாட்டினிமை மாந்தருக்குப் புத்துணர்வை ஊட்ட வேண்டும். நடனாஞ்ஜலியை ஒருகுழு இனிய இசைக் கருவிளுடன் பாடி அபிநயம் பிடிக்க வேண்டும். பத்துப் பதினைந்து நடிகர் நாடகங்களை நடிக்க வேண்டும். இந்தக் கலைக்குழு ஊர்தோறும் சென்று கலைவிருந்தளித்து, பொருளும் புகழும் பெற்றுப் பொலியவேண்டும். தாகூர் தமது கலைக்குழுவால் சாந்தி நிகேதனை வளர்த்தார். குருகுலத்தில் ஓவியக் கலையும் வளர்ப்போம். இப்படி எத்தனையோ கனவுகள் என் சித்தத் திரையில் விறுவிறுப்பாகச் செல்லும்போது அந்தோ, திடீரென்று நாயகவிளக்கு அணைந்துபோகக் கண்டு திடுக்கிட்டேன். காங்கிரி, தயாளபாக், சபர்மதி, காசி இந்துக் கழகம் போன்று குருகுலத்தை விரிவாக நடத்தும் நம்பிக்கை திகைத்து நின்றது. தமிழகத்தின் பேறு இவ்வளவுதானோ— ஐயனே!

இன்று சூழ்ந்த சலசலப்பிற்கு நான் அஞ்சவில்லை. ஆனால் நமது மாசற்ற உள்ளத்தை மக்கள் அறியச் செய்தாலே குருகுலம் அமைதியாக நடக்கும். மகாத்மாவின் கட்டளைப்படியே நடக்கிறோம். நமக்குப் பிரசாரம் பலமாக வேண்டும். நமது மனச் சாட்சி குரலெடுத்து பொதுமக்களின் மனச்சாட்சியை எட்டிப் பிடிக்கவேண்டும்.

நமது சமநிலையை மக்கள் உணரச்செய்ய வேண்டும். தங்களைப் போன்ற மகானை இனி எப்போது காணமுடியும்? ஐயனே, தாங்கள் ஜாதகம் பார்த்து

அன்று சொன்ன செய்தி என் மனதைக் கலக்குகிறது. திருக்காட்சியில் நம் இருள் நிலையை விளக்கியுள்ளேன். மகாத்மாவின் சத்தியத் தவத்தாலும், உலகநிலை மாறுதலாலும், இரண்டாவது உலகப்போருக்குப்பிறகு ஒருவாறு உரிமை கிடைக்கும். அதுவும் பிரிவினையால் அல்லலுறும். இதம் பதமாக மதம்பிடித் தலையும் மனதை அடக்க வேண்டும். உரிமையைக் காக்க ஒற்றுமை வேண்டும். ஒற்றுமைக்கு உள்ளொருமை, ஆன்ம ஒருமை முக்கியம். யோகத்தால் உள் ஒருமை பெறலாம். பாரத நாடு முழுதும் மாலையில், ஆங்காங்கு பொதுப் பிரார்த்தனையுடன் பத்து நிமிஷம் தியானம் செய்தால் உள்ளொற்றுமை உண்டாகும். இது மகாத்மாவின் நம்பிக்கையுங் கூட. விஞ்ஞானத் தொழிற்பெருக்கால் அனைவரும் உழைத்துப் பிழைத்துச் செழித்தால், வறுமை ஒழியும். நல்ல கல்வியால் மடமை ஒழியும். ஒவ்வொரு பாரதனும், ஒவ்வொரு தமிழனும் வீரதீரசூரனாக, பலவானாக இருந்தால் அடிமைத்தனம் ஒழியும். வறுமை, மடமை, அடிமைத்தனம் ஒழிந்து, நாம் உழைத்துத் தழைத்து ஒற்றுமையாக வாழ்ந்தால் சிறு மனப் பூசல்கள் இன்றி அமைதி கைகூடும். ஆனால் இப்போதைக்கு இதெல்லாம் நிறைவேறுமென்று தோன்றவில்லை. ஏன்?

(1) நமது நாட்டின் தனிப்பெருமையான யோகசித்தி உறங்குகிறது. அதை எழுப்பவேண்டும். அதற்கே யோகசித்தி எழுதியுள்ளேன்.

(2) முன்னேறும் நாடுகளின் பெருமையான விஞ்ஞானக் கல்வி இங்கே பரவவில்லை. ஏராளமான தொழிற்பெருக்கம் விஞ்ஞான ரீதியில் வளம்பெற்றால் அவரவர் உழைத்துப் பிழைக்கலாம். உத்தியோகப் போட்டி நெருக்கடி ஒழியும். சாதிப் புகைச்சல் ஒழியும். அரசாங்க உத்தியோகப் போட்டியே பொறாமைக் காய்ச்சலைத் தூண்டுகிறது.

(3) நாட்டை நல்வாழ்வுக்கு எழுப்பும் பிரசாரம் பலமாக வேண்டும். ஒருமை உணர்ச்சி எல்லாருக்கும் வரவேண்டும். இதன்பால் நமது முயற்சிகளை ஊக்குவோம். மற்றவை நேரில். தாங்கள் நீடூழி வாழ்ந்து சுதந்தர பாரதத்தின் சேனாபதியாகி, வெல்வொணா வீறுபெற்ற சமுதாயத்தை உண்டாக்க வேண்டும். சுத்த சக்தி பரமாத்மன் அருளுக !

**ஒன்று வானம் ! ஒன்று பூமி**
**ஒன்று மாந்தர் கூட்டமே—எல்லாரும்**
**ஒன்றி நன்று வாழுகின்ற**
**உண்மையன்பு காட்டுவோம். ஓம் ஓம் ஓம்**

## 55. சோகக் கண்ணீர்

டாக்டர் ராஜனுக்கும், வீரவிளக்கின் நண்பர்களுக்கும்,

அந்தோ ! விளக்கு அணைந்து போனது. படக்காட்சி இருளானது. கண்ணீர் மழை பொழிகிறது. குருகுலவாழ்வு சோக நாடகமாக முடிந்ததே! கலியாண அருவியால் என்னுயிர் நண்பனுக்குக் கருமாதி நீர் இறைக்கலாயிற்றே! ஹே குருகோவிந்தா, ஹே கரிபால்டி, ஹே வீரத்திருவாளா.... இனி நான் தனி ! ஒரே நண்பரை அருவி உண்டது. என் கண்ணருவியை யார் துடைப்பார்? உலகே இருளானது. தாந்தேயின் இருள் நரகத்தில் எப்படித் வழி தடவிச் செல்வேன்! கொன்புத்ஸன் போன்ற அறிவாளி, குருகோவிந்தன் போன்ற வீரன், நெப்போலியன் போன்ற சமர்சிங்கம், கம்பக் கலாரசிகன், திருக்குறளின் உயிர்ப் பொலிவு. அந்தோ ஐயரை இழந்தேன், அனைத்தும் இழந்தேன். நானும் என் பாட்டு மூட்டையைத் தள்ளி அதே அருவியில் குதிக்கப் போனேன். நண்பர் இழுத்துவந்து இங்கே வைத்துள்ளனர். "அருவியின் அழைப்பு" சுதேசமித்திரனில் படித்திருப்பீர்கள். இளங்கொழுந்து சுபத்திரா சென்ற வாரந்தான் என் பாடல்களுக்குப் பிடில் வாசித்தாள். இறுதி நாளில் பாரத சக்தியில் உள்ள குருகோவிந்த வரலாற்றைப் பாடக் கேட்டார் ஐயர்.

"ஏங்குகின்ற காலம் ஏகி
ஏறுபோல் வீறுளோம்"

*என்ற பாட்டு அவருக்குப் பிடித்திருந்தது. பிறகு அவர் வரலாற்றையே அகவலாகப்பாடிப் பாரத சக்தியிலும் சேர்த்தேன். அதையும் ஐயர் கேட்டு, "அமரகாவியம் போல அமரனாக வாழ்க, பாரதி பாரத சக்திபோல் வாழ்க" என்று ஆசீர்வதித்தார். பிறகு பாலபாரதி அந்த மாத இதழைக்கோத்துத் தந்தேன். பார்த்து மகிழ்ந்து பைக்குள் போட்டுக்கொண்டார். சுபத்ரா முன்னால் மான் போலத்தாவினாள். ஐயர் சிங்கம் போலத் தொடர்ந்தார். அந்தோ மானும் அருவியில் விழுந்தது. இரண்டுபேரையும் அருவி உண்டு ஏப்பம் விட்டுவிட்டதே! சென்ற வாரம் நான் கீதையில் "சஞ்சலம்ஹி மன: க்ருஷ்ணா" என்று படித்தபோதே "தைரியத்தையும் சஞ்சலம் சோதிக்கிறது. சூரருக்குச் சோதனை வருகிறது. அடுத்தவாரம் எப்படியோ" என்று மௌனமாகச் சென்றார். ஐயர் தமது ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தார். கார்த்திகை நட்சத்திரம் துலாலக்கினம். இரண்டில் ராகு, எட்டில் சந்திரன் கேது. 1925 ஜுனில் விபத்து என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். 44 வயதில் அருவி எமன் அழைத்து விட்டான். பாரதமாதாவே, எங்கள் வீரச் செம்மல் உனக்கு பாரமா! அவர் உள்ளம் உனக்காகத் துடித்ததே!*

*நண்பரே, கண்ணீர் மாலைசூட்டி இனிக் கடமைக்குத் திரும்புவோம். மூலபுருஷருக்குப் பிறகு ஆசிரமங்கள் மூடுண்டு போகின்றன. அப்படி நடந்தாலும் ஒற்றுமையிருப்பதில்லை. ஐயர் கட்டளைப்படி பாலபாரதியை இயன்றமட்டும் நடத்துவேன். முடியாவிட்டால் முன்செல்வேன். ஏனெனில் ஐயர் எனக்கு இட்ட கட்டளை உள்ளது. அரிய கலைப்பணி; அதைத் தொடர்ந்து முடித்து அவர் ஆன்மாவை மகிழ்விப்பேன். ஆயிரம் நூல்களுக்கு இருவரும் திட்டமிட்டோம். அவற்றை முடித்து வெளியிட வேண்டும். குருகுலத்தை சாந்திநிகேதனம், காங்கிரி போல நடத்தலாம். அதற்கு அறிஞர் குழு உடனே தேவை. வ.வே.சு.ஐயர் மகாநாடு இங்கே கூட்டவேண்டும். அதிலே நல்ல அறிவாற்றல் செல்வாக்குள்ளவர்களைக் குழுவாகச் சேர்க்கவேண்டும். இனிக் குருகுலம் நடத்தப் பொருளாதாரம் வேண்டும். மாதம் 4000 இருந்தாலே பிரமசாரிகளை வைத்து நிர்வகிக்கலாம். ஆதலால் நாம் செய்ய வேண்டியது (1) மகாநாடு, (2) குருகுலக்குழு (3) அறிக்கைகள், (4) நாடெங்கும் சுற்றி ஐயர் பெருமையைச் சொல்லல், (5) தக்க செல்வரிடம் குருகுலநிதி வசூலித்தல், (6) கலைக்குழு நாட்டி பாட்டு, பாடகம் இவற்றால் பொருள் சேர்த்தல், (7) சிறுதொழிலகள் வளர்த்தல் (8) தொழில்முறைக் கல்வியால் மாணவரை ஆளாக்கல் இவ்வாறு திட்டம் வகுத்து மகாத்மா காந்தியடிகள், சே.சீனிவாச ஐயங்கார் முதலியோரையும் கலந்து கொண்டு முறையாகக் குருகுலத்தை நடத்த வேண்டும். தங்களைத் திருச்சியில் கண்டுபேச அடுத்த மாதம் வருவேன். நண்பரிடம் அறிவிக்கவும்.*

*அம்மாளைக் கண்டு பேசினேன். ஐயருடன் எவ்வளவோ இடர்களைப் பொறுத்த சக்தியன்னை பாக்யலக்ஷ்மி அம்மாளை குருகுலத்திலேயே வைத்துப் பெருமை செய்யவேண்டும். சிரஞ்சீவி கிருஷ்ணமூர்த்தி நல்ல அறிவாளி, தைரியவான். அப்பாவின் சாயல் கொண்டவன். அவனை நன்றாகப் படிக்கவைத்து டாக்டர் கிருஷ்ணமூர்த்தியாக்க வேண்டும். ஐயர் குடும்பத்திற்கு நாம் செய்யும் சேவை இதுவே.*

*ஐயரும் நானும் போட்ட கலைத்திட்டத்தை நிறைவேற்றவே என்னாயுள் சரியாயிருக்கும். அதற்கு மௌனத்தவமும் யோக சித்தியும் வேண்டும். சுத்த பராசக்தியின் அருளை அல்லும் பகலும் உபாசிக்கிறேன். அருள் ஒளியைத் தொடர்ந்து செல்லும் யோகப் பிரயாணியே நான். என் அடுத்த முகாம் ரமணர்*

குகை. அடுத்தது அரவிந்தர் திருவடி. அடுத்தது திருவருள் விட்டபடியே. ஞானசித்தர் குறித்த வழியே செல்லுகிறேன்.

யோகவழியோன்.

## 56. திரு. வி. கலியாணசுந்தர முதலியாருக்கு

*தமிழ் அழகர் வாழ்க !*

*காஞ்சி-மாநாட்டுக் கலகம் தமிழகத்தைப் பிரித்துவிட்டது. அங்கே அறிவுடன் செறிவுடன் வழிகாட்டிய ஒருவர் ராஜாஜியே. அவரைப் பற்றி "அனுஷ்டான சக்கரவர்த்தி" என்ற கட்டுரை சமரஸபோதினியில் வருகிறது காண்க. செருக்கை நொறுக்கி, செறிவைப் பெருக்கி, அன்பை நெருக்கி, உள்ளம் உருக்கி ஒற்றுமையை வளர்த்தால் நாடுமுன்னேறும். பிளவு பட்ட நாடு இழவு பட்டு வாடும்.*

*"அண்டபிண்ட சராசரமெல்லாம் கண்டதுண்டமாக்கிக் குடிப்பேன், பழமையை இடிப்பேன், எதிர்த்தவரை மடிப்பேன், இரத்தம் வடிப்பேன்" என்றொருவர் ஆணவச் சிகரத்திலிருந்து அலறினார். இனிவரும் தமிழகம் எப்படியாகுமோ என்று என் உள்ளம் ஏங்குகிறது. அலைமோதும் அல்லல்களைத் தலைமோதும் தலைவர்கள் எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? மேடைப்பேச்சால், அச்சில் வரும் நச்சால், அரசியல் மாறுபடுகிறது. கட்சிகள் பிரிவினைக் கலகம் செய்கின்றன. அடிமை, மடமை, வறுமை யிருளில் வாடும் மக்கள் ஒளியைத் தேடிமுன் செல்லாமல், குருட்டுச் சிலம்பம் விளையாடி, ஒருவரையொருவர் தடியெடுத்து அடித்து மானத்தை உடைக்கின்றனர். நான் ஏழைக் குப்பங்களைச் சுற்றி வந்தேன். வேலைக்குக் கூலி போதவில்லை; கூலி குடிக்குப் போகிறது. குடிலில் கவலை; குடிக்கக் கூழில்லை; கஞ்சிக்கு வெஞ்சனமில்லை; வேர்க்க வேலைசெய்து வந்து, மனைவி அரிசி வாங்கி, கல் ஆய்ந்து, சுள்ளி பொறுக்கி, தீமூட்டிக் கஞ்சி காய்ச்சுகிறாள். கணவன் கூலிப்பணத்தைக் குடித்துக் கூச்சலிட்டு பயங்கரமாக வருகிறான்; அட்டகாசம் செய்கிறான். பிள்ளைகளை அடிக்கிறான். மனைவியைத் திட்டுகிறான்; ஆட்களை மிரட்டுகிறான். நரகத்துயரில் வாழ்வு துடிக்கிறது. நாம் அரசியல் மேடையில் கட்சிச் சிலம்பம் வீசி ஏழைகளின் கண்ணீரை மறக்கிறோம். இந்த நாட்டில் வறுமை ஒழிய வளமை பொழியப் போதிய உழைப்பும் பிழைப்பும் உண்டாக்கும் உத்தமத் தொண்டனே உண்மைத் தலைவன். அத்தகைய தலைவன் எங்கே? எங்கே? தலைவர் மூளை சட்டசபையை நோக்குகிறது. தேர்தல் திருவிளையாட்டில் செல்வத்தை வாரித்தூவி ஆணவத் தம்பட்டம் அடிக்கிறது. பட்டம் பதவிக்கு மட்டமான ஆட்கள்கூட மல்லாடுகிறார்கள். காந்தியின் பெயர் வைத்து, காங்கிரஸ் வேடம் பூண்டு, தேர்தல் களியாட்டத்தில் மதிமயங்கும் மாக்கள் ஏழைக் குப்பத்தைச் சென்று காண்க! நாட்டில் ஆடைபெருக இராட்டினம் ஆடுகிறதா! அவரவர் கொல்லையில் கீரையாவது போடுகிறோமா? அந்தோ எளிமையைப் புறக்கணித்தோம். பூச்சிலும் வீச்சிலும், பேச்சிலும் ஏச்சிலும் புந்திவிட்டழிந்தோம் ! காந்தியின் சாந்த சக்தியை நாம் வளர்க்கவில்லை. அந்த எளிய, ஏழைப் பங்காளனை மனக்கோயிலில் வைத்து வணங்கவில்லை. அவரது தியாக வேள்வியில் ஆர்வங்கொள்ளவில்லை. உண்மை எங்கோ உள்ளது; நாம் எங்கோ அலைகிறோம். எதிலோ மதி மயங்குகிறோம். நாம் அன்று தொழிலாளருக்குப் பேசியது மிகப் பொருத்தம். தொழிலே நாட்டின் எழில். சோவியத் ரஷ்யா தொழிலாளரால், உழவரால் வறுமை நீங்கி வளம்பெற வாழ்கிறது. ஜப்பான் தொழில் ஆக்கத்தால் முன்னேற்ற நாடுகளின் முன்னணி வகிக்கிறது. சிறு நாடான சுசர்லாந்து தொழிலால் வளம்பெருகி, தொண்டால் ஒன்றுபட்டு, அமைதியாக முன்னேறுகிறது. ஐரோப்பாவில் வீசும் போர்ப்புயல் சுசர்லாந்தில் நுழைவதில்லை. இந்தியருக்கு நல்ல கல்வியும் உழைத்துப் பிழைக்கும் ஊக்கமும் அனைவரும் மனிதக்குழு என்ற ஒருமைப்பாடும் வேண்டும். சாதியிலே மதங்களிலே சாத்திர கோத்திரச்*

சந்தடியிலே மனதை விட்டலையாமல், சமயோக சாதனத்தால் நாடு அன்பு வீடாக வேண்டும். இதன்பால் நாம் முயல்வோமாக. நவசக்தி நவயுக-ஐக்கிய சக்தியாகுக. நவசக்திக்கு திருமந்திரத்துடன் ஒரு தொடர் கதையும் எழுதுவேன். மௌனத்திலிருந்து புதுமலர் பூக்கும்; நவசக்திக்கு அணிசெய்வேன்.

ஓம்! சுத்த சக்தி ஓம்!

## 57. மறைமலையடிகளுக்கு

தனித்தமிழ்த் தந்தைக்கு வணக்கம்.

அம்பலவாணர் வழிபாட்டுக்குப் பிறகு தங்களுடன் அளவளாவிய நாளை மறக்கமுடியாது. தங்கள் குரலில் குழலின் குழைவும், தமிழின் யாழ்-இழைவும் பயில்கின்றன. தங்கள் சிவ சிந்தனையும், தமிழார்வமும் என் உள்ளத்தை அள்ளுகின்றன. ஆற்றொழுக்குப் போன்ற தேவாரப் பாட்டொழுக்குடன் தாங்கள் அளிக்கும் சொல்விருந்தை அள்ளிப் பருகித் தமிழர் தமிழார்வங் கொண்டு முன்னேறவேண்டும். தமிழின்பத்தில் தோய்ந்த தமிழ் உள்ளத்தில் சாதிச் செருக்கிற்கு இடமிராது. மானிடயாழில் இணைத்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு தந்திகளில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வரிசைப் பண்முழக்கினால் வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்கி ஒலிக்கும். தமிழர் பேச்சிலும் நடையிலும் அப்பரின் அன்புறுதி மிளிர வேண்டும்.

தமிழர் பாட்டுக்கு எடுப்பு திருக்குறள், தொடுப்பு திருவாசகம், முடிப்பு திருமந்திரமாதல் வேண்டும். நமது நெஞ்சில் ஈரமும் வீரமும் துடிக்கவேண்டும். நமது நாவால் தமிழினப் பெருமைபேச வேண்டும். சிவக்கனல் தெறிக்கும் மாணிக்க-வுள்ளம் நம் நெஞ்சில் நீங்காது "இன்பமே என் பெரும் அன்பே" என்று துடிக்க வேண்டும். பழந்தமிழைச் சாறுபிழிந்து புதுமைத்தேன் சேர்த்து, விஞ்ஞானப் பருப்பு விரவி, கருத்துப் பால் அளாவி, ஆர்வத்தீமூட்டிக் காய்ச்சி, பண்பாடெனும் பாகாக்கி, அன்புறுதி என்னும் அச்சில் வார்த்து இன்பக்கட்டியாக்கி உலகிற்கு அளிக்கவேண்டும். அறிவின் வேள்வித் தீ மூட்டியுள்ளோம். அதில் நமது புலமை வாழ்வை நெய்யென ஊற்றுவோம். பரிவின் உருவே, அறிவின் திருவே, தமிழின் கனிவே, இல்லறத் துறவியே, முப்பொருளின் வைப்பே, ஆர்வத்துடிப்பே, வாழ்வாங்கு வாழும் வள்ளலே, மறையாப் பொதுமறைச் செம்மலே, மலரும் தமிழின் புலரும் காலைவனப்பே, தங்கள் உறவு தனிப்பெரும் பேறு! நூல் நயம் போலப் பயில்தொறும் இனிப்பது. அடுத்த ஞாயிறு காலை எட்டு மணிக்கு திரு.வி.க.வுடன் வருகிறேன். திருமந்திரம் ஏரொளிச் சக்கரம் பற்றி ஆராய்வோம்.

சீவன் சிவம் பொலிக!

## 58. மகாமகோபாத்யாயா சாமிநாத ஐயருக்கு

பெரும் பேராசிரியருக்கு வணக்கம்.

தமிழ்ப் பணியையே தவமாகக் கொண்ட தாங்கள் என் யோக சித்திக்கும், பைந்தமிழ்ச் சோலைக்கும், இன்ப மாலைக்கும் தந்த முன்னுரை என் உள்ளத்தை அள்ளியது. தங்களை என் பையற் பருவத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் பிற்காலம் சுயராஜ்யா ஆசிரியரா யிருந்த போதும் கண்டு கேட்டு களித்தது நினைவிருக்கலாம். எனது மௌனக் கனிகளை உண்டு, உவந்து, "தவம் பெற்ற தவம், கலையருவி, மலையருவி" என்று கூறினது தமிழ்த் தெய்வத்தின் ஆசியென்றே கொண்டு மகிழ்ந்தேன். இப்போது சங்க இலக்கியங்களை ஆராய்ந்த தமிழர் பண்பாட்டை வகுக்கிறேன். "அருட் புலமையை உருக்கி வார்த்த தெய்வச் சிலை, அற்புதமான புதிய கலைக்கோவில்" என்று பாரதசக்தி மகாகாவியத்தைப் பாராட்டிய தங்கள் பெருந்தன்மையை வணங்குகிறேன்.

தோழர் வ.வே.சு.ஐயர் இக்காவியம் நிறைவேற அல்லும் பகலும் என் பக்கத்திலிருந்து உதவினார். உலக மகாகாவியங்களை யெல்லாம் நாங்கள் ஆராய்ந்து கலைபிழிந்து நுகர்ந்த இன்பத்திற் கனிந்தது பாரதசக்தி. அதற்குத் தங்கள் ஆசி மாடக்கோபுரம் போல் விளங்கும். தமிழ் ஒளியே, சங்கத்தமிழின் வங்கமே, அருங்குணத் தங்கமே, தங்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், குறிஞ்சிப் பாட்டும், சங்க நூல்களும் படித்த பயனே எனது தமிழாற்றலாகும். மௌனத்தவத்திலிருந்து தங்கள் ஆன்மாவுடன் உறவு கொண்டேன். தங்கள் உழைப்பால் தமிழ் புத்துயிர் பெற்றது. இன்று நாடெல்லாம் தமிழ்த்தேன் கூடு கட்டிப் பொழிகிறது. நான் ஒரு தேன் சேர்க்கும் வண்டு. நாடெல்லாம் திருக்குறள், ஏடெல்லாம் திருமந்திரம், குரலெல்லாம் திருவாசகம், எழுத்தெல்லாம் இளங்கோ, கவியெல்லாம் கம்பனாகும் மறுமலர்ச்சி வருக. மாந்தர் நலம் பெறுக! ஓம் சிவம், சிவோகம், சிவமயம்.

## 59. பகவான் ரமண மகர்ஷிகள்

குருபகவானுக்கு ஆத்மார்ப்பணம்.

ஸ்ரீ ரமண விஜயமும், பஞ்சாமிருதமும், தண்டும் வந்தன. அங்கு இங்கு, அன்று இன்று என்னாமல், என்றும் இதய நிறைவான ஒன்றில் நின்று வேறு நினைவில்லாமல் மௌன நிட்டை நடக்கிறது. அரவிந்தர் மேலே, சுத்தானந்தம் நேர் கீழே. அவர் நடப்பது பேசுவது இங்கே கேட்கும். இங்கே இருட் குகையில் மின்வெளிச்சத்திலே பேனா ஓடுகிறது; உள்ளுணர் சக்தி ஆடுகிறது. பாரதசக்தி மீண்டும் புதுக்கி எழுதி அச்சேறப் போகிறது. அச்சுக்கூலி வந்ததும் வியப்பே! பாடல்களைத் திரைப்படங்கள் கேட்டன; பணமளித்தன; பாரதசக்திக்குப் போதும். இங்கே வருவதெல்லாம் அன்னைக்கே ஈவது வழக்கம். அன்னை அருளால் பிரெஞ்சுப் புலமை பெற்றுத் தினம் பிரெஞ்சுப் பாடல் பாடிஅரவிந்த சக்தியின்ஆசியும் வருகிறது. ஆசிரமம் எங்கும் அரவிந்த சக்தி பாய்ந்து பரவுகிறது. அன்னை அரவிந்தப் பிரசாதமான கனிரசம் அனுப்புகிறாள். அதுவே உணவு.

பகவான் பார்வையிட்ட ஞானமாலையை ஸ்ரீரமண விஜயத்தின் மறுபதிப்பிற் சேர்த்தால் நல்லது.

ஆத்மிகவுலகிற்கு பகவான் அளித்த புதுமை உதித்த இடத்தில் ஒடுங்கி நான் நானாயிருக்கும் அமைதியின்பம். ஆயிரம் நூல்கள் எழுதினாலும் படித்தாலும் அந்த ஒரு அனுபவமே அமைதியின்ப மளிக்கும். அனுபவ விளக்கில் ஏற்றப்பட்ட இந்த நான்-விளக்கு இதயத்தில் எப்போதும் பளிச்சிடுகிறது. அந்த ஒளிமயத்தில் மனப் படக்காட்சிகள் மங்கிமறைந்தன. மனம் சூனியமானது. இந்த அறையும் விரூபாட்சிகுகை போலுள்ளது. பனிரெண்டு மணிநேரம் நிட்டை, நான்கு மணி ஓய்வு, எட்டு மணிநேரம் எழுத்து. உள்ளே வழுத்தும் உண்மையின் வரிவடிவமே எழுத்து. தன்சக்தி மின்சக்தியாகி எழுதுகோலை உந்துகிறது. இயல்நிலையில் பூத்த மலர்கள் பேனாமுனையில் பொழிகின்றன. வேறு பேச்சு மூச்சில்லை. தன்னந்தனியில் தானாயிருக்கும் சுகமே சுகம். அரைமணி நேரம் மேலே சென்று தினம் பிரெஞ்சுக் கவியைக் காட்டியதும் அன்னை படிக்கிறாள். பிறகு அரைமணி தியானம்-பிரசாதம் வாங்கிக் கொண்டு கீழே வந்து நிட்டை கூடியிருப்பதே வேலை. வெளியுறவும் எழுத்துறவே. பார்க்க வேண்டிய அரிய சில அன்பர் உத்தரவு பெற்று வந்து ஜன்னல் வழியாகப் பார்த்துச் செல்வர்.

பகவானுடன் நள்ளிரவுகளில் மலையடிவாரத்தில் நடத்திய உரையாடல்களை ஆங்கிலத்தில் கோத்து வைத்துள்ளது. பிற்காலம் வெளிவரும். அன்னியமில்லா ஆன்மவுணர்வில் இன்பநீராடும் அறிவுச்சேய்.

சுத்தானந்தன்

## 60. சுவாமி நிரஞ்ஜனானந்தருக்கு

*சுவாமிகளுக்கு வணக்கம்.*

*பகவான் நோயுடலை உதறித் தூயான்மாவாக உலாவுகிறார். நேற்றிரவு ஒரு நட்சத்திரம் மேலே சென்றது. மாடியில் தியானிக்கும் போது பகவான் இந்த உள்ளத்தில் ஒளிமயமாகப் புகுந்த அனுபவம் வாய்மனம் கடந்தது. பகவான் உடல் ஓரிடத்தில்; பகவான்-உடல் எங்கும். ஒருநாள் பகவானுக்கு பல்வலி; மருந்து கொடுத்தும் கொள்ளவில்லை. "நான் பல்வலியில்லையே; நான் நானானானேன்; பல்வலி வயிற்று வலி எல்லாம் அது அதுவாக வந்து போகும். உடல் ஒரு சட்டை; அது கிழிந்து போனால் நான் சுதந்தரமாயிருக்கிறேன். இங்கே யிருப்பவருக்கு இங்கே; அங்கே யிருப்பவருக்கு அங்கே. உள்ளே யிருப்பவருக்கு உள்ளமா யிருக்கிறேன்" என்றார். பற்றுநோய் இல்லாதவருக்குப் புற்றுநோய் என் செய்யும்? அது உடலை அரித்துப் பிழிந்து தள்ளியது. பகவான் இருந்தபடி இதயந்தோறும் இருக்கிறான். இனித் தீவிரமாக பகவானைச் சிந்தித்து உள்ளே தியானித்து உய்வோமாக! ரமண சக்தி உலகெங்கும் பரவும்-ரமண சக்தி சாதனம் செய்வதே அன்பர் கடமை-மற்றவை தம்மால் நடக்கும். இனி ரமணான்ம நிலையம் உலகான்மவலயமாகும். உணர்வோம், ஒளிர்வோம். ஓம் ரமணாய நம: என்றுமுள்ள ரமண சக்தி வாழ்க !*

## 61. சுவாமி சிவானந்தருக்கு

(ஆங்கிலத்திலிருந்து)

*ஓம் சிவாய நம: தங்கள் பேரன்புக் கடிதத்திற்கு நன்றி.*

*தங்களை இங்கே மீண்டும் பார்த்தது எத்தனையோ கனவுகளைத் தூண்டியது. தெய்வநெறிக் கழகம் நாட்டியது பற்றி மகிழ்ச்சி. சுத்தானந்தம் சிவானந்தத்துடன் கலந்து சுத்த சிவானந்தமாக உலாவும். பாரதசக்தியில் சிவானந்தம் இடம் பெற்றுள்ளது. அச்சானதும் வரும். ஆசிமொழி வேண்டும். மௌனம் சில ஆண்டுகளில் நிறைவுறும். நடராஜப் பெருமான் சந்நிதியில் தங்கள்முன் ஓம் என்று குரலெடுக்க வேண்டும். இறைவன் அருளால் அந்த நாள் வருக, வரும். தாங்களும் நாட்டைச் சுற்றிவர விரும்புவதாகத் தெரிகிறது. சிவசிவசி வசி உன்னுள் நீயாக வசி இருந்தபடி இரு என்கிறது அந்தராத்மா.*

*சிவசக்தி மின்சாரத்திற் பொழியும்ஞானகங்கையை அள்ளிப் பருகித் துள்ளிக் குதிக்கிறது மௌன ஆத்மா. உரிய காலத்தில் உலகப் பணியிற் கலந்து கொள்வோம். பலநாடுகளிலிருந்து அழைப்பு வருகிறது. தாங்களும் கடல் கடந்து யோக-வேதாந்த முழக்கம் செய்யத்தூண்டுகிறீர்கள். மௌனம் நடராஜா சந்நிதியில் எப்படி முடியுமோ என்ன நடக்குமோ பார்ப்போம். ஓம்ஓம்ஓம்சிவம்.*

## 62. சுவாமி இராமதாசர்

(ஆங்கிலத்திலிருந்து)

*ஓம் ராம்!*

*ஆனந்தாசிரமத்தில் நான்கு நாட்கள் தங்கிய ஆனந்தத்தைச் சொற்களால் எப்படித் தீட்டுவேன்! அந்த அரசடியில் என்னை அணைத்துக்கொண்டு ராம்ராம் என்று தாங்கள் புன்னகை பொழிந்து அன்பு பாராட்டி, துளசி மாலை சூட்டி வரவேற்ற அருளுக்குச் சொல்லுண்டோ? கிருஷ்ணாபாய் பெண்ணுருக் கொண்ட கண்ணன் போலக் காட்சியளித்தார். அன்னையின் முகத்தில் அருள் பொழிகிறது. ஆசிரமச் சூழல் அமைதியின்பம் அளிக்கிறது. தூய்மையும் செம்மையும் எங்கும் துலங்குகின்றன. தங்களை ரமணாசிரமத்திற் கண்டு, விரூபாட்சி குகையில் வரவேற்ற போதே, எத்தனையோ இடர்களைப் பொறுத்து நாடெல்லாம் சுற்றி வந்த*

திருவடிகள் எனது தவநிலையத்திற் பட்டபோதே நாம் ஒன்றானோம். ராமநாம சக்தியால் நிகழும் அற்புதங்களைத் தங்கள் வரலாறு இந்தக் கலியுகத்திற்கு விளக்கிவிட்டது. ஆனந்தா சிரமம் இராம நாம மின்சார நிலையம். ஆயிரம் ஆயிரம் அன்பர் நாடெங்கும் ராமநாம சாதகராயினர். அந்தக் காலம் சமர்த்த குரு ராமதாஸ் ராமநாமத்தால் சக்தி பெற்று, சிவாஜிக்கு சக்தி தந்து, இந்து-சாம்ராஜ்யத்தை நாட்டினார். அவர் வாழ்ந்த ஸஜ்ஜன் காட்டில் நான் தவம் புரிந்து கண்ட சாந்தத்தை இங்கே காண்கிறேன். எனது பிறந்த நாளன்று வழக்கம்போல நான் மௌன சமாதியில் தனித்திருந்தேன். அன்று எனக்காக வழிபாடுகள் நடத்தி புதிய இனிப்புகளை ஊட்டி அன்பரைக் கூட்டித் தாங்கள் அருளிய புகழ்மொழிகளை ஆசியாகக் கொண்டேன். மறுநாள் நான் பாடிய ஆங்கிலப் பாட்டைத் தாங்கள் அச்சிட்டுப்பரப்பி அன்பரைப் பாடச் சொன்னீர்கள். அந்தப் பாட்டைப் பலர்பாடுகின்றனர். அன்று நான் இரண்டு மணி நேரம் பேசிய பேச்சின் சுருக்கத்தையும் மற்றொரு ஆங்கிலக் கவிதையையும் எனது அன்புக் காணிக்கையாக அனுப்பியுள்ளேன். "விஷன்" இதழில் அச்சிட்டால் நல்லது.

நாட்டு நிலைமையும் உலக நிலைமையும் கண்ணாரக் காண்கிறோம். கலி முற்றிப் போனது. பஞ்சமா பாதகங்கள் பல கோடி உருவெடுத்து அழிநடனமாடுகின்றன. சாதுக்களை அப்பாவிப் பூச்சிகளாக மாயமயக்கர் ஏளனம் செய்கின்றனர். படாடோப பயங்கரங்களையே மதிக்கின்றனர். இந்தக் காலத்தில் அனுபூதிபெற்ற மகான்கள் கூடி இறைவனுக்கு முறையிட வேண்டும். அந்தக் காலம் அகத்தியர், அத்திரி, வசிட்டர் முதலிய மகான்களின் தவத்தினாலும் முறையீட்டாலும் இராமன் அவதரித்து, கோதண்டத்தை ஏந்தி அபயமளித்தான்; அசுர பலங்களைக் குமைத்து அறத்தை நிலை நாட்டினான். அதே மாதிரி நாமெல்லாம் ஒரே மனதுடன், ஆத்ம நிவேதனத்துடன் ஆண்டவன் அருளைக் கூவுவோம். அவன் வருவான்; அபயந்தருவான். அறம் வாழும்; அமைதி சூழும். **ஓம் ராம்!**

## 63. சுவாமி சத்தியானந்தருக்கு

அன்புள்ளம் வாழ்க !

கோலாலம்பூர் பெடாலிங்கில் சுத்தசமாஜம் திறந்த விழாக் கோலம் என் வாழ்விற் கண்ட இன்பக் காட்சியாகும். மலாய் நாடெங்கும் தங்களுடன் சுற்றிப் பல்லாயிரக் கணக்கான மக்களுக்குச் சமயோக முழக்கம் செய்ததில் என் ஆன்மா மகிழ்ச்சி கொண்டது. சுத்தசமாஜம் ஓங்கார மந்திரத்தில் நடத்திய சமயோக சாதன வகுப்புகளும், பேச்சும், ஆசன பிராணாயாமக் காட்சியும், ஹவனமும், பஜனை பிரார்த்தனைகளும் எனது நீண்ட கனவை நிறைவேற்றின. டாக்டர் யங்கின் நட்பு மிகப் பயனுள்ளது. நூற்றுக் கணக்கான அன்பர் அங்கே என்னைப் பின்பற்றிச் சாதனம் செய்தது என் வாழ்விற்கு இன்பமளிக்கிறது. தங்கள் நிர்வாகத் திறமையும், மங்களத்தின் அணுக்கத்துணையும் சுத்தசமாஜத்திற்கு வெற்றிமேல் வெற்றி தரும். மலாய் நாடு இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவம், இந்துமதம் ஆகிய நான்கும் சேர்ந்த சமரஸப் பொழில். மேற்கும் கிழக்கும் கைகோத்து அன்பு செய்யும் ஒற்றுமைச் சாலை. மலாயாவின் அமைப்பே ஈகை மிகுந்த கை போலிருக்கிறது. அது உலக நாடுகளுடன் கைகுலுக்கி அன்பிசைக்கிறது. சீனர் அறிவாற்றல் மிக்கவர். மலாயாக்காரர் அன்பும் ஈகையும் மிக்கவர்; இங்கே வாழும் ஆங்கிலேயர் பலர் எனது நண்பராயினர். தலைவர் டெம்ப்ளார், ஜெங்கின்ஸ் முதலியோருடன் பேசி நட்புரிமை கொண்டது என் வாழ்வின் வெற்றி நாளாகும். மேற்கின் விஞ்ஞானமும், கிழக்கின் ஆத்மயோகமும் கூடி ஒரு புதிய தூய சமயோக இயக்கத்தை உண்டாக்கி, மனித சமுதாயம் ஆன்மநேய உரிமையில் வாழச் செய்யவேண்டும். அந்தப் புதிய உலக சமுதாயம் சுத்தசமாஜத்தில் உருக்கொள்ளவேண்டும் என்பது என் கனவு. அந்தக் கனவை நிறைவேற்ற

*மலாய்நாடு முன்வந்தால், நான் அங்கேயே தங்கிப் பணிபுரிய முடியும். பாங்காங்கு புத்த சங்கத்திலும் இதைப் பேசினேன்.*

*நமது ஜப்பானிய யாத்திரை மிகப்பயனுள்ளதாயிருந்தது. சோஜீஜீ மடத்தில் ஃஜென் பௌத்த சாதனம் செய்தது பெரும் பயனளித்தது. ஜப்பானியர் முன்னேற்ற ரகசியம் அங்கே விளங்கியது. ஜப்பானியர் அதிகாலை எழுந்து தியானிக்கின்றனர். ஒழுங்காக உடற்பயிற்சி செய்கின்றனர். நிரம்பக் கனியுணவு கொள்கின்றனர். நன்றாகப் படிக்கின்றனர். விஞ்ஞானத்தை வளர்த்துத் தொழில் முன்னேற்றமடைகின்றனர். நாம் கண்ட மிசிபிஷி ஹிதாஷி, ஒசாகா தீப்பெட்டி சாலை, கோபே கப்பல் தளம், கியோடா நெசவு சாலை, மோடார் தொழிற்சாலைகள், மைநிசி ஒசாகி பத்திரிகாலயம்........எல்லாம் ஜப்பானின் முன்னேற்றத் திறனையும், அறிவாற்றலையும் காட்டுகின்றன. நாரா, காமகூரா, யோக ஹாமா, தோகியோ, கியேடோ முதலிய இடங்களில் நாம் கண்ட பௌத்தாலயங்கள், திருமடங்கள், துறவிகளின் தியானம், பிரார்த்தனை எல்லாம் ஜப்பானின் சமயப் பற்றையும் ஆத்மிக முன்னேற்றத்தையும் குறிக்கின்றன. ஜப்பானியர் முன்னிலும் இப்போது நீண்டுயர்ந்து உரம்பெற்றுப் பொலிகின்றனர். இங்கேசோம்பர் இல்லை, பிச்சைப் பட்டாளம் இல்லை. ஒவ்வொரு கையும் உழைத்துப் பிழைக்கிறது. ஒவ்வொரு காலும் திண்ணென நடக்கிறது. ஒவ்வொரு மூளையும் அறிவை வளர்க்கிறது. உடலுரமும், உள்ளுரமும், ஊக்கமும், ஆக்கமும் கொண்ட ஜப்பான் போல இந்தியா முன்னேறவேண்டும். ஜப்பான், சீனம், இந்தியா, மலாயா, தாய்லாந்து, துருக்கி, அரபியா எல்லாம் சேர்ந்து ஒரே ஆசிய சங்கமாகக் கூடி நின்றால் அன்னியப் படையெடுப்பின்றித் தன்னிகரற்று ஆசியா விளங்கலாம். ஆசியக் கூட்டுறவை நாம் நிலைநாட்டி ஆற்றலோங்குவோம். ஐரோப்பாவின் தொழில் நுட்பத்துடன் நமக்குரிய யோகத் திட்பமும் பெற்று நாம் யோக விஞ்ஞானிகளாக சமயோக வீரராக விளங்குவோம். இதுவே என் வாழ்வின் ஆதர்சம். இதைப் பாரத சக்தியிலும், யோகசித்தியிலும், உலகப் பாட்டிலும் பாடியுள்ளேன். எனது யோக நூல்கள் சில இங்கே வெளியிட்டதற்கு நன்றி. சுத்தமும் சத்தியமும் கூடிக்குழைந்து சுத்தசத்திய நித்தியானுபவம் பெறுக !*

ஓம் சுத்த சக்தி ஜயசத்ய ஜோதி !
ஓம் சச்சிதானந்த பரம க்ருபாநிதி ஓம் !

## 64. புலவர் வாதநபி

(ஆங்கிலத்திலிருந்து)

*புலவர்மணி வாழ்க! ஓஹாயியோ கோசாயிமாஸ்!*

*எங்கள் ஜப்பான் யாத்திரை வெற்றிபெறத் தாங்கள் செய்த உதவிக்கு வந்தனம். டாக்டர் சூசுகியுடன் உறவு கலந்து உபநிஷத்தையும், ஃஜென் பௌத்தத்தையும் ஒப்பிட்டுப் பேசியது பெருமையளிக்கிறது. தங்கள் வீட்டிலும், இன்னும் பல ஜப்பானிய நண்பர் வீட்டிலும் தங்கி, நிப்பன் சமுதாய வாழ்வை நன்கு அறிந்து பயன்பெற்றேன். வாழ்வுக்கலையை அங்கே கற்றேன். சிக்கனமான பைன் மரவீடுகளில் கலை விளங்கும் அட்டைத் தடுக்குகளால் ஆன அறைகளில் எத்தனை ஒற்றுமையாக நீங்கள் வாழ்கிறீர்கள். வீட்டுப் பின்புறம் தோட்டம். அங்கே காகி, ஆப்பிள் கனி மரங்கள்; காரட்டும், முட்டகோசும், வெள்ளரியும் காய்த்துக் குலுங்குகின்றன. ஜப்பானியப் பெண்கள் மலர்க்கொடிபோல் அழகும், மின்சாரம் போல் காரியத்திறனும், உயர்ந்த கல்வியும், கலகலப்பாகப் பழகும் பண்பும், கணவனிடம் அளவற்ற பக்தியும் உடையவர்கள். குழந்தை வளர்ப்புக் கலையிற் சிறந்தவர்கள். ஜப்பானிய மாணவரை எத்தனையோ கல்லூரிகளிற்கண்டு வியந்தேன். அவர்கள் நாட்டுக்கே கற்கின்றனர். நாடுவாழவே அறிவாற்றலை வளர்க்கின்றனர். ஒரு விஞ்ஞான மாணவன் வீட்டிற்குச் சென்றேன். அவன் சிறிய விமானத்தைச் செய்து, பறக்கவிட்டு, என்மேல் மலர்தூவச் செய்தான்.*

மறுவாரம் அந்த விமானம் தொழில் நுட்பத்துடன் விற்பனைக்கு வந்துவிட்டது. ஷிண்டோ கோயில்களைக் கண்டேன். அங்கே பெண்கள் ஆடல் பாடலுடன் பூச்செண்டுகள் வைத்து இயற்கை வணக்கம் செய்வது அழகும் கலையும் நிரம்பியிருந்தது. ஃபூஷியாமா வெந்நீர் ஊற்றிற்குளித்து, மலையேறித் தியானம் செய்து அங்கேயே கனி யுணவு தயாரித்து உண்டு தங்கிய நாளை மறக்கமுடியாது. தோயோபெட் மோட்டார் தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கான தொழிலாளர் அமைதியாக வேலைசெய்கின்றனர். தினம் 75 கார்கள் தயாராகி விற்பனையாகின்றன. தொழிலாளர் குடில்களும், எளிய உடையும், உணவு முறையும், மதபக்தியும், கூட்டுறவும் எல்லா நாடுகளுக்கும் உதாரணமாகும். அனைத்திலும் அற்புதம் கோயில் வருமானத்தில் நடக்கும் கல்லூரிகளே. அங்கே படிக்கும் மாணவர் வீரதீர சூரர்களாக, அறிவாற்றல் பெருகி, நாட்டுக்கும் வீட்டுக்கும் நம்பிக்கையான தொண்டராக வளருகின்றனர்.

நாம் தோகியோ ஸ்டேடியத்தில் கண்ட நாடகமும், நாட்டியமும், பல திரைப்படங்களும் ஜப்பானியக் கலைவளத்தைக் காட்டுகின்றன. ஜப்பானுக்கு மறுமுறை வருவேன். நாடெங்கும் சுற்றிப்பார்த்துப் பயன் பெறுவேன். இதோ நண்பர் யூனோஸாகியின் அழைப்பும் வந்தது. ஜப்பான் அமைப்பு கிமனோ அணிந்த அழகிய இளம்பெண் விருந்தளிப்பதுபோல் உள்ளது. சுற்றிலும் உள்ள சிறுசிறு தீவுகள் விருந்துத் தட்டுகள்போல் அமைந்துள்ளன. உள்ளே புகுந்தாலும் அழகின் விருந்து நம்மை மனங்குளிர அழைக்கிறது. நண்பரே மீண்டும் காண்போம். ஸயோநரா, நன்றி!

## 65. இலங்கு சந்திரன்

இலங்கைச் சந்திரன் பொலிக!

நான் ஜப்பான் செல்லும்போதும் திரும்பும்போதும் இலங்கையிற் சுற்றுலா செய்தேன். அதற்குப் பச்சைக்கொடி காட்டி ஊருக்கு ஊர் நடத்திய தங்களுக்கு மிக்க நன்றி. கொழும்பில் சேனநாயகா, பண்டார நாயகா, தக நாயகா முதலிய அமைச்சரைக் கண்டு பேசத் துணை செய்தும் நகர மரியாதைக் கூட்டம் போட்டும் சிறப்பித்த மாண்புறு கந்தையா வைத்தியநாதரை என்றும் மறவேன். கண்டியில் புத்தர் பல் தரிசனம் கண்டது மகிழ்ச்சி அளித்தது. ஒரு மகானின் பல் நகத்திற்குக் கூடப் பொன்-மணி அணி செய்து அவ்வளவு சிறப்பாகத் திருவிழாக் கொண்டாடும் புத்தர்களின் பக்தியைப் போற்றுகிறேன். பெரதேனியா பல்கலைக் கழகத்தில் மாணவருடன் பேசிய பிறகு, மலைக்குச் சென்று கோவிலுக்கு அடிப்போட்டது பெரிய காரியம். கண்டியிலும் அனுராதா புரத்திலும் புத்த பிக்ஷுக்கள் செய்த மரியாதையும் அந்த போதி மரத்தடியில் தியானித்ததும் என்றும் மறவாக் காட்சி. கதிர்காமக் கோவிலுள் இரவு தவமிருந்து கதிர்காம மாலை பாடியதும் அதைத் தாங்கள் அச்சிட்டு நாடெங்கும் பரப்பியதும் முருகன் செயல். இலங்கை அழகும் அருளும் செழிப்பும் நிரம்பிய மரகதத்தீவு. மாவலிகங்கைக் கரையில் ஓர் ஆசிரமம் அமைத்து ஆயுளெல்லாம் தவம்புரிய என் உள்ளம் விழைகிறது. கண்டிமலை மேல், ஹஹா எவ்வளவு அமைதியின்பம்! ஆத்மஜோதி முத்தையா, கிருஷ்ண பிள்ளை முதலிய அரிய அன்பரை இலங்கையிலே தான் கண்டேன். நான் உலகம் முழுதும் சுற்றினேன். எத்தனையோ அறிஞரைக் கண்டு பயன்பெற்றேன். இலங்கை எனக்களித்த வரவேற்பும், மரியாதையும் யாங்கும் காணிலேன். இவ்வளவு அமைதியான இயற்கையழகை ஜப்பானிலும், சுசர்லாந்திலுமே கண்டேன்.

அன்புத் தங்கமே, தங்கள் வீடு அருட்கோவிலாகக் காட்சி யளித்தது. மனித சமுதாய ஒற்றுமைக்கு நாம் சமயோகத்தொண்டு பரப்புவோம். ஆன்மநேயவுரிமையில் அனைவரும் கூடிவாழப் பாடுபடுவோம். இலங்கை

இதயம் போலும். அதில் நான்கு அறைகள் போலும் பௌத்த, கிறிஸ்து, இந்து, இஸ்லாம் சமயங்கள். அன்பும் அருட்பணியும் இந்நான்கிற்கும் பொது. உள்ளே அன்பும், அந்த அன்பை விளக்கும் ஆருயிர்ப்பணியும் இருந்தால் எல்லாரும் சேர்ந்து வாழலாம். ஐன்ஸ்டன் மூளையில் காந்தியுள்ளம் துடிக்க வேண்டும். மேற்கின் சயன்ஸில் கிழக்கின் யோகவேதாந்தம் உருக் கொள்ளவேண்டும். விஞ்ஞான மூளையும் ஆத்மஞான உள்ளமும் கூடிக்குழைந்தால், குண்டுவெறி குறைந்து மறையும். மாநாடுகள் ஒருமை தரவில்லை; மாகாடுகளில் மகரிஷிகள் கண்ட ஆத்ம மின்சாரத்தை விஞ்ஞான விளக்குகளில் பாய்ச்சினாலே அமைதி யின்பச் சுடரைக் காண்போம். பல்பில் ஓட்டையிருந்தால் சுடர் பொலியாது. மனம் ஐம்புலன்கள் வழியே தாவி ஓடினால் ஆன்ம ஒளி ஒளிராது. மனம் குவிந்து இதயத்தில் ஆழ்ந்து இதயம் ஆன்மாவில் லயித்தாலே அருள் ஒளிரும். அந்த அருள் ஒளியை தியான அமைதியில் பெற்றுப் புனிதராவோமாக!

ஓம் ஓம் ஓம்

## 66. அன்புச் சிற்பி

யாழூர் அன்புச் சிற்பி வாழ்க!

தங்கள் அன்பும் பண்பும் உள்ளத்தை அள்ளுகின்றன. தங்கள் மாளிகை கோயிலை விட அமைதியளித்தது. எங்கும் முருகன், நடராசர், கண்ணன். சுத்தானந்த சிவத்தின் அருள் விளையாடலைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். தங்கள் நடராஜ பக்தி பொலிக. நான் உங்களில் ஒருவன் ஆனேன். அந்த அமைதியான மாடியறையில் எத்தனை பாடல்கள் எழுந்தன. தெய்வநெறிக்கழகத்தில் இரண்டு நாள் வேள்வியும் பாடலும் இன்பமளித்தன.

இலங்கை முழுதும் சுற்றி அருட்பணிசெய்து நூற்றுக் கணக்கான கூட்டங்களிற் பேசத் தாங்கள் உந்து வண்டியுடன் கூட வந்துதவியதற்கு நன்றி என்றும் நிலவும். நமக்கு அரிய தொண்டு செய்த சேவாசிங்கம் ராஜனுக்கு நன்றி. கனக நாயனாருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

எல்லாரும் வாழ்க !

## 67. கனக நாயனார்

அன்புத் தங்கமே பால்வெண்செல்வமே!

தங்கள் சிவநேசமும், தமிழ்ப் பாசமும், அடியார் அன்பும், இறைவனிடம் பக்தியும், தூய வாழ்வும், திருத்தொண்டும் உள்ளத்தை அள்ளுகின்றன. தங்கள் தொழிற்சாலை வளம் பெறுக. துணிச்சவற்காரத்துடன், உடலுக்கு தேய்க்கும் சோப்பும் எளிதாகச் செய்யலாம். வேப்ப இலைச்சாறு அல்லது இலை உலர்த்தி மாவு போல இடித்தபொடி, வேப்பெண்ணைய் கூட்டி வேப்பம் சோப்புச் செய்து உடலுக்குத் தேய்க்கலாம். அதே மாதிரி ஆவாரந்தூளையும் சேர்த்து டாய்லெட் சோப்பும் செய்யலாம்.

தொழிலிற் வந்த பணத்தை சிவத் தொண்டில் உய்க்கும் தங்கள் அருட்பணித்திறன் அற்புதமானது. எனது நூல்களை வெளியிட்டுப் பரப்பிய பண்பை நன்றியுடன் நினைக்கிறேன். யோக சித்தியே என் அனுபவம், அதுவே சமயோக சாத்திரம். வாழ்வின் எல்லா பகுதிகளும் நிறைவுபெற அது வழிகாட்டுகிறது. இந்த ஆண்டு "இரண்டாயிரம் மணிமொழிகள், முருகன் வழிபாடு, மந்திர மாலை, யோக ரகசியம்" முதலியன வெளிவரவேண்டும். தாங்கள் திருத்தலங்களுக்குச் சென்று மகேசுரபூசை செய்வது நல்லது. அப்படியே அருளறிவு நூல்களைப் பரப்புவதும் நன்று. மணி மொழிகளைச் சிங்களத்தலும் வெளியிடவேண்டும். பெட்டி வீணையில் வெவ்வேறு மெட்டுக்கள் உள்ளன. அவை பாட்டுப் புலவன் வாசிக்கும்போது கூடிக்குழைந்து

இன்னிசையளிக்கின்றன. அதுபோலவே இந்து, பௌத்த, கிறிஸ்து, இஸ்லாமிய, சமண, ஜரதுட்டிய, சீக்கிய சமயங்கள் தனித்தனிக் கிரியைகளைக் கொண்டது. ஆனால் எல்லாம் தியானமௌனத்தில் ஒன்று கூடும். மனதைச் சுற்றியலையாமல் உள்ளடக்கி, உள்ளுணர்வுடன் பார்த்தால் அனைத்தும் ஒரே சுத்தான்ம சைதன்யத்தில் ஒன்றாகும். அந்த ஒருமையுடன் பழகினால் தன்னுயிரே மன்னுயிர், மன்னுயிரே தன்னுயிர் என்ற சமயோகத்தை அறியலாம். அதனால் சாதிமத, சாத்திர கோத்திர வேறுபாடில்லாமல் எல்லாரும் சேர்ந்து வாழலாம், உலகக் கோயிலில் உள்ளுணர் சோதியை அன்பினால் வழிபட்டால், அந்த அன்பு அருளாகக் கனிந்து அறிவமுதம் அளிக்கும். இதுவே சமயோக சாதனமாகும். இதுவே என் வாழ்வின் அனுபவம். இதை அச்சிலும் மேடையிலும், தியான மௌனத்திலும் பரப்புதலே எனது அருட்பணியாகும். இப்பணி நலத்திற்குத் தாங்கள் செய்யும் துணை பெரிது. அந்தக்கால நாயன்மார் சிவனை அன்பு செய்து சிவபக்தருக்கு அமுது செய்தனர். தாங்கள் இறைவனை வழிபட்டு, இறையன்பருக்குத் தொண்டு செய்து ஆலய வழிபாடும் அடியார்க்கு அமுதளித்தலும் விரதமாகக் கொண்டீர். தங்களைக் கனக நாயனார் எனத்தகும்.

அம்மாள் காலுக்கும் இடுப்புப் பிடிப்புக்கும் இவ்வாறு சிகிச்சை செய்க. சிறு துண்டணிந்து மாலை 4 மணி வெயிலில் பாய்விரித்துப் படுக்கவேண்டும். அரைமணி நேரம் வேர்க்க வேர்க்கக் கதிர் ஆடியபிறகு, ஒரு தொட்டியில் நீர் நிரப்பி மல்லாந்து படுத்து ஒரு ஈரத்துணியால் உடம்பை உருவி ஒவ்வொரு அங்கத்தையும், அடிவயிற்றையும் தேய்த்துக் குளிக்கவேண்டும். இரவில் நில ஆவாரை, வாதநாராயணன், வேப்பிலைகள், ஒவ்வொரு பிடி அரைத்து, அத்துடன் ஒரு கரண்டி கடுகும் சிறிது சுக்கும் மஞ்சளும் அரைத்துச் சேர்த்து நெருப்பில் சூடாக்கி, இடுப்பிலும் காலிலும் நன்றாக உருவித் தேய்க்க வேண்டும். பிறகு உறங்கலாம். காலை தொட்டியில் படுத்து, தேய்த்துக் குளிக்கலாம். இதனால் நலங்காணும்.

உடல் சிவன்கோயில், உள்ளம் சிவன் கருவறை; சீவன் சிவன் இருக்கை..... இதை எப்போதும் கருது.

மாணிக்கவாசகர் கதைப் பதிவு நன்று. இங்கே 25 கதைகள் பதிவு செய்கிறேன். மறுமுறை இலங்கை வரும்போது கொணர்வேன்.

நடராஜா அழகாக வருகிறது. கோயிலும் எழுப்புவோம். ஆயுளெல்லாம் பாடுவோம், ஆடுவோம், அன்பு கூடுவோம், **ஓம் சிவம்.**

## 68. விஞ்ஞானி தோடஸ்கினி

(பிரெஞ்சிலிருந்து தமிழ்)

அருமை நண்பர் தோடஸ்கினி வாழ்க !

தங்கள் நட்புக் கிடைத்தற்கு இறைவனைப் பணிந்து மகிழ்கிறேன். இத்தாலியிலும் ஜெனிவாவிலும் தாங்கள் எனக்குச் செய்த உதவிகளை மறக்க முடியாது. வாடிகனில் போப்பைப் பார்த்துப் பேசியதும் ஃப்ரான்ஸிஸ் முனிவர் தவமிருந்த மலைக் குகையில் தியானம் செய்ததும் என் வாழ்வின் பொன்னாட்கள்; எத்தனையோ மேடைகளில் நாம் பேசினோம். ரூ-த-ஃபோந்தில் கீதாமார்கிரெட்டின் விருந்தாளியாயிருந்தோம். லேக் லெமோனில் படகூர்ந்து லூஸான், வில்தநௌ முதலிய இடங்களில் அன்பரைக் கலந்து பேசினோம். தாங்கள் எனது சமயோகத்தைப் போற்றிப் பயிற்சி முகாமிற்கு வந்தீர்கள். எனது Gospel Of Perfect Life தங்களால் எத்தனையோ ஐரொப்பிய நண்பருக்கு அறிமுகமானது. நான் உலகைச்சுற்றி எல்லாத் தலைநகர்களுக்கும் சென்றேன். லண்டன், பாரிஸ், ஆஸ்லோ, வார்ஸா, பெர்லின், கோனிங்ஸ், பெர்கு, ஃப்ராங்க்

ஃபோர்ட், மாஸ்கோ, லெனின்கிராடு, ரீகா, ஹெல்ஸின்கி, கலிஃபோர்னியா, நியுயார்க், கூபெக் ஆகிய எத்தனையோ நகரங்கள் என்முன் நிற்கின்றன. ஆயினும் ராவென்னாவில் தாந்தே சமாதியில் அமர்ந்து அந்த மகாகவியின் அமர காவியத்தைக் கேட்டு அங்கே தியானித்த இன்பம் பேரின்பமே. தாந்தேயின் பாரடைஸ் என் கவியுள்ளத்தில் தோய்ந்து இன்பமயமாகச் சுழல்கிறது. தாந்தேமுழுதும் நான் தமிழாக்கியுள்ளேன். இத்தாலியின் அழகும் கலையும் மக்களின் அன்பாதரவும், கனியுணவும் காவியமாக இனிக்கின்றன. தாந்தேயும், விர்ழிலும் எனக்கு ஆவேசமளிக்கின்றனர்.

சென்ற வாரம் தீனா அல்லியாடா, கார்லோ அலியாடா, கார்லோ அல்பெர்மீ, கால்வி முதலியோர் யோகசமாஜத்திற்கு வந்தனர். அவர்களுக்கு யோக ரகசியத்தைக் காட்டினேன். யோகசக்தி நோய்தெறும் வகையை விளக்கினேன். அவர்களுக்கு யோகசக்தியை எப்படி உடலிற் பாய்ச்சுவது என்பதைக் காட்டினேன். அவர்கள் தங்கள் கடிதத்துடன் வந்து, தங்களைப் பற்றி உற்சாகமாகப் பேசினர். உடனே எனது நூல்களையும், அன்புக் கடிதத்தையும் தங்களுக்கு அனுப்பினேன். தாங்கள் உடனே அவற்றை அங்கீகரித்துத் தங்கள் அரிய விஞ்ஞான நூலையும் அனுப்பினீர்கள். அந்த நூல் மிகப்பயனானது. இங்கே உயர்ந்த விஞ்ஞான மாணவர் (M.Sc) படிக்கின்றனர். அவர்களுக்குத் தங்கள் பெயரை அறிமுகப்படுத்தி, நூலையும் அளித்தேன்-மகிழ்ந்தனர். தங்களுக்கு நோபல் வெகுமதிதகும். Gospel Of Perfect Life மூன்றாம் பதிப்பில் தங்கள் படத்தைப் போட்டுக் குறிப்பெழுதினேன். நூல் தங்களுக்கு விரைவில் வரும். யோகமும் விஞ்ஞானமும் சேர்ந்தாலே உலகில் போர் ஒழிந்து அமைதி நிலவும் என்பது என் அழுத்தமான நம்பிக்கை. எனது யோக நூல்களைப் படித்து வாருங்கள். இத்தாலியில் மொழி பெயர்த்து வெளியிட்டு உதவுங்கள். அறிவு பரவுக, அறிஞர் பொலிக, அன்பு தழைத் தோங்குக. அருள் விளங்குக !

ஓம்—ஆமன்

## 69. மிர்ஃஜாகெம்பே

(ஆங்கிலத்திலிருந்து)

சகோதரி கெம்பே, தாஷ்கெண்டிலிருந்து எழுதுகிறேன்.

எஸ்தோனியா தலைநகர் தாலினில் நாளெல்லாம் இயற்கையின் அழகையும், அறிஞர் கலைவிருந்தையும் அள்ளிப் பருகி மனங்குளிர்ந்து, கடல் அலைகள் அகண்ட மங்களகீதம் ஆர்க்கும் ரீகாவுக்கு வந்தோம். தங்கள் புன்னகையும், அன்பகமும் எங்களை வரவேற்றன. தாலினில் ஸ்மூலின் கவிதைகளைப் பருகினோம். அவர் மீன்பிடிக்கிறவராயிருந்து, கடலின் ஆவேச கீதத்தைப் பாடத்தொடங்கி, இன்று மகாகவியாக விளங்குகிறார். லித்வேனியா தலைநகரான இந்த ஊரில் எனக்குப் பல நண்பர்கள் உண்டு. ஹாரிடிக்மென் என்னை நன்கு அறிந்தவர். அவர் எனது நூல்களை ஆராய்ந்தவர். அவரே தங்களைப் பற்றி எனக்குச் சொன்னார். தாங்களும் அவர்மூலம் என்னை அறிந்தீர். என் கவிதைகளைத் தாங்கள் லிட்வியத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டது பற்றி மகிழ்ச்சி.

இங்கே பால்டிக் சமுத்திரத்தில் படகூர்ந்ததும், கூட்டுப் பண்ணை, மீன் பண்ணை, பிளாஸ்டிக் தொழிற்சாலை, கலா நிலையங்கள், படக்காட்சிகள் எல்லாம் கண்டோம். அனைத்திற்கும் சிகரம் தாங்கள் எழுத்தாளரையும், புலவர்களையும் கூட்டி எங்களுக்கு அளித்த செவிவிருந்தும் நாவிருந்துமாகும். லிட்வியக் கவிகளும், கதைகளும் அளித்த செவிவிருந்தை மறவோம். தங்கள் கவிதைகள் கனிரசம்போல் இனித்தன. நாம் கவிதையிலேயே பேசிக்கொண்டோம். நான் பாடும்போது கிராஷெங்கோ படமெழுதிவிட்டார்.

*கலைவளம் இங்கே பொங்கி வழிகிறது! நாடெங்கும் புதுமைத்துடிப்பும், மறுமலர்ச்சியும் காண்கிறோம். பழைய தீமை மறைந்துபோனது. மனிதான்மா கட்டும் கவலையுமின்றி எல்லா ஆன்மாக்களுடனும் சுதந்தர வெளியில் கைகோர்த்து உலாவுகிறது. பழைய வகுப்புவாதம், நாடு நிறபேதங்களைப் புதுமின்கனல் சுட்டெரித்து எல்லாரும் எல்லாருக்கும் இன்புற வாழத் துடிக்கிறது. இரண்டு உலகப் போர்களில் பட்டபாட்டினால் மக்கள் இனிப்போரே வேண்டாம் என்கின்றனர். லித்வியா உலக அமைதிக்காக முன்னணியிலிருந்து பாடுபடுகிறது. ஆனால் போரின் வேர் மனதில் உள்ளது. மனப்போர் இனப்போராகி, சினப் போராகி உலகை இரத்தகள மாக்குகிறது. இந்த இரத்தகளத்தைப் பசும் பொலிவாக்கி அமைதி நாட்ட முயல்கிறது எழுத்தாளர் உள்ளம். நான் சென்ற தடவை ரஷ்யாவுக்கு வந்தபோது அரசியல் தலைவர்களையும் கண்டேன். இந்தத் தடவை பொதுமக்களுடனும் கூட்டுப் பண்ணைத் தொழிலாளர்களுடனும், கவிகளுடனும், எழுத்தாளருடனும் நட்புரிமைகொண்டு மகிழ்ந்தேன்.*

*சகோதரியே, உடலை நான் நோயின்றி வைத்துக்கொள்வதன் இரகசியம் கேட்டீர். யோகம்-இதுதான். உடல் மன நலந்தருவது. தங்கள் நரம்பு நோய்க்கு நான் காட்டிய நான்கு ஆசனங்கள், கதிர் முழுக்கு, தொட்டி முழுக்கு, கனியுணவு-இவையே மருந்து. எனது யோக நூல்கள் தங்களுக்கு வழிகாட்டும். எனது நூல்கள் தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். எழுத்தால் அடிக்கடி சந்திப்போம். எல்சின்கி சென்று ஹாம்லெட் பார்த்து, அப்படியே லண்டனுக்குக் கப்பல் ஊர்ந்தால் நல்லது என்று நினைத்தேன். நோவோஸ்டிபெனுக்கும், பரோவிக்கும் டாஷ்கெண்டிற்கு விமானமேற்றினர்! அதுவும் நலமே. இங்கு அரிய நண்பர் வந்தனர். நமது படமும் பாட்டும் பத்திரிகையில் வந்தது பற்றி மகிழ்ச்சி.*

*இங்கே பொருளாதாரம் உள்ளது; அருளாதாரம் வேண்டும். வெளியழகுள்ளது; உள்ளழகு வேண்டும். விஞ்ஞான அற்புதம் உள்ளது; ஆத்மஞானாநந்தம் வேண்டும். போகம் உண்டு; யோகம் வேண்டும். இரண்டுங்கூடி அமைதியின்பம் வளர்க-அன்பு.*

## 70. சுவாமி ஓங்கார்

(ஆங்கிலத்திலிருந்து)

*அன்புமயமே.*

*தங்கள் அழைப்பிற்கு நன்றி. தோடபள்ளியின் சாந்தானந்தத்தைப் பலமுறை அள்ளிப் பருகினேன். சாந்தகுகையிலேதான் என்னுள்ளம் இன்னும் இருக்கிறது. தங்கள் அமைதியும், அன்பும், பரிவும், உபசாரமும், மௌன இயல்பும் என்னைக் கவர்ந்தன. பாடியபடி இருவரும் உள்ளத்தில் கூடி ஒன்றானோம். சாந்தி ஆசிரமத்தை உலகக் கழகமாக(World University) வளர்க்கத்தகும். அதற்கு வேண்டிய ஆக்கவேலைகள் என்னுள்ளத்தில் எழுந்தன. நான் ஒருமுறை அமெரிக்கா சென்று வரவேண்டும். மேற்கும், கிழக்கும் இணைந்த, யோகமும் விஞ்ஞானமும் கூடிய ஒரு புதுவாழ்வை இங்கே நாட்டுவோம். உலகின் அறிவுச் செல்வத்தைக் கூட்டுவோம். இதுதான் புனித வாழ்வு எனக் காட்டுவோம். இந்த ஆண்டு மௌனத்தில் ஆழ்ந்து என் வாழ்வின் பணிகளை நிறைவேற்றவேண்டும். ஆதலால் இந்த தியானத் தனிமையிலிருந்தே ஆண்டவன் எனக்கீந்த பணியை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளேன். அடுத்த ஆண்டு அவசியம் அங்கே வந்து அருட்பணி புரிவேன். தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் பாவிருந்தளிப்பேன். ஓம் சுத்த சக்தி ஓம். சாந்தி-ஞானா-சேனாவுக்கு அன்பு.*

## 71. மேஹர் பாபா

*ஜயபாபா ! ஓம்.*

*பாபா அருளால் உலக யாத்திரை முடிந்தது. ஐந்து கண்டங்களிலும் சுற்றி மக்கள் இயல்பையும் உலகப் போக்கையும் கண்டேன். எத்தனையோ*

*ஆபராக்களையும், நாடகங்களையும் படக்காட்சிகளையும் கண்டேன். ஆனால் திரையிலும் மேடையிலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் காணமுடியாத உலகியல்பை நேரே கண்டேன். பழைய நாடகங்களைப் பார்த்தானது. உலகநிலை புதிய நாடகத்தைத் தூண்டுகிறது. அமெரிக்கா செழித்துக் கொட்டுகிறது. உணவுடைக்குப் பஞ்சம் இல்லை. ஆனால் பத்து நிமிஷம் மின்விளக்கணைந்தால் பயங்கரக் கொடுமைகள் எத்தனையோ நடக்கின்றன. கெனடியையும், மார்டின் கிங்கையும் சுடும் கடுநெஞ்சம் அங்கே உள்ளது. அமெரிக்காவிலும் சோவியத் ரஷ்யாவிலும் விஞ்ஞானம் விண்ணையும் வெல்லப்பறக்கிறது. காற்றும் நீரும் இல்லாத சந்திர மண்டலத்தில் இறங்கி நடந்து பாறைகளைக் கொண்டு வருகிறது. பில்லியனாக டாலர்கள் வான்வெளியிற் புகைந்து போகின்றன. நிமிஷத்திற்குச் சுமார் 6.93 மைல் பறந்து இரண்டே நாளில் சந்திரனை அடையும் திறமையுள்ள விஞ்ஞானி ஒரு மணிநேரம் உள்ளடங்கியிருந்து நான் நான் எனத்துள்ளும் ஆன்மாவை உணர்ந்தால், தன்னுள் உள்ள ஆன்மாவே அனைவர் உள்ளத்திலும் துடிப்பதை அறிந்தால், உலகில் உடனே ஆத்மீக விழிப்பு உண்டாகும். விஞ்ஞானத்தால் வாழ்வை எளிதாக்கி, ஆத்ம ஞானத்தால் தெய்வீகம் பெறலாம் மனிதன். அப்போது உலகமே புதுமைபெறும். மேற்கிலும் கிழக்கிலும், ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வைப் பார்த்தேன். எங்கும் பரபரப்பு, படபடப்பு, சலசலப்பு; மாரிகாலத்தில் கணப்பிற்காக என்ன பாடுபடுகின்றனர்! உண்ண, உடுக்க, இருக்க, படிக்க, உழைக்க, பிழைக்க எவ்வளவு கஷ்டம்? இந்தியாவே சிக்கன நாடு; இங்கே இரண்டுரூபா இருந்தால் ஒரு நாளைக்குப் போதும். அங்கே ஐம்பது ரூபா இருந்தாலே மானமாகப் பிழைக்கலாம். ஐரோப்பியருக்கு கூர்ந்த மூளையுள்ளது. இயற்கையைத் துருவித் துருவிப் புதுமை காணும் புலமையுள்ளது. வானளாவிய சலவைக்கல் மாளிகைகள், அறிவும் திருவும் கலையும் விளங்கும் பெரிய பெரிய பல்கலைக்கழகங்கள் ஊசிமுதல் ஸ்புட்னிக் வரையில் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் மனத்தில் அமைதியில்லை. இரவில் குடித்துக் குதித்து மகிழ்கிறார்கள்; காலையில் சோர்ந்து அயர்கிறார்கள். அவர்கள் ஆத்மிகத் துறையில் பாடுபட்டால், அதிமனிதராவார், அசகாயர் ஆவார். மூளை அபாரம். உள்ளம் வேண்டும்.*

*பாபா, இவர்களுக்கு ஆத்மமின்சாரம் பாய்ச்சிப் புதிய விழிப்பைத் தரவேண்டும்.*

*பூனாவில் மேற்கும் கிழக்கும் பாபா முன்னிலையில் எவ்வளவு அமைதியாக, மௌனமாக அமர்ந்திருந்தது! மணிக் கணக்கில் பரமசந்தானத்தை அந்தச் சபை அனுபவித்தது. மேகராபாதில் நடந்த சஹவாசத்தில் எவ்வளவு நிம்மதி நிலவியது! பாபா இருக்குமிடமெல்லாம் பிருந்தாவனமே.*

*பாபா இந்த மாதிரியே நியூயார்க்கு, சிகாகோ, கலிபோர்னியா, கூபெக், தோகியோ, பீகிங், காண்டன், ஹாங்காங், சைகோன், பாங்காக், சிங்கப்பூர், கோலாலம்பூர், இரங்கோன், கொழும்பு, கைரோ, ரோம், ஜெனீவா, ஃஜுரிச், பெர்லின், ஃபராங்க்ஃபோர்டு, பாரிஸ், லண்டன், ஆஸ்லோ, ரீகா, லெனின் கிராடு, மாஸ்கோ, ஸிட்னி முதலிய உலக நகரங்களில் எல்லாம் சஹவாசம் வைத்து மக்களுக்கு, உள்விழிப்பைத் தூண்டவேண்டும். பாபாவுடன் பிரயாணம் செய்ய நான் தயார். பாபா முன்பே என்னுடன் அமெரிக்கா வா, ஐரோப்பா வா, என்று கையைப் பிடித்து டேராடூன் கிசன்சிங் மாளிகையில் உறுதி வாங்கியது நினைவிருக்கும். அப்போது நான் சிவானந்த ஆசிரமத்திற்கூடிய சர்வமத மகாநாட்டில் தலைமையுரை முழக்கி வந்தேன். பாபா என்னை அணைத்து உலகம் முழுதும் உன் குரல் ஒலிக்கட்டும் என்றருளியது நினைவிருக்கும். அமெரிக்க அன்பருக்குப் பேசச் சொல்லி என்னை அங்கே அனுப்பச் செய்த அன்பு நினைவிருக்கும்.*

*பாபா, பாபா, என்னை அறிந்தேன்; என்னுள்ளப் பெருமானை அறிந்தேன்; மனித சமுதாயத்தை அறிந்தேன், என் வாழ்வின் பணியான ஆன்மவிழிப்புறுத்தலை அறிந்தேன். அதற்குத் தகுந்த வாய்ப்பைத் தந்து என் வாழ்வு பயனுறச் செய்ய வேண்டுகிறேன். பத்து ஏகர் நதிக்கரை நிலத்தில் பிரேம ஸமாஜம் கண்டு ஆக்கவேலை செய்வோம்.*

*பாபா அவதரித்த இந்தியாவின் நிலைமை கவலைக் கிடமாகவேயுள்ளது. பிளவுபட்ட இந்தியா களவுபட்ட வீடானது. வறுமை வறட்டுகிறது. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. பசும் புரட்சி வந்து மழை வரட்சி. உணவுப் பயிர் விளையக்கூடிய நிலங்களில் ஏராளமாகப் புகையிலை, தேயிலை, காப்பி, கரும்பு, அவுரி போடுகின்றனர். காசுக்குக் கருணையில்லை. அரசியலில் அமைதியில்லை, ஒற்றுமையில்லை. இந்த நாட்டை முதலில் ஒன்றாக்கி, நன்றாக்கவேண்டும். தீவிரமான ஆத்மசக்தியாலேதான் இது இயலும். பாபா அருள் வேண்டும்.*

*பாரதசக்தி மகாகாவியத்தை ஆசீர்வதித்துத் தந்தியடித்தது ஆறுதல் அளித்தது. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவது அடுத்தவேலை. இதற்கெல்லாம் உள்ளடங்கிய மௌனம் வேண்டும். மனம் புறஞ்சென்றால் புயல்; அகஞ் சென்றால் செயல். இதற்காகவே 1917 முதல் நான் மௌனமாகவே யிருக்கிறேன். அவசியம் நேர்ந்தால், பக்குவமான அன்பர் வந்தால், அரைமணி நேரம் பேசுவேன். அதுவும் வாரம் இரண்டொரு நாளே. ஆண்டுகள் தொடர்ந்து அகண்ட மௌனநிட்டை காத்தபோதே, 1000 அரிய நூல்களை எழுதினேன். இப்போதும் அதே மௌன நிலையிலேதான் இருக்கிறேன். பாபாவுள்ளம் எல்லாம் அறியும். எழுதாமல், பேசாமல், இதயம் இதயத்தை அறியும். அந்த அறிவு பொலிக !*

வாழ்க மௌனசக்தி !

## 72. சுவாமி சிதானந்தர்

*சுவாமிஜியின் அன்புரையும் முன்னுரையும் கிடைத்தன. மிக்க நன்றி. சிவானந்த நகரில் தங்கி தியானமும் எழுத்துமாயிருந்த நாளை மறக்க முடியாது. சிவானந்தர் இன்னும் ஜீவானந்தரா யிருக்கிறார். கங்கையில் ஓடுகிறார். இமாலயத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். ஆசிரமம் வளம்பெற வளர்ந்து கிளர்ந்து மலர்ந்து கனிந்து யோக வேதாந்தரசம் பொழிகிறது. சிவானந்த விஜயம் சமாதியில் நிவேதனமானது மிக்க மகிழ்ச்சி யளித்தது. குருதேவர் மிகவிரும்பிய பாரத சக்தி ஆங்கிலமும் வெளிவந்து காணிக்கையாக வேண்டும். நேற்று மலைமேல் வெகுதூரம் ஏறி ஒரு பாறை மீது தியானித்தபோது சிவானந்தரின் சைதன்யரூபம் காட்சியளித்தது. மகாநாட்டிற்கெல்லாம் வரக் கட்டளை பிறந்தது. பொன்னொளிர் புன்னகைச்சொக்கு! அவர் உள்ளம் உலகினும் பெரிது. அந்தக் கருணைக் கடலை எப்படியுரைப்பேன்! அந்தக் கடலில் என் சிந்தனைப் படகு ஓடுகிறது. சிவானந்தருடன் சிறு வயது முதல் ஐக்கியமான என் ஆன்மா சிவானந்த ஆசிரமத்துடன் ஐக்கியமானது. கருணையுள்ளமே சிதானந்தம். தங்கள் அன்பும், பணிவும், அறிவும் திருவும், ஊக்கமும், ஆக்கமும், சிவானந்த மின்சாரத்தை உலகெங்கும் பரப்பி ஒவ்வொரு நாட்டிலும் சிவானந்த சக்தியந்திரத்தை நாட்டியுள்ளது. அண்மையில் நான் செய்த உலக யாத்திரையில் சிவானந்தரின் அன்பர், அவரது நூல்களைப் பல இடங்களில் ஆர்வமுடன் பயிலக் கண்டேன். குருநாதரைப் பற்றி சுமார் நூறு பிரசங்கங்கள் செய்தேன். இன்னும் அருள் மின்சாரம் பரவி உலகமெல்லாம் சிவானந்தமயமாகுக. அத்தகைய ஆத்மானந்த சேவைக்கு நம்மை அர்ப்பணிப்போமாக. இத்துடன் டிவைன்லைஃப் மலருக்குக் கட்டுரை வருகிறது. தெய்வநெறி மகாநாட்டில் சந்திப்போம்.*

சிதானந்தரூபம், சிவோஹம், சிவோஹம்.

## 73. மகேஷ் யோகி
(ஆங்கிலத்திலிருந்து)

ஓம் நமோநாராயணாய.

இமயமலையின் அமைதியில் ஆத்மகானம் கேட்கிறது. கீதாபவனம், சுவர்க்காசிரமம், மகாமுனி ஆசிரமம் எல்லாம் தாண்டி சங்கரநகருக்கு வந்து, தங்கள் ஆசிரமத்தில் புகுந்தேன். தாடி வைத்து சிகை வளர்த்த ஒருவர் எங்களை வரவேற்றார். சுற்றிப்பார்த்தேன். அழகும், அமைதியும், மௌனமும் பொலிகின்றன. இயற்கையே இங்கே மௌனத்தவம் புரிகிறது. தியானிகள அவரவர் அறையில் உள்ளாழ்ந்திருக்கிறார்கள். கங்கை ஓரத்தில் ஓர் பர்ணசாலையிலிருந்து அழைப்பு வந்தது, புகுந்தேன். தங்களைப்போலவே ஒரு முனிவர் வரவேற்று இனிமையாகப் பேசினார். பரமாத்ம தியானத்தை விளக்கினார். ஒருமணி நேரம் பேசினோம். தாங்கள் ஸ்பெயினில் இருப்பதாகச் சொன்னார். கீதையின் ஆறாம் அத்தியாயத்தைப் பற்றி எங்கள் பேச்சு நடந்தது. அங்கே ஒரு மணிநேரம் தியானித்து திரும்பினேன்; தங்கள் தியானசேவையை உலகம் போற்றுகிறது. தாங்கள் ஆசிரமத்தில் இருக்கும்போது மீண்டும் வந்து காண்கிறேன். சென்னை யோகசமாஜத்திற்கு முன்பு வந்தீர்கள். மீண்டும் வரவேண்டும்.

ஓம் தத்ஸத்.

## 74. பூஜ்ய வினோபாஜீ
(ஆங்கிலத்திலிருந்து)

நடமாடுங்கோயிலே! நமஸ்காரம்.

காஞ்சிபுரத்தில் தங்கள் தரிசனம் பேரின்பம் அளித்தது. தங்கள் இந்தி மிகத் தெளிவு; தங்கள் அனுபவங்கள் புதிய எழுச்சி தந்தன. என் அருகேயிருந்த இராஜேந்திரப் பிரசாது 'அச்சி பாத்! ஐஸா கர்னா!' (நல்லது! அப்படித்தான் செய்யவேண்டும்) என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். ராஜாஜீ தங்கள் எளிய வாழ்வையும் அரிய தொண்டையும் விளக்கித் தங்களை காந்தீயத்தின் அவதாரம் என்று போற்றினார். நானும் சர்வோதயமே புதிய உலகின் சங்கநாதம், ஓம் சாந்தி! ஜய சக்தி! என்று பாடினேன். தங்கள் குரலையும் இணைத்தீர்கள்.

நிற்க. வடலூரில் பத்து ஏகரா தானமாக அளித்துள்ளேன். அதில் ஆசிரியர் கலாசாலை வைக்கலாம். அல்லது ஒரு தொழிற் பள்ளிக்கூடம் நாட்டலாம். அவ்வாறு ஆக்கப்பணி செய்தால் மிச்சமுள்ள எட்டு ஏக்கர்களையும் தரலாம். என் விண்ணப்பத்தைத் தாங்கள் சிந்திக்கவேண்டுகிறேன். எனக்கென்று எந்த உடைமையும் வேண்டேன். இந்த உடலும் உடையான் உடைமை. அவன் எனக்கொரு பணியைத் தந்தான். அது மௌனத் தவத்தாலே தான் நிறைவேறும். அதற்காகவே நான் பெரும்பாலும் மௌனமா யிருக்கிறேன். எனது தேவைகளைப் பேனாமுனையில் நிறைவாகப் பெறுகிறேன். இந்த நாட்டிற்கு ஒரு வழிகாட்ட வேண்டும். வறுமை இதன் தொத்துநோய். நல்ல கல்வியில்லை. படித்தவனுக்குப் பிழைக்கத் தெரியவில்லை; உழைக்கத் தெரியவில்லை. ஆங்கிலம் பேசுகிறான்; நாவல் படிக்கிறான்; செய்தித்தாள் பார்க்கிறான். ஏதோ கட்சி பேசுகிறான். கிராம மக்களுக்கு இக்கால முன்னேற்றம் தெரியவில்லை. நல்ல கல்வி யில்லை. இப்போது வழங்கும் கல்வி கற்றும் பயனில்லை. ஆதலால் எனது நிலத்தில் ஒரு தொழிற்கல்வி நிலையம் நாட்ட வேண்டும்.

(1) அங்கே மிந்திரி நன்றாக வரும். மிந்திரித் தோலிலிருந்து எண்ணெய் வடிக்கலாம். அந்த எண்ணெயால் ரிப்பன் செய்யலாம். வார்னிஷ் செய்யலாம். மிந்திரிப் பருப்பை வைத்து பிஸ்கட் செய்து விற்கலாம். பிஸ்கட்டில் தவிடு சேர்க்கலாம். அதில் B வைடமின் உள்ளது.

*மிந்திரிச் சருகுகளை இடித்துப் பற்பொடி செய்யலாம். அது பல் நோய்களைத் தீர்க்கும்.*

*(2) அங்கே துளசி பயிரிடலாம்; அதனால் பலநோய்கள் தீரும். வில்வமரங்கள் நன்றாக வரும். வில்வப்பழத்தால் தைலம் காய்ச்சலாம்; வில்வ இலையும், துளசி இலையும், வேப்பம்பூவும் கொத்து மல்லிவிதையும் சேர்த்து இடித்துப் பொடியாக்கி இரண்டு சிறுகரண்டி தண்ணீரில் கலக்கிக் கொதிக்கவைத்து அதில் ஒரு சிறு கரண்டி தேன் சேர்த்துப் பருகினால் உடம்புக்கு நல்லது. காப்பியை ஒழித்து இதைப் பழக்கினால் பித்தம், வாதம், சிலேஷ்மம் இவற்றைச் சமன் படுத்தும். நீரிழிவு, இழுப்பு, இருமல் அனைத்திற்கும் நல்லது.*

*(3) வேப்பமரங்களை வேலியோரம் நட்டு வளர்த்து வேப்ப முத்துக்களை எடுத்து செக்கில் ஆட்டி எண்ணெய் பிழிந்து விற்கலாம். வேப்பெண்ணெய் சோப்புச் செய்யலாம். அதில் வேப்பிலைச் சாறு சேர்த்து உடம்புக்குச் சோப்பு செய்யலாம்.*

*(4) சுற்றியுள்ள மக்கள் உழைப்பாளிகள். அவர்களுக்கு அங்கே எத்தனையோ தொழில்களைத் தந்து கூலிதரலாம். அருகே நெய்வேலியுள்ளது. அங்கே குவியும் மண்ணைக் கொணர்ந்து சட்டி பானை கூஜாக்களைச் செய்து விற்கலாம். விதவித பொம்மைகள் செய்யலாம்.*

*(5) இந்தப் புஞ்சை நிலத்தில் கேழ்வரகு, வரகு, தினை விளைவிக்கலாம். இவ்வாறு பலருக்குத் தொழிலைத் தந்து அத்துடன் எழுதப் படிக்க கற்பிக்கலாம்.*

*புக்கர் வாஷிங்டன் நாட்டிய டஸ்கிஜீ சர்வகலாசாலையில் நீக்ரோ மாணவர் பல தொழில்களைச் செய்து கொண்டே படிக்கின்றனர். அங்கே செய்யும் செங்கல்களைப் பலர் வாங்கிச் செல்லுகின்றனர். நமது நாட்டில் தயாளபாக் பார்த்திருப்பீர்கள். சாந்திநிகேதனை அடுத்த ஸ்ரீநிகேதனைக் கண்டிருப்பீர்கள். தொழில்மயக் கல்வி தந்தால் நம் நாட்டு வறுமை, மடமைப் பிணிகள் நீங்கும் என்பது என் கருத்து. அத்தகைய தொண்டிற்கே நிலத்தைத் தருகிறேன். அது நிறைவேற நானும் ஒத்துழைப்பேன். சுமார் 250 பேருக்கு அங்கே கல்வியும் தொழிலும் தரலாம். அத்துடன் ஒழுக்கமும் திருந்தும். அதற்கேற்ற பாடல்களை ஏராளமாகப் பாடியிருக்கிறேன். தொழிலுடன் பாட்டும் முழங்கும்.*

*இக்கருத்தை திண்டிவனத்தில் தங்களிடம் வெளியிட்டேன். ஓர் இடத்தில் ஓர் ஆதர்சமான தொழிற்கல்வி ஏற்பட்டால் பலர் அதைப் பின்பற்றுவர். நாட்டுக்கு நலமாகும், வீட்டுக்கு நலமாகும், சர்வோதய சக்தியும் புலனாகும்.*

**ஓம் சாந்தி ஜய ஜகத் !**

## 75. குன்றக்குடியடிகளுக்கு

*ஓம் சிவம், அடிகள் வாழ்க! அருளியக்கம் வாழ்க!*

*நமது தமிழ்ப் பண்பாட்டின் மிகச்சிறந்த தன்மை அருள் என்பதுவே. "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்றார் நாயனார். ஆண்டவனை அருள் விழியால் உணர்ந்தனர் திருத் தொண்டர். அப்பர், மாணிக்கவாசகர், அருட்சோதி வள்ளலார் போன்ற தெய்வப் புலவர் அருளுக்கே வாழ்ந்தனர். அருளே உலகை ஆக்கி, அளிக்கும் சக்தியாகும். அருளே மனிதனை உய்விக்கும் தாரகமாகும். அருள் நிறைவே பேரின்பம். அருட்குறைவே பெருந்துன்பம்.*

*இன்றுலகம் இருள் சூழ்ந்துள்ளது. மனித மூளை வானை யளாவுகிறது; கடலைத் துருவுகிறது; அணுசக்தியால் ஆளை மிரட்டுகிறது. அதனால் அமைதி காண முடியவில்லை. சிற்றறி மனிதன் பேரறிவுப் பிழம்பான கடவுளை மறக்கிறான்; மறுக்கிறான். தனது செருக்கும் சிறுமையும் கொண்டு மண்ணையாளத் துடிக்கிறான். விஞ்ஞானக் கலையால் விண்ணெட்டக் கிளம்புகிறான். பூதபௌதிகக் கலைகளால் உலகைப் போர்க்களம் ஆக்குகிறான்; மனிதன்*

விண்ணில் பறக்கிறான்; கடலில் மிதக்கிறான்; ஆனால் அவனுக்கு மண்ணில் நடக்கத் தெரியவில்லை. விஞ்ஞானத்தையும் அரசியலையும் கொண்டு மனிதன் போருக்குப் போர், போட்டிக்குப் போட்டி, அழிவுக்கு அழிவு, பிரிவினைக்குப் பிரிவினை, துயருக்குத் துயர் சென்று கொண்டிருக்கிறான். மனித மூளையில் அரக்கன் புகுந்திருக்கிறான். அவன் உள்ளம் வறண்டு கிடக்கிறது. இந்தக் காட்டில் வழி தெரியாமல் மனிதன் எங்கெங்கோ மோதி அலைகிறான். இருளில் வழி தடவுகிறான்.

இன்று மனிதன் அமைதிபெற வேண்டுமானால், அருள் வழி நாடவேண்டும். ஒரு இருட்டறையில் அழகான ஓவியங்கள் இருப்பினும் பயனில்லை. அவற்றைக் காணக் கண்வேண்டும். கண்ணுக்கு ஒளி வேண்டும். அதே மாதிரி இன்றுலகம் விஞ்ஞான அற்புதங்களால் நிரம்பி இருக்கின்றது. ஆனால் ஆசை, ஆணவ இருள் மூண்டிருக்கிறது. இருளை விலக்க அருள் ஒளி வேண்டும். ஆசை, ஆணவ இருள் இயக்கங்களை மாற்ற இங்கே தீவிரமான அருள் இயக்கம் தோன்றவேண்டும். தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக இந்த அருள் இயக்கம் உருவாகி வருகிறது. நமது கடவுளே அருள் வடிவம். நமது வேதம் அருண்மொழி. நமது வாழ்வெல்லாம் அருள் விளக்கம்.

அருளை அடிப்படையாகக் கொண்ட இயக்கமே நமது நாட்டிற்கும், உலகிற்கும் வேண்டியதாகும். தேவாரமும், திருவாசகமும், திருக்குறளும், திருமந்திரமும், அருள் விளக்கம் செய்த புலவர் பாடல்களே. அவை அருட்சுவடிகளேயாம். ஞான சம்பந்தரின் அருளியக்கமே மதுரையில் சைவக்கொடியை நாட்டி,

"அரந் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்கவே!"

என்று வாழ்த்தியது. வள்ளலாரின் அருளியக்கமே சாதி, மத பேதங்களைத் தகர்த்து உலகில் சன்மார்க்கக் கொடியை நாட்டியது. அடிமைச் சிறையிருளில் வருந்திய பாரத நாட்டிற்கு விடுதலை தந்தது, மஹாத்மா காந்தியின் அருளியக்கமே.

அருள்நெறி வெறும் மேடைப்பேச்சன்று. அருள்நெறி ஒரு சாதனமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனங்களைக் அடிப்படையாகக் கொண்டது அருள் நெறியாகும். சரியை என்றால் ஒழுக்கம், கிரியை என்றால் வழிபாடு, யோகம் என்றால் உள்ளொருமை, ஞானம் என்றால் உள்ளறிவு. இந்த நான்கையும் முறையாகப் பயின்று தெள்ளறிவு பெற்ற சமயத் தொண்டர்கள் அருளியக்கத்திற்கு வேண்டும். இச்சாதனங்களில், யோகமே முதன்மையானது. சரியை என்பது கர்மயோகம்; கிரியை பக்தியோகம்; ஞானம் ஞானயோகம். கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றையும், உடலும், உயிரும் உணர்வுமாகக் கொண்டது யோகமாகும். அருள் இயக்கம் வெற்றிபெறவேண்டுமானால், நூலாராய்ச்சிப் புலவர் இருந்தால் மட்டும் போதாது. யோகப் பயிற்சியும், ஞான முதிர்ச்சியும் பெற்ற சிவானுபூதிச் செல்வர் முன் வந்து, இயக்கத்தை நடத்தினால், நாடெல்லாம் அருட்கூட்டமாகிப் பொலியும்.

கிறிஸ்துவப் பாதிரிமார்களைப் பயிற்ற நாடெங்கும் "ஸெமிநரி"கள் உள்ளன. "ஸெமிநரி"களில் நூற்றுக்கணக்கான சமயத் தொண்டர் பயிற்சி பெறுகின்றனர். பைபிளை அடிப்படையாகக் கொண்டு, பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சிக் காலத்தில் மாணவர் வேறெங்கும் செல்லமுடியாது. மத உடை அணிந்து, சிலுவையைத் தூக்கி வரும்போதே அவர்களை அறியலாம். இதேமாதிரி, அருள்நெறித் தொண்டர்களை நாம் தயாரிக்கவேண்டும். இவ்வழியில் தங்கள் அருள்நெறி இயக்கத்தைப் பாராட்டுகிறேன்.

ஓம் சிவம்.

## 76. உபநயனம்

*(இக்கடிதங்கள் வை.மு.கோதை நாயகி, அன்பு நடனம், பாலு, ராஜகோபாலன், வேங்கடராமன், வைத்திநாதன், புலவர் தியாகராச சர்மா, முதலியோருக்கு எழுதிய கடிதங்களிலிருந்து தேர்ந்தவையாகும்)*

அன்பீர்!

உபநயன குமாரன் வாழ்க!

உபநயனம் என்றால் துணைவிழி. உள்ளத்தானாகிய இறைவனைக் காணத் துணை செய்யும் விழியைத் திறப்பதே உபநயனம். அருள்விழி, தியானத்தாலும், மந்திரஜபத்தாலுமே திறக்கும்.

"ஓம் என்னும் பரமாத்மா, சுத்த சச்சிதானந்தன்; அவன் பூலோகம் முதல் ஸத்யலோகம் வரையில் ஏழுலகங்களிலும் பரவி யிருக்கிறான். அவனை மனங்குவிந்து உள்ளே தியானிப்போம்; அதனால் அவன் அருளையடைந்து ஒளிபெறுவோம்" என்பதே வேதமந்திரத்தின் பொருள்.

பக்தி, பிரபத்தி, தியானம், மந்திரம், சதாசாரம் இவையே உபநயனக் கிரியைகள். வெளிச்சடங்குகளும், கொட்டு முழக்குக் கொண்டாட்டங்களும் ஆசைக்குச் செய்யும் கூத்தே. அதுவும் உறவினர் திருப்திக்கு நடக்கட்டும். தினம் காயத்திரி ஜபம் செய்து வரவேண்டும். அதுவே முதன்மை.

பூணூல் என்பது பூ-நூல்; பூ என்பது ஆதாரத்தாமரை மலர்கள்; அதில் நூல்போல் இழைந்து செல்லும் இடா, பிங்களா, சுழிமுனை ஆகிய மூன்று நாடிகளே மூன்று வடங்கள். ஹ்ருதய ஸ்தானத்தில் மூன்றும் சேர்ந்ததே பிரம்ம முடிச்சு.

சூக்ஷ்ம உபவீதம் இராஜநாடிகளே. அவற்றின் வழியாக மந்திர சக்தியால் மூலாதார ரசமான குண்டலி சக்தியைப் பாய்ச்சுவது தான் சாறுகுடிப்பது.

தாயைப்போல் அன்பும் தனிக்கருணையுங் கொண்டு
தேயத்தைக் காக்குந் திறனுடைய - காயத்ரி
மந்திரந் தன்னை மனதாரப் பூசித்தால்
எந்த நலமும் பெறலா மீங்கு.

## 77. வெளிவேடம்

அன்பனே!

அந்தரங்க சுத்தியே முதன்மை. வெளிவேஷம் கால தேச வர்த்தமானங்களை ஒட்டியிருக்கலாம். ஆனால் ஆடை சுத்தமா யிருக்கவேண்டும். உடம்பில் காற்றும் வெயிலும் படவேண்டும். மூச்சைப்போல் தோலும் உயிர்க்கிறது.

ஐரோப்பாவிற்குப் போகிற கனவான், பஞ்சகச்சமும் விபூதி ருத்திராட்சமுமாகப் போனால் காட்சிசாலைப் பொருள்போல் மதிப்பார்கள். பார்லிமெண்டு சபையில் பேசப்போகிறவர் ஜடா மகுடதாரியாகவோ, பன்னிரு திருமண் சாத்தியோ, கிண்டிகப்பறை ஏந்தியோ போய் "பம் மஹாதேவா! ஏழுமலையானுக்கு ஹரோ ஹரா!" என்று நின்றால் நகைப்பிற்கிடமாகும். அங்கே மற்றவர்கள் போல உடையணிந்து சபையை ஒட்டி நடையுடை பாவனைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

கோவிலுக்குப் போகிறவன் சட்டை தொப்பியுடன் போனால் நன்றாயிராது. "அகம்பாவி" என்று உலகம் நினைக்கும். மலையாளத்து ராஜாபோல், கோவிலுக்குப் போகும்போது மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு பணிவுடன் செல்வதுதான் பாங்காகும். மாசற்ற மனமே முதன்மை.

அவரவர் அலுவலுக்கும் நிலைக்கும் தக்கபடி ஆடையணிய வேண்டும்.

போலீஸ்காரர் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக் கொண்டு வைதிகமாக வந்தால் அந்த உத்தியோகத்திற்கு ஏற்ற மரியாதை உண்டாகாது. அவரவருக்குரிய உடையில் வந்தாலே மதிப்பாகும். அதேபோல் துறவிகளும் எளிய உடையில் விளங்கவேண்டும். காஷாயம் வேண்டுமென்பதில்லை. துறவிகள் வெள்ளாடை அணியலாம்; தாடி, மீசை, ஜடை அவசியமில்லை. சாதாரணமாக ஒரு வேட்டி, குடுத்துணி, அங்கவஸ்திரம், ஒரு கைக்குட்டை இவை சரியான ஆடையாகும்.

நான் அறைக்குள் நிர்வாணம் அல்லது கோவணமே அணிவேன். எப்போதாவது வெளியில்வர நேர்ந்தால் வேட்டி, குடுத்துணி அணிவேன். நான் காவியணிவது சாமிக்கோலத்திற் கன்று. காவி நிறத்திற்குச் சில காந்த சக்திகள் உண்டு. காவியுடை தேக காந்தத்தை உள்ளே அடக்கிவைத்துக் காக்கும். நான் தாடி வளர்ப்பதும் ஒரு விரதமே. இந்தியா பூரண சுதந்தரம் பெறவும் எனது உயிர்க்காவியமான "பாரதசக்தி மகாகாவியம்" முற்ற முடிந்து வெளிவரவும் விரதம்பூண்டுதான் தீட்சை வளர்த்தேன். இரண்டு காரியங்களும் நிறைவேறின. தீட்சை மனவுறுதி தரும். கைக்கொண்ட வேலையை அடிக்கடி நினைப்பூட்டி ஊக்கும். அதற்காகத்தான் உடம்பில் கத்தியே படாமல் அப்படியே இயற்கையாக மயிர் வளர்கிறது.

உண்மை ஆளை உள்ளே பார், வெளியே பார்த்து மயங்காதே. இந்த உடல் இன்றிருக்கும்; நாளை மறையும், இதன் கோலங்கள் மாறும். வெளிவேடங்களைக் கண்டு ஏமாறாதே. உள்ளே தேடு. உள்ளத்தானைக் கூடு, அவன் இசையைப் பாடு, அவனே வீடு; அவனே நாடு! ஓம் சுத்த சக்தி !

## 78. கவலை

அன்பா,

கவலை என்பது மனதின் அழுக்கு; அது உனக்கு இயல்பில்லை; அது புறத்திலிருந்து வந்து மனதைத் தாக்குகிறது. அது வரும்போதே "போ, பேயே" என்று தூரத்தள்ளிவிடு; பேய் கிட்ட வராது.

கவலை வரும்போது தனித்திரு; யார் மேலும் ஆத்திரப் படாதே; பொறாமைப் பேயைப் பூண்டுடன் ஒழித்தால், ஆத்திரம் வராது; சினம் பொங்காது; மனம் கொந்தளிக்காது. அரசியல் வாழ்வில் நான் எத்தனையோ கொடிய மனப்பான்மைகளைப் பார்த்தேன்; இன்று நண்பராகக் கைகுலுக்குவோர், நாளைத் தேர்தலின்போது நேர் எதிரிகளாக ஒருவரையொருவர் அச்சிலும் மேடையிலும் திட்டிக்கொண்டு, குண்டர்களைவிட்டு அடிதடியில் இறங்குவதையும், கொலைவாள்கூடப் பிடித்ததையும் பார்த்தேன். ஆத்திரத்தில் பேச்சுகளும் வசையம்புகளும் கிளம்பி முடிவில், ஆகாச வாணம்போல் கரிந்து விழும். பிறகு "ஏன் பேசினோம்; இதனால் நமது சக்தி வீணாகிப் பொல்லாப்பு வந்ததுதானே மிச்சம்" என்று ஆத்திரக்காரரே உணர்வர். ஆத்திரத்தால் படபடக்கும் போது நீயும் வாயைக் கிளப்பாதே; படபடத்து ஒழியட்டும் என்று சும்மா உள்ளேயிரு. கவலை வராது. அன்பு.

## 79. துன்பத்தின் பயன்

அன்பு,

வாழ்க்கையில் ஒரே இன்பமும், அமைதியும், எதிர்ப்பில்லாத சமனும் இருந்தால் சுகப்படாது; கொஞ்சம் மேடுபள்ளமும் வேண்டும். எதிர்ப்பின் சக்திதான் முன்னேற்றம். யாரும் எதிர்க்கா விட்டால் காந்தி ஏது? சிவாஜி ஏது? புடலங்காயும் கத்திரிக்காயும், வெண்டைக்காயும் சேர்ந்த கூட்டில் பாகக்காயும் சேர்த்தால் 'பிட்லை வெகுஜோர்' என்று அள்ளுகிறோமல்லவா! அதுபோல்,

கொஞ்சம் கசப்பும் இருந்தாலே இனிப்பின் அருமை தெரியும். விளக்கெண்ணெயும் வேப்பிலை உருண்டையும் தின்பவனுக்கு, தாயார் கொஞ்சம் வெல்லம் தருவதுபோல், உலகில் இடர்களைப் பொறுப்பவனுக்கு இறைவன் இனிப்பைத் தருகிறான். ஆதலால் என்ன இடர் வந்தாலும் சகித்துக்கொண்டு தீரனாக வாழ்வை வெல்ல வேண்டும்.

கடும்போர் செய்யும் வீரன் வியர்வையிலேதான் வெற்றி அரும்பும். உழுது பயிரிடாமல் உணவு வருமா? உலையில் வேகாமல் சாதமாகுமா? இதெல்லாம் எண்ணிப் பார்.

அன்பா! உடல் ஒரு பஞ்சபூதக் கூண்டு. அதை ஆட்டுவது இருவிகார மனம்; பருவங்கள் மாறுவதுபோல் மனம் உலகின் சுகதுக்கங்களால் மாறுதலடைகிறது. பருவங்கள் ஆறு ஆனாலும் காலம் ஒன்றே. சுக துக்கங்கள் பலவானாலும் அவற்றின் பின்னே சாட்சி சேதனனாயிருக்கும் ஜீவாத்மா ஒன்றுதான்; அது பரமாத்மாவின் அம்சம் என்பதை நினை.

ஒரு துக்கமோ, அவமானமோ வரும்போது "இவை யாருக்கு? இவை வெளியிலிருந்து வந்தே எனது மனத்தைத் துளைக்கின்றன. நான் மனமா? இல்லை. மனாதீதனான ஆத்மா. ஆகையால் எனக்கு இந்தத் தொல்லையில்லை. உடலைத் தாண்டி இத்தொல்லை அணுகாது. என் இயல்பான இடம் பரமாத்மா" என்று எண்ணி அடிக்கடி சாந்தம் பெறுவதுதான் துக்கத்திற்கு ஒரே மருந்து.

உலகின் சோதனைகளை வெற்றிப்படிகளாகக் கொள்ள வேண்டும். உப்பைத் தனியாகத் தின்ன முடியாது; குழம்பு கூட்டுடன் அல்லது மோருடன் கலந்து உண்டால் சுவைக்கும். துன்பம் வரவர இன்பமயமான இறைவனைத் தியானி; அவன் திருநாமத்தைப் பாடு; துன்பம் கரைந்து போகும்.

சோம்பல் மாட்டிற்குக் கொஞ்சம் தார் வைத்தாலே ஓடும். அதுபோல துக்கங்கள் மனத்தைச் சுறுசுறுப்பாக்கும். துக்கம் இல்லாதவனுக்கு ஞானம் வராது; சுகவாசி அம்மா பிள்ளையாகத் தான் இருப்பான். ஆதலால் துன்பம் உனக்கு வைராக்கியத்தைத் தந்து காரிய வீரம் அளிக்கவேண்டும். அன்பை வளர்; அச்சமில்லை. அப்பரை நினை.

## 80. அன்பை வளர்

அன்பனே,

அன்பு மட்டும் இருந்தால் அருள் ஓடிவரும். அன்பில்லாத நெஞ்சம் அகம்பாவ இருளால் மூடப்பட்ட பேராசைக் காடாகவே இருக்கும். அன்பில்லாதவனை மனிதன் என்பது இனிப்பில்லாததைக் கரும்பு என்பது போலாகும். அன்பை வளர்; அன்பு உன்னை வளர்க்கும்.

நான் குருபீடம் வைத்து சிஷ்யகோடிகளைச் சேர்த்துத் தடபுடல் விளம்பரங்களும் ஆடம்பரங்களும் செய்ய விரும்ப வில்லை. ஆனால், நான் உருத்தெரியாமலே அடக்கமாயிருந்து, என் இதயத்துடிப்பை—முதன்மையாக தியானத்தாலும் அதற்கு அடுத்தபடி எழுத்தாலும் பக்குவமான அன்பர் மூலம் உலகிற்கு உணர்த்தவே விரும்புகிறேன். என் வாழ்வில் ஒரு மூச்சுக்கூட வீண் விவகாரங்களிலும் தெருக்கூச்சலிலும் செல்லாமல் ஒவ்வொரு மூச்சையும் இதயத்தில் உள்ள சுத்த பரமாத்மனுக்கே தியான மலராக்குகிறேன். அந்த மலரில் பொங்கும் தேனே பாட்டு. என் உள்ள ஊற்றில் பொங்கும் பாடல்கள் உள்ளத்திற்கு உள்ளம் தாவிப் பேரின்ப அருவியாக ஓடி மனித சமுதாயத்திற்கு ஆறுதலும், ஆத்ம சேதனமும் தெய்வபக்தியும் அமரானந்த சக்தியும் அளிக்கட்டும். அதுவே என்

இன்பம்; இதுவே என் வாழ்வின் குறிக்கோள். அன்பை வளர். உன்னுள் இரு. உலகம் தன்னால் நடக்கும்.

## 81. வணக்கம் என்றால் ?

வணக்கம் என்பது சிற்றறிஞனான மனிதன் முற்றறிஞனான கடவுளை உள்ளத்தில் அன்பினால் பணிந்து நிற்றலேயாகும்.

மனிதனுக்கு வணங்கும் உரிமையே உண்டு. எவ்வளவு பெரியவரானாலும் கடவுளுக்குச் சமானமாக முடியாது. அப்படி நினைப்பது அகம்பாவமாகும். சரியான குரு, மாணவனுக்கு "என்னை வணங்காதே; இறைவனை வணங்கு. என் உள்ளத்தில் உள்ள இறைவனே உன் உள்ளத்திலும் இருக்கிறான்" என்றே உபதேசிப்பர். இந்த உண்மையை அறியாமல் மூடுமந்திரக்காரர் உலகை ஏமாற்றித் தமக்கே வணக்கந் தேடிக் கடவுளை மறக்கச் செய்தார்கள்.

இஸ்லாம், அருட்பா—இரண்டும் முழு உண்மையைப் பேசின. "உடலை வணங்காதே; உள்ளத்தில் உள்ள பொருளை அன்பு செய்" என்றன. பெரியார்களைக் காணும்போது உள்ளத்தினால் அன்பு துடிக்க "என் அன்பை ஏற்றருள்க" என்று உணர்ந்து நினைத்தாலே போதும். விழுந்து புரண்டு கும்பிடல் பழைய வழக்கம்; அதைவிட உள் இணக்கமே வணக்கம். உண்மையான அன்பிருந்தால் வெளிப்பகட்டுகள் தேவையில்லை. இந்த உள்ளன்பு வணக்கத்தை உலகிற்குச் சொல்லி, உடலடிமை யாகாமல் எல்லாரும் உடையானுக்கே ஆளாகவேண்டும் என்பது நமது கொள்கை.

## 82. அருட் பெரியார்

அருட்பெரியார் அடங்கியிருப்பர். அவர்களுடைய காந்த சக்தியே உலகின் உள்ளத்தைக் கவர்கிறது. தேன் மலருக்குத் தேனீக்களும், கனி மரங்களுக்குப் புட்களும், தாமரைக் குளத்திற்கு அன்னமும் வருவது இயற்கை. அதுபோல் பரமஞானிகளை ஆர்வங்கொண்ட ஆன்மாக்கள் அணுகுவதும் இயல்புதான். தியான வாழ்வு, மோனப்புன்னகை, கருணையுள்ளம், கலங்காவுறுதி, சமநோக்கம், தியாகதீரம்........இவை பெரியார் இயல்பு.

உலகம் அருட்பெரியாரால் இந்தமட்டாவது உருப்படியா யிருக்கிறது. கண்ணன், புத்தன், லௌத்சன், கொன்புத்ஸன், சோக்ரதன், கிறிஸ்து, பிரான்ஸிஸ், சங்கரர், இராமானுஜர், மத்வர், சைதன்யர், நானகர், இராமதாஸர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், பரமஹம்ஸர், விவேகானந்தர், தாயுமானவர், வள்ளலார் போன்ற அருட்பெரியார் உலகிற்கு ஞானத்தாலும் அருள் வாக்கினாலும் செய்த உதவி அளப்பரியது. ஆனால் உலகம் அவர்களைப் படுத்திய பாடும் பயங்கரமானது. உதவி செய்த நல்லாருக்குச் சிலுவையும், கல்லெறியும், உதையும், வசவும், சிறையுந் தந்தது உலகம்.

பொறுமைப் புன்னகையுடன் துரோகிகளுக்கும், அன்புசெய்த மகான்களின் பெருமையே பெருமை! முரட்டுத்தனமாகக் கிள்ளும் குழந்தையையும் முத்தமிட்டுப் பாலூட்டும் தாய்போல, கருணை வள்ளல்களான அருட்பெரியார், காட்டுமிராண்டியுலகம் வைது திட்டி அடித்துப்புண்படுத்தியதெல்லாம் பொறுத்துக் கொண்டு இறைவன் கட்டளையை நிறைவேற்றினர். ஏனெனில் அவர்கள் இறைவன் ஆதேசத்தைப் பெற்றே பேசி, அவனுக்கே பணிந்து, அவன் இச்சை உலகில் நிறைவேறவே செயல்புரிந்து, அவனுக்கே ஆளாக வாழ்ந்து சென்றனர். அவர்கள் பண்டிதப் புலமையால் பேசவில்லை; அருட்புலமையால், கடவுளுணர்ச்சியால் பேசினார்.

அவர்கள் விளம்பரத்தை விரும்பவில்லை. மோனத்தனி யடக்கத்தையே விரும்பினர். அவர்கள் தமக்காகப் பொருளை விரும்பவில்லை. உலக நலத்திற்காக, ஆண்டவன் கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே பொருளை விரும்பினர். பரமஹம்ஸர் பெயராலும், காந்தியடிகள் பெயராலும் சேரும் பொருட்குவைகள் உலகிற்கு எவ்வளவு நன்மைகளைச் செய்கின்றன!

மஹான்களிற் சிலர் பரமதுரிய நிலையில் இருந்து, மிகமிக அடக்கமாக, பெயர் வடிவங்களே தெரியாமல், ஆத்ம சேதனத்தையே தியானத்தால் பரப்பி, உலகிற்குப் புதிய உணர்ச்சியும் தருகிறார்கள். சிலர் இதயக்குகையில் இருந்தபடி யிருந்து உள்ளெழுச்சியால் வரும் பொன்னுரைகளை எழுதித் தந்து செல்கிறார்கள். சிலர் எழுதாமலே தக்க பாத்திரங்களில் தங்கள் அமுத மொழிகளைப் பெய்து செல்கிறார்கள். சிலர் சொல்லுடன் நிற்காமல் கர்மவீரர்களாகிச் செயல் புரிந்து பல பொதுநலங்களைத் தூண்டுகிறார்கள்.

இப்படி யோகத்தில் இறைவனைக் கலந்து உலகிற்கு அடக்கமாக அரிய உதவி செய்யும் பெரியார்களை மதித்துப் போற்றிப் பின் பற்றி நன்றியுடன் துணைநின்று உதவினால் மனித வாழ்வு நல்ல மாறுதலும் பேரின்பச்சுவையும் பெறும். அருட் பெரியாரை மனதில் வணங்குதல் ஆண்டவனையே வணங்குதலாகும். அவர் பணிசெய்தல் இறைவன் பணி செய்தலாகும். இறைவன் அருள் மின்சாரநிலையங்களே பரம யோகிகள் ஆவார்கள். சித்த சுத்தியுடன் அவர்களைச் சார்ந்த அன்பருக்கும் அந்த அருள் மின்சார சக்தி உண்டாகும்.

ஆனால், பாத்திரம் அசுத்தமாக, பொய், அகம்பாவப் பொறாமைக் களிம்பேறியிருந்தால், அருளமுதம் அதில் ஒருநாளும் பொழியாது. உன்னை நீ முதலில் சுத்தம் செய்துகொள். அன்பும், ஆர்வமும், சுயநலமற்ற சேவையும் இருந்தால் படிப்படியாக அந்தக் கரணசுத்தி உண்டாகும். பாத்திரம் அப்பழுக்கற்ற தூய்மையும் வாய்மையும் அடைந்தபிறகுதான் பரமகிருபை அதில் இறங்கும். காயாயிருக்கு மட்டும் புளிப்புத்தான். காய் முதிர்ந்து பக்குவமாக ஆக இனிப்பேறும். இந்த இயற்கையுண்மையை அறி.

பெரியார்களை நம்பு. அன்பு செய். அத்தனைக்கத்தனை பலன் உண்டு. இதனாலேதான் எல்லாச் சமயங்களிலும் குருசேவை முதன்மை வகிக்கிறது. சுத்த சக்தி ஓம்.

## 83. உள்ளன்பு

உலகில் மிகவும் அருமையான பொருள் உள்ளன்புதான். நெருப்புப்புயல் வீசியபோதும் உனக்குத் துணையாக நிற்கும் கலங்கா நண்பன் யார்—அவனே உயிர்த்துணைவன். இங்கே ஒன்று சொல்வது; பின்னால் நேர் எதிரிடையாகச் சூழ்ச்சி செய்வது; இங்கே "ஆஹா; நான் எல்லாம் செய்கிறேன்" என்பது; அங்கிருந்து வசையம்பு தொடுப்பது; இருமனப்பெண்டிர் வேலை செய்வது, கூட்டைக் கலைப்பது, பொய்கட்டித் தூற்றுவது, போட்டி நடத்துவது, பொறாமைகொண்டு தாக்குவது, மொட்டைக் கடிதம் எழுதுவது, கூட்டம்போட்டுத் திட்டுவது, பத்திரிகைகளில் வம்பிழுத்து ரகளை செய்வது—இவைகளெல்லாம் மனிதனைப் பிடித்த வீரியத்தினவின் அழுகல் வேலைகள். இவற்றால் மனத் திட்பமுள்ளவர் கலங்கார்.

உலகில் மகான்களுக்கெல்லாம் தீயரின் இன்னல்கள் வந்தன, வருகின்றன, வரும். மகான்கள் புன்னகைப் பொறுமையுடன் தம் இடம் அறிந்து நின்றால் புல்லார் புயல்வீச்சுகள் ஒன்றும் செய்ய முடியாது.

உள்ளன்பு மட்டும் உறுதியாயிருந்தால் இந்தப் புயலே ஒருவர் மனதில்

கிளம்பாது; ஆத்திரப் படபடப்பு வராது. அமைதியாக ஆழ்ந்த நினைவுடன், கருணையுடன், கருத்தறிந்து பழகும் நேர்மையான அன்பனுக்கு என் உள்ளன்பு என்றும் உண்டு.

என் முன்னோ பின்னோ வரும் நண்பருடைய அந்தக்கரண நாடியை முதலில் பிடித்துப் பார்ப்பேன். பிறகு தான் அளவளாவுவோம்.

உதட்டுநேசம் உமி; உள்ளான்ம நேயமே அரிசி!

## 84. பொறுத்திரு !

கவனமாய் இரு; எவர் கருமத்தையும் ஏற்காதே; அவரவர் வினையே விளைகிறது. ஒருபைசா வீணாக்காதே; உன் உணவுடைத் தேவைக்குப் போதுமான பணம் சேர்; உன் பணத்தை இறைவன் காணிக்கையாகக் கருது.

மனிதன் சிற்றறிஞன்; அனைத்தறிஞனான இறைவனையே அவன் சரண்புகுந்திருக்கவேண்டும். அவனுடைய ஏகாம்சத்தினால் எல்லா உலகங்களும் நடக்கின்றன. இறைவன் திருவருளுக்குத் தூய பாத்திரமாகி, அவனை நினைத்து, தானாக வந்த நல்ல கருமங்களைச் செய்துகொண்டு மற்றெல்லாவற்றிற்கும் சாட்சியா யிரு. அதுதான் அமைதி வழி.

உலகம் என்றால் கலகமும் இருக்கும். ஒரு வீட்டில் கொசுவும் முகட்டுப்பூச்சியும் பொறுக்கமுடியாமல் பிடுங்கினாலும் வீட்டைவிட்டுப் போகாமல் எப்படியோ சகித்துக்கொண்டு இருப்பது போலவே, உலகிலும் இருக்கவேண்டியதுதான். சித்தம் மட்டும் உலகப் பீடைகளில் ஒட்டாமல் தனித்திருக்க வேண்டும். மோகப் பற்றும் மேகப்பற்றும் ஒன்றே. அது இதற்கு அப்பன்.

உலகம் அசுரக்காடாயிருக்கிறது. அதில் தெய்வவிளக்கை ஒரு புயல் மோதுகிறது. ஆயிரம் இடர்கள் சுற்றிலும் பல்லைக் கடித்துச் சினக்கின்றன. என்றாலும் ஞானி சாந்தமாகப் பிராரப்த கருமத்தை முடித்துக் கூட்டை உடைத்துச் செல்லுகிறான். ஞானச் சிறகை யாரும் வெட்டமுடியாது; சத்தியத்தைக் கொல்ல முடியாது.

திருவருள் படிப்படியாக விருப்பங்களை நிறைவேற்றும். வைத்தவிடத்தில் வைத்தபடியிரு—பொறுமையாயிரு. அன்பு.

## 85. பகைவர் வாழ்க !

அன்பா, பகைவரை அஞ்சாதே; கெஞ்சாதே; அமைதியாயிரு.

வாசல் இருந்தால் கொல்லையும் இருக்கும். உலகிலும் நல்லது பொல்லாது சேர்ந்தேயிருக்கும். ஓர் இடத்தில் மஹாத்மா பரம சாதுவாயிருக்கிறார். மற்றோரிடத்தில் போரரக்கன் ராகெட் பாம் போடுகிறான். ஊரில் ஓரிடம் கெட்டிமேளம், மற்றோரிடம் அபசகுனக்கூச்சல் கேட்கிறது. இதே மாதிரியே நட்பும் பகையும் உலகில் எங்கும் நடமாடுகின்றன. பாண்டவர் ஐந்தேபேர்; கௌரவர் நூறுபேர்... இருவருக்கும் நடுவே ஆயுதம் ஏந்தாமல் சாட்சியாகவே யிருந்து, அறத்தைக் காத்து அதருமத்தை வீழ்த்திய அந்தக் கண்ணனை அக்காலம் அறிந்தவர் எத்தனைபேர்? ஏழெட்டுப் பேர். கம்ஸ துரியோதனாதி அசுரப்படைகள் அவனை ஒழிக்கவே கத்தி தீட்டின.

ஸ்ரீ ராமானுஜர் உயிருக்கே தப்பி மைசூருக்கு ஓடவேண்டிய தாயிற்று. கூரத்தாழ்வார் தமது ஒரு பக்திக்காக கண்ணையும் பறி கொடுக்க நேர்ந்தது.

ஏசுநாதர் சிலுவையில் இரத்தம் சிந்த நேர்ந்தது. முஹம்மது நபி கல்லெறிபட்டு மதினத்திற்கு ஓடநேர்ந்தது. சைதன்யரின் சீடரான நித்தியானந்தர் திவ்யநாம சங்கீர்த்தனம் பாடும்போது ஜகாய்—மத்தாய் என்னும் கொடிய செல்வர் கையில் அடிபட்டு மண்டை உடைய நேர்ந்தது. மகாத்மா காந்தி பகைவன் கையால் தடியடியால் பல்லுடைய நேர்ந்தது. சிறந்த கவிகளான ராஸீன், ஷேக்ஸ்பியர், மோலியர், ஹோமர், தாந்தே முதலியோர் பகைவரால் ஏளனம் செய்யப்பெற்றனர். தாந்தே உயிருக்காக ஊர் ஊராக ஓடி ஒளிய நேர்ந்தது. இப்படியே உலகில் மாசற்ற பெரியார்களெல்லாம் பகைவரிடம் வருந்தினார்கள். தாந்தேயும் ஹோமரும் தங்கள் பாடல்களின் ஒரு வரியைக்கூட அச்சில் பார்க்க வில்லை. அவர்கள் கவிதையைக் கேலி செய்தவர் பலர். போற்றினோர் பல ஆண்டுகளுக்குப் பிறகே வந்தனர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நூறாண்டுகளுக்குப் பிறகுதான் உருவாகி வெளிவந்தன. "ஷேக்ஸ்பியர் என்ற ஆளே இல்லை. பேகன் எழுதியதே எல்லாம்" என்று இன்றும் வாதாடும் புலவர்களும் உண்டு. உலகில் மிகப் பெரியவர்களுக்கே மிகப்பெரிய பகைவர்கள் முளைக்கிறார்கள். இராமனுக்கு இராவணன் வருகிறான்.

இப்படியே பார்த்தோமானால், நம்மைச்சுற்றிலும் கொந்தளிக்கும் பொறாமைப் புயலால் நாம் வருந்தமாட்டோம். இருவிகார மனத்தில் மனிதன் வசிக்குமட்டும், விருப்பு வெறுப்பாகிய இரண்டு குணங்களும், காமக்குரோதலோபமோக மதமாச்சரியங்களும் சுழன்றடித்து, சமாதானத்தைக் களைந்தே வரும். பகைகொண்ட, பொறாமைகொண்ட எந்த மனதும் நிம்மதி யடையாது. யார்மேலாவது பாய்ந்து கொண்டிருக்கும். அதிலும் சாதுக்கள்மேல் பாயக் கேட்கவேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் எல்லாம் பொறுக்கவல்லவர்கள். துளசிதாஸர் தமது இராமாயணத்தில் சாதுக்களை வணங்கியபிறகு துஷ்டப் பகைவரையும் வணங்குகிறார்; "துஷ்டர்களையும் வணங்குகிறேன். அவர்களாலேதான் நல்லோர்களின் பொறுமையும் பெருமையும் உலகிற்கு விளங்கும். நல்லோர் எனது காவியத்தை உணர்ந்து பருகுவர். பொல்லோர் அவமதித்துக் கேலிசெய்வர். ஏன்? அவர்கள் உள்ளத்திலும் கவிதையிலும் உள்ள ராமரஸத்தைப் அறியவில்லை. அறிந்தால் அவர்களும் வம்பு பேசாமல் பருகலாம். இருந்தாலும் உலகத்தில் நல்லதை அறிந்து போற்றுகிறவர்கள் மிகச் சிலரே. பொறாமைகொண்டு தூற்றுகிறவர்களே மிகப்பலர். ஒரு குயிலை ஒரு கூட்டம் காக்காய்கள் ஏளனம் செய்தால் குயிலிசையின் இனிமைக்குக் கேடாகுமா? அந்த இனிமையை ரசிக்கத் தெரியாதவர்கள் தூற்றட்டும். மனமே! நீ ராமாமிருதத்தைப் பருகி, உன் கவிதையை அவனுக்கே அர்ப்பணமாக்கிவிடு".

கலையின் ஆதர்சம் இதுதான். வங்கத்தில் தாகூரின் கவிக்கு எத்தனை எத்தனையோ எதிர்ப்புகள் இருந்தன. நோபல் வெகுமதிக்குப் பிறகே பண்டித பரிஷத் அவரை மதித்தது. பிறகுகூட குற்றம் சொன்னவர் இருந்தனர். நாமெல்லாம் உலகில் வழிப் போக்கர்போல் வந்து கூடியிருக்கிறோம். இந்தச் சத்திரத்திண்ணை யாருக்கும் நிலையோ சொந்தமோ இல்லை. இதிலிருக்கும் நூறு வினாடியில், அன்பாயிருந்து செல்லலாம். அவரவர் கடமையைச் செய்து மற்றவரின் அருமை பெருமைகளையும் மதித்து நடக்கலாம். பிறர் குணங்களைக்கூடக் குற்றமாகக் கொண்டு, பகையாடுவோர் காலத்தையே வீணாக்குகிறார்கள். பகையால் தங்கள் மனதையே கெடுத்துக் கொள்ளுகிறார்கள். சாதுக்கள் எதிலும் பற்றில்லாமல் தங்கள் கருமத்தையும் பலனையும் பகவந் நிவேதனம் செய்து செல்லுகிறார்கள். வெறுப்பும் பகையும் அமைதியைக் கெடுத்து, நரம்புகளைத் தளர்த்தி, அறிவைக் கலக்கி, ஆளை நலிக்கும் கொடிய விஷங்களாகும். உலகம் இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் சாதுக்களுக்கு ஒரு விசனமும் இல்லை. இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இருவிகார மனதிற்கே. நிர்விகாரிகளுக்குக் குணதொந்தபந்தங்கள் இல்லை. கம்பனை இன்று சிலர் உச்சிமேல் வைத்துக்

கொண்டாடுகிறார்கள். கம்பனையும் பெரியபுராணத்தையும் எரித்துவிட்டால் தமிழருக்குச் சுயமரியாதை வந்துவிடுமா? இவற்றால் அக்கவிகளுக்கு மாசில்லை. "ஐயா! கள்ளு குடிக்காதே" என்றால் "நீ யார் கேட்கிறவன். முட்டாள்! நீ தண்ணீர் குடிக்காதிரு பார்ப்போம்!" என்று குடிகாரன் எதிர்க்கிறான். உலகில் எதற்கும் விதண்டாவாதமும் போட்டியும் உண்டு. அதிலும் இலக்கியத் துறையில் பொறாமைச்சிலம்பம் அதிகம். உலகப் புலவர் வாழ்வைப் பார்த்தால் தெரியும். மஹாகவி தாந்தே, ராஸீன், மோலியர் போன்ற பெரியார் வரலாறுகளில் இந்தச் சிலம்பத்தைப் பலமாகக் காணலாம். ஏதோ நமக்குரிய கடமையை நாம் அடக்கமாகச் செய்து செல்வோம். பகைவர் என்பவர் யார்?.... நமது அன்பை இன்னும் அறிந்துகொள்ளாத நேயர்களே.... நாம் அவர்கள் அன்பை அறியும்படி இறைவனை வணங்குவோம்.... எல்லாரும் நன்றாக வாழட்டும். இராமனும் இராவணனும் சேர்ந்ததே இராமாயணம்.

நூறுதலைப் பகையின்றிப் பாரதம் உண்டோ?
　　நொண்டிச்செனி யின்றி நளன் காதையும் உண்டோ?
கூறுசெய்யத் தசமுகக் கொடிய னின்றிக்
　　கோதண்ட ராமனிசை கூறுவதுண்டோ?
மாறுசெய்யும் கம்ஸனின்றி மாதவனுண்டோ?
　　மாரனின்றி நெற்றிவிழி மாண்பறிவோமோ?
வேறுபட்ட சூரபத்மன் வீண்செருக்கின்றி
　　வீரவடி வேலனுக்கு வேலையும் உண்டோ?

## 86. வினைவிடாது

அன்பனே, திடீர்பகைவரால் நான்பட்ட பாடு கொஞ்சமா? என்னென்ன பழியெல்லாம் வந்தன! ஆனால் நான் தீமையை எதிர்க்காமல் என் வாழ்வின் பணியைத் தனிமோனத்தில் செய்து கொண்டு அமைதியாயிருந்தேன். பழிசுமத்தினவன் நரகவேதனைப் பட்டு இறந்தான். அதுகூட என் விருப்பமில்லை; அவன் மீண்டும் திருந்தி எனது நண்பனாக வேண்டும் என்று இறைவனை வாழ்த்தினேன்.

ஒரு சாது முனிவர் யோகமும் தானுமாயிருந்தார். அவர் தாந்திரசித்தர். அவரிடம் இருபாலரும் வருவதுண்டு. அவர் தமது யோக சக்தியை பக்குவமான அன்பருக்கு தியானத்தின் மூலம் பெய்து, சில சாதனங்களைச் சொல்லுவதுண்டு. அவை புலனடக்கத்திற்கு வழிகாட்டுவன. பகைவர் "சாமி பெண் பித்தர்" என ஊரெல்லாம் தூற்றினர்.

அவரிடம் ஒருவர் யோகம் பயின்றார். ஆனால் ஆணவம் மீறி தானே தெய்வம் என்று தனித்துச் சென்றார். ஆசனங்களைப் பிசகாகச் செய்து மூளைநரம்பு தளர்ந்து இறந்தார். அவருக்குச் சாது உணவுதரத் தனியாக ஒரு குடும்பத்தில் ஏற்பாடு செய்தார். அந்தப் பக்கமே போனதில்லை, ஒரு வைத்தியரையும் ஏற்பாடு செய்து ஒதுங்கியிருந்தார். அவரை அடக்கம் செய்யவும் பணம் செலவிட்டார். "என்னைக் கூப்பிடவில்லை" என்று தூற்றி, ஊரெல்லாம் அவதூறு பரப்பினான். சாது இன்னும் மௌனமாக உள்ளாழ்ந்து "இறைவனே எல்லாம் நீ அறிவாய்" என்று அடக்கமா யிருந்தார். கோளேற்றிக் கதைகட்டின ஆள் முதலில் இறந்தான்; பிறகு தூற்றல் பிரசாரம் செய்த மனிதன் நரகவேதனைப் பட்டு இறந்தான். சாது மிகவும் வருந்தினான். தூற்றுகிறவர்கள் ஒருநாள் நமது உண்மையறிந்து மனம்மாறி நண்பரானால் நல்லது. அளவுக்கு மிஞ்சிப் போனால் ஆண்டவன் பார்த்துக்கொள்கிறான். எனக்கு எத்தனையோ தங்கப் பதக்கங்களும் பரிசுகளும் கிடைத்தன. எனது கவிகளைப் போற்றி அரசாங்கமும் மரியாதை செய்தது. தங்கப் பதக்கங்களையும் கொஞ்சம் பணத்தையும் ஒரு இரும்புப்

பெட்டியில் வைத்திருந்தேன். நான் மாணவருக்கு இடங்கொடுத்து அன்பு பாராட்டினேன். ஒரு பெரிய மாணவன் நான் டில்லி சென்றிருந்தபோது, இரவில் கள்ளச்சாவி போட்டு அறையைத் திறந்து பெட்டியைத் திறந்து தங்கப் பதக்கங்கள், பணம் எல்லாம் கொள்ளையடித்து அவனுக்குச் சிநேகமான ஒரு பெண்ணிடம் தந்து உருக்கச்சொல்லி நகையாக்கிப் போட்டான். நான் திரும்பி வந்து பார்க்கிறேன். படுகொள்ளை! தங்கப் பதக்கம் தங்காது போனதும் சிவன் செயல். இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை; காவலும் தேவையில்லை என்று என்னிடம் இருந்த விலையுயர்ந்த சாமான்களைத் தானம் செய்துவிட்டு, ஆண்டவன் பணியில் ஈடுபட்டேன். திருடின இருவர் என் படத்தை துதிசெய்கிறார்கள். காலில் விழுகின்றார்கள். எனக்குத் தெரிந்துபோனது. திருடின பணத்திலிருந்து புதுச்சட்டை வாங்கி ஜம்பமாக நடக்கின்றனர். நான் ஒருவாரம் பேசவில்லை; நிட்டையிலிருந்தேன். பத்து நாட்கள் கழித்து அந்தப்பெண் விதவையானாள். அவளைத் துக்கம் கேட்கப்போன திருடன் வழியில் மோட்டார் மோதி அப்படியே மல்லாந்தான். இப்படி எத்தனையோ தருமதண்டனைகளைப் பார்த்தாயிற்று. சிறுவயதில் நான் குற்றம் செய்தால், பட்டினி யிருந்து என்னையே தண்டித்துக் கொள்வது வழக்கம். பிறர் தீமையைப் பொறுத்து, பிறருக்குத் தீமைசெய்யாதவன் மகாத்மா. தீயது செய்பவரைக் கேடு நிழல்போலத் தொடரும். பிறரைத் தூற்ற நாக்கு துடித்தால் உடனே வாயைமூடு; மனதாலேகூட பிறருக்குத் தீமை நினைக்காதே. ஆண்டவன் இருக்கிறான்; மனச்சாட்சியாக அவன் எல்லாம் அறிகிறான். தீவினைக்குத் தீமையே சேரும். நல்வினைக்கு நன்மையே வரும். பழிபாவம் தூற்றல் அவதூறு பொய் கோள் வஞ்சம் இவை உள்ள இடத்தில் இராதே. தனிமோனத்திற்கு ஓடிப்போ. ஆண்டவன் உனக்கீந்த கடமையை ஆர்வமுடன் செய்து கொண்டிரு.

சிலர் எனக்குக் கூட்டம் வரவில்லை; தினம் நூறுபேர் வருவதில்லை என்கிறார்கள். ஜயந்தி, யோகசித்தி நாள், அனுபூதி நாட்களில் கூட்டம் வருகிறது. நல்ல நிகழ்சிகள் நடக்கின்றன. தினம் ஐம்பதுபேர் வந்தால் அவர்களைக் காணவே நேரம்போகும். எனது தவமும் தடைபடும். ஆகையாலேதான் ஆண்டவன் எனக்குத் தனிமையைத் தந்துள்ளான்.

ஒரு மகாகாவியம் பாட ஆண்டுக்கணக்காக மௌனத்தவம் புரியவேண்டும். கலையைப் படைப்பவன் கூட்டம் போட்டால், நிலையான காரியம் நடவாது. கூட்டம் பல சொல்லும்; புத்தி சிதறிப்போம். எடுத்த காரியம் இயலாது போகும். பரீட்சைக் கூடத்தில் கேள்விக்குப் பதில் எழுதும் மாணவனைப்போல் உள்ளேன். வேறு கவனம் இல்லை. இறைவனும் அவன் ஏவிய பணியுமாயுள்ளேன். அன்பனே இதை அறி. என் மௌனத் தனிமையைத் தெரிந்து கொள். ஓம் சுத்த சக்தி ஓம்.

## 87. மனப் பொருத்தம்

இரண்டு கைகளும் சேர்ந்துதான் மத்தளம் வாசிக்கவரும்; அப்படித்தான் இல்லறமும். ஆண் பெண் உள்ளத்துடிப்பு இயல்பாக, அமைதியாக, பதற்றமில்லாமல், படபடக்காமல், மன மகிழ்வுடன் நடந்தால், மனைவாழ்வும் மங்கலமாகும். ஆதலால் முதல் பொருத்தம் மனப்பொருத்தமே; கண்ணும் கண்ணும் பொருந்தி அழகை மட்டும் பார்த்தால் போதாது; அழகு தோல்மட்டுந்தான்; தோலுக்கடியில் எல்லாம் ஒரே மேனிதான். சிவப்பாயிருக்கும் ராக்ஷஸிகளும் உண்டு; முல்லைச் சிரிப்புடன் வந்து தொல்லைப்படுத்தும் உடல் மினுக்கிகளும் உண்டு; கறுப்பு நிறமாயிருந்தாலும் மேகம்போலக் கருணையுள்ள ஆட்களும் உண்டு; மேலழகைவிட உள்ளழகே அழகு. அதைச் சோதித்துத் தான் காதலர் தமது வாழ்வைத் தீர்மானிக்கவேண்டும்.

*இப்போது நூற்றுக்குத் தொண்ணூறு காதலர் வாழ்க்கை சுவர்க்கக் கனவில் தொடங்கி, நரகத்துயரில் முடிவதற்குக் காரணம் உள்ளன்பில்லாமையே; உள்ளன்பு என்பது ஆன்மீகக் காதல் (Psychic Love) என்னலாம். இக்காதலே உண்மைக் காதல்; இஃதிருந்தால் போதும்; காதல் வாழ்க்கை வெற்றி பெறும். இந்தக் காதல் பொருத்தத்தையே ஈடுபார்த்தல், பொருத்தம் பார்த்தல் என்பது. ஜாதகப் பொருத்தம் மட்டும் போதாது; தசப் பொருத்தமும் கொண்ட எத்தனையோ தம்பதிகள் ஆறுமாதம் ரதிமதனார் போலிருந்து பிறகு வெருகுச்சண்டை போடுகிறார்கள்.*

*இந்தக் காதலைத் தீவிரப்படுத்தி உள்ளங்கலந்து உண்மை வாழ்வு செழிக்கவே இந்து தருமத்தில் அழகான விவாகச் சடங்குகள் விதிக்கப் பெற்றன. இந்தக்காலம் கடற்கரையிலே, பேருந்திலே, காப்பிக் கடையிலே சந்திக்கும் வாலிபர் ஒரு நொடி ஆசைத் துடிப்பினால் பதிவு மணம் செய்துகொண்டு பிறகு விவாகரத்திற்கு மன்றாடுகிறார்கள்.*

***இந்து தருமம் அறிந்தவர்கள்:***

*1. முதலில் மனைவாழ்வில் அனுபவம் உள்ள பெற்றோரும் பெரியோரும் சரியான குலமும் குணமும் பார்த்துப் பெண்ணையோ பிள்ளையையோ தீர்மானிக்கிறார்கள்.*

*2. தீர்மானித்த பெண் பிடித்திருக்கிறதா என்று பிள்ளையைப் பார்க்கச் சொல்லுகிறார்கள். பெண் பார்க்கப்போவது வெறும் சம்பிரதாயம் அன்று. அது ஒரு வைத்தியசோதனை போன்றது. வெறும் பட்டையும் பகட்டுச் சாயத்தையும், ஹார்மோனிய அலறலையும் பார்த்துப் பெண்ணைத் தீர்மானிக்க முடியாது. இந்தக் காலம் பாட்டுடன் பரத நாட்டியமும் வேண்டியிருக்கிறது. இதுமட்டும் போதாது. நாட்டுப்பெண் நாட்டியப் பெண்ணில்லை; நாட்டுப்பெண் வீட்டுத் திருமகள்; அவளுக்கு வீட்டை நிர்வாகிக்கத் திறமை நிரம்ப வேண்டும்.*

*கல்வியறிவு, காரியக்கருத்து, குணநலம், நிதானம், பேச்சு, நடை எல்லாம் பார்த்தே பெண்ணைத் தீர்மானித்தல் வேண்டும். சும்மா முறைவிட்டுப்போகும், சொத்திருக்கிறது, தாட்சண்யம் என்று கண்ணை மூடிக்கொண்டு ஜானுவாசம் நடத்தக்கூடாது.*

*3. மணவாழ்வு ஒரு பயிற்சி; இப்பயிற்சி கல்லூரியில் தொடங்கவேண்டும். ஆண் பெண் இருவரும் பிரமசரியம் காத்து காலத்திற்கேற்ற கல்வியுடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய ஆத்மீகப் பயிற்சிகளையும் பெறவேண்டும். ஆண்பெண் இருவரும் வீட்டு நிர்வாகம் கற்கவேண்டும். மானமாகப் பிழைக்க ஒரு தொழிலைப் பயிலவேண்டும். இல்லறத்திற்கேற்ற ஆகார—சுகாதார அனுஷ்டானங்களைப் பள்ளிப் பருவத்திலேயே இருவரும் பழகவேண்டும். கல்வி முடியும் மட்டும் மனதை அடக்கி வைராக்கியமாயிருக்கவேண்டும். தக்க பருவமும் தகுதியும் வந்த பிறகு, இயற்கையே இல்லற வாழ்விற்குத் தூண்டும். உள்ளமே 'இதோ உன் காதலி' என்று காட்டும்.*

*4. மனமொத்த காதலர் ஓராண்டு பழகி ஒருவருக்கொருவர் குறைநிறைகளை அறிந்து திருந்திய பிறகு, மணையில் உட்காருவதே நல்லது. கடிதங்களாலும், கலந்து பேசுவதாலும், உலாவுவதாலும், பொதுக்காரியங்களில் இருவரும் கருத்தூன்றுவ தாலும் ஒருவரையொருவர் நன்றாய் அறியலாகும். இப்படி அறிந்து மணவினையைத் தீர்மானிப்பதுவே நிச்சிதார்த்தமாகும். இதுதான் திருமண வாழ்விற்கு அங்குரார்ப்பணமாகும். காதலர் நன்றாகப் பழகி ஒருவரை ஒருவர் அறிந்து சம்மதித்து மணம் புரிய உறுதி கொள்வதுதான் நிச்சிதார்த்தம். இந்தக் காலம் நிச்சிதார்த்தம் என்றால்(வரதட்சிணையை எண்ணிக் கீழே வைத்தல், நகை நட்டு பாத்திரங்களுக்காக ஒப்பந்தம்) முழுதும் வியாபாரமாய் விட்டது. உண்மையான நிச்சிதார்த்தம் மனப்பொருத்தமே.*

5. இந்த உள்ளக்கலப்பைத் தீவிரமாக்குவதுதான் திருமணம். திருமணச்சடங்குகளெல்லாம் சதிபதிகளின் இதய ஒருமைக்கே ஏற்பட்டன. பாலிகை, ஓமம், மாங்கல்யதாரணம், உடனுண்ணல், நலங்கு, பூலாச்செண்டு, ஊஞ்சல், நாகவல்லி முதலிய எல்லாச் சடங்குகளும் காதலர் கருத்துறவுக்கே ஏற்பட்டன. இந்தக் காலம் சடங்கு—புரோகிதங்களை வெறுக்கிறது. அவசரக் காதலர் மோதிரம் மாற்றிக்கொண்டு ஜோடியாக சினிமா பார்க்கச் சென்றாலும் போதும், நண்பருக்கு ஒரு விருந்திட்டு, அதிலேயே பிரசங்கம் பண்ணச் சொல்லி இருவரும் மணம்புரிந்ததாகக் காட்டினாலும் போதும். இந்தக் காலப் பெண்கள் இருபது முப்பது வயதிற்கூட மணம்புரிகிறார்கள். முப்பது வயதுப் பெண்ணையும் நாற்பது வயது மாப்பிள்ளையும் தோள்தூக்கி மாலை மாற்றுவது நகைப்பிற் கிடமாகும். முற்காலம் வினாத் தெரியாத சின்னஞ் சிறுசுகளை மணையில் அமர்த்தினார்கள். அந்தக் காலம் போனது. இப்போது மனுவைத் தாண்டி, பராசரரையும் தாண்டி வயதேறி, இருபது முப்பதிற்கும் மேலே மணவினை பலவிதமாக நடக்கிறது. ஜாதகம் பாராமல் பெரியோரைக் கேளாமல், அவசரக் கலப்பும், கலப்பு மணமும் பெருகிவருகின்றன. பூச்சழகும், வீச்சழகும், பேச்சழகும் கண்டு மயங்குகின்றனர்; கையில் இருந்தால் மையல், பணம் சுரந்தால் மணம்; பணம் கரைந்தால் சினம்; ஈடு இணைப்புப் பாராமல் எப்படியெப்படியோ வாலிபர் கூடுகின்றனர். சிற்றின்பம் தேடுகின்றனர்; பற்றின்பம் பாழானதும் வாடுகின்றனர். இன்னோரிடத்திற்கு ஓடுகின்றனர்.

மனப்பொருத்தமும் இனப்பொருத்தமும் உடலுறுதியும் உள்ளுறுதியும் அறிவும் திருவும் அன்பும் ஆர்வமும் வயதும் வனப்பும் பார்த்து, முறையான திருமணம் புரிந்து, அறம்பொருள் இன்பம் நிறைவாகத் திருமணம் புரிந்தால் குறைவில்லாது மங்கலமாக மனையறங்காத்து மகிழலாம். மக்கள் கூட்ட வாழ்வில் மணவினை மிக்க மாண்வினையாகும். அதை நிறைமுறையாகச் செய்தால் உலகம் நலம்பெறத் தழைக்கும். ஓம்.

## 88. குடும்பத்தில் வாழ்வது எப்படி ?

அன்பனே, உனக்குக் குடும்பம் உள்ளது. அதை நன்கு பேணு.

வீடே நாட்டின் உயிர், ஆதலால் வீட்டை நாட்டைப் போலவே பாதுகாக்கவேண்டும். வறுமை, மடமை, அடிமைத் தனம் இம்மூன்றும் நாட்டிற்கு எப்படி விரோதிகளோ, அப்படியே வீட்டிற்கும் விரோதிகள். இம்மூன்றையும் ஒவ்வொரு வீட்டினின்றும் விரட்டியடிக்க வேண்டும். இல்லறத்தார் முதலில் பொருளாதார சுதந்தரம் பெறவேண்டும். உண்ண, உடுக்க, இருக்க, படிக்க, கலைவளர்க்க, இயன்ற அறஞ்செய்ய போதிய வளமை பெறவேண்டும். பசிதீர ஒவ்வொருவரும் ஒரு தொழிலைத் தீவிரமாகப் பயின்று அதன்மூலம் வீட்டிற்கும் சமுதாயத்திற்கும் உதவி செய்யவேண்டும்.

வேததருமமும், பகவத்கீதையும், வள்ளுவர் குறளும் ஈசுவரார்ப்பணமான வாழ்க்கையை வற்புறுத்துகின்றன. நாம் செய்யுந் தொழிலெல்லாம் ஆத்மீகசக்திபெற்ற சுதந்தரத் தொழிலாக்கிவிடலாம். இதற்காகவே நமது பெரியோர்கள், எதைச் செய்தாலும் எதையுண்டாலும் தெய்வத்திற்கு நிவேதனமாகச் செய்தனர். வாழ்க்கையின் அடிப்படையில் ஆத்மீக உணர்ச்சி புகுந்தால் வாழ்க்கையே கர்மயோகமாகும். இல்லறம் என்பது வீட்டிற்கும் நாட்டிற்கும் பொதுநலமான கர்மயோகமே. அதன் அடிப்படை தியாகம்; அதன் மேல்வரிசை மங்களமான குடும்ப வளர்ச்சி; அதன் உச்சம் ஞானம். பகவத்கீதையில் "ஸர்வம் தர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதி" என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது, உலகில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அந்தராத்மனாகிய பகவானுக்கே நாம் அர்ப்பணமாகச் செய்தால் சுயநல அகங்காரம் நம்மைவிட்டு விலகும். ஆணவம் தேயும். மனம் படிப்படியாகப்

பக்குவமாகும். முடிவில் மனம் முழுதும் ஈசுவரனுக்கே சரணாகதியாகி அவன் அருளுக்குப் பாத்திரமாகி ஞானப்பொலிவெய்தும். இந்தக் காலத்தில் உடை மினுக்கும், நடை மினுக்கும் ஓட்டல் சாப்பாடும், கைகுலுக்கும் நாகரிகங்களும் வஞ்ச லஞ்ச பிழைப்புகளும், இப்படிப்பட்ட உன்னதமான ஆதர்சங்களுக்குக் குறுக்கே நின்றுகொண்டிருக்கின்றன.

காலத்திற்கேற்ற யுக தருமத்தை நாம் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், யுகதருமம் சனாதன தருமத்தில் வேரூன்றினாலே மலர்ந்து கனிந்து, தர்ம-அர்த்த-காம-மோட்சமாகியபுருஷார்த்தங்களைத் தரும். இக்காலத்தில் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் விவகாரம் நடக்கிறது. உலகமெங்கும் பௌதிக ரஸாயன சாஸ்திரங்கள் அற்புதங்களைச் செய்கின்றன. எத்தனையோ புதிய புதிய யந்திரக் கலைகள் மனித வாழ்வையே அடியுடன் மாற்றி முன்னேற்று கின்றன. சென்னை ஹைகோர்ட்டில் ஒரு வழக்கிற்கு ஆஜராக வேண்டிய வக்கீல் துவாதச நாமம் போட்டுக்கொண்டு உச்சிக் குடுமியைக் காற்றாட நீட்டிவிட்டு, கட்டை வண்டியில் ஏறிச்செல்ல முடியாது. அவருக்கு உத்தியோகத்திற்கு ஏற்ற வாகனமும் உடுப்புகளும் அவசியம் வேண்டும். முன்னோர் சவாரிசெய்த ஒற்றை மாட்டுவண்டி மோட்டாருடன் போட்டிபோட முடியாது. ஆதலால் காலத்திற்குத் தகுந்த சௌகரியங்கள் அவசியம் இருக்க வேண்டும். ஆனால், நாகரிக மோட்டாரில் கண்ணை மூடிக் கொண்டு ஜம்பமாகச் செல்லக்கூடாது. தெருவில் கண்பார்த்து மனதில் கருணையுடன் அதை ஓட்டவேண்டும். அதுபோலவே இல்லற தருமத்தில் காலத்திற்கேற்ற பழக்க வழக்கங்களைக் கையாளும்போது இயன்றமட்டும் நம்முடைய சதாசாரங்களையும் பின்பற்ற வேண்டும். இல்லறத்தார் அவரவர்களுக்கு உரிய நித்திய கர்மானுஷ்டானங்களைக் காலத்திற்கேற்றபடி செய்து, சித்த சுத்தியுடன் வாழ்ந்தால் சுகம் பெறலாம். நல்ல பலவானாகவும், புத்திமானாகவும், சக்திமானாகவும், புலவனாகவும் சுறுசுறுப்பான தொழிலாளியாகவும், தியாகியாகவும், சுத்தபோகியாகவும் இல்லறத்தான் விளங்கவேண்டும். இதனால் உழைப்பு பிழைப்பு இரண்டும் அமைதியாக நடக்கும்; மனக்குறை இராது. சதிபதிகளுள் அன்பும், ஆத்ம நேசமும் அதிகரிக்கும்; புலன்கள் கண்டபடி குரங்குபோல் தாவித் திரியாமல் உள்ளடங்கி, ஆத்மாவிற்குக் கட்டுப்பட்டு நடக்கும். காமக்குரோதாதிகள் கிளம்பாமல் ஒழியும். வீட்டுச்சண்டை இராது. வீண் வம்பும் வழக்கும் அரட்டையும் கூச்சலும் ஒப்பாரியும் தலையணை மந்திரமும் இல்லாமல் குடும்ப வாழ்க்கை அன்பும் அறிவும் அருளும் அறமும் சேர்ந்த இன்ப வாழ்க்கையாகும். நமது சாஸ்திர விதிகளெல்லாம் சுகாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டன. சில விதிகளாவன:

1. செய்வதெல்லாம் திருவாராதனமாகச் செய்தல்.
2. காலை மாலை தியானம், ஜபம், சூரிய நமஸ்காரம்.
3. தக்க தேகப்பயிற்சியுடன் பிராணாயாம சாதனம்.
4. தினம் இரண்டுவேளை சாத்வீக உணவு;
   இடைவேளை நீர்மோர், இளநீர், அல்லது தூய தண்ணீர் பருகுதல்
5. சிற்றின்ப விஷயத்தில் மிகவும் கட்டுப்பாடாயிருத்தல்;
   நாதவிந்துக்களை சந்ததி அபிவிருத்தி தவிர, வீணாக்காமல் காத்தல், கனவிலும் வியபிசாரமின்மை.
6. ஒரு தொழிலால் வீட்டிற்கும் நாட்டிற்கும் உதவுதல்.
7. மக்களை அறிவும் ஆற்றலும் சன்மார்க்கமும் ஓங்க வளர்த்தல்.
8. எப்போதும் கவலைக்கு இடங்கொடாமல், நோய்க்கு இடங்கொடாமல், வீடுகளைப் பொறுப்புடன் போற்றி உடலும் உயிரும் மனமும் திடமாயிருந்து பக்தியும் பரோபகாரமும் செய்தல்.

9. சுற்றத்தாரிடம் அன்புடன் நடத்தல். நமது கைகால்களை எப்படிக் கவனிக்கிறோமோ, அப்படியே உறவினரையும் உலகினரையும் நம்மால் முடிந்த மட்டும் கவனித்து உதவுதல்.

10. ஒவ்வொருநாளும் குறைகளைக் கண்டுபிடித்து நீக்கிப் பூரணம் பெற முயலுதல். மனிதன் தெய்வத்தன்மை பெறுதலே இல்லறத்தின் சிறந்த பயனாகும். இல்லறம் நல்லறமாகப் பொலிக!

## 89. இல்லற இன்பம்

புது மணவாளர் பொலிக! நீங்கள் இன்பம் வேண்டுகிறீர்கள். இன்பம் என்றால் உடனே ஆண் பெண் இன்பமே நம்மவர் எதிரே வந்து நிற்கும். ஆனால் இந்த இன்பம் என்ன, எதற்கு, எப்படி நுகர்வது என்பதைப் பலர் அறிவதில்லை; விலங்குகள்கூட இன்பப் பண்பை அறிந்து பருவம் பார்த்து நுகர்கின்றன. பகுத்தறிவுள்ள மனிதர் இந்த விஷயத்தில் புலன்களுக்கு அடிமைப்பட்டு நலங் கெடுகிறார்கள். சிற்றின்பம் பேரின்பப் படியை எட்டும்படி இல்லற வாழ்வை பாரதநாட்டு மஹரிஷிகள் அழகாக வகுத்திருக்கிறார்கள்.

புருஷார்த்தங்களில் நடுநாயகமாயிருப்பது இல்லற இன்பம்; அதற்கு ஆதாரமாயிருப்பது அறமும் பொருளும். அதற்குச் சிகரமா யிருப்பது ஜீவன் முக்திதரும் மோக்ஷம். நடுநாயகமான இல்லறத்தைக் காப்பதே மற்றப் புருஷார்த்தங்களையும் காப்பதாகும். ஏனெனில், இல்லறமின்றி இவ்வுலகில்லை. இல்லறம் நல்ல முறையில் நடந்தால் நாடு இன்புறும்; ஏனெனில் வீடுதான் நாடாக விரிகிறது. வீடெப்படி நாடப்படி.

வள்ளுவர், மனு, பராசராதி முனிவர் இல்லற விதிகளை ஆணித்தரமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றைப் பின்பற்றி நடந்தால் முன்னேறலாம். அலட்சியம் செய்து தான்தோன்றித் தனமாகத் தட்டழிந்தால் நோயும் துயரும் கட்டும் கவலையும் ஆளை நரகப்பிண்டமாக்கும். நாட்டைச் சுற்றிப் பார்த்தால், செழிப்புள்ள உலகத்தைக் காண்பதே அரிதாயிருக்கிறது. பணமிருக்கிறது; சுகமில்லை. ஆ! படுக்கையில் நெளிகிறான். இங்கே விருந்தும் அங்கே மருந்துமாய் நாட்கள் நடக்கின்றன. ஓர் மருத்துவச்சாலையில் புகுந்து பார்த்தால் மனம் அருவருத்து நடுங்கும்படியாக நோய்கள் பயங்கர உருவெடுத்துக் காண்கின்றன! வெள்ளை, வெட்டை, ஆப்பு, பௌத்திரம், மகோதரம், சூலை, மேகநீர், சோகை, நீரிழிவு, மூலம், குஷ்டம், ஐயோ கஷ்டம்! எத்தனை இழவு நோய்கள் இந்த எண்சாண் உடம்பைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு எமலீலை நடத்துகின்றன. எத்தனை பெண்கள் அபாயமான நோய்களைப் பொறுமையாகத் தாங்கிக்கொண்டு வீட்டுவேலை செய்கிறார்கள்! ஆடையணிகளின் அழகுக்குப் பின்னால் எத்தனை மனத்துயரும் உடல் நோயும் வாழ்வை அரிக்கின்றன; முகத்தைச் சாயம்பூசி மினுக்கலாம்; ஆனால் மேகத்தையும், இரத்த சோகையையும் எப்படி மறைக்க முடியும் ! இல்லற வாழ்வு கவலை நரகமாயிருக்கிறது; எத்தனைபேர் எங்காவது ஓடிப்போகலாம் என்று அடியெடுத்து வைக்கிறார்கள்! ஓடவும் மனமில்லை; வாசற் படியைத் தாண்டும்போதே பாசம் உள்ளே இழுக்கிறது!

இல்லறம் நல்லறமாவதற்குப் பதிலாக மல்லறமாகி வருகிறது. அன்பும் கொஞ்சலும் ஆறுமாதம். பிறகு பூனையும் வெருகுமாக வாய்ச்சிலம்பம் தொடங்கி வம்பு வழக்காகிறது! கணவன் மனைவிக்குப் பிணக்கு. மாமியார் நாட்டுப்பெண்ணுக்குச் சண்டை. வம்பர் மாசபையின் நாக்கு நீட்டம்—எல்லாம் பார்த்தால் இல்லறம் ஒரு போராட்டப் பேய்க்களமாகத் தோன்றுகிறதே யொழிய ஒரு புருஷார்த்தமும் அடையும்படி இல்லை.

நமது நாட்டில் வறுமைத்துயரால் இல்லறம் இன்னலாகிறது. அத்துடன் வாழத்தெரியாத மடமையால் நோய்க்காடாகிறது வீடு.

மேற்கே திரும்பினால் படுமோசம்; ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இது

நான் கண்டது. என் வெள்ளைக்கார நண்பர் ஒருவர் நல்ல சம்பளக்காரர்; அவர் வேதாந்தம் பேசுவார். கூடத்தைத் தாண்டுமட்டும் வைராக்கியமாகவேயிருப்பார். அவர் மனைவியோ, சாய்வு நாற்காலியில் படுத்து நாவலும் பத்திரிகையும் படிப்பாள்; சமையல்காரியை அதிகாரம் செய்வாள்; சேவகரை மிரட்டுவாள்; எட்டுவேளை கண்டதெல்லாம் கம்பெனியில் வாங்கி வந்து தின்பாள்; நண்பர்களுக்கு அடிக்கடி விருந்து வைப்பாள்; மோட்டாரில் புறப்பட்டுக் கண்ணில் தட்டுப்பட்ட அழகான சாமான்களையெல்லாம் வாங்குவாள்; நண்பருடன் குடித்து நடனமாடுவாள்; அப்போது கணவன் அழைத்தால் 'சீ அநாகரிகம்' என்று சீறுவாள்; அடிக்கடி கோடைக்கானல், பங்களூர்களுக்குச் சென்று நண்பரைக் கூடிக்களித்து ஐநூறு, அறுநூறு தண்டம் வைப்பாள். புதுப்புது உடைகள் தைப்பாள்—யாராவது தடுத்துச் சிக்கனமாயிருக்கச் சொன்னால் புஸ்ஸென்று சீறி மிரட்டுவாள். தாராளமாகச் செலவிட்டுக் கணவன் பெயரில் பற்றெழுதி விடுவாள். அந்த அப்பாவி பாடுபட்டுச் சம்பாதித்ததெல்லாம் அவளுக்கே தந்து, மேற்கொண்டு கடனும் வாங்குவான். அவள் நோயால் படுத்தாலோ டாக்டர் கூத்து பெருங்கூத்து.

இப்படிப்பட்ட இல்லாளைக் கொண்டு இல்லறம் எப்படி நடக்கும்? வீட்டுக் கருத்தில்லாத வீதி மினுக்கால் இல்லறம் ஒளி யிழந்து வருகிறது.

மானவதர்மம் இல்லறத்திலேதான் உயிர்வைத்திருக்கிறது. வீட்டில் விளக்கேற்றும் குலமகளே, இந்து தர்மம் வாழவேண்டு மானால் பெண்கள் வீட்டுக்கருத்துடனிருக்கவேண்டும். ஆண்கள் இதமறிந்து வீட்டைத் தாங்கவேண்டும். இல்லறம் இருவர் கூட்டுறவால் இனிது நிறைவேறவேண்டும் என்பதை இருவரும் நினைப்பில் வைத்துக்கொண்டு வாழ்க! வாழ்க !

## 90. கடவுளை நம்பு!

அன்பு.

எம்பெருமான் அந்தர்யாமியாயிருந்து உன்னை நாள்தோறும் பக்குவப்படுத்துகிறான். மூன்றாண்டுகளுக்கு முன் உனது நிலைமை என்ன? இன்று எப்படி? யோசி. இப்படியே மனம் பக்குவமாகி மேன்மேலும் வழிதுலங்கும். இறைவன் வைத்த இடத்தில் வாழ். அவன் உன் அந்தக்கரணத்தைப் பார்க்கிறான்.

அந்தரங்க சுத்தியுடன் அகம்பாவமில்லாமல் மதுரகவி ஆழ்வார் சடகோபருக்குத் தொண்டுசெய்ததுபோல் தொண்டுசெய்.

உலகில் கோள், பொய், வஞ்சம், சுயநலம், திருட்டு, பாசாங்கு, காமம் பொறாமை எத்தனையோ கசண்டுகள் நிரம்பிக் கிடக்கின்றன. நாற்பது வருஷம் மூலையில்போட்ட செம்பு, களிம்பு பிடித்துப் பாசியேறிப் போகிறது. அதைத் தீயில் வாட்டி, புளியில் ஊறவைத்து, கரகரவென்று நாரும் செங்கற்பொடியும் போட்டுத் தேய்த்தல்லவா சுத்தம்செய்யவேண்டும்? மனிதர் படும் துன்பம் எல்லாம் திருவருள் வெள்ளாவி வைத்து அந்தக்கரணசுத்தி செய்வதுதான். ஆதலால் திருவிளையாடல்களை நாடகம்போலப் பார்; ஒழிவதெல்லாம் அழிவது; எல்லாம் நன்மைக்கே. உன் கடமையை ஆராதனையாகச் செய்.

ஒவ்வொருவருக்கும் இன்பதுன்பங்கள் அளந்து வைத்திருக்கும். எதிலும் பட்டுக்கொள்ளாமல் இறைவனையே பற்றி நிற்பவனே பாக்கியவான். நிம்மதியாயிரு; எல்லாம் நாளடைவில் அவன் செயலால் நடக்கும். கலங்காதே; கடவுளை நம்பு.

## 91. ஜபம் செய்

*அன்பு.*

*அருளோங்குக! அன்பு என்னும் பொருள் உலகளாவியது! அஃது அகங்காரம் இல்லாத உள்ளத்தில் ஊறும் அமுதம். அது கிடைத்துவிட்டால் நான், நீ, அவன், அவள், என் சாதி, உன் சாதி, என்ற பேதமின்றிச் சிறு துரும்பையும் இமாலயம்போல் மதித்துக் கௌரவப்படுத்தி வாழலாம். ஆ! ஒவ்வொன்றிலும் திருவருள் செய்யும் அற்புதத்தைக் கண்டால் எதையும் அவமதிக்கவோ, நான் எனது என்று செருக்காடவோ மனிதனுக்குத் தோன்றாது.*

*உலகில் வரும் துக்கங்களையெல்லாம் பக்குவச் சம்மட்டி யடிகள் என்று தாங்குக. இதற்கு எத்தனையோ திருவருட்பூசை விழுந்தது. இலட்சம் இழந்தாலும் அருளைவிடாது பற்றிக் கொண்டதால் இலட்சியம் நிறைவேறியது. உலகைக் கண்டு கலங்காதே. உன்னையறி - உள்ளே யிரு. மந்திரமிளகை ஒரு சீசாவில் போட்டுவைத்துக் காலையில் பல் விளக்கி அனுட்டானம் முடித்து ஐந்து மிளகு மென்று நன்னீர் குடித்துவருக. உடனே ஜபமாலையில் ஒரு சுற்று சுத்தசக்தி ஜபம் செய்து அலுவலைக் கவனிக்கவும். பசி கண்டதும் சுசி ருசியாகச் சாப்பிடலாம்.*

*உள்ளன்பு எல்லாரிடமும் இருக்கட்டும்; வெளியுறவு அவரவர் இயல்பறிந்து. ஆன்ம உறவே உறவு, உதட்டு நேசம் உதவாக்கரை, உள்ளான்மநேயமே உண்மை நேயம்.*

### உலகை அஞ்சாதே

*அன்பனே,*

*உலகை அஞ்சாதே; கலங்காதே. எது வந்தாலும் நல்லது தான். என் வாழ்வில் எனக்குக் கிடைத்த லாபத்தைவிட நான் அடைந்த நஷ்டத்தினாலேதான் ஆத்மலாபம் அதிகமானது. வழி தப்பிச் செல்லும் குதிரையை லகானைச் சுண்டியிழுத்து ஒரு சவுக்கடி தந்து திருப்புவதுபோல், இறைவன், நான் சிறிது வழி தவறினாலும் கடுமையாகத் தண்டித்து என்னைத் திருத்தினான். உலகில் மனிதன் பணத்தில் புரளுமட்டும், சிற்றின்பத்தில் கொட்ட மடிக்கும் மட்டும் ஆண்டவனையோ, ஆத்ம சுத்தியையோ நினைப்பதேயில்லை. இடர்கள் வரும்போதுதான் ஆணவத்திற்கு ஒரு அடி விழுகிறது. ஆன்மா ஆண்டவனை முறையிட்டு அழைக்கிறது. துன்பம் வரும்போது கலங்காதே; ஒவ்வொரு துன்பமும் மனதைப் பக்குவப்படுத்தி, சுக்கானைத் திருப்பி, இறைவனிடம் உன்னைச் சேர்ப்பதற்கே வழியாகும். திருவருட் சோதனையை அறி. முன்னிலும் உறுதியாக அன்பு செய். சோதனையின்றிச் சாதனையில்லை. எல்லாம் நன்மைக்கே.*

## 92. என்ன செய்வது ?

*அறிஞனே, சுற்றிப்பார்!*

*உலகநிலை வரவர வழவழா! எத்தனையோ யந்திர சாதனங்களும் நாகரிக மினுக்குகளும் மனிதவாழ்வை எளிதாக்கப் பார்க்கின்றன. ஆனால், வாழ்வின் புதிர் சிக்கல் மேல் சிக்கலாகிக் கொண்டே வருகிறது. தேசநிலையைக் கண்டால் மனம் திடுக்கிடுகிறது! காஷ்மீர் படையெடுப்பும் முரடர் அட்டகாசமும் இந்தியாவின் உச்சந்தலையில் உழக்கு ரத்தம் வரக்குட்டியது போல் இருக்கின்றன. பாக்கிஸ்தான் வாய் வெடிகள் இப்போது போர் வெடிகளாகவே கிளம்புகின்றன. இந்துமதம் அபாயத்திலிருக்கிறது. அதை யார் கவனிக்கிறார்கள்? அரசியல் நிலை அமைதி தரவில்லை. மஹாத்மா கூடப் பட்டினியிருக்க நேர்ந்தது. ஒற்றுமை உடன்படிக்கை எழுதி, அனைவரும் கையெழுத்திட்டு ஒரு நாளாக வில்லை. மஹாத்மா பிரார்த்தனை நடத்தினார். அவரையும் சுட்டுக் கொன்றான் துரோகி. தேசத்தந்தை ஹேராம் என்று தியாக பலியானார். நாட்டின் நிலைமை யாருக்கும்*

தெளிவே.

நம்முன் பலகடினமான பிரச்சனைகள் பயங்கரமான உருவெடுத்து நிற்கின்றன. முதல் பிரச்சனை அன்னவிசாரம். நாடெங்கும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. பருவ மழை பெய்யாமல் நட்ட பயிர்கள் வாடுகின்றன. விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்களும் மிகக் குறைவாயிருக்கின்றன. நல்ல வளர்ச்சி பெற்ற மாடுகள் இல்லை. மாடு வளர்க்கும் கலையே நம்மவருக்கு மறந்துபோனதுபோலத் தெரிகிறது. ஏராளமான பசு மடங்களும் பண்ணைகளும் வைத்துப் பால் பொழியச்செய்த நமது நாட்டார் இன்று மாட்டிற்குப் பசும் புல் போடக்கூட வழியில்லாது தவிக்கின்றனர். பிண்ணாக்கு பருத்திக்கொட்டை வைத்துப் போஷிக்கக்கூட விதியில்லை. ஆளுக்கே வயிறு வாடும்போது ஆடு மாடுகளை எங்கே தேடப்போகிறார்கள்? விவசாயிகளுக்குச் சரியான உரம் தந்து, புதுமுறையான விவசாயக் கலையும் கற்பிக்க வேண்டும். தற்கால விவசாயக்கலை வெகு தீவிரமாக முன்னேறி யிருக்கிறது. அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், ரஷ்யாவிலும் மண்ணைப் பொன்னாக்கும் பயிர்க்கலை வளர்கிறது. விவசாயிகளுக்குப் போதிய நிலம், யந்திரக் கலப்பை, விதை, நெல், உரம், மின்சார வசதிகள்........இவை தந்து அங்கே அவர்கள் கவலையற்றுப் பயிர்த்தொழிலை வளர்க்கச் செய்கிறார்கள். இங்கே நமது நாட்டில் வருஷமெல்லாம் பாடுபட்ட விவசாயி ஏங்கிய முகமும் எக்கிய வயிறுமாகக் கவலை சுமந்து கண்ணீர் விடுகிறான். பஞ்சம் நாட்டைப் பயமுறுத்துகிறது. நூற்றுக்குப் பதினைந்துபேர் உணவில்லாமல் தவிக்கிறார்கள். பத்து அவுன்ஸ் ரேஷனுக்கும் மோசம் வந்துவிட்டது. பட்டினி, நாட்டை படையெடுக்கிறது. "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்றபடி பசியால் வருந்தும் ஜனங்களின் பொறுமையும் ஆத்திரப் படபடப்பாகிப் புரட்சி செய்யத் தொடங்கும். ஆகையால் சர்க்காரின் முதல் கடமை உணவுப்பொருளை அதிகமாக்குதலே. கிராமம் கிராமமாகக் கலெக்டர்களும் உத்தியோகஸ்தர்களும் சென்று விவசாயிகளின் நிலைமையை அறிந்து சரியானபடி அவர்களை ஆதரித்து ஊக்கி வேலை தரவேண்டும். விவசாயிகளின் கடன் பளுவைத் தீர்க்க வேண்டும். அவர்களுக்குக் கண்ட மிச்சத்தைத்தான் சந்தைக்கு அனுப்பவேண்டும். எந்த உழைப்பும் பிழைப்பும் சரிசமனாக வேண்டும். எந்த உழைப்பாளியும் இனிப்பட்டினியிருக்கக் கூடாது. எல்லாருக்கும் பொருளாதாரச் சுதந்தரம் வேண்டும். பயிர்த் தொழில் கைத்தொழில் இரண்டும் வளம்பெற்றால் வறுமை ஒழியும். இதை நமது மந்திரிகள் சாதிக்கவேண்டும். ஜில்லா அதிகாரிகள் எல்லாத் தொழிலாளிகளையும் ஊக்கி மண்ணை வளப்படுத்தி கனியும் கிழங்கும், தானியமும், பாலுந்தேனும் பொழியச் செய்யவேண்டும். இதுதான் முதலான வேலை. பசும் புரட்சி வெல்க!

இதற்கு அடுத்தவேலை கல்விப் பணி. உயர் தரக் கல்லூரிகளைப் பெருக்கிப் பயனில்லை. பலர் எழுத்தறிவே இல்லா திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கல்வி புகட்ட ஏராளமான ஆசிரியர்களும், கல்வி நிலையங்களும், நூலகங்களும் காலத்திற் கேற்ற கருவிகளும் தந்து அறிவை எங்கும் பரப்பவேண்டும். அறிவினாலேதான் வெள்ளைக்காரர் உலகை ஆளுகிறார்கள். தொழிலினாலேதான் செழிக்கிறார்கள். காலத்திற்கேற்ற பண்பினாலே செல்வாக்குப் பெறுகிறார்கள். நாம் உலகை அறிந்து எல்லாவிதத்திலும் திருந்தவேண்டும். நம் இளம் குடியரசைப் பாய்ந்து கௌவ வலியபுலிகள் அணுசக்தியுடன் சுற்றி நிற்கின்றன. கூப்லாந்து திட்டப்படிதான் நமது பாரதத்தைக் கத்திரிக்கோல் போட்டுப் பிரித்திருக்கிறார்கள். பகைவர் மகுடி ஊதி விஷப் பாம்பைக் கிளப்புகிறார்கள். அணுசக்தி ஆயுதங்கள்பெற்ற சீனம் சினங்கொண்டு தாவுகிறது. சீனம், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய மூன்றும் அரசியலின் திரிசூலங்கள். இந்தியா தன் சக்தியை வளர்த்துத் தன்னம்பிக்கையுடன் தயாராயிருக்கவேண்டும். நல்ல உணவு தந்து மக்கள் வீறுபெறச் செய்து எல்லாருக்கும் இராணுவப் பயிற்சி தந்து, ஜப்பான் போல நாட்டை வீரப்பொலிவுறச் செய்ய வேண்டும். இப்போது

அன்னிய உதவியைக் கொண்டே பல பெருந்தொழில்கள் நடக்கின்றன. நம்மவரை நன்கு பயிற்றி அத் தொழில்களை நாமே நடத்தவேண்டும். ஜப்பான் போல நாமும் வலிமை பெறவேண்டும். மெலிவு துயராகும். பசும் புரட்சி பரவுக! நாடுபலம் பெறுக! பகைவர் நடுங்கப் படையூற்றம் ஓங்குக!

நாட்டுக்கு நல்லது சொல்வேன்—இங்கே
    நல்ல பயிர்வளம் வேண்டும்
தீட்டிய வீரப்படையால்— பகைத்
    தீதை யழித்திட வேண்டும்
இந்திய நாட்டிற் பிறந்தார் — எல்லாம்
    இந்தியரே எனல் வேண்டும்
சிந்தை உயர்ந்திட வேண்டும் —— யோக
    சித்தி தழைத்திட வேண்டும்.

## 93. வேத நெறி

அன்பனே, நமது நாட்டுக்கு வழிகாட்டி வேதம்; அது காட்டும் வழியே நடந்தால் நலமாகும், பலமாகும், உலகம் ஒன்றாகும், நன்றாகும்.

அறிவுக்கனலே, ஆதிப்பொருளே
வேள்வித்தலைவா, வேட்டோர்க்கெல்லாம்
இன்பத்திருக்களை ஈவாய்போற்றி!

இவ்வாறு வேதம் தொடங்குகிறது. வேதம் உலகின் ஆதிநூல், பரநாதப் பண்ணிசை, உள்ளான்ம யாழொலி, ஓங்காரக் குழலோசை. வேதவாக்குகள் தெய்வக் கனற்பொறிகள்.

வேதமே ஆதிநூலாம் வேதமே நீதிநூலாம்
வேதமே அறிவுச்சோலை வித்தகச் சித்தர் வாக்காம்
வேதமே ஆதிசக்தி விழித்தெழும் சங்கநாதம்
வேதமெய்ப் பொருளுணர்ந்து வித்தகராக வாழ்வோம்.

வேதவிளக்கமே ஆகமம். வேதாகமங்கள் இறைநூல்கள். வேதம் தந்தை. ஆகமம் தாய்போலும். இவை உள்ளறிவின் அமர ஊற்றுகள். ஒரே மின்சாரம் விளக்கில் ஒளிரும், விசிறியில் காற்று வீசும், அடுப்பிற் கனலும், குளிர்ப்பெட்டியில் குளிரும், வானொலி யில் இசைக்கும். ஒரே எலெக்ட்ரானிக் சக்தி ஸ்புட்நிக்காகி மதி மண்டலத்திற்குப் பறக்கிறது. அணுசக்தியாகி நோய்தீர்க்கிறது. அணுகுண்டாகி அழிவு செய்கிறது. அணுயுகத்தை முன்னேற்றவும் அது பயனாகிறது. அதே மாதிரி ஒரே சுத்தாத்ம சக்தி உலகைப் பலவிதமாக விளையாட்டுகிறது. அதுவே தெய்வசக்தி. அது நல்லதை வளர்க்கிறது. தீயதை அழிக்கிறது. அதையே வேதம் ஒன்றே பலவாம் உயர்பொருள் என்கிறது.

ஒன்றே தெய்வம் (ஏகோதேவ) உயிருள் உறைவதாம். எங்கும் நிறைவாம். இன்னுயிர் உளமாம். வினைமுதல் அதுவாம். விளங்கும் உள்ளுணர்வாம். நிர்க்குண சாட்சியாம் தற்பரம் அதுவே.

ருக், யஜுஸ், சாமம், அதர்வணம் என்பன நான்கு வேதங்கள். வேதத்தை நான்காகப் பிரித்தவர் வியாசபகவான். பைலசர், வைஸம்பாயனர், ஜைமினி, சுமந்து ஆகிய நால்வருக்கும் மேற்படி வேதங்களை வியாசர் முறையாகக் கற்பித்தார். வேதம் பரம்பரையாக வாய்ப்பாடம் சொல்லியே பிறகு எழுதப்பட்டு இன்று அச்சு நூலாயிருக்கிறது. யாரும் படிக்கலாம். ருக்வேதம் 21, யஜுர்வேதம் 109, சாமம் 1000, அதர்வணம் 50 சாகைகளைக் கொண்டது. கர்மகாண்டம்,

உபாசனா காண்டம், ஞான காண்டம் என்று வேதம் மூன்று காண்டங்களானது. ஆயுர்வேதம், அர்த்த வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம்—இவை நான்கு உபவேதங்கள். வியாகரணம், சிக்ஷை, நிருக்தம், சந்தஸ், சோதிடம், கல்பம் என்பன ஆறு வேதங்களாம். கபிலரின் சாங்கியம், கௌதமர் நியாயம், கணாதரின் வைசேஷிகம், ஜைமினியின் கர்ம மீமாம்ஸம், பதஞ்சலியின் யோகம், வியாசரின் உத்தர மீமாம்ஸம் அல்லது வேதாந்தம்— இவை வேதவிளக்கமான ஆறு தரிசனங்கள். வேதப்பசுவின் பால் போன்றது பகவத் கீதை.

வேதநெறி தழைத்தோங்க வந்தார் ஞானசம்பந்தர். மாணிக்க வாசகர் "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றார். ஓங்காரத்துட் பொருளை ஐயன் எனக்கு அருளினான் என்கிறார்.

**வேதத்தின் சாரமே காயத்திரி :**

காயத்திரியின் பொருளைச் சொல்லுகிறேன்.

விண் மண் அந்தரம் விரவியது ஓம் பரம்பொருள். அதுவே மெய்யறி வின்பக் கதிரவன். உயர்பொருள் அதுவே ஓம் சுத்தசக்தி. தியானிப்போம் அதன் சேதனச் சுடரை. புத்தியை அதுவே பொலிவுறத்தூண்டி பேரின்பத்தை நேரே தருமே. வேதத் தேவதைகள் ஒரே கடவுளின் பல சக்தி விளக்கங்களே. வேதம் சமயோக சாதனமே. சூரியனும் சந்திரனும் போல எல்லாரும் சமநோக்குடன் நல்வழி செல்க. சேர்ந்து செல்க. உள்ளங்கலந்து ஒரு குலமாக வாழ்க என்பது வேத உபதேசம்.

ஸம் கச்சத்வம் ஸம் வதத்வம்
ஸம்ஓ மனாம்ஸி ஜானதாம் ஓம்

இனி வேதக் கருத்தை இயம்புகிறேன், அது எல்லாருக்கும் பொதுவே.

1. உள்ளது ஒன்றே; அதை அறிஞர் பலவாறு சொல்லுவர்
2. அவனிக்கெல்லாம் அரசன் ஒருவனே—கடவுள்
3. பரிசுத்தமாயிரு; மாசற வாழு; தேசுறப் பொலி.
4. சூரியனும் சந்திரனும் போல அமைதியாக நல்வழி முன்செல்.
5. உண்மையாயிருத்தலே நல்வழியாம்.
6. தாய்நிலத் தொண்டுசெய்; நாட்டுக்கு நலஞ்செய்.
7. மற்றவர் பொருளை வௌவ்வாதே.
8. மற்றோரைத் தன்போல் மதித்து உதவுக.
9. நாம் நூறாண்டுகள் சூரியனைக் காண்போமாக.
10. மனத்தில் நல்ல தூய உயர்ந்த சிந்தனை செய்க.
11. அனைவரும் ஒரே கடவுளை உள்ளத்தில் வணங்குக.
12. சகோதரன் சகோதரனை, சகோதரி சகோதரியை வெறுக்காமல் ஒருவருக்கொருவர் உதவியாக வாழுக.
13. உலகம் எந்தாய்; அவள் மக்கள் உலகோர்.
14. ஒருவருக்கொருவர் உள்ளன்பு கொள்ளுக.
15. தாய், தந்தை, ஆசிரியர், விருந்தினர் அனைவரையும் தெய்வாம்சமாக வணங்கிச் சேவை செய்க.
16. கடவுள் சத்தியம் ஞானம் அனந்தம்.
17. ஓமே கடவுள், ஓமே எல்லாம், ஓமே மந்திரம் ஆகாயம் போல ஓம் எங்கும் பரவியுள்ளது.
18. எல்லாம் கடவுள், எங்கும் கடவுள்.
19. வாய்மை பேசுக. அறஞ் செய்க. தூயுற வாழ்க.
20. எல்லாருக்கும் நல்லது நினைக. சொல்லுக. செய்க.

**இன்பமே சூழ்க ! எல்லாரும் வாழ்க !**

## 94. யுகதருமம்

அன்பா, பண்டும் இன்றும் அடிப்படையான அறம் எல்லாருக்கும் பொதுவாயிருக்கும். காலத்திற்கேற்ற வாழ்க்கை முறையே மாறும். எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிருப்பது, திரிகரண சுத்தியுடன் உண்மையாக நடப்பது, இனிய சொல்லால் பிறர் நல்வழிக்குத் திரும்பும்படி பேசுவது, கற்கவேண்டியதைக் கற்றுப் புலன்களை அடக்க அறிவுடன் ஒழுகுவது, உலகில் இடர் செய்யும் முக்குணதொந்த விகாரங்களால் கலங்காமல் பொறுமையா யிருந்து நல்ல காரியங்களைச் சாதிப்பது, இறைவன் அருளை நித்திய கர்மானுஷ்டானங்களால் உபாசிப்பது, இவையே பேரின்பத்தைத் தரும் அறநெறிகளாம். இவை எல்லாருக்கும் எந்த மதத்திற்கும் பொதுநெறியாகும். இவற்றிற்கு மாறாக உயிர்க் கொலை கொலையுணவு, விபசாரம், கட்குடி, பிறருக்குரிய பொருளைத் திருடல், சூதாடல், அடாத காரியங்களைச் செய்தல் இவை யெல்லாம் மனித வாழ்வைத் துன்பமாக்கி நரகக் குழியில் தள்ளும். தர்மம் என்றும் தலைகாக்கும்; அதர்மம் என்றும் ஆளைக் கெடுக்கும்.

யுகதர்மம் காலத்திற்கேற்றபடி இருக்கும். வேதகாலத்தில் இருந்த உலகம்வேறு, அதன் தேவை வேறு. இப்போதிருக்கும் உலகம் வேறு. இதன் தேவை வேறு. அக்காலம் வாழ்க்கை இவ்வளவு விரிவாயில்லை. ஆடையுணவுகள் எளிதாகக் கிடைத்தன. அந்தணர் கல்வியுந் தவமுமாக வாழமுடிந்தது. க்ஷத்திரியன் ஆட்சியும் வீரமுமாக வாழ்ந்தான். வைசியர் பயிரும், பசுவுங்காத்துப் பண்டமாற்றுச் செய்தனர். கப்பலோட்டிக் கனகம் குவித்தனர். தொண்டர் சமுதாயத்திற்கு வேண்டிய சேவைகளைப் பாடுபட்டுச் செய்தனர். அவரவர் இயல்பிற்கும் சக்திக்கும் ஏற்ற செயல்களையே அக்காலத்தவர் செய்து, அகமகிழ்வுடன் வாழ்ந்தனர். ஒருவர் காரியத்தில் இன்னொருவர் போட்டிபோட்டுப் புகுந்து போராடுவதில்லை. அதனால் பல ஸ்வரங்களைக்கொண்ட வீணாகானம் போல் சமுதாய வாழ்வு சமரச நிறைவுடன் செழித்தது. இந்தக் காலசக்தி, சாதி, வகுப்பு வேறுபாடுகளைத் தகர்த்தெறிந்து, எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம் என்கிறது. ஆனால் எந்தக் காலத்திலும் அந்தண்மை, வீரம், தொழில், தொண்டு என்ற பாகுபாடுகள், குணகர்ம விபாகங்கள் இருந்தே தீரும். இக்காலம் ஒவ்வொருவரும் அந்தண உள்ளமும், வீரத் திறனும், தொழிற்கையும், தொண்டுடலும் தாங்கி, அவரவர் இயல்பிற்கேற்றபடி, சமதாயசேவை செய்யவேண்டும். "ஆதியில் ஒருவருணமே இருந்தது. தொழிலால் பலபாகுபாடுகள் ஏற்பட்டன" (பாரதம்). அவரவருக்கு இயல்பாகவும் நன்றாகவும் செய்யமுடிந்த தருமமே சுதர்மமாகும். இக்காலம், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்; செய்தொழில் வேறுபாட்டால் அவரவர் சிறப்பர். இன்றுலகில் சாதிபேதத்திற்கு இடமில்லை. சர்வாத்ம சமரசமே இந்த யுக தருமம்; ஜனநாயகமே இன்று மக்களை ஆளுவது.

ஒவ்வொரு மனிதனும் நாமே— நாம்
ஒவ்வொரு மனிதனும் ஆவோம்
இவ்வுல காலயம் ஆமே — அதில்
இன்னுயிர்த் தொகுப்பிறை யாமே.

என்பதுதான் இக்காலச் சன்மார்க்கம். இதுதான் சமதர்மம். அனைவரையும் தானென மதித்து, அனைவருக்கும் இனிய நன்மை செய்வது—தெரிந்ததா.... ஆ அன்பு.

## 95. குருமாருக்கு வணக்கம்

அன்பனே, இறைவன் அருளையே வேண்டுகிறேன்.

எத்தனை சத்குருக்களை எனக்கு விளக்கினை! இந்தப்பாழும் மனக்குதிரை

*ஆசையாணவ மடமையிருட் காட்டிற் சிக்கி யலையாமல் ஞானம் வைராக்கியம் என்னும் லகான் பிடித்திழுத்து எத்தனையோ குருமார்கள் மூலம் இதை அடக்கியாண்டு, உனது அருளுக்கும் பாத்திரமாக்கினை. உன் வடிவாகவந்து தோன்றியும் தோன்றாமலும் நின்று என்னை யாண்டுகொண்ட குருமார்களுக் கெல்லாம் வணக்கம்! நான் சிறுபிள்ளையாகத் தெருவில் விளையாடும்போது ஒரு பைத்தியக்காரப் பக்கிரி மாதிரி வந்து என்னைத் தனியே அழைத்துச்சென்று சுத்தோக மந்திரத்தை யளித்தானே, அந்தக் குருவிற்கு முதல் வணக்கம் செலுத்துகிறேன். பிறகொரு புலவனாக வந்து எனக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து உன்னைப் பாடுந்திறமை யளித்தானே அந்தக் குருவிற்கு வந்தனம். குடும்பத் துயர் நாடகங்களைக் கண்டு உலகை வெறுத்து தாயே நீயே துணை என்று காலைப் பிடித்துக் கொண்டதும், எனக்கொருஅந்தர் திருஷ்டியும் அருளொளியும் அளித்தாளே அந்தப் பரதேவிக்கு வணக்கம். வேதாந்த சித்தாந்த தத்துவங்களையும் யோகரகசியங்களையும் எனக்குப் புகட்டிய குருமார்களுக் கெல்லாம் வணக்கம். தகரவித்தையை எனக்களித்த அந்த ஞானக்கண்ணருக்கு என் வணக்கம். வேதாந்த சமரசத்தை ஆராய்ந்து செல்லுகையில் தாயுமானவர் திருவுள்ளத்தை எனக்கு நிதர்சனமாகக் காட்டிய அந்த சிவஞான சித்தருக்கு வணக்கம். அரசியற் சுழலிலும் புற இயக்கங்களிலும் மனத்தை விட்டலையும் போது, ஒற்றனாக என்னுடனே வந்து, விழிதிறந்தானே அந்த அறிவாளிக்கு வணக்கம். கற்றதும் கேட்டதும் கண்டதும் நிம்மதி யளிக்காமல் நான் மெய்ஞ்ஞானம் தேடித்திரிகையில், இதோ பார் உண்மை என்று என்னையாட்கொண்டதே ஒரு ஞானச்சுடர், அதற்கு வணக்கம். சஹஸ்ராரயோகசித்தி பெற என்னையாட் கொண்ட பூரணயோகிக்கு வணக்கம். எண்ணாலும் எழுத்தாலும் சொல்லாலும் குறிப்பாலும் சொல்லிறந்த மோனத்தாலும் எனக்கு அருள் புரிந்த எல்லா குருமார்களுக்கும் அடியேன் வணக்கம் செலுத்துகிறேன் !*

**ஓம் குரு ஜயகுரு சுத்த சக்தி சிவகுரு !**

## 96. சாதன ரகசியம்

*அன்ப, நின் ஆர்வம் வளர்க!*

*கர்மம் ஞானம் என்ற இரண்டு வழிகள் உண்டு. கர்மம் பிரவிருத்தி மார்க்கம்; ஞானம் நிவிருத்தி மார்க்கம் என்பர். நிவிருத்தி என்றால் உலகை ஒழித்துக் காட்டுக்கு ஓடிப் போவதில்லை. காட்டில் உள்ள நிம்மதி வீட்டில் உண்டு. கர்மத்திற்கும் ஞானத்திற்கும் ஓர் இணைப்புண்டு. அதுதான் பக்தி. அன்புணர்வை மாசற்ற பக்தியாக்கினால் அறிவில் ஊன்றிக் கொண்டே தொழிலைச்செய்து உலகிற்கு உபகாரமாக வாழலாம். இந்த இணைப்பை மறந்துதான் உலகில் இல்லறக் கடலில் தத்தளிக்கும் பெரும்பாலாரும், துறவறத்திலும் அமைதி காணாது, உண்டுறங்கிப் பொழுதைப் போக்கும் சோம்பேறி மடங்களும் பெருகின. பந்தமும் துறவும் அற்ற சமநிலையே நிலை. பக்தி பரவசத்தால் (அகம்பாவ வடுவே இல்லாமல்) எல்லாம் இறைவனுக்கே நிவேதனமாக்கிவிடு. உனக்கென எதையும் வைத்துக் கொள்ளாதே. உன் உடல், பொருள் ஆவியெல்லாம் இறைவனுக்கே அருளுடைமையாக்கு. அவன் மயமே உலகம் எனக்காண். அதுதான் சிறந்த ஞானம். இந்த ஞான உணர்ச்சியால் உனக்கு இயன்ற துறையில் பாராலய ஊழியம் செய்; பற்றுற மாட்டாய்; உலகம் கோயில்; உயிர்த்தொகுதி இறைவன்; செய்வ தெல்லாம் அவன் வழிபாடு என்ற உணர்ச்சியே வாழ்வு. செய்வதெல்லாம் அவன் பணி; நினைப்பெல்லாம் அவன்; நீ, நான், அது, எல்லாம் ஒருமயமே. இந்த நிலைவந்த பிறகுதான் எனக்குத் துறவும் நிறைவானது. அன்பா! உள்ளபடி உணர்; உணர்ந்தபடி உலகாலயப் பணிசெய்; இன்புறுவாய். மங்களம் பொங்குக.*

## 97. மந்திர ஜபம்

*சாதகனே! மந்திர ஜபம் சாதனங்களிற் சிறந்தது. மனதை அடக்கியாளவும் சித்தச் சுழலினை நிறுத்திச் சித்த விருத்திகளை அடக்கவும், அந்தக்கரண சுத்திபெறவும் மந்திர ஜபம் அவசியமாகும். "ஓம் சுத்த சக்தி" என்ற மந்திரத்தை நான் எட்டுவயதுமுதல் இன்று வரையில் ஒவ்வொரு மூச்சுடனும் ஜபித்து வருகிறேன். எனக்குச் சாதி மத மூர்த்தி பேதம் கிடையாது. ஆதலால் நான் எதைச் செய்ய விரும்பினாலும் எந்தத் தீர்க்க தரிசியின் உள்ளத்தை அறிய விரும்பினாலும், மூலமந்திரத்துடன் அதன் பெயரையும் சேர்த்து ஜபிப்பதுண்டு. உதாரணமாக பசுமலையில், பைபிள் படித்து ஏசுநாதர் சரிதை எழுதியபோது "ஏசுநாத சுத்தசக்தி ஓம்" என்று மந்திரம் ஜபித்தேன். அதனால் ஏசுநாதரின் உண்மையுள்ளமும், உருவும் திருவும் எனக்குப் புலப்பட்டன. இஸ்லாமியப் பயிற்சி செய்த நாளில் "பிஸ்மில்லா சுத்த சக்தி ஓம்" என்று ஜபித்தேன். குரானின் உள்ளம் எனக்கு விளங்கியது. காஞ்சீபுரத்தில் வைஷ்ணவ சாதனம் செய்த நாட்களில் துளசி மாலையில் எப்போதும் "ஓம் சுத்தசக்தி ராம்!" என்று ஜபித்து வந்தேன். ஆஞ்சநேயராக என்னை நினைத்துக் கொண்டுதாஸபாவ பக்தி செய்தேன். அப்போது எந்த பக்தரையும் பாகவதரையும் "ஓம் ராம்!" என்று வணங்கியதுண்டு. ஜைனசாதனம் செய்யும்போது பஞ்சநமஸ்காரத்துடன் சுத்த சக்தி ஓம் என்பதையும் சேர்த்து ஜபித்தேன்.*

*அரசியல் சூறாவளியில் ஈடுபட்ட நாட்களில் "ஓம் சுத்தகர்ம சக்தி ஓம்" என்று ஜபித்தேன். அரசியல் உண்மைகள் நன்றாக விளங்கியதுடன், எனக்கு எவ்விதமான ஆபத்தும் நேராமல் என் தவமும் ஒழுங்காக நடந்தது. என்னைப் பின்தொடர்ந்த இரண்டு ஒற்றர்கள்கூட மிகவும் அன்பாகவும், நான் கேட்ட கேள்விகளுக்குச் சாதகமான பதில் சொல்லியும் வந்தனர். வெளியுலகின் இடர்கள் வரும்போதெல்லாம் "ஓம் ஜய சுத்த சக்தி ஓம்" என்ற மந்திரத்தை ஜபிப்பதுண்டு. ஒரு வாரம் தியான ஜபத்தில் ஆழ்ந்திருப்பேன். உடனே கவலை விலகிப்போகும். என் வாழ்வில் திடீரென்று வரும் மாறுதல்களால் நான் கலங்காமல் இருப்பது ஜபசாதனத்தினாலே தான். ஆனால், நான் யாருக்கும் ஜபசாதனத்தால் தீங்கு செய்ததில்லை.*

*கண்ணை கெடுத்தல், மரபை ஒழித்தல், பிணி தருதல் முதலிய தீங்குகள் செய்வது கொடியர் வேலை. பொல்லாங்கு செய்பவரும் திருந்தி அருள் வழி சேரவே ஜபசாதனத்தை உபயோகிக்கவேண்டும். ஏனெனில் நீ யாரோ அவரே பிறர். உள்ளிருப்பதே உலகிலும் உள்ளது. நீ பிறரைக் கெடுத்தால், அந்தப் பாபம் உன்னைக் கெடுக்கும். வினைப்பயனே வாழ்க்கை நயம்.*

*ஜபசாதனத்திற்கு ஆசார நியமமும் ஆகார சுத்தியும் வேண்டும். ஜபத்தை வாய்விட்டுச் சொல்லக்கூடாது. மனதிலேயே ஒலியடங்கும்படி ஜபிக்கவேண்டும். ஜபம் மனத்தில் நல்ல சித்த விருத்திகளை உண்டாக்கும்.*

*காலை மாலை குளித்து மடியுடுத்தி, நிம்மதியாகச் சூரியன் முன் அமர்ந்து ஜபம் செய். முதலில் ஜபமாலை வைத்துக்கொள். யானை கையில் ஒரு சங்கிலியைத் தந்தால் அது அதை உருட்டிக் கொண்டே வேறு சேட்டை செய்யாதிருக்கும். அதுபோல் ஜபமாலை சதா உன் கையில் உருவேற்றிக் கொண்டேயிருந்தால் மனச்சேட்டை யடங்கும். சூரியன் முன் பதினைந்து நிமிஷமாவது ஜபம் செய். ஆறாண்டுகள் ஜபமாலையுடன் ஜபம்செய்து பழகினால், பிறகு மாலையில்லாமலே ஜபம் நடக்கும். பன்னிரண் டாண்டுகள் இடைவிடாமல் ஜபம் செய்தால் அனாஹத சக்கரம் திறக்கும்; ஓமொலி கேட்கும். பிறகு ஜபம் தேவையில்லை. "ஓம்" என்று தானே அந்தராத்ம ஜபம் நடந்துகொண்டிருக்கும்.*

*ஓம் சுத்த சக்தி, ஓம் நமச்சிவாய, ஓம் சக்தி, சுத்தோஹம், ஓம் ராம், ஹரே ராம ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே, ஸ்ரீராம் ஜயராம் ஜயஜய ராம், ஓம் சிவஷண்முகாய நம: ஓம் முருகா முதலிய பல ஜப மந்திரங்கள் உண்டு. எதைச் செய்தாலும் ஒருமை, தூய்மை இரண்டும் வேண்டும்.*

*அன்ப, நீ காயத்திரி மகாமந்திரத்துடன் "ஓம் சுத்தசக்தி" ஜபம் செய். உனக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கும். இதய பரமாத்மனை அடையவேண்டும் என்ற கருத்துடன் ஜபம் செய். இதயக்கதவு திறக்கும். எந்த இடர் வந்தாலும் கலங்காதே. செய் ஜபம்.*

**ஜய ஓம் சுத்த சக்தி ஓம்**

## 98. ஆத்ம விசாரம்

*ஆன்மநேயனே, இதைப் படித்துச் சிந்தித்துப் பயன்பெறு. இப்போது பலருக்குப் பெரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆத்மா உண்டா? கடவுள் உண்டா? இந்தக் கேள்வி "குழந்தாய்! உனக்கு அப்பா அம்மா உண்டா?" என்பது போலத்தான். இன்றுலகில் பெரும்பாலார் சிந்தனை தோலுடம்பிற்குமேல் செல்வதில்லை. "நான் இருவர் கூடிப் பிறந்தேன்; நான் வளர்ந்தேன்; நான் பணம் சம்பாதித்தேன்; நான் வயிறு புடைக்கச் சாப்பிட்டேன்; நான் தூங்கினேன்; எழுந்தேன், நான் அது செய்தேன், இது செய்தேன், அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன்" என்ற பல்லவிபாடி, "எல்லாம் நானாயிருக்க ஆத்மா எதற்கு?" என்ற அனுபல்லவிக்குத் தாவி, நாத்திகவாதத்தில் சரணத்தை முடிப்பதைக் எங்கும் காண்கிறோம்.*

*இந்த உணர்ச்சிதான் அரசியல் உலகைப் பிடித்தாட்டுகிறது. நான் வெடிகுண்டு போடுகிறேன். நான் உனது நாட்டை நாசமாக்கு கிறேன். நான் உலகை ஆளுகிறேன். எனக்குமேல் ஆத்மக் கடவுள் இல்லை என்ற நாஸ்திகந்தான் அரசியல்வாதிகளின் அந்தரங்கம். அபூர்வமாக நமக்கொரு மஹாத்மா வாய்த்திருக்கிறார். அவர் தண்டியாத்திரையை ராமநாமத்துடன் செய்தார். காலை மாலை ஏராளமான அன்பர்முன் திவ்யநாம சங்கீர்த்தனம் நடத்துகிறார்.*

*நான் ஸ்வராஜ்யா தினசரி நடத்தியபோது, ஒரு தோழர் ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி அழைத்தார். "சம்மதம்; ஆனால் கூட்டம் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் பரமாத்ம வணக்கம் பாடவேண்டும். எல்லாரும் என்னுடன் சேர்ந்துபாட வேண்டும்" என்றேன். 'நாங்கள் ஆத்மா, கடவுள் என்ற மூடக் கொள்கையை நம்புவதில்லை; அது பகுத்தறிவிற் கெட்டாத புராணப் புளுகு!' என்றார் தோழர். சில நிமிஷம் பேசினோம்.*

***நான்:*** *நல்லது தோழரே! ஆத்மா பொய்யென்றால் பிறகு எதுதான் உண்மை?*

***தோழர் :*** *கண்ணால் காணும் உலகம், உடல், மனைவி, மக்கள் எல்லாம் உண்மை; கண்ணால் காணமுடியாததெல்லாம் பொய்.*

***நான் :*** *காற்றைக் கண்ணால் காணமுடியாதே; அது பொய்யோ?*

***தோழர் :*** *காற்றை உணருகிறோம் அதனால் மெய்.*

***நான் :*** *அதனால் கண்ணால் காணாது உணரும் உண்மை ஒன்று இருக்கிறதல்லவா? அதே மாதிரி உன் ஐம்பொறிகளைக் கடந்த உணர்ச்சியை நம்புவாயா? உன்னுள் உயிர்ப்பது எது?*

***தோழர் :*** *நான்தான் என் உடலில் உயிர்க்கிறேன்.*

***நான் :*** *அந்த நான் என்பது எது? உடலா?*

***தோழர் :*** *ஆம் ! உடலே நான்.*

***நான் :*** *இது என் உடல், இது என் வீடு என்னும்போது நீ வீடில்லை; வீடு*

வேறு நீ வேறு; அதுபோல் உடல் வேறு நீ வேறு. உறங்கும்போது உடலுணர்ச்சியில்லை. "கடவுள் உண்டு" என்றாலும் அப்போது சண்டைக்கு வரமாட்டாய். உறங்கும்போது சடமான உடலில் உயிர்ப்பது எது?

**தோழர்** : உடல் உண்கிறது. உணவு இரத்தமாகிறது. இரத்தம் பிராணவாயுவால் சூடாகிறது. அது தாதுவாகி நான் உயிர்க்கிறேன். பெற்றுப் பெருகி வாழ்கிறேன்; ஆண் பெண் உடல் சேர்ந்து உலகம் உண்டாகிறது.

**நான்** : ஒரு ஆண் பிணமும் பெண் பிணமும் உடலை உண்டாக்குமா?

**தோழர்** : மாட்டா; அவற்றுள் உயிரில்லை.

**நான்** : ஆதலால் உடல் சடம் பிணம்; அதனுள் ஓர் உயிர் இருப்பதனால் காரியம் நடப்பதை ஒப்புக்கொள்கிறாயல்லவா? இந்த உயிர் எப்படி வந்தது?

**தோழர்** : மூக்கு வழியாய் உயிர்ச் சென்றுவந்து நடக்கிறது.

**நான்** : மூக்கு வழியாகச் செல்வது உயிர்க்காற்று; அது இரத்த சுத்திசெய்து உயிரை வளர்க்கிறது. அதுவே உயிரானால் மூச்சு உள்ளே போகும்போது மட்டும் நீ உயிர்த்து, வெளிவிடும்போது பிணமாவாய். இந்த உயிரையும் ஒன்று உள்ளிருந்து நடத்துகிறது; அதுவே உயிர்க்குயிராயுள்ளது. அதையே சுத்தான்மா என்கிறோம்.

**தோழர்** : இன்னும் நன்றாக விளக்கவேண்டும்.

**நான்:** தம்பி! நீ தூங்கும்போது எப்படி உயிருடன் இருக்கிறாய்? உடல் கட்டையாக விழுந்துகிடக்கிறது. நெஞ்சம் துடிக்கிறது. காற்றுப்பை உயிர்க்கிறது- மனம் கனாக்காண்கிறது. எதனால்? உறங்கும்போது உன்னுள் ஒன்றிருந்து இதெல்லாம் செய்கிறது. அதுதான் உண்மையாக நான் என்னும் ஆத்மா. உதாரணமாக இந்த மின்சார விளக்கிருக்கிறது. இதன் சுடரைக் காண்கிறாய். சுடருக்குள் ஒரு சூக்ஷ்மமான மின்சாரம் இருக்கிறது; அந்த மின்சாரம் குமிழைச் சேர்ந்ததன்று; அது கம்பி வழியாக மின் பொறியிலிருந்து வருகிறது; மின்பொறிக்கு ஆகாயத்திலிருந்து மின்சாரம் வருகிறது. அதே மாதிரி இந்த உடலில் அந்தக் கரணம். அதற்குள் ஆத்மா, அதற்குள் சுத்தாத்மா, அதற்குள் சுத்த பரமாத்மா விளங்குகிறது.

ஒரு படவிளக்கு (Magic Lantern) உள்ளது; அதனுள் உள்ள விளக்குப்போன்றது சுத்தான்மா; விளக்கின் சுடர் போன்றது பரமாத்மா; எண்ணெய் திரிபோன்றது அந்தக்கரணம். ஞான கர்மேந்திரியங்கள் போன்றவை கண்ணாடிகள். படச்சுருள் சித்த சங்கற்ப விகற்பம் போன்றது. வெள்ளித்திரையில் ஆடும் காட்சி உலகம் போன்றது. இவை அனைத்திற்கும் ஆதாரம் எது? விளக்கொளி. அதுபோலவே மனிதத்துவத்திலும் உள்ள தூல சூக்ஷ்ம காரண சரீரங்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது சுத்தாத்மா; அதை நடத்துவது பரமாத்மா—அவனே எனக்குத் தலைவன். என்னைக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கச் சொல்லுகிறாய். கூட்டம் தலைவனைப் பணியவேண்டும்; தலைவனும் தனக்குத் தலைவனான கடவுளைப் பணியவேண்டும். அதற்காகவே உலகுயிர்த்தலைவனான கடவுளை வணங்க வேண்டும் என்றேன்.

இவ்வளவு சொன்னபிறகே ஆளுக்கு உணர்ச்சி வந்தது. கடவுள் வணக்கத்திற்குச் சுருதிப்பெட்டி தூக்கிவந்து, அவனும் கருத்துடன் வணங்கினான். உண்மைக் கவிகளுக்கு இந்த ஆத்ம உணர்ச்சி அவசியமாகும்.

நல்ல சிந்தனை நாட்டு வோமே!
நலிபொ றாமையை ஓட்டிடு வோமே!
வெல்லும் வீறு படைத்திடு வோமே!
வீர ராகத் தலைநிமிர் வோமே!
செல்வ மோங்கத் தொழில்புரிவோமே!
தேச மோங்கப் பணிபுரி வோமே!
கல்வி யோங்கக் கலைவளர்ப் போமே!
கடவு ளைக்கருத் திற்கலப் போமே!

## 99. உள்ளுறவு

அன்பா,

யோகவிளக்கம் கேட்கிறாய்; யோகசித்தியைப் படித்தறி. சுருக்கமாக விளக்குகிறேன்; கவனி. யோகம் என்றால் உள்ளுறவு; உள்ளுறவால் உள்ளத்தானைத் தொட்டு நிற்றல். இந்த உள்ளறவி னின்றே இன்பம் உண்டாகிறது. வெளியுறவுகளிலெல்லாம் துன்பமும் பற்றும் தொடர்ந்து நிற்கும். உள்ளுறவே தெள்ளுறவு. உள்ளே வேறூன்றி அன்பு நீருண்டு செழிக்கும் வாழ்வுக் கொடியில் அருள் மலரும்; அறிவு கனியும்.

உள்ளுறவுடன் யோகவாழ்வு வாழும் சாதுக்கள் சங்கமே சாந்தமளிக்கும். சாதனத்தை உறுதியாக்கும். இறைவனுக்கு வழிபாடாகப் பயனுள்ள தொண்டு செய்வதே கருமயோகம். பக்தி யோகம், பஜனை நாமசங்கீர்த்தனம், ஜபசாதனம், வழிபாடுகளால் மனதைக் கடவுளன்பில் இணைத்து நிற்கும். ஞானயோகம் மோனமாகத் தியான சமாதிகூடி நிச்சிந்தையாயிருக்கும். சரியையே கர்மயோகம்; கிரியையே பக்தியோகம். ஞானமே தியானயோகம். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது சுத்தசமயோக சாதனம். உடல், உயிர், மனம், புத்தி, சித்தம், அந்தக்கரணம், பேச்சு நடையுடை, செயல் அனைத்தையும் பரிசுத்தமாக்கவேண்டும். இந்தப் பரிசுத்தநிலையில் தெய்வசக்தி ஊற்றெழுந்து பொங்கும். சுத்தத்தால் கடவுளைக் கூடலாம்; சக்தியால் கடவுட்கோயிலான உலகத்திற்குத் தொண்டு செய்யலாம். சுத்த சக்தி இரண்டையும் வளர்த்து உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற பரம்பொருளைக் கூடிக் குழைந்து எல்லாம் அவன் மயமாகக் காணுதலே ஓம் சுத்த சக்தி என்ற திருமந்திரத்தால் உணரும் யோக சாதனமும் சித்தியுமாகும்.

மனிதன் பன்னிரண்டு பொருள் பற்றி வாழ்வில் அறிந்து அனுபவித்தல் வேண்டும். அவையாவன: கடவுள், இயற்கையுலகம், உலகைத்தாங்கும் அறவியல், அறவாழ்விற் கிசைந்த அறிவியல், அறிவைப் போற்றும் அன்பியல், அன்பை வளர்க்கும் தூயநன்னடை, அந்த நன்னடையைச் செயலாக்கும் இல்லறம், இல்லறப் பயனான குடும்பத்தைச் சீர்பெற வளர்க்கும் வகை, குடும்பத்திற்கும் அதன் விரிவான உலகத்திற்கும் தொண்டு செய்யும் தொழிலியல்பு, நேர்மையாகப் பிழைக்கத் தொழிற் பயிற்சி, நாட்டை நடத்தும் அரசியல், கலகமில்லாத கருணைவிளங்கும் அருளாட்சி, அனைத்திற்கும் அடிப்படையான சமயோக சாதனம். இந்த யோகத்தில் அடையும் தெய்வ சித்தியின் பண்பும் பயனும்- இவற்றை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அறியவேண்டும், பயில வேண்டும். வாழ்வையே யோக மாக்க வேண்டும். இல்லறத் திலேயே துறவறங் காணவேண்டும்.

உழைக்கும்வேர் வையினால் உலகு பொன் விளைய
        உழுதுண்டு நூற்றுநெய் துடுக்கும்
ஒழுக்கமே சரியை; உயிர்க்குயிரான
        ஒன்றினை வணங்கலே கிரியை
அழுக்கறு மனதால் அன்புடன் அதனை
        அகங்கலந் திருத்தலே யோகம்.
பழுக்குநல் லான்ம நேயமே ஞானம்
        பாரெலாம் பயிலுக நன்றே !

இந்த சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கு சாதனங்களும் ஒவ்வொருவர் வாழ்விலும் நிலவவேண்டும். நடையில் ஒழுக்கம், மனதில் வணக்கம், உள்ளத்தில் யோகம், உச்சியில் ஞான ஒளி நிலவவேண்டும். இதற்கேற்ற உணவும் உழைப்பும், உள்ளமும் உணர்வும் வளரவேண்டும். முயல்க! முன்னேறுக ! ஓம் சுத்த சக்தி!

# 100. இரண்டு யோகங்கள்

## 1. மலயோகம்

ஆர்வமுள்ள யோகியே, கேள்.

யோகம் இரண்டு வகையாகும். மலயோகம், அமலயோகம். மலயோகம் தேக வாசனையும் போகவாசனையும் கூடியது. ஹடயோக தாந்திர யோக சாதனங்களால் உடலையும் நரம்புகளையும் வலிவுறுத்தி, சில தூலசித்திகள் மட்டும் பெற்று, உலகில் சீரும் செல்வமும் செல்வாக்கும் பெறப் புகுவது மலயோகம்.

இந்த யோகி, தங்கம்போல உடல் பெறலாம். அழகு பெறலாம். வசீகர சக்தி பெறலாம். செல்வச் செழிப்புறலாம். சமஸ்தானாதிபதியாகலாம். ஏராளமான சீடரை ஆளலாம். கல்வி கேள்விகளில் மிகுந்து சிறந்த காவியங்களையும் இலக்கியங்களையும் சிருஷ்டிக்கலாம். ஆனால், இவனுக்கு ஆத்ம திருப்தி, ஆத்மரதி, சுத்தாத்ம சித்தி, சச்சிதானந்த முக்தி, துரியானந்த பரவசம் ஆகிய உன்னத தெய்வ நிலைகளோ சிவ சாயுச்சியமோ ஒருக்காலும் கைகூடா. இவன் எண்ணமெல்லாம் தன்னைப் பிறர் கொண்டாடும்படி உலகை வளைக்கும் சூழ்ச்சிகளிலேயே வீணாகும்; நான் என்ற ஆணவமே தலை தூக்கி நிற்கும்.

மலயோகிக்குச் சுத்தான்ம முக்தி கிடைக்காது. புராணத்தில் வரும் அரக்கர் பலர் மலயோகிகள்-தாந்திர சித்தியால் வரம்பெற்று, உலகை நடுக்கிய அரக்கர். இராவணன் உலகம் நடுங்கும்படியான பலம் பெற்றும், காமத்தால் தான் கட்டிய பொன்னிலங்கையையே அழித்தான். மலயோகம் மனோ சங்கற்பத்தை உடையது. ஆணவம் நிறைந்தது. அது பரமமுக்தியளிக்காது. படாடோப பயங்கரத்தால் உலகை மிரட்டலாம். அவ்வளவுதான்.

## 2. அமலயோகம்

மனமுயிருடலின் சேட்டைகளின்றி, அமலநிமல பரிசுத்த ஆத்மாவில் உட்குவிந்து நின்று, ஞானப்பாலுண்பதே அமல யோகம், அல்லது சுத்த சமயோகம். மாணிக்கவாசகர், திருமூலர், தாயுமானார், தத்தாத்ரேயர், யாக்ஞவல்கி ஆகிய முனிவர் சிறந்த அமலயோகிகள். இவர்கள் தூல, வீரிய, சூக்ஷ்ம, விஞ்ஞான மண்டலங்களுக்குமேல் உயர்ந்து, சச்சிதானந்த துரிய வெளியில் சுதந்தரப் பறவைகள் போல் உலாவிய அருளானந்த சித்தர். இவர்களுக்குத் தியான சமாதிதான் சாதனம். தன்னுள் தானா யிருப்பதே சித்தி. வேறெந்தச் சங்கற்பமும் இல்லை. சங்கற்பம் ஒரு மலம். அதில் ஆணவவினை உண்டு; சங்கற்பமுள்ளவன் பூரண ஞானியாக முடியாது. நிச்சிந்தை நிச்சங்கற்ப, நிர்தொந்த நித்ய முத்த நிலையே சுத்த யோகியின் குறி. இந்நிலையைத்தான் "நிச்சலும் பேரானந்த நித்திரை" என்றார் வள்ளலார். வியாசரும் பதஞ்சலியும் சொன்னது அமலயோகம்.

இந்த நிலைபெற மனமிறந்து, வாயிறந்து, சங்கற்பக் குழாங்கள் அடியோடொழிந்து, தன்னுள்தானாக சுத்த துரிய சமாதி நிட்டை கூடவேண்டும். தியானம் தீவிரப்பட்டு, பன்னிரண்டாண்டுகள், நின்ற நிலையில் நிட்டை கூடினால், சுத்தான்ம சித்தியான அமர நிலை கூடும். இன்று இரண்டு மூன்றுபேரே இந்த நிலையை எட்டி யிருக்கிறார்கள். இதுதான் சுத்த பரிபூரண துரிய ஞானநிலை. "பார்த்தா, அகில கர்மங்களும் ஞானத்தில் வந்தே முடியும்; ஞானமே என் மதம்" என்றான் கண்ணன். அந்த ஞானமே அமலயோக சித்தி. இந்த யோகத்தில் சிறிது நிலைத்தாலும், பெரும் பயனுண்டு. வைராக்கியமாகச் செய்தால் சித்தி நிச்சயம்.

## 101. தற்காலக் கவிதை

*அன்பனே! உனது கவிதைக் கேள்விகள் நன்று.*

*1. தற்காலத் தமிழ்க்கவிதை இனிய எளிய தெள்ளிய நடையில் உலக முன்னேற்றத்திற்கும், சமுதாய நன்மைக்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். வெறும் வர்ணனைச் சொல்லடுக்குகள் பயனில்லை.*

*2. இக்காலம் ஜனசக்தியை எழுப்பும் இசைப்பாடல்களே வேண்டும். ஆனால் பெருங்காப்பியங்கள் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாதன. இராமாயண பாரத காவியங்களுக்குப் பிறகு பாரத சக்தி 50,000 வரிகளில் அமைந்த தனிப்பெருங் காப்பியம் என்று அன்பர் கருதுகின்றனர். ஆனால் மகாகாவியம் பாடுவது எளிதன்று. நான் பாரத சக்தியை நான்குமுறை நகாசுசெய்தேன். 1918ல் தொடங்கியது 1938ல் தான் நிறைவாக முடிந்தது. அதுவும் தவயோக சக்தியைப் பெய்து செய்ததால், திருவருளால் முடிந்தது. மகாகாவியம் எல்லோரும் பாடிவிட முடியாது. அதற்கு அருளெழுச்சி வேண்டும்.*

*3. ஷெல்லி, பைரன், வேட்ஸ் வொர்த் போன்று சிறுகாவியங்கள் பாடலாம்; ஆனால் தமிழ்க்கவிதை ஆங்கிலப் போலியாகாமல், தமிழ்ப்பண்புடன் விளங்க வேண்டும்.*

*4. கவிதை உள்ளிருந்து மலர்வது; வெளியிலிருந்து வருவதன்று. ஒரு செடியின் மலரும் கனியும் அதனிடமிருந்தே அரும்புவதுபோலக் கவிதையும் கவியின் உள்ளத்திலிருந்தே எழும்.*

*5. பதங்கள் இயல்பாயிருக்கவேண்டும். இயல்பு எப்போதும் எளிதே.*

*6. கவிதைக்கு எதுகை மோனை சுவையளிக்கும். உலகக் கவிகளில் அதிகமான சந்த-நயம் பெற்றவை தமிழும், வடமொழியுமே. வடமொழியைவிட தமிழில் சந்தம் அதிகம். திருப்புகழுக்கு இணையான சந்தக்கவி உலகில் இல்லை. சீர்தளை நன்றாக யாப்பமைதியுடன் அமைந்த கவிதான் பாடுவதற்கு இனிது. கண்டபடி கட்டும் கவியைப் படிக்கலாம். எதுகை மோனை யில்லாமல் வெள்ளைக்கவி பாடலாம்; சங்க அகவல்கள் பல அத்தகையன. பல சமுஸ்கிருதகவிகளில் சந்தம் சலசலக்கும். எதுகை பொருந்தாது. காளிதாஸர் கவிகளும் அப்படியே. தமிழிலும் அப்படி நானே பாடியிருக்கிறேன். அத்தகைய வெள்ளைக் கவிகளில் உயர்ந்த கருத்துக்கள் இருக்க வேண்டும்.*

*7. மடக்கு திரிபுகள் அனாவசியம், விஷயங்களை நேராகவும் தெளிவாகவும் இனிய ஓசை நயத்துடனும் பாடவேண்டும். யமகம், மயக்கு, மடக்கு திரிபுகளெல்லாம் பழம்புலவர் செய்த இலக்கிய விளையாட்டு, அதற்குக் காலம் ஆய்விட்டது. சுறுசுறுப்பான இக்காலத்தில், யமகம் திரிபுகளுடன் விளையாட நேரமில்லை. நேரமிருப்பவர் சொற்சிலம்பம் வீசிக்கொண்டி ருக்கட்டும். நாம் விரைவாக முன்செல்வோம்.*

*8. புராணக் கவிதை இனிச் செல்லாது. இன்றுலகம் நடந்த வரலாற்றுக் கவிதையை விரும்புகிறது. காலத்திற்கேற்ற கவி வேண்டும். சங்கப் புலவர், பரிசிலுக்காக அரசரைச் சிறப்பித்து அகப்புறப் பொருள்களை அமைத்துப் பாடினர். கச்சியப்பர் சேக்கிழார், பரஞ்சோதி முனிவர்கள் புராணக்கவிதை செய்தனர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை வேண்டுமட்டும் மடக்குக் கவிகள் பாடி விட்டார். வேதநாயகம் பிள்ளையும் கோபால கிருஷ்ண பாரதியாரும், வள்ளலாரும், தாயுமானாரும், கவிக்குஞ்சரி பாரதியாரும் தெள்ளிய எளிய நடையில் உயர்ந்த பொருளைப் பற்றிப் பாடினர். கவிக்குயில் பாரதியார் இவர்கள் மெட்டுக்களையே உபயோகித்துத் தமிழரைத் தட்டியெழுப்பும் புதிய உணர்ச்சியுடன் பாடினார். அவர் தேசிய விழிப்பைத் தந்தார்; இனிவரும் கவிகள், மனிதனுக்கு ஆத்மீக உணர்ச்சியில் வாழும் வகையைப் பாட வேண்டும். அதுதான் என் கவிதையின் லட்சியம். எனது தேசீய கீதங்களில் ஆங்கிலேயரையோ பிறரையோ தாக்குவதில்லை. சுத்த சுதந்தர சமத்துவ சித்திபெற்று, மனிதசமுதாயம் ஆன்மநேய ஒருமையில் வாழும் ஆர்வங் கொண்டே நான் பாடியிருக்கிறேன். நான் சமயோகக் கவி.*

*9. உண்மையானகவி உலகின் பரிசுக்காகப் பாடமாட்டான். உலகப்புகழ் தூசிமாத்திரம். தாகூர் நோபல்வெகுமதிக்காகப் பாட வில்லை. உலகம் புகழுமென்று குயில் பாடவில்லை. உண்மையான கவிகள் காலசக்தியின் தூதர்கள். அவர்கள் உள்ளெழுச்சியால் பாடுகிறார்கள்; தமது பாடல்களை மனித சமுதாயமான இறைவனுக்கே நிவேதிக்கிறார்கள். கவிதை என்பதே ஆத்ம உன்னதிக்கும், தெய்வத் திருவருள் பெறவும், மனித சமுதாயத்திற்கு உன்னத ஆதர்சங்களை விளக்கவும் எழுந்த ஒரு தெய்வக்கலை. கவியின் பரிசு ஆத்மதிருப்திதான். அவன் வறுமையால் வெந்து உலகால் இகழப்பட்டு இறந்தாலும், விசனப்படமாட்டான். ஆனால் உண்மைக்கவி சிரஞ்சீவி. இன்றில்லாவிட்டாலும் நாளை அவனை உலகம் அறியும். கம்பனை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே உலகம் அறிந்தது. ஷேக்ஸ்பியர் இறந்த 200 ஆண்டுகளுக்குப் பிறகே அவனது நாடகங்கள் பரவின. தாந்தே உள்ளவரையில் உயிருக்குத் தப்பிஓடினான். பகைவர் அவனைக் கொல்லத் துரத்தினர். இறந்த பிறகே அவன் புகழ்பெற்றான். ஓமரும் இறந்த பிறகே புகழ்பெற்றான். கவிகள் கலைக்கே வாழ்க!*

*10. ஆனால் பாரதியார் வறுமையில் வாடியது இன்று தமிழுலகிற்கு உணர்ச்சி தந்திருக்கிறது. தமிழர் மூன்று அரிய கவிகளுக்குச் சன்மானம் வழங்கிவிட்டனர். தமிழர் சங்கம் ஒன்று நாட்டவேண்டும். அதில் புதுக் கவிகளின் பாடல்களை அரங்கேற்றித் தக்கவாறு பரிசளிக்கலாம். நோபல் வெகுமதிபோலத் தமிழுக்குத் தமிழர் ஒரு வெகுமதி ஏற்படுத்தலாம்; ஆனால் தமிழ்க்கவி இன்னும் எவ்வளவோ வளர்ச்சிபெற வேண்டும். இன்னும் பத்தாண்டுகள் வளர்ந்த பிறகுதான் தற்காலக்கவிதை உலகம் மதிப்புறும்; பிறகே பரிசு தரும்.*

*கவிகளை பிளாத்தோ வெறுத்ததேன்? கவிகள் மனிதரைக் கடவுளுக்குச் சமானமாகப் பாடிப் புராணம் புனைகிறார்கள். அதைப் படிக்கும் மனிதர் புராணப் பொய்களை நம்பிக் கடவுளை மறந்து, மனிதருக்குச் சிலை செய்து வணங்குகிறார்கள். இந்தப் போலி வணக்கத்தால் உலகில் சாதி மத வகுப்பு வாதம் பெருகி, அமைதிகுலைகிறது. கவிகள் உயர்ந்த மனிதரை மனித நிலையிலே வைத்துப் பாடுவது குற்றமில்லை. எல்லாம் வல்ல இறைவனுக்கும் மனிதான்மாவுக்கும் நடுவே போலித் தெய்வங்களைக் கொண்டு புகுத்தும் பொய்க்கவிகளையே பிளாத்தோ கண்டிக்கிறான். நம்மாழ்வார் "நரம் பாடாதே, நாராணனையே பாடு" என்பதன் பொருளும் அதுவே.*

*உண்மைக்கவி உள்ளடங்கி வாழ்கிறான். உலகம் அவனை அறியும் காலம் வரும். ஒருமையில் அடங்கிய புலவன் பெருமையே பெருமை.*

## 102. தியான சாதனம்

*அன்பு மணிகாள்!*

*எல்லாரும் நலம் பெறுக! இன்று நீங்கள் கொண்டாடும் பொன் விழா, என் விழாவன்று. அஃது உங்கள் அன்பின் திருவிழா; என்னுள் யார் பாடுகிறானோ, எழுதுகிறானோ, தியானிக்கிறானோ அவன் விழாவே. அவன் மயமான உங்களால் கொண்டாடப் பெற்றது.*

*ஜலாலுடீன் ரூமி கடவுளுணர்வில் தோய்ந்த பார்ஸிக்கவி. இந்த மகாகவியின் பிறந்தநாளில், அன்பர் பொன்னும் பூமாலைகளும் கொண்டுவந்து கதவைத் தட்டினார்கள். ஜலாலுடீன் கதவை மூடிக்கொண்டு தன்னுள் பிறவாமல் இறவாமல் இருக்கும் சுத்தான்மாவையே தியானம் செய்து கொண்டிருந்தான்.*

*அன்பர் : 'ஜலாலுடீன் இருக்கிறாரா?' என்று கதவைத் தட்டிக் கேட்டனர்.*

*"இங்கே கடவுளே யிருக்கிறார்" என்று பதில் வந்தது.*

"ஜலாலுடீன் எங்கே?"

"இறந்து போனான்"

"உள்ளே பேசுவது யார்?"

"பேசுவதும் கடவுளே"

"நாங்கள் மாலைகள் கொண்டுவந்திருக்கிறோம். யாருக்குச் சூட்டுவது?"

"கடவுளுக்கே சூட்டுங்கள்"

"எங்கள் காணிக்கையை?"

"அவன் மயமான ஏழைகளுக்குத் தாருங்கள்"

"இல்லை. நாங்கள் ஜலாலுடீனைப் பார்த்து வணங்கியே செல்வோம்."

பட்டென்று கதவு திறந்தது. ஜலாலுடீன் அன்பர்முன் வணக்கமுடன் தோன்றி "அன்பீர் இந்த உடலைப் பார்க்கவா வந்தீர்கள்? இது நாளை மண்ணாகுமே; உண்மையான ஜலாலுடீனைப் பார்க்கவேண்டுமானால், இங்கே தேடுங்கள்" என்று இதயத்தைத் தொட்டுக் காட்டி, மறுபடியும் தியானத்தில் ஆழ்ந்தான்.

இதே மொழிகளையே இன்று உங்களுக்கு சொல்ல வேண்டி யிருக்கிறது. அவரவர் உள்ளத்தில் ஆழ்ந்து, தூய இன்பத்தைத் தேடுங்கள். மௌனமாகத் தியானியுங்கள். பட்பட் என்று இதயத் துடிப்பில் ஆனந்தம் தோன்றும்.

அன்பர்காள், பெயர் வடிவ சாதி சமய பேதங்களையெல்லாம் மறந்து, எவ்வகையான வேறுபாடும் கூறுபாடும், ஊறுபாடும் அற்ற தனிப் பரம்பொருளான கடவுளை, அவரவர் இதயத்திற் கண்டு கலக்க, தியானசாதனத்தை மேற்கொள்ளுங்கள். நாவால் சளசள வென்று பேசுவதை நிறுத்தி, உள்ளத்தானுடன் பேசுங்கள்.

எள்ளில் எண்ணெய் கரும்பில் சாறு, மலரில் மணம் போல் இறைவன் ஆன்மாவிற் கலந்திருக்கிறான். இந்த உடல் விழுமுன் ஆன்மா இறைவனை அன்பால் அளாவி, உணர்ந்து, அறிவால் கலக்கவேண்டும்.

உலகை வெறுத்து ஓடவேண்டுமென்பதில்லை. நல்லார் இணக்கம், கடவுளன்பு, பதிஞானம் இம்மூன்றிலும் இணைந்த வாழ்வே வாழ்வு. இம்மூன்றையும் ஒதுக்கி ஒருவன் எவ்வளவு சீரும் சிறப்பும் செல்வமும் மனைவி மக்கள் அன்பும் பெற்றாலும், எல்லாம் வெளிமயக்கம். ஒரு பயனும் இல்லை. எல்லாம் மனமாயம். அது நாளாக நாளாக விளங்கும்.

இல்லறத்திலிருந்தாலும் சரி, மனம் இறைவனிடமிருக்க வேண்டும். இந்த உயிர் இயங்குவது அவனால் என்ற பதியறிவு உதிக்க வேண்டும்; பாவைக்கூத்தில் பின்னாலிருந்து ஒருவன் ஆட்டி வைக்கிறான். அதனால் பாவைகள் பலவகையாக ஆடுகின்றன. ஆட்டுவான் இன்றேல் ஆட்டமும் இல்லை. பாவையான தூலமும், கயிறான சூக்குமமும், ஆட்டமான வாழ்வும் ஒரு பயனுமில்லாமல் கிடக்கும். அதனாலேதான் பெரிய அருட்புலவர் "என்னால் இல்லை உன்னால் உலகம் இயங்குகிறது இறைவா" என்று பாடினர்.

இப்போது அடித்து ஓய்ந்த போர்ப்புயலில், நம் கண்ணெதிரே எத்தனை அரசுகள் உருண்டு மண்ணாயின! எத்தனை மாளிகைகள் இடிந்து பொடிந்தன! எத்தனை செல்வர் பஞ்சைகளானார்கள்! எத்தனை எத்துக்கடைப் பேர்வழிகள் கள்ளச்சந்தையில் சம்பாதித்தனர்! வேவல்பிரபு நூறுரூபாய் நோட்டுக்குமேல் உள்ள நோட்டுகள் செல்லாவென்று சட்டம் போட்டதும், எத்தனை கள்ளச் சந்தைக் குபேரர் வீட்டுக் குழந்தைகள் ஆயிரம் ரூபாய் நோட்டுகளையும் பதினாயிரம் ரூபாய் நோட்டுகளையும் கத்திக் கப்பல் விட்டன! அன்பனே, என்றும் உள்ள ஒன்றைப்பற்று. அதைப் பற்றி உலகில் விளையாடு. ஓம் சுத்த சக்தி ஓம்.

## 103. ஆனந்த உணர்ச்சி

அன்புத் துறவியே, ஆனந்த ரகசியத்தை அறி. உலகம் ஒரு லீலை; அந்த லீலையை நடத்துகிறவன் பரம சக்திமானான ஒருவன்; இயற்கை அவனுக்கு உபாதான காரணம். உலகம் இயற்கையின் மூலம் இறைவன் விளையாட்டு. இந்த விளையாட்டி லிருந்து எவரும் விலகியிருக்க முடியாது. உலகம் அநித்தியம், மாயை, கானல் நீர் என்று கண்ணைமூடிக்கொள்ளும் மாயா வாதிகளும், பசி கிண்டும்போது, சாப்பாட்டு வேலை நடத்தித்தான் ஆகவேண்டும். இறைவன், ஜீவன், உலகம் ஆகிய மூன்று தத்துவங்கள், முப்பொருள்கள் என்றும் உள்ளவை, ஒன்றை யொன்று சார்ந்தவை.

ஜீவ நாடகத்திற்கு அரங்கமாக உலகை இறைவன் படைத்தான்; எப்படி என்பதைத் தைத்திரிய உபநிஷத்து ஆனந்த வல்லி தெளிவாகச் சொல்லும். பிரம்மம் சத்தியம், ஞானம், அனந்தம்; ஆகாசம் பிரம்ம சரீரம். அதுவே பிராணநிலையம். அதிலிருந்து வாயு, அக்னி, நீர், மண். அதிலிருந்து பயிர் அதை உண்டு உயிர்கள்........எல்லாம் படிப்படியாக வருகின்றன. இந்த சிருஷ்டி லீலை எங்கும் எக்காலமும் உண்டு. எப்போதோ ஒரு காலத்தில் பிரளயம் வந்து, எல்லாம் ஆகாசத்தில் ஒடுங்கி, ஆகாசமும் பிரம்மத்தில் ஒடுங்கி எல்லாம் சூன்யமாகலாம்.

ஆனால் இது நமது காலத்தில் நடக்காது. ஆயிரம் ஆயிரம் நூற்றாண்டுகளிலும் நடக்காது. ஆதலால் உலகம் மாயை அநித்தயம் நாம் எங்காவது தப்பிக்கொண்டு போவோம் என்று பதற வேண்டியதில்லை. அநித்திய மாயா பாவனையை விட்டு, நித்திய விபூதி லீலா பாவனையை நாம் வளர்க்கவேண்டும். உலகம் துன்பக் கனவு, துக்கம் என்று பெருமூச்சு விட்டழுவதில் ஒரு பயனுமில்லை. புத்தர் அப்படி அழுதார்; துறந்தார். மறுபடிவந்து உயிர்கள் வாழவே வழிகாட்டினார். துக்கம், அழுகை, விசனம் எல்லாம் பேதபுத்தியின் குறைகள். உலகம் ஆனந்த நிலையமே. வாழ்க்கை ஆனந்த ஜீவ நதியே; இரண்டையும் சரியாகப் பயன் படுத்தினால், மானிட வாழ்வு அமரானந்தம் பெறும். மானிடம் தன்னுள் அந்தர்யாமியா யிருக்கும் பரமாத்மனை அடைந்து வாழ்ந்தால் இன்புறும்.

இந்த இன்பத்தை நம்மாழ்வார் அனுபவித்து

**"பொலிக பொலிக போயிற்று**
**வல்லுயிர்ச் சாபம்"**

என்று பாடினார். இந்த இன்பத்தை அப்பர் அனுபவித்து,

**"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

என்றார். இதே இன்பத்தை உபநிஷத் முனிவர் அனுபவித்து "ஆனந்தமே பிரம்மம், ஆனந்தமே ஜீவன். அது பிறந்து வளர்ந்து சேர்வதும் ஆனந்தமே" என்று பாடினார்கள். ஆதலால் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டும் கவிகள் 'உடல் பொய், உலகம் பொய், வாழ்வு துன்பக் கனவு' என்னும் வாதத்தை விட்டு, உலகை ஈச்வர லீலாரங்கமாகவும், உயிரை ஆனந்த ஊற்றாகவும், வாழ்வை ஆனந்த லீலையாகவும், கடவுளை சச்சிதானந்த மயமாகவும் பாட வேண்டும். அப்போது மானிடருக்கு வாழ்க்கையில் பிரியமுண்டாகும். நாட்டையும் வீட்டையும் பாதுகாப்பதிலும் கருத்துண்டாகும். இன்றேல் எல்லாம் அநித்தியந்தானே, இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை. ஆதலால் உலகைக் கவனிப்பானேன், உடலைக் கவனிப்பானேன், வீட்டைக் கவனிப்பானேன் மாயா வடிவான பெண்ணைக் கட்டிக்கொண்டு குடும்பம் வளர்ப்பானேன். பேசாமல் காற்றாடக் காடுமலைகளில் பசு பட்சிகள் போலத் திரிவோம் என்ற மித்யா விரக்தி (பொய்த்துறவு) உண்டாகும்.

மஹாபாரதத்திற்குப் பிறகு இப்படிப்பட்ட பொய்யுணர்ச்சிகள் மலிந்து, நமது

நாட்டின் பலத்தைக் குறைத்தன.

பிறகு நாட்டில் ஏகப்பட்ட போலித்துறவிகள் வலுத்தனர். அவர்கள் ஒருவேலையும் செய்யாமல், பாடுபடும் குடும்பிகளின் உணவையுண்டு, கோயில் காளைகள் போலத்திரிந்தனர். அவர்களால் தமக்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை; நம்மவருக்கு "உலகம் பொய்; நாடு பொய்; இந்தப் பொய்யுலகை யார் ஆண்டு எப்படிக் குட்டிச்சுவராய்ப் போனாலென்ன?" என்ற அசட்டு வைராக்கியம் வலுத்தது. உடலில் எப்போது ஜீவன் உள்ளதோ, அப்போது உலகிலும் அஃதுள்ளது; உலகை மறக்க முடியாது. நாம் நமது வீட்டையும் நாட்டையும் கவனிக்காமல் தூங்கினால், "நன்றாகத் தூங்கு தம்பி, பங்கா வேண்டுமானாலும் போடுகிறேன்" என்று அடுத்த பேர்வழி நம்மைச் சூறையாடி நாட்டைப் பறித்துக் கொள்கிறான். இதுதான் நமது நாடு அன்னியருக்கு அடிமையான முதற்காரணம். பொன்னான நாட்டை அனுபவிக்கத் தெரியாமல், நாம் பறிகொடுத்தோம்; அனுபவிக்கத் தெரிந்தவன் ஆளுகிறான். மனிதஜாதி உடல், உள்ளம், வீடு, நாடு, உலகம், தான், சமுதாயம் அனைத்தையும் ஆத்ம சமானமாகக் கருதி, முன்னேற்றும் சக்திபெற்ற ஆனந்த கீதங்கள் நமக்குத் தேவை. இராமன், கண்ணன், ஆழ்வாராதிகள், உடையவர், தேசிகர், மத்வாசாரியார், சைதன்யர், தயானந்தர், குருநானகர் முதலிய மஹான்கள் அனைவரும் உலகை வெறுக்கவில்லை. உலகை எம்பெருமான் லீலாரங்கமாகக் கண்டு, நர நாராயணசேவை செய்தார்கள். இந்தச் சேவை, இக்காலம் எல்லாரும் விரும்புவதுதான். பொதுநலம் என்ற பெயரால் இது விளங்குகிறது. தரித்திர நாராயணசேவை என்று விவேகானந்தரும், மஹாத்மா காந்தியும் சொல்லுகிறார்கள்.

சங்கராச்சாரியார் ஒரு இடத்தில் 'பிரம்மம் சத்தியம் ஜகம்மித்தை' என்கிறார்; வாழ்வை தாமரை இலைமேல் நீர்த்துளி போன்றது என்கிறார்.

இது பரமஞானம் முதிர்ந்து ஜீவஜகபரத்தை மிஞ்சிய துரியா தீத நிலையில் எல்லாந் தன்மயம், தானன்றி வேறில்லை என்றுணரும் ஏகரஸ சைதன்யத்தை அடைந்தவர்கள் சொல்வதாம். அவர்கள் பத்துக்கோடியில் ஒருவர் இருக்கலாம். அவர்கள் அப்படிச் சொல்வதன் பொருள் உலகையும் ஜீவனையும் விட்டுவிட வேண்டும் என்பதன்று. பஞ்சாமிருதம் உண்டவனுக்கு இலுப்பம் பூ என்ன இனிப்பு, இதுவும் ஒரு இனிமையா என்று தோன்றும்; அதே மாதிரி பிரம்மானந்தமடைந்த யோகிக்கு உலகிலுள்ள சிற்றின்பம் அற்பமாகவே தோன்றும்; அதனால் இது பொய்யென்று ஆகாது. அந்தப் பரமசுகத்திற்கு இது எம்மாத்திரம்? பிரம்ம நிச்சயம் அறிந்தவருக்கு உலகம் ஒரு பொருட்டாகாது என்ற பாவனையிலேதான் சங்கரரும் பேசியிருக்கிறார். இன்றேல் அவர் ஊர் ஊராக, நாடெல்லாம் கால்நடையாகச் சென்று, ஷண்மட ஸ்தாபனம் செய்திருக்கமாட்டார். உலகம் பொய்தானே நாம் பேசுவானேன், எழுதுவானேன் என்று சும்மா இருந்திருப்பார். ஆதலால் எந்த வழியாகப் பார்த்தாலும், நாம் இருக்குமட்டும் உடல், மனம், வீடு, நாடு, உலகு ஆகிய ஜீவ பந்தங்களை முற்றிலும் அசட்டை செய்யமுடியாது.

ஆனால் இக்காலத்தவர் உலகை அசட்டை செய்வதில்லை; பொது நலம் நிரம்பச் செய்து வருகிறார்கள்; ஆனால் வீடு நாடு உடல் உலகம் இவற்றிற்குப் பின்னால் உள்ள புருஷனையும் புருஷோத்தமனையும் அவர்கள் உணரவேயில்லை. கீதையின் தத்துவத்தை அவர்கள் அறிந்தால், செய்வதெல்லாம் பிரம்ம யக்ஞமாக, பரமாத்ம பூஜையாக, யோக சாதனமாகச் செய்வார்கள். ஊணுறக்கங்கூட யோகமாக நடக்கட்டும் என்றான் கண்ணபிரான்; உண்ணுஞ்சோறும் பருகும் நீரும் கண்ணனுணர்வில் கலந்தே உட் கொண்டார் நம்மாழ்வார். இதுதான் நமது வேதாகமங்கள் சொல்லும் கர்ம ரகசியம்.

ஈச்வரார்பணமாக உசிதமான கர்மங்களைச் செய்தால், சித்த சாந்தியும் ஆத்ம சுத்தியும், ஜீவன் முக்தியும் பெறலாம்; சர்வாத்ம ஐக்கியத்தில் வாழலாம் என்பது வேதம், உபநிஷத், கீதை ஆகிய மஹாவாக்கியங்களின் சாரமாகும். இந்த யோகமின்றி, அர்ப்பண மின்றி, நமது கர்மங்களெல்லாம் எனது, யான், எனக்கு என்னும் அகம்பாவநாடகமாக முடிகிறது. இந்த அகம்பாவத்தினாலேதான் மேற்கிலும் கிழக்கிலும் மனித காரியங்களெல்லாம் போரும் துயருமாகப் புகைந்து போகின்றன.

சீர்திருத்தத்தின் இரண்டாவது தத்துவம் ஜீவன் சர்வாந்தர் யாமியும் சர்வ சக்திமானுமான இறைவனுடன் ஐக்கியப்பட்டே செய்வன திருந்தச் செய்யவேண்டும் என்பதே. இந்தத் தத்துவத்தையும் கவிகள் மனித சமுதாயத்திற்கு நினைப்பூட்ட வேண்டும். இதை நினைப்பூட்டும் கவிகளே கவியோகிகள், அருட்கவிகள் ஆவர். ரவீந்திரநாத தாகூரும் கம்பரும் இந்த இரண்டு தத்துவங்களையும் நன்றாக விளக்கிப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாட்டெல்லாம், ஈசோபநிஷத்தின் முதல் இரண்டு வரியில் அடங்கும்.

உலகெல்லாம் இறைவன் உறையுள். இந்த உலகில் எல்லா வற்றையும் அவன் மயமாக உணர்; எவன் பொருளையும் திருடாதே; நீ உழைத்துச் சம்பாதித்ததை ஈந்தே உண்ணு. தியாக போகியாயிரு. கருமத்தை விடாதே. ஈசுவரார்ப்பணமாக நல்ல கர்மாக்களைச் செய்து நூறாண்டு வாழ்ந்திரு. இதுதான் உபநிஷத்தின் சாரமாகும். வால்மீகி முதல் தாகூர் வரையில், எந்தக் கவியைப் பார்த்தாலும் இக்கருத்துடன் பாடியிருக்கிறதைக் காணலாம்.

## 104. ஒன்றாய் உலகோர் நன்றாய் வாழ்க !

அன்புமணிகாள்!

இதுதான் உங்களுக்கு இன்று சொல்லத் தோன்றுகிறது. யோகத்தின் பயன் உள்ளொருமைதான்; எல்லார் உள்ளமும் அந்த ஒருமையைக் கண்டால் உலகொருமை உண்டாகும். இந்த ஒருமையை நாடியே பல்லாண்டுகளுக்குமுன் ஓர் இளம் உள்ளம் மின்சார வேகத்தில் துடித்தது. அந்த மின்சாரம் சிலகாலம் அறிவுப் பசிகொண்டு படித்தது, பிறகு கல்விப்பணி செய்தது; பிறகு அச்சிலும் மேடையிலும் கிராமங்களிலும் சேரிகளிலும் காலத்திற்கு வேண்டிய பொதுநலங்களைச் செய்தது; பிறகு மலைக்குகையில் அடங்கி மின்சார சக்தியை வளர்த்துக் கொண்டது. அதன்பிறகு மௌனக்கடலில் ஆழ்ந்து, பரபரப்புடன் முத்துக் குளித்தது. நீண்ட காலம் வெளியே தேடிக்கிடைக்காத ஞானமுத்துக்களை உள்ளே தேடியடைந்தது. அந்த முத்துக்களை அள்ளி அன்பரிடம் தந்தது. அன்பர் அதை மனித சமுதாய வடிவான கடவுளுக்கே சூட்டினார். அந்த அன்பு முத்துக்கள் உங்களுக்கு மகிழ்வைத் தந்தன போலும். அதன் பயனாகத்தான் இன்று இத்தனைபேர் கூடி என்னை வாழ்த்துகிறீர்கள்.

மேலே சொன்ன மின்சாரத்துடிப்பு உடலில்லை, உயிரு மில்லை; அஃது உயிருக்குயிரான ஒன்று. அது பரிசுத்தமான பொருள். அந்தப் பரிசுத்த பரம்பொருளிடம் இன்பங்கண்ட ஒருவனே சுத்த ஆனந்தன், தூய இன்பன். அத்தூய இன்பம் எவர் தனியுடைமையும் அன்று. அஃது எல்லாருக்கும் பொதுவுடைமை; ஆதலால், இன்று நீங்கள் கொண்டாடும் திருவிழா ஒரு தனி மனிதனுக்கன்று; இந்த உடலிலும் உங்கள் உடலிலும் புல் முதல் புருஷோத்தமன்வரையில் உள்ள எல்லார் உடல்களிலும் கோயில் கொண்டுள்ள பரிசுத்தான்மாவுக்குத்தான் நீங்கள் திருநாள் கொண்டாடுகிறீர்கள். உள்ளுண்மை அது; உலகுண்மை அது; நாம் காணும் பல பொருள்களிலும் ஒருமையான பொருள் அதுதான். பல மணிகளில் கோத்த கயிறுபோல அதில் உயிர்க் குலங்களெல்லாம்

கோக்கப் பெற்றுள்ளன. நீங்கள் எச்சாதி எச்சமயமானாலும், எங்கே தொழுதாலும், எந்த நாட்டவரானாலும் சரி, உள்ளம் உண்டு; அதில் சுத்தான்மா உண்டு; அதன் இன்பத்தையே விண்ணின்பம், வானரசு, தர்மராஜ்யம் என்று பலவாறாகச் சொல்வர். மனித சமுதாயம் இந்த ஒருமையை அறிந்து கொண்டால் பிறகு சாதி மதபேதமே தலைகாட்டாமல் "நான்காண் மனிதன் நானே" என்ற உணர்வுடன் வாழலாம். இவ்வான்மா எத்தனையோ சமயங்களில் ஆழ்ந்து பார்த்து முடிவில் இந்த ஒருமையுணர்விலேதான் தூய இன்பத்தைக் கண்டது. அந்த இன்பத்தையே நீங்கள் காணவேண்டும். இந்த உடலில் உள்ள சுத்தானந்தம் உங்கள் உள்ளத்திலெல்லாம் துடிக்கட்டும். எல்லாரும் இன்புறவாழுங்கள். கட்டும் கவலை பிணிகளுமின்றி, வறுமை மடமைத் துயர்களின்றி எல்லாரும் மூன்று உண்மைகளை அனுட்டியுங்கள்—சுத்தம், சுதந்தரம், சமத்துவம். இவைதாம் மேற் சொன்ன சுத்தான்ம ஐக்கியத்திற்குச் சாதனங்கள். இச்சாதன விரிவுதான் யோகசித்தி; இச்சாதன விளக்கந்தான் பாரதசக்தி. வேத ரிஷிகள் இச்சாதன ரகசியத்தைக் கண்டுதான் 'உள்ளத்து ஒன்றே, எல்லாம் அதுவே' என்றனர். இதைக்கொண்டே வள்ளுவர் 'உள்ளத்தனையது உயர்வு' என்றார்.

இன்று நாட்டைப் பார்த்தால் பஞ்சம், மடமை, வேற்றுமைக் காடாயிருக்கிறது. கலைக்களம் கொலைக்களமானது. கண்ணீர், கண்ணீர்! உலகமே ஒருவரை யொருவர் வஞ்சிக்கும் சூழ்ச்சிக் காடாயிருக்கிறது; அணுகுண்டின் அச்சம் ஒவ்வொரு நாட்டிலும் இரோஷிமாக் கனவு காண்கிறது. உலகத்தை வேதமுனிவர் பசுவாக உருச்செய்து பாடினர். தர்மதேவதை "மனிதர்காள்! இந்தப் பசு வேண்டிய அமுதம் தரும். அதை எல்லோரும் பகிர்ந்து பருகுங்கள்; பசுவை அன்பாக வளருங்கள்; எல்லோரும் கூடியிருந்து அதன் பயனை அனுபவியுங்கள்" என்கிறது. தருமத்தின் குரலை மனிதர் அலட்சியம் செய்கின்றனர். இந்தப் பசுவின் தலை எனக்கு, பால்தான் உனக்கு கால் அவனுக்கு என்று சண்டையிட்டு வாளுருவி நிற்கின்றனர். உலகப்பசு இன்று "அன்பு, ஒற்றுமை" என்று முறையிடுகிறது. அதன் முறையை யார் கேட்பது? அவரவர் உள்ளந்தானே கேட்கவேண்டும். உள்ளம் திருந்தினால் உலகும் திருந்தும். நான் திருந்தினால் மனித சமுதாயத்தில் ஒருவன் திருந்தியதாகும்.

அன்பர்காள், சற்றே மனதை உள்ளே இழுத்து, கண்ணை மூடிக்கொண்டு, நெஞ்சில் கைவைத்து, இதயத்துடிப்பையே கவனியுங்கள்; ஒவ்வொரு துடிப்புடனும் ஓம் ஓம் என்று சொல்லுங்கள். ஆனால், பெயர் வடிவ பேதமில்லாத ஒரே பொருளை ஒரே சுத்த சக்தியையே கருதுங்கள். இங்கே கூடியவர்கள் எல்லாரும் ஒரே சுத்தான்மாவின் தொடர்பே என்றுணருங்கள். உங்களையெல்லாம் ஒரே அன்புக் குளத்தில் பூத்த பல தாமரைகள் என்று கருதுங்கள். ஐந்து நிமிஷம் இப்படி உள்ளடங்கியிருங்கள் பார்ப்போம்; அதனால் அமைதியுண்டாகும். ஒருமை வளரும். தினம் அரைமணிநேரம் நிம்மதியாக நல்ல இடத்தில் தனித்தோ, கூட்டமாகவோ இப்படி இதய சாதனம் செய்து வாருங்கள். இதுதான் தியானமாகும். தியானம் ஒருமையை எட்ட எட்ட உங்களுக்கு உள்ளின்பம், உள்ளேயுள்ள தூய இன்பம் உணர்வாகும். கடவுள் என்பது கட்டற்றது. பெயர்வடிவற்றது. அது ஓர் சக்தி யுணர்ச்சி. பரம பரிசுத்தமான சக்தி யுணர்ச்சி; அதனாலேதான் அதை நாம் சுத்த சக்தி என்பது. கதிரவன் போல சுத்தம்; கதிர்கள் போலச் சக்தி பரவுகிறது. உங்கள் உள்ளமெல்லாம் சுத்தசக்தி மின்சார நிலையம். அந்த மின்சாரத்தைத் தூண்டும் சாதனமே தியானம். மனம் புறஞ்செல்லச் செல்ல சக்தியை இழக்கும். உள்ளே செல்லச்செல்ல சக்தி அதிகரிக்கும். யோகிகள் இருந்த இடத்திலிருந்தே சக்தி பரப்புவதன் இரகசியம் இதுதான். ஒரு மின்பொறியிலுள்ள சக்தி, கம்பிகளாலும் வானணுக்களாலும் எங்கும் பரவிப் பல செயல்களைச் செய்கிறது. சுத்தான்மயோகி ஒரு மின்சார பொறி; அவனுள் தூயதெய்வசக்தி இறங்குகிறது. இந்த இறக்கமே அவதாரம்

என்பது. அந்தச் சக்தி தூய மனக்கம்பிகள் மூலம் பரவும். நீங்கள் உட்குவிந்து ஏகாக்கிரத்துடன் தியானித்தால் அதை உணரலாம். அந்த உணர்ச்சியுடன் நீங்கள் உலகில் வாழ்ந்தால் வீறும் வெற்றியும் பெற்று நலமோங்கலாம். உலகையே கோயிலாக, உயிர்த்தொகுதியே இறைவடிவாக, அன்புத் தொண்டையே வழிபாடாகக் கருதுங்கள். அவரவருக்கு இயல்பாக ஏற்பட்ட வேலையைப் பொதுநலமாகச் செய்யுங்கள். ஒவ்வொரு மூச்சுடனும் உள்ளத்தானாகிய கடவுளை கருதுங்கள். தைரியமா யிருங்கள். அன்பாயிருங்கள்.

**போர்வையை எடுத்துள்ளே பாரு—பரி**
**பூரணாத்மா வன்றி வேறு நீ யாரு**
**பார்வையை உள்ளாக்கிப் பழகு— புறம்**
**பாராது பார்ப்பதே ஞானிக்கழகு.**